தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

VOL: 9 NO: 2 YEAR: 1996

DATE: 6th August

TRUTH ALONE TRIUMPHS

வாய்மையே வெல்லும்

D
V21,31'N96
N96.9.2
234194

SCANNED
BES-564

வெளியீடு 8-8-97

Issued 8-8-97

7 OCT 1997
-600 032.
TAMILNADU POLLUTION CO...
LIBRARY
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 6, 1996 - தொகுதி 9 - எண் 2

Tuesday the 8th August, 1996 – Volume 9 – No. 2

6

...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...e Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

D.
V211, 31'N96
N96. 9.2
213494

SCANNED

[Price Rs. 3.00

உள்ளடக்கம்

6-8-1996

		பக்கங்கள்
1.	**வினாக்கள்-விடைகள்--**	
	(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	301-346
	(ஆ) குறுகியகால வினா	346-349
2.	**சிறப்புக் கவன ஈர்ப்பு--**	
	(அ) சேலம், திராவிட முன்னேற்றக் கழக மாவட்டக் கழகக் கட்டடத் திறப்பு விழா குறித்து.	350-351
	(ஆ) தெலுங்கு-கங்கைத் திட்ட கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருதல் குறித்து.	351-354
3.	**தகவல் கோரல்--**	
	(அ) அறந்தாங்கித் தொகுதி மீனவர் வாழ் ஜெகதாப்பட்டினம் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்.	355-356
	(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.	357-358, 359-360
	(இ) நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய ஏ.ஐ.டி.யு.சி. தொழிற் சங்கத்தினர் தாக்கப்பட்டது குறித்து.	358-359

பக்கங்கள்

4. கவன ஈர்ப்பு--

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் டீசல் டாங்க் வெடித்தது குறித்து. 360-363

(ஆ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அரியூர் கூட்டுறவு நூற்பாலையின் இயக்கம் குறித்து. 363-371

5. மானியக் கோரிக்கைகள், *1996-97*, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி.

கோரிக்கை எண் *4* - பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்.

கோரிக்கை எண் *9* - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். 371-470

கோரிக்கை எண் *11* - மாவட்ட நிருவாகம்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 372,374, 375,376, 431, 432-463, 464,465, 466

*திரு. ஆர். சொக்கர் 378-387

டாக்டர் க. கிருஷ்ணசாமி 388-389

திரு. த. பூவேந்தன் 389-391

*திரு. உ. திசைவீரன் 391-394

திரு. இ. கணேசன் 398-402

பக்கங்கள்

திரு. பா. மு. முபாரக் 402-408

திரு. ஜி. நிஜாமுதீன் 408-411

*திரு. கே. சுப்பராயன் 411-417

திரு. எஸ். திருநாவுக்கரசு 418-425

திரு. ப. மோகன் கந்தசாமி 426-431

*திரு. எல். சந்தானம் 431-432

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- 471

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

D
V2ll,31N96
N96.9.2

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
213494
சென்னை-600 008

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 22, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996, ஆகஸ்ட் 6, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோபு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

88--

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

*414--**திரு. சி. கோபு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, பொய்கை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[*1996 ஆகஸ்ட் 6*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1996-97 ஆம் ஆண்டில் பொய்கை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *89*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

89--

அறிவியல் கல்லூரி ஆரம்பித்தல்

1306*--திரு எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேதாரண்யம் பகுதியில் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய வேதாரண்யம் பகுதியில் கல்லூரி இல்லாத காரணத்தினால், சுமார் *75* கிலோ மீட்டர் தூரமுள்ள திருவாரூர் அல்லது மன்னார்குடி போன்ற பகுதிகளுக்குச் சென்று படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அந்தப் பகுதியிலுள்ள மக்களெல்லாம் விவசாயக் கூலிகள் ஆவார்கள். அதனால் அவர்களுடைய துயர் துடைக்கிற வகையிலே அந்தப் பகுதியிலே ஒரு கல்லூரியை அமைக்க இந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவரவர்களே, கடந்த ஏழெட்டு ஆண்டுக் காலமாகவே அரசு நிதிநிலை நெருக்கடி காரணமாக பொதுவாக புதிய அரசு கலைக் கல்லூரிகள் ஏதும் தொடங்குவது இல்லை என்ற நிலையே இருக்கிறது. ஆனால்,

1996 ஆகஸ்ட் 6]

அரசின் நிதியுதவி தேவைப்படாத தனியார் கல்லூரிகள் தொடங்க, சில நிபந்தனைகளுடன் அரசு அனுமதிக்கிறது. அப்படிப்பட்ட கருத்துரு அந்தப் பகுதியிலே உள்ள தகுந்தவர்களிடமிருந்து வருமானால் அவை அரசு விதிகளின்படி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 90 மற்றும் 91 நாளைக்கு எடுக்கப்படும். வினா எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

92--

வறட்சிப் பகுதிகளை அறிவித்தல்

66--**திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க கருத்துரு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

93--

பழம் பதனிடும் தொழிற்சாலை

2261--**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[*1996 ஆகஸ்ட் 6*

(அ) தருமபுரி மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற்சாலை துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)*: செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் அதிகமாக மா பயிரிடப்படுகின்றது. அந்த மா பயிரிடப்படுகின்ற காரணத்தால் அதனைப் பதனிட தனியார் ஆலைகள் இயங்குகின்றன. அதிலே அரசு ஆலை ஆரம்பித்தால் அரசுக்கு அதிகமான இலாபமும், வெளிநாட்டு அன்னியச் செலாவணியும், அதேநேரத்திலே நிறையப்பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, அரசு அதைப் பரிசீலனை செய்து அங்கே பழம் பதனிடும் ஆலை கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழம் பதனிடும் ஆலை தருமபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படுமா என்பதுதான் கேள்வி. இல்லை என்று சொன்னேன். ஆனால், கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கிருஷ்ணகிரியில் குளிர் சாதன கொடோன் பெரிய அளவில் வைக்க ஒரு திட்டம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்சி வந்து அதைப்போல ஒரு நடவடிக்கை உண்டா என்று ஆராய்ந்து பார்த்ததில் எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை. இருப்பினும் இந்த அரசு பரிசீலிக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் *9-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி *:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில்தான் மா அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இதுவரையிலே பயிர் செய்தவர்களெல்லாம் பணப் பயிர் என்ற முறையிலே அதிக பலனைக் கொடுக்கின்றது என்று சொல்லி மா

1996 ஆகஸ்ட் 6]

பயிர் செய்கிறார்கள். அப்படிப் பயிர் செய்கின்ற நேரத்திலே, சில காலங்களில் வியாபாரிகள் சரிவர வராத காரணத்தினாலே மாம்பழங்களுக்கு அங்கே குறைந்த விலையே ஏலத்தில் கிடைக்கக்கூடிய நிலைகூட ஏற்படுகிறது. அதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, தர்மபுரி மாவட்டத்திலே அரசு சார்பிலே இதுவரை இல்லாத அளவிலே, கிருஷ்ணகிரியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு பகுதியிலே, தர்மபுரி மாவட்டத்திலே எந்தப் பகுதியிலாவது, கடந்த அரசு இந்த ஆலையைத் துவங்குவதற்கு முன்வரவில்லையென்று சொன்னாலும், இப்போது மக்கள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு கலைஞர் தலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசு அவசியம் இந்த மா தொழிற்சாலையை அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழம் என்றால் சேலம் மாம்பழம் என்றுதான் பெயர். தர்மபுரி மாம்பழம் என்று இல்லை. நான் முன்பே திரு வெங்கடேசன் அவர்களுடைய கேள்விக்கு இந்த அரசு பரிசீலிக்கும் என்று பதில் அளித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

டாக்டர் காஞ்சனா கமலநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாம்பழம் என்றால் சேலம் மாம்பழம் என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டம் ஒரு காலத்தில் சேலம் மாவட்டத்தோடு இணைந்துதான் இருந்தது. சேலம் மாவட்டம் என்று பெயர்தானேயொழிய மாம்பழத்தினுடைய விளைச்சல் 75 சதவீதத்திற்கு அதிகமாக எங்களுடைய மாவட்டத்தில்தான் இருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். நாங்கள் ஒவ்வொரு தடவையும், தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் யார் பேசுவதாக இருந்தாலும், இந்த மாம்பழ விளைச்சல் பற்றி, தர்மபுரி மாவட்டத்தில் அதிகமாக விளைவதைப் பற்றி ஏற்கெனவே பேசியிருக்கின்றோம். எனவே, தயவுசெய்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சேலம், தர்மபுரி என்று தனியாகப் பிரித்துப் பார்க்கவேண்டாம். ஏறக்குறைய 25 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே மாம்பழம் எங்களுடைய மாவட்டத்திலே பயிரிடப்படுகிறது. அதிலே

பெரும்பான்மை பகுதி கிருஷ்ணகிரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடத்திலேதான் இருக்கிறது. எனவே, தயவுசெய்து 'கோல்ட் ஸ்டோரேஜ்' என்ற அளவோடு அதனை நிறுத்திவிடாமல் மாம்பழத்தைப் பதனிட்டு, அதனைப் பாதுகாத்து, 100% Export oriented Unit என்று அமைகின்ற அளவிலேகூடச் செய்யலாம். எங்கள் மாவட்டத்திலே மாம்பழம் விளைகின்ற காரணத்தினாலே, தயவுசெய்து கிருஷ்ணகிரியில் அந்தத் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முதலமைச்சருக்கு at least he should recommend, I request the Hon. Minister, தயவுசெய்து ஆவன செய்வாரா என்று அறிய அவர் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is not a supplementary.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த முறை, சேலம் மாம்பழத்தையும் தர்மபுரி மாம்பழத்தையும் பேரவைத் தலைவருக்கு அனுப்பட்டும். நீங்கள் ருசித்துப் பார்த்து எதைச் சொல்கிறீர்களோ அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் குளிர்சாதனக் கிடங்கு ஒன்று கட்ட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை மக்கள் மத்தியிலே இருப்பது உண்மைதான். ஆனால், கடந்த ஆட்சியில் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே அப்படிச் சொல்லப்பட்டு, நாங்கள் கட்டப் போகிறோம், பெரிய அளவிலே ஒரு 5 கோடி ரூபாய் திட்டத்திலே செயல்படுத்தப் போகிறோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டு, அப்போதிருந்த அமைச்சர்கள் எல்லாம் பேசி பத்திரிகையிலே வந்திருக்கிறது. இந்த அரசு இப்போது புதியதாக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, அப்படியொரு திட்டம் உண்டா, ஏதாவது நடவடிக்கைகள் இருக்கிறதா என்று பரிசீலித்துப் பார்த்தபோது அப்படியில்லை. இருந்தாலும் பழத்தை ஸ்டோர் பண்ணி வைப்பதற்கு குளிர்சாதன godown தேவை. அப்படியும், 15 நாட்கள்தான் அந்தப் பழங்களை வைத்திருக்க முடியும். அப்படியொரு godown வைத்தால், பழம் உற்பத்தி செய்பவர்கள் குறைவான விலை இருக்கிறபோது, godown-ல் வைத்து நல்ல விலை கிடைக்கும்போது விற்றால், உற்பத்தி செய்பவர்களுக்கு அது இலாபகரமாக இருக்கும் என்று இந்த அரசும் கருதுகிறது. ஆனால், அதற்கான ஆய்வு இருக்கிறது என்றுதான் முன்பே நான்

1996 ஆகஸ்ட் 6]

சொன்னேன். அவ்வளவு வேகமாக, கோபமாக, மாண்புமிகு உறுப்பினர் காஞ்சனா கமலநாதன் இங்கே கேள்வி கேட்டார்கள். அதைவிட, அந்த மாவட்டத்திற்கு, சேலம் மாம்பழம் என்று பெயர் இருந்தாலும், இன்னொரு சிறப்பும் அந்த மாவட்டத்திற்கு உண்டு. ஔவைக்கு நெல்லிக் கனியைத் தந்தவர் அதியமான். அதையும் மறந்துவிடவில்லை நாங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். மகேந்திரன்.

திரு. ஆர். மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மாம்பழம் சுவையாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திலே சுவையான பழம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தோடு வட-ஆற்காடு மாவட்டம் இணைந்து அருகிலே இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலேயும் சுவையான மாம்பழத்தை உற்பத்தி செய்கிறவர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் காதர், பீத்தர், செந்துரா, பங்கனப்பள்ளி போன்ற சுவையான மாம்பழங்கள் எல்லாம் விளைகின்றன. நான் 1989-ஆம் ஆண்டு கழகம் ஆட்சியில் இருக்கிற நேரத்தில் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கேட்கிறபோது, இந்தக் கேள்வியை மன்றத்தில் நான் கேட்டேன். அப்போது 'சுவையாக இந்தக் கேள்வி அமைந்திருக்கிறது. நான் ஆவன செய்கிறேன்' என்று நம்முடைய தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் நம்முடைய ஆட்சி அமைந்திருக்கிற இந்த நேரத்தில் எங்களுடைய சுவையான கேள்விக்கு விடையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்கள் பகுதியிலே ஒரு மாம்பழத் தொழிற்சாலை அமைத்துத்தர ஆவன செய்வாரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(விடை இல்லை)

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ.ஜி. சுகவனம்.

திரு. இ.ஜி. சுகவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்கள் பர்கூர் தொகுதியிலே, பர்கூரிலே ஒரு

மாம்பழக் கூழ் தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். அதைக் கைவிட்டுவிட்டார்கள். தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு வந்தபோது பர்கூர் தொகுதியிலே தேர்தல் பிரச்சார மேடையிலேயே மாம்பழக் கூழ் தொழிற்சாலை பற்றி- "சென்ற ஆட்சியாளர்கள் ஆரம்பிக்காமல் விட்டுவிட்டார்கள். இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதைப் பரிசீலிப்போம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலேயே பர்கூர் தொகுதியிலேதான் 75 சதவீதம் மாங்கனிகள் விளைகின்றன. எனவே, தயவுகூர்ந்து அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் பர்கூர் தொகுதியிலேயே அந்த மாம்பழக்கூழ்த் தொழிற்சாலையை அமைக்கின்ற பணியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதற்குரிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை என்றால், பழத்திலிருந்து சாறு பிழிந்து ஏற்றுமதி, செய்வது ஒன்று, இன்னொன்று, குளிர்சாதனக் கோடோன் ஆகும். பழம் உற்பத்தியாகி, மார்க்கெட்டுக்குக் கொண்டு வருகிறபோது குறைந்த விலையிலேயே கேட்கிறார்கள். ஸ்டோரேஜ் செய்து வைத்தால் இலாபகரமாக கூடுதல் விலை கிடைக்கும் என்ற நிலை வருமென்று கருதினால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பழங்களை கோடோனிலே வைத்திருந்து பதினைந்து நாட்கள் கழித்துக் கூட அவர்கள் விற்கலாம். பழம் கெடாமல் இருப்பதற்குத்தான் குளிர்சாதனக் கிடங்கு கட்டுவது என்ற ஒரு திட்டம். பழச்சாறு பிழிவது ஒன்று; அது எக்ஸ்போர்டிங். அதை பிரைவேட்டிலே செய்து கொண்டிருக்கிறார்கள். அதை நாம் இப்போது செய்கிற மாதிரி இல்லை. கோடோன் கட்டுவது பற்றி இந்த அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாம்பழம்தான் மாம்பழங்களிலேயே ருசியானது என்று சொல்கிறார்கள். ஆனால், இராஜபாளையம் சப்பட்டை, பஞ்சவர்ணம் ஆகிய மாம்பழங்கள்தான் ருசியாக இருக்கும். எங்கள் பகுதியிலுள்ள மாம்பழத்தின் ருசியை இருட்டடிப்பு செய்து விட்டார்கள். பாரதப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி

1996 ஆகஸ்ட் 6]

அவர்களுக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேலம் ஆறுமுகம் அவர்கள் ஒரு கூடையில் இராஜபாளையம் சப்பட்டை, பஞ்சவர்ணம் மாம்பழங்களைக் கொண்டு போகிறபோது-பிரியத்தோடு கேட்டிருந்தார்கள் --அப்போது வெடிகுண்டு இருப்பதாகச் சொல்லிக் கைதுகூட பண்ணினார்கள். அந்தமாதிரி ருசியானது இராஜபாளையம் மாம்பழம்தான். இங்கே சேலத்திலிருந்து மாம்பழத்தை எடுத்துக் கொண்டு வாருங்கள்; தர்மபுரியிலிருந்தும் மாம்பழத்தை எடுத்துக்கொண்டு வாருங்கள். நானும் எனது ஊர் மாம்பழத்தை எடுத்துக் கொண்டு வருகிறேன். எங்கள் ஊர் மாம்பழத்தைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஃபிரியாகவே கொடுக்கிறேன். சபாநாயகர் அவர்கள் எது ருசி என்று தேர்ந்தெடுங்கள். இதில் சேலம் மாம்பழம்தான் ருசியாக இருக்கிறது என்பது தவறான தகவல். ஆகவே, அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, இராஜபாளையம் சப்பட்டையையும், பஞ்சவர்ணம் மாம்பழங்களையும் ருசியாக இருக்கிறது என்று சொல்லி எல்லாப் பகுதிகளிலேயும் அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். வெளிநாடுகளிலிருந்துகூட விரும்பி வாங்கிக் கொண்டு போகிறார்கள். எந்த ஆட்சி வந்தாலும் மந்திரிகள் அனைவரும் இராஜபாளையம் சப்பட்டை, பஞ்சவர்ணம் மாம்பழத்தை வாங்கிக் கொண்டு போகிறார்கள். இது சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. இராஜனுக்குக்கூட தெரியும். ஆகவே, நீங்கள் மாம்பழத்தில் பாகுபாடு பார்க்கக்கூடாது, இருட்டடிப்பு பண்ணக்கூடாது என்று கூறிக்கொண்டு இந்த இராஜபாளையம் மாம்பழத்தை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும், திரு. தாமரைக்கனியும் ஏதோ சபாநாயகர் மீது கோபமாக இருப்பதாக அறிகிறேன். சபாநாயகர் சர்க்கரை வியாதிக்காரர். *(சிரிப்பு).*

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதைப்போல அவர் சொல்கிறார். அந்த அளவிற்குத்தான் பதில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வெங்கடசாமி.

Thiru. B. Venkatasamy : Sir, cold storage is more important, because even vegetables are grown in large areas. In the lean seasons, we can store the vegetables and fruits also in the cold storage plants. Otherwise, the farmers may have to suffer. When we produce more, we can keep it in the cold storage and later sell it at fair rates. I request the Hon. Minister to see that cold storage plants are put up at Ooty, Hosur and even at Salem for mangoes. Will this Government come forward to construct such cold storage facilites and may I know from the Hon. Minister whether there is any proposal for this ?

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழம் பதனிடும் தொழிற்சாலை பற்றித்தான் கேள்வி. காய்கறிகளைப் பதனிடுவது பற்றிய கேள்வி இப்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழம் எந்தெந்த இடங்களில் குண்டாக இருக்கின்றது, எவையெவை இனிக்கின்றன என்று விவாதங்கள் போய்க் கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசால் பழம் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிக்க முடியாது என்று ஏற்கெனவே இங்கே அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலையின் மூலமாக, 1963-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை மூடிக் கிடக்கின்றது. தருமபுரி மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க முடியாவிட்டாலும், மூடிக் கிடக்கின்ற இந்தத் தொழிற்சாலையையாவது அரசு ஏற்று நடத்தி, எங்கள் மாவட்டத்திற்கு எல்லாப் பழங்களையும் அனுப்பி, அந்த ஆலையை இயங்கச் செய்ய முடியுமா? அதேநேரத்தில் தொழிற்சாலைக்கென்று நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய அவசியமில்லை, கட்டிடம் கட்டவேண்டிய அவசியமுமில்லை. தயாராக இருக்கக்கூடிய அந்த ஆலையை

1996 ஆகஸ்ட் 6]

இயங்கச் செய்து, சேலம் மாம்பழமாக இருந்தாலும் சரி, இராஜபாளையம் மாம்பழமாக இருந்தாலும் சரி, பர்கூர் மாம்பழமாக இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் எங்கள் மாவட்டத்திற்கு அனுப்பி, அந்த இடத்திலுள்ள பழம் பதனிடும் தொழிற்சாலையை இயங்க வைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துப் பின்னர் முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறுதியாக திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தமிழகத்திலேயே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் இருக்கக்கூடிய இடமாக இருக்கின்றது. தினசரி ஆயிரக்கணக்கான டன் கணக்கில் காய்கறிகள் வந்து இந்தியாவின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. கடந்த அரசு இந்தச் சட்டமன்றத்தில் அங்கு ஒரு பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தது. அதை இந்த அரசு அமைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் இப்படி ஒரு திட்டம் இல்லாமலேயே கிருஷ்ணகிரியில் அமைக்கப்படும் என்று அறிவித்து இருந்தார்கள். அதைப்போலத்தான், ஒட்டன்சத்திரத்திலும் காய்கறிக் கிடங்கு அமைக்கப்படுவதாக அறிவித்து இருந்தார்கள். இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, அவசியத்தை உணர்ந்து, இப்படிப்பட்ட கிடங்குகளை அமைக்கலாமா என மார்க்கெட்டிங் கமிட்டியின் மூலம் ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்த ஆய்வறிக்கை கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

94--

செண்பகத்தோப்பு அணை கட்டும் திட்டம்

*88--**திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் அருகில் செண்பகத்தோப்பு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டத்தில் உள்ள செண்பகத்தோப்பு நீர்த்தேக்கத் திட்டம் ரூ.21.33 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, 4 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பக்கம் 13-ல் சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்கள். இந்தத் திட்டத்திற்கான அரசாணை கிடைக்கப்பெற்றவுடன் இந்தத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி எழுப்பப்பட்டபோது அறிவிப்பு வரவில்லை. இப்போது அறிவித்து இருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் 25 ஆண்டுகளுக்கு முன்பே கால்கோள் விழா செய்யப்பட்ட திட்டம். இப்போது கலைஞர் அரசு வந்த பிறகு இன்றையதினம் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டமானது 4 ஆண்டு காலத்தில் முடிக்கப்படும் என்று மீண்டும் காலத்தை நீட்டித்து அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இதை இரண்டு ஆண்டுக் காலத்தில்

1996 ஆகஸ்ட் 6]

கட்டி முடித்து, அந்தப் பகுதி மக்களுக்கு இதை ஒரு வரப்பிரசாதமாக அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். இதன் மூலம் பாசனம் பெறுவது எத்தனை ஏக்கர் எனவும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்கோள் விழா எதுவும் நடக்கவில்லை. ஏனென்றால், 1989-லிருந்து 1991-வரை நான்தான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேன். அப்பொழுது கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, 1990-91 ஆம் ஆண்டு இது குறித்து ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அப்பொழுது இதனுடைய மதிப்பு சுமார் 10 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு விலைவாசி உயர்வு ஏற்பட்டு அது 21 கோடி ரூபாய்க்குப் போய் நின்று கொண்டிருக்கிறது. 4 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டிய இந்தப் பணியை 2 ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற முடியுமா என்று உறுப்பினர் கேட்கிறார். உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திட்டங்களை அறிவிக்கிறபோது அந்தத் திட்டத்தினை எத்தனை காலத்திற்குள் முடிப்போம் என்று யாரும் சொன்னது இல்லை. முதல் முறையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் ஒவ்வொரு திட்டமும் எத்தனை ஆண்டுகளில் முடிக்கப்பெறும் என்று எங்களைக் கேட்டு அதை நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். 13 ஆண்டு, 14 ஆண்டு காலமாகக் கூட பல அணைகள் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். பெரியகுளம் பகுதியிலே சோத்துப்பாறை என்ற ஒரு அணை இருக்கிறது. அதைக் கட்டுகிறார்கள், கட்டுகிறார்கள், தாஜ்மஹாலைக் கட்டியதைவிட அதிகமான கால அளவில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்; அடுத்து கரியக்கோவில் அணை. அதுவும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 20 வருடங்கள், 16 வருடங்கள, 14 வருடங்கள் என்றெல்லாம் வேலைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. எனவே, 'ரிவைஸ்டு எஸ்டிமேட்' போய்க்கொண்டே இருக்கின்றது. அதனால்தான் மாண்புமிகு கலைஞர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதைக் கட்டி முடிக்க வேண்டும். அதற்கு அந்தத் துறை பொறுப்பேற்க வேண்டும் என அறிவுறுத்தி, அதிகாரிகளைக் கேட்டு இத்தனை ஆண்டுகளுக்குள் முடியுமா என்று கேட்டு, பிறகுதான் இந்தத் திட்டத்தினை அவர் நிதிநிலை அறிக்கையிலே சேர்த்திருக்கிறார். எனவே, 4 ஆண்டு

காலத்திலே இதைக் கட்டி முடித்தால், அதைக் கட்டி முடித்தவர்களுக்கு கோயில் கட்டிக் கொண்டாட வேண்டும். காரணம் பல ஆண்டுகள் போய் விட்டன. திரு. திருவேங்கடத்திற்குச் சொல்கிறேன், 4 ஆண்டு காலத்திற்குள் கட்டி முடிப்பதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும்.

இரண்டாவது எத்தனை ஏக்கர் பாசனம் பெறும் என்று கேட்கிறார். இந்தத் திட்டம் செயல் ஆக்கப்படுமானால் 5,107 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் உறுதி பெறும். மேலும் 1,585 ஏக்கர் இடையிலுள்ள தரிசு நிலங்கள் பாசனத்தில் கொண்டு வரப்படும். இதனால் எதிர்ப்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 5,273 டன்களாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. ராசேந்திரன்.

திரு. ஏ. ராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், இந்தத் திட்டத்தினை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 1989-90 ஆம் ஆண்டில் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அப்போதும் அமைச்சராக இருந்தபோது வட ஆற்காடு மாவட்டம் பிரிக்கப்படாத நிலையில் ஏற்கெனவே 300 ஏக்கர் நிலம் அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இன்னும் 300 ஏக்கர் நிலம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த் துறையிடமிருந்து பெற்றுக் கொடுக்க வேண்டும். இதைக் கொடுத்தால் பணிகளை சீக்கிரம் முடிக்க இயலும். இதைக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை உருவாக்குகின்றபோது முக்கியமாக இருக்கிற பெருந்தடங்கல்கள் என்னவென்றால் வனத்துறை நிலங்களை எடுப்பதிலேதான். இந்தத் திட்டத்தினைப் பொறுத்தவரையிலும்கூட 60.32 ஏக்கர் பட்டா புஞ்சை நிலங்கள். அதை நாம் கூடுமான வரையிலும் சுலபமாக எடுத்துவிடலாம். 307 ஏக்கர் நிலம் வனத்துறைக்கு சொந்தமானது. அதை எடுப்பதில்தான் பல்வேறு பிரச்சினைகள். புறம்போக்கு நிலங்கள் 32 ஏக்கர். அனாமதேய நிலங்கள் கொஞ்சம். வனத்துறையிடமிருந்து நிலங்களை நாம்

1996 ஆகஸ்ட் 6]

எடுக்க வேண்டுமானால் சில நிபந்தனைகள் இருக்கின்றன. வனத்துறையிடமிருந்து இப்படி நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நிலங்களை எடுக்க வேண்டுமானால் நாம் சில நிலங்களைத் தர வேண்டுமென்றெல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் எடுத்து திட்டத்தினை முடிக்கலாம் என்று நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். நில நிர்வாக ஆணையர் அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். எனவே, திட்டம் விரைவாகச் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. அன்பழகன்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்தில் செண்பகத்தோப்பு அணை கட்டுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்றாலும்கூட, அதிலே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அமர்ந்திருந்த அதே ஆசனத்தில் பேரவைத் தலைவராக அமர்ந்திருந்த மறைந்த பெரியவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையிலே இந்தச் செண்பகத்தோப்பு அணைப் பிரச்சினை வந்தபோது சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். காரணம் செய்யாற்றின் கடைக்கோடியில் இருக்கக்கூடிய நிலங்கள், இந்த அணையைக் கட்டுவதன் மூலம் பாதிப்பு அடையக்கூடாது. எனவே எங்களோடு ஒரு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டு, எங்களுக்குத் தேவையான தண்ணீர் வருகிற வகையிலே ஒரு ஒப்பந்தத்தினை வைத்துக் கொண்டுதான் அந்த அணையைக் கட்ட வேண்டும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகத்தோப்பு அணையைக் கட்டுவதால் செய்யார், ஆரணி பகுதிகள்--ஆரணி சட்டமன்ற உறுப்பினருக்கும் ஐயம் ஏற்படும்--பாதிக்கப்படுமா என்ற ஒரு பயம் எழுந்திருக்கிறது. ஒரு ஆற்றிலே ஒரு அணை கட்டுவதாலே அதன் பின்னால் இருக்கின்ற நிலங்கள் பாதிக்கப்பட்டுவிடும் என்று எண்ணக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு மறைந்த புலவர் கோவிந்தன் அவர்கள் செய்யாறு தொகுதியினுடைய

எம்.எல்.ஏ-வாக இருந்த காலத்தில்--செய்யாறு ஆறு பாலாற்றினுடைய உபநதி--அந்தச் செய்யாறு ஆற்றிலே இரண்டு அணை கட்டினார்கள். தண்டரை அணைக்கட்டையும் இன்னொரு அணைக்கட்டையும் அங்கே கட்டினார்கள். உடனே பாலாற்றுப் படுகையிலே இருக்கின்றவர்களெல்லாம் அணை கட்டினால் பாலாற்றில் தண்ணீர் வராது என்றா குரல் கொடுத்தார்கள்? இந்த கமண்டலா நதியின் குறுக்கேதான் செண்பகத்தோப்பு அணை கட்டயிருக்கிறோம். இந்த கமண்டலா நதி செய்யாற்றினுடைய உபநதி. அவ்வளவுதான். ஆனால் அந்த கமண்டலா நதிக்கு 1113 மில்லியன் கனஅடி தண்ணீர் ஆண்டொன்றுக்குக் கிடைக்கிறது என்று நாங்கள் கணக்கிட்டிருக்கிறோம். அதில் இந்த அணைக்குப் பயன்படுத்தப்போவது 511 மில்லியன் கனஅடி தண்ணீர்தான். மீதம் இருக்கின்ற 602 மில்லியன் கனஅடி தண்ணீரை நாங்கள் அந்த ஆற்றிலேதான் விட்டுவிடுகிறோம். அந்த ஆற்றிலே இதுவரை அணையே கட்டவில்லையா என்றால், அலியாபாத் அணை கட்டியிருக்கிறார்கள். வள்ளுவர் அணை கட்டியிருக்கிறார்கள். தமுக்கூர் அணை கட்டியிருக்கிறார்கள். எஸ்.வி. நகர் அணை கட்டியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே நான்கு அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த அணைகள் கட்டும்போதுகூட இப்படிப்பட்ட நிபந்தனைகள் இருந்தன. அலியாபாத் அணைக்கு 554 மில்லியன் கனஅடி தண்ணீர் வரும். 432 மில்லியன் கனஅடி தண்ணீரைத் தேக்கலாம். மீதம் 122 மில்லியன் கனஅடி தண்ணீரை விட்டுவிடலாம் என்றுதான் அந்த அணையைக் கட்டினார்கள். வள்ளுவர் அணைக்கட்டிலும்கூட நீர் வரத்து 551 மில்லியன் கனஅடி. பயன்படுத்துவது 43 மில்லியன் கன அடி. விடுவது 508 மில்லியன் கனஅடி. எனவே, செய்யாறு, ஆரணி பகுதிகளை பாதிக்கின்ற அளவிற்கு இந்த அணைக்கட்டினுடைய அமைப்பு இருக்காது என்ற உறுதியை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, திரு. வி. கோவிந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

1996 ஆகஸ்ட் 6]

95--

பேரணாம்பட்டுப் பகுதியில் பேருந்துகளை இயக்குதல்.

235*--திரு. வி. கோவிந்தன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பேரணாம்பட்டைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு இயங்கிக் கொண்டிருந்த அரசுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன?

(ஆ) மீண்டும், அப்பகுதிகளுக்குப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பேர்ணாம்பேட்டைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு இயக்கப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்துகள் ஏதும் நிறுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கோவிந்தன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்ற 30 தினங்களுக்குள்ளாக, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற வகையிலே எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அத்தனை உறுப்பினர்களும் கலந்துகொண்டோம். உண்மையிலே நாங்கள் மகிழ்ந்தோம். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணி நாங்கள் மகிழ்ந்தோம். சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே என்னுடயை தொகுதிக்கு 29 வழித் தடங்களைக் கேட்டிருந்தேன். 'unserved areas' என்ற வகையிலே சில

வழித்தடங்களையும், ஏற்கெனவே இருக்கின்ற வழித் தடங்களில் பேருந்துகள் சரியாகச் செல்லவில்லை என்ற வகையிலே சில வழித்தடங்களையும் நான் கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவாகவும், பரிவோடும் நடந்துகொண்டார்கள். ஆனால், அதிகாரிகள் எனக்குப் பதில் அளித்திருப்பது, ஆடிட் ரிப்போர்ட்டிலே 'பாராகிராப்'ற்கு எப்படி பதில் சொல்வார்களோ, அதைப்போல, ஒவ்வொரு கேள்விக்கும் சாத்தியமில்லை, சாத்தியமில்லை என்று பதில் தந்திருக்கிறார்கள். அப்பொழுது நான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியைச் சீக்கிரம் கேளுங்கள். நீங்கள் ரிப்போர்ட்டையே படிப்பீர்கள் போலிருக்கிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்குப் பேருந்துகளை விடுவதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுக்குமா? ஆந்திரா மாநிலத்தில் இருப்பதுபோன்று, 14 கிலோமீட்டருக்கு உள்ளான குறுகிய வழித்தடங்களைத் தனியார் இயக்குவதைப்போல, இங்கும் தனியார் நிறுவனங்கள் இந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு அனுமதிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளே இல்லாத வழித்தடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட இதை நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும். தனியார் யாருக்கும் இதுபோன்ற வழித்தடங்களைக் கொடுப்பதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்.

திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் முன்பு நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்

1996 ஆகஸ்ட் 6]

சுட்டிக்காட்டியதைப் போல, எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநரோடு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கலந்து பேசியிருக்கிறார்கள். அதற்கான கூட்டமும் நடத்தப்பட்டது. அதிலே அவர்கள் வைத்த கோரிக்கைகளில், கூடுமானவரையில் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் வெங்கடேசன் அவர்களும், அவர் ஊரிலேயிருந்து ஒரு பேருந்து விடவேண்டுமென்று சொல்லி, அதுவும் உடனடியாக நிறைவேற்றப்பட்டு, அங்கே பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அவ்வாறு பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதனைப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்த எண்ணத்தோடுதான் நாளை மறுநாள் 8-ஆம் தேதி நிர்வாக இயக்குநர்களுடைய கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய பகுதிகளில் அதுபோன்று நிறுத்தப்பட்ட பேருந்துகள் இருக்குமானால், அவர்கள் சம்பந்தப்பட்ட நிர்வாக இயக்குநர்களைக் கலந்து, எழுதிக் கொடுத்தால், உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஆர். சரஸ்வதி.

திருமதி ஆர். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைதூரம் செல்லும் பேருந்துகளில், தனியார் பேருந்துகளில் உள்ளதைப்போல, சொகுசு இருக்கை வசதிகளைச் செய்துகொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகளெல்லாம் இப்போதும் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், கடந்த காலத்தில் சொகுசான ஆட்சி நடந்ததால், அவையெல்லாம் கவனிக்கப்படாமல் இருந்த காரணத்தினால், அவை பழுதுபட்டிருந்தாலும், நிச்சயமாக தற்போது இயக்கப்படுகின்ற சொகுசுப் பேருந்துகள் எல்லாம் சொகுசுப் பேருந்துகளாகவே விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1996 ஆகஸ்ட் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

96--

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் தகவல் மையம்

*1101--**திரு இரா. பெர்னார்டு:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையின் தகவல் மையம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையின் தகவல் மையம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. பெர்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் உணர்வு, தமிழ் கலாச்சாரம், தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, இவையெல்லாம் பட்டும் கெட்டும் விடாமல் பாதுகாக்க, குமரி மாவட்டத் தமிழர்கள், திருவாங்கூர், கொச்சியிலிருந்து விடுபட்டு தாய்த் தமிழகத்தோடு இணைய, 1954-ஆம் ஆண்டு ஒரு பெரிய போராட்டமே நடத்தி, இதே ஆகஸ்ட் திங்களில், 11 பேர் கொல்லப்பட்டார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள், தியாகி செல்லையா, தியாகி தேவசகாயம் ஆகியோர் ஆவர். மேலும், இந்தப் போராட்டத்தை நம்முடைய தமிழினக் காவலர் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் போன்றவர்கள் எல்லாம் ஆதரித்திருக்கிறார்கள். தமிழ் வளர்த்த அதங்கோட்டு ஆசான்,

1996 ஆகஸ்ட் 6]

செய்குத்தம்பி பாவலர், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடிய மனோன்மணியம் சுந்தரனார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பொதுவுடைமைக் கருத்தைத் தந்த ஜீவானந்தம் ஆகியோரும் இந்த மாவட்டத்தில் தோன்றியவர்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரை வினாவாகக் கேட்கச் சொல்லுங்கள்; கட்டுரையை என் கையில் கொடுத்துவிடலாம்.

திரு. இரா. பொன்னார்டு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்கு விளக்கம் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எப்போதாவது ஒரு தடவைதான் பேசுகிறார்; பேச விடுங்கள். *(சிரிப்பு)*

திரு. இரா. பொன்னார்டு : அதுமட்டுமல்ல; இந்த மாமன்றத்தில், வருவாய்த் துறை அமைச்சராக இருக்கிற நம்முடைய நாஞ்சிலாரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய மையமும், மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தினுடைய மையமும் இந்த மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோயிலில் உள்ளன. அதுபோன்று, இந்தத் தமிழ்ப் பண்பாட்டு மையமும் அமைக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேளுங்கள். அவர்தான் முதலிலேயே இல்லையென்று சொல்லிவிட்டாரே?

திரு. இரா. பொன்னார்டு : ஆகவே, அதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி தொடர்பாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனிச் சிறப்புண்டு. எல்லா மாவட்டங்களிலும் சிறந்த தமிழறிஞர்கள், தமிழ்ச் சான்றோர்கள் பிறந்திருக்கிறார்கள், வளர்ந்திருக்கிறார்கள், வாழ்ந்திருக்கிறார்கள், பணி செய்திருக்கிறார்கள். எனவே, அந்தவகையில் குமரி மாவட்டத்திற்குத் தனிச் சிறப்புண்டு என்பதிலே இரண்டாவது கருத்து இல்லை. எனினும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே தமிழ் உயர் ஆய்வு

அலுவலர் ஒருவர் இருக்கிறார். அவரிடத்திலே உதவியாளர்கள் இருக்கிறார்கள். அவரே, கிட்டத்தட்ட அது தொடர்பான தமிழ்ப் பணிகளைக் கவனிக்கிறார். அந்த அடிப்படையில், இப்போது எல்லா மாவட்டங்களிலும் தனிக் கவனம் செலுத்தப்படுகிற அதேநேரத்தில், 6-9-1996 அன்று, கன்னியாகுமரி மாவட்டம் சார்பில், நாகர்கோயில் தமிழ் வளர்ச்சித் துறையினுடைய கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கருத்துக்களை எல்லாம் அங்கே வைக்கலாம், அப்போது அங்கே அதனை முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்காகத் தன்னையே அர்ப்பணித்த மறைமலை அடிகளார் பெயரில், நாகையில் தமிழ் ஆய்வு மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையிலும் அதேபோல், ஏற்கெனவே தமிழ் உயர் ஆய்வு அலுவலர் இருக்கிறார். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்கிற ஆய்வு அலுவலர்கள், அந்தப் பணிகளை முழுமையாக மேற்கொண்டிருக்கிறார்கள். மறைமலை அடிகளார் பெயரில் ஏற்கெனவே நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான், மிகச் சிறந்த பாலத்திற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. அதன் வழியாகத்தான் உறுப்பினர் அவருடைய ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். மேலும், இப்போது செய்யப்படுகிற பணிகள் அனைத்தும், மறைமலையடிகள் அவர்களை மனதில் வைத்தும், தேவநேயப் பாவாணர் போன்றவர்களை மனதில் வைத்தும் செய்யப்படுகின்றன. எனவே, அதுவே உயர் ஆய்வு மையம்தான் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

1996 ஆகஸ்ட் 6]

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் தகவல் மையங்கள் இப்போது தமிழ்நாட்டில் எங்கெங்கு இருக்கின்றன? இது போன்ற பண்பாட்டு மையங்களை வெளிநாடுகளிலே துவக்குவதற்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இருக்கும் அந்தப் பிரிவு ஒவ்வொன்றும் தகவல் மையங்கள்தான். என்றாலும்கூட, மாநில ஆளுநர் அவர்களுடைய தலைமையில் தென்னக கலைப் பண்பாட்டு மையம் ஒன்று தஞ்சையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதன் சார்பில் தமிழகம் முழுவதும் பிற மாநிலத்தாருடைய கலை நிகழ்ச்சிகளை நாம் நடத்தவும், நம்முடைய மாநிலத்தினுடைய கலை நிகழ்ச்சிகளை பிற மாநிலத்தார் நடத்தவுமான பரிமாற்ற ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் இந்த ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வரும் காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்குரிய சிறப்பு சேர்க்கப்படும். அதே நேரத்திலே, வெளிநாட்டிலும் இதுபோன்ற அமைப்புகள் இயங்குகிறபோது செய்திகளைப் பரிமாறிக் கொள்ள தேவையான மையங்களை அமைப்பதற்கான முயற்சிகளை அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

97--

தொழிலாளர் வைப்பு நிதி

318*--திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள நிர்வாகங்களால் கட்டடப்படாமல் நிலுவையில் உள்ள தொழிலாளர் வைப்பு நிதி எவ்வளவு பாக்கி உள்ளது?

(ஆ) அதை வசூல் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் நிர்வாகங்களால் கட்டப்படாமல் 31-3-1996 முடிய நிலுவையில் உள்ள தொழிலாளர் வைப்பு நிதி ரூபாய் 1669.97 இலட்சங்களாகும்.

(ஆ) 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகைச் சட்டம் பிரிவு 8(B) மற்றும் 8(F)-ன் கீழ் நிலுவையை வசூல் செய்ய நிர்வாகம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகம் கட்டாமல் விடுவதை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக மாற்ற பொருத்தமான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருமாறு மாநில அரசு மத்திய அரசைக் கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இண்டியன் பீனல் கோட் குற்றவியல் சட்டத்தின்படி 406, 409 பிரிவின்கீழும், அதைப்போலவே தி எம்ப்ளாயீஸ் பிராவிடெண்ட் ஃபண்டு மற்றும் மிசலேனியஸ் ஆக்ட் 1952 பிரிவு 14, 14பி ஆகியவைகளின்கீழும் தண்டனைக்குரியதாக்கவும், பி.எஃப்-ஐ ஒழுங்காக நிர்வாகம் கட்டவில்லை என்று சொன்னால் அதற்கான இழப்புத் தொகையையும் விதிக்கின்ற உரிமையும் ஏற்கெனவே உள்ள சட்டத்தின்கீழ் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. மணி.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வைப்பு நிதியைப் பொருத்து, பெரும்பகுதி முதலாளிகள் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களிடம் தொகையை வசூல் செய்துவிட்டு அரசுக்குக் கட்டுவதில்லை. இது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலே இந்தத் துறைக்கு அவர்கள் பணத்தைக் கட்டியபிறகும்கூட அதற்கான ரசீதுகள் காலாகாலத்தில் தொழிலாளர்கள் கைக்கு வருவதில்லை. இந்த இரண்டையும் தவிர்ப்பதற்குரிய அளவில் பொதுவாக இந்த வைப்பு நிதியை வசூல் செய்து அரசுக்குக் கட்டாமல் இருக்கின்ற அந்த ஸ்தாபனங்களுடைய லைசன்ஸை கேன்சல் செய்யக்கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைப்பு நிதி பொறுத்தவரையில் நிர்வாகம் செயல்படுவதில் தவறு இருக்குமானால், ரசீதுகள் சரியாக கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், உறுப்பினர் சுட்டிக்காட்டினால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளில் பி.எஃப் கட்டவேண்டிய அவசியம் இருந்தும் கட்டாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி தப்பிக்கக்கூடிய தொழிற்சாலைகளைக் கட்ட வைப்பதற்குரிய பொருத்தமான வழிமுறைகளை உருவாக்குவதற்கு மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உரிய நடைமுறை விதிகளின்படி, சட்டங்களின்படி அந்த நிர்வாகம் வைப்பு நிதியை முறையாக வைக்கவேண்டும் என்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே தவறு இருக்குமேயானால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கமணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

98--

குற்றவியல் நீதி மன்றம்

*699--**திரு. கே. தங்கமணி :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு நிதி நெருக்கடியின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்குப் போதுமான இட வசதி இருக்கிறது. அங்கே தேவையான வழக்கறிஞர்களும் இருக்கிறார்கள். ஏற்கெனவே அருப்புக்கோட்டையில் ஜுடிஷியல் முனிசீப் கோர்ட் இருந்தது. அவையெல்லாம் இப்போது காமராஜர் மாவட்டத்திற்கு மாறிவிட்ட நிலையில் மானாமதுரையில் இருக்கக்கூடிய அந்த கோர்ட் வேலையில்லாமல் காலியாகவே பெரும்பகுதி நேரத்தை செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே, அதற்கு அதிக நிதி தேவைப்படாது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை குறித்து 22-2-95 அன்று வழக்கறிஞர்கள் சங்கத்திலே இருந்து விண்ணப்பம் வரப்பெற்று அது குறித்து அரசு ஆராய்ந்தது. அப்படி ஆராய்ந்ததன் அடிப்படையில் தொடரும் செலவு ரூ. 8,22,504/- என்றும் தொடராச் செலவு ரூ. 1,85,300 என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, புதிதாக நீதிமன்றம் ஒன்றை அமைப்பது என்று சொன்னால் அதற்கு ஏறத்தாழ ரூ. 10,02,804 செலவு செய்யவேண்டியிருக்கிறது. எனவே, இடவசதி போன்றவற்றில் பிரச்சினை இல்லை, நிதி இல்லை என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. நிதிநிலையின் காரணமாகத்தான் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எனினும், மானாமதுரையில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் வேண்டும் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. அடுத்த ஆண்டு அதைத் துவக்குவதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

1996 ஆகஸ்ட் 6]

99--

தேக்கு மரம் வளர்க்கும் திட்டம்

968*--திரு. மு.க. ஸ்டாலின் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத்துறையின் மூலம் தேக்கு மரம் வளர்க்கும் திட்டத்தினைக் கட்டாயமாக்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத்துறையின் மூலம் தேக்கு மரம் வளர்க்கும் திட்டம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கியமான நடவடிக்கைகள் என்ன, அதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கருவேல மரங்கள் தமிழகத்தில் 13 ஆயிரம் கண்மாய்களில் 2,76,000 ஏக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளன. சுழற்சி முறையில் மேற்படி கருவேல மரங்கள் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டப்படுகின்றன. இதன் மூலம் முந்தைய அரசு ஆண்டுக்கு 11 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் ஈட்டியது. ஆனால், இந்த ஆண்டு அதே அளவு கருவேல மரங்கள் 20 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் ஈட்டும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

[1996 ஆகஸ்ட் 6

100--

பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்

*1431--**திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி வாரியம் மூலமாக சலுகை விலையில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு மானியச் சலுகையுடன் வீடு கட்டும் திட்டம் தமிழ்நாடு கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துத் கொள்கிறேன்.

(ஆ) கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் தற்போது வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகள் கட்டுவதற்கான நிலம் எந்தத் துறையால் வழங்கப்படுகிறது, எந்தெந்தப் பகுதிகளிலே இந்த திட்டம், நடப்பு ஆண்டு தொடங்கப்பட இருக்கிறது, எத்தனைபேர் இத்திட்டத்தால் பயன் அடைவார்கள், இதற்கு வழங்கப்படுகிற கடன் தொகை எவ்வளவு, அந்தக் கடன் தொகையிலே எவ்வளவு மானியமாக வழங்கப்படுகிறது போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறை நிலப்பட்டா செய்து கொடுக்கிறது. அவ்வாறு நிலம் வைத்திருப்பவர்களுக்கு வீடு கட்டக் கடன் தரும் பணியை தமிழ்நாடு கூட்டுறவு இணையம் மேற்கொள்ளுகிறது. தொழிலாளர் நலத் துறை மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு மானியம் பெற்றுத் தருகிறது. அவ்வாறு

1996 ஆகஸ்ட் 6]

மானியம் அளிப்பதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் 'ஹட்கோ' நிதியுதவி பெற்றுக் கடன் தொகை வழங்க ஆவன செய்யப்படுகிறது. பீடித் தொழிலாளர்களைப் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினராக அரசு வகைப்படுத்தி இருப்பதால் அவர்களுடைய வருவாய்க்கு ஏற்ப ஒரு வீட்டினை குறைந்தபட்சம் 19.93 சதுர மீட்டர் பரப்பளவில் ரூபாய் 22 ஆயிரம் மதிப்பீட்டில் கட்ட உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மத்திய அரசு ஒரு வீட்டுக்கு உதவித் தொகையாக ரூ. 9 ஆயிரம் வழங்குகிறது. எஞ்சியுள்ள 13 ஆயிரம் 'ஹட்கோ' நிறுவனக் கடனாக 10.5 சதவீத வட்டி விகிதத்தில் 15 ஆண்டுகளில் திருப்பி செலுத்தப்படும் வகையில் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முக்கூடல், மேலப்பாளையம் ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. மற்ற இடங்களிலே கருத்துருக்கள் வந்த பிறகு ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சேரன்மகாதேவியில் முக்கூடல் பகுதியிலே பீடித் தொழில் மிகவும் அதிகமாக நடைபெற்று வருகிறது. பீடித் தொழில் செய்கிற மக்கள் மிகவும் கஷ்டமான நிலையிலே குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இரவு நேரத்தில் தாழ்வான கூரை வீடுகளில் மண்ணெண்ணெய் விளக்கை வைத்துக்கொண்டு, இரவு முழுவதும், பீடித் தொழில் செய்கிற காரணத்தினால், சில நேரங்களில் தீ விபத்துக்கு உள்ளாகி அவர்களுக்கு சிரமம் ஏற்படுகின்ற நிலை உள்ளது. மேலும், அவர்கள் பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு பீடி சுற்றுகின்ற காரணத்தினாலும், அந்தப் பெண்பிள்ளைகள் திருமணமாகிச் சென்றுவிட்டால், அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத நிலையில் கஷ்டப்படுகின்ற நிலை உள்ளதால், இப்படி பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு இலவசமாக இந்த அரசு வீடுகளைக் கட்டிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்குள்ள தேவைகளை ஆராய்ந்து பார்த்து, தொழிலாளர் நலத்துறை பரிந்துரை செய்யும்போது, தமிழ்நாடு

கூட்டுறவு இணையம் மூலம் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அது போன்ற கருத்துரு அந்தப் பகுதியில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினர் பீடித் தொழிலாளர்கள் என்று கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ. 13,000 என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே போல மத்திய அரசின் பங்குத் தொகை மானியமாக ரூ. 9,000 கொடுப்பதாகச் சொன்னார்கள். இதனை உயர்த்திக் கேட்பதற்கு மாநில அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேலப்பாளையத்தில் 439 வீடுகளும், முக்கூடலிலே 482 வீடுகளும் ஹட்கோ நிறுவனத்தின் உதவியுடன் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இது மத்திய அரசின் நிதியுதவி பெற்று நடக்கிற திட்டமாக இருக்கிறதால், கடன் தொகையை உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செங்கை சிவம்.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியைக் கேட்டதற்கே காரணம், தென் இந்திய பீடித் தொழிலாளர் சங்கமே என்னுடைய தொகுதியில் தான் இருக்கிறது. குறிப்பாக, இஸ்லாமியப் பெருங்குடி மக்கள் தாதாஷாமக்கான், பென்ஷனர்லேன், காட்பாடா, புளியாந்தோப்பு, திரு. வி. க. நகர், வ.உ.சி. நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 20,000 பீடித் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். பூங்காநகரையும் சேர்த்தால், 40,000 அல்லது 50,000 பேர்கள் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கூவம் ஆற்றங்கரை ஓரங்களிலும், பக்கிம்ஹாம் கால்வாய் ஓரங்களிலும் மற்றும் ஓட்டேரி நல்லா பகுதிகளிலும் வாழுகின்ற பீடித் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது கருணை உள்ளம் கொண்ட நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தினைத் தொடங்க வழிவகை செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது போல அவருடைய தொகுதியில் தொழிலாளர் நலத் துறை நிலம் பட்டா செய்து கொடுத்தால் அந்தப் பகுதியில் அதற்கான கடனுதவி தந்து வீடுகளைக் கட்டித் தரும் பணிகளைத் துவக்க அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 101, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

101--

கம்பிவட தொலைக்காட்சி இயக்கும் தொழில்

*1367--**திரு. டி. இராஜேந்தர் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கம்பிவட தொலைக்காட்சி இயக்குபவர்களுக்கான (Cable T.V. Operators) தொழிலை சிறுதொழில் சட்டத்தின்கீழ் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை அவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) டெவலப்மெண்ட் கமிஷனர் (சிறுதொழில்கள்), புதுடெல்லி வழங்கியுள்ள மத்திய அரசு பின்பற்ற வேண்டிய கொள்கை வழிமுறைகளின்படி கம்பிவட தொலைக்காட்சி நிறுவுதல் மற்றும் இயக்குபவர்கள் சிறுதொழில் சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களாக (SSSBE) பதிவு செய்யப்படுகின்றன.

(ஆ) அதனால் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் சலுகைகளை இவர்களுக்கும் வழங்க இயலாது.

திரு. டி. இராஜேந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களுக்கு உரிமம் வழங்க, கட்டாயப்படுத்தி, லஞ்சம் வசூலிக்கப்பட்டதாகக்

கூறப்படுகிறது. அப்படி வசூலித்த தொகையினை அவர்களுக்குத் திருப்பி அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும், இந்த எஸ். எஸ்.எஸ்.பி.ஈ. என்பது சிறு தொழில் சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களாகப் பதிவு செய்யப்படுவது, சிறுதொழில் சட்டத்தின் கீழ் அவசியம் பதிவு செய்யப்படவேண்டிய கட்டாயம் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இது சம்பந்தமாக வசூல் செய்யப்பட்டதாகச் சொல்லுவது குறித்து, தனிக் கேள்வியாகக் கேட்டால் அது எந்தத் துறை சம்பந்தப்பட்டது என்பதை அறிந்து விளக்கம் அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 102, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன் மற்றும் திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

102--

பத்திரிகை விளம்பரத்துக்கான செலவு

251--திரு. துரை சந்திரசேகரன், திரு பே. வே. ஸ்ரீ.* **வெங்கடேசன்:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1989-90, 1990-91, 1991-92, 1992-93, 1993-94, 1994-95, 1995-96 நிதியாண்டுகளில் செய்தி விளம்பரத்துறை மூலம் பத்திரிகைகளில் விளம்பரத்துக்கு அரசு கொடுத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989-90 முதல் 1995-96 வரையிலான நிதியாண்டுகளில் செய்தித்துறையின் மூலம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு அரசு செலவிட்ட தொகை விவரம் பின்வருமாறு:

1996 ஆகஸ்ட் 6]

1989-90	*6 கோடியே 92 இலட்சம்*
1990-91	*6 கோடியே 95 இலட்சம்*
1991-92	*8 கோடியே 60 இலட்சம்*
1992-93	*11 கோடியே 79 இலட்சம்*
1993-94	*11 கோடியே 98 இலட்சம்*
1994-95	*16 கோடியே 62 இலட்சம்*
1995-96	*21 கோடியே 07 இலட்சம்*

1989-90ல் கழக ஆட்சி நடைபெற்ற போது ரூ. 6 கோடியாக இருந்தது, கடந்த கால ஆட்சியில் 21 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் அளவுக்கு மீறிய செலவினங்கள் செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தற்போது ஏற்பட்டிருக்கிற கழக ஆட்சியில் செலவினங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன். மேலும், பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் பேதமின்றித் தரப்படுகின்றனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அரசு வந்ததற்குப் பின்னால் தேவையற்ற விளம்பரங்களைப் பெருமளவில் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 1996 ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக ஒரு கோடியே 72 இலட்சம் ரூபாய்க்கான விளம்பரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், புதிதாக கலைஞர் தலைமையில் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் சராசரியாக 1 கோடியே, 32 இலட்சம் ரூபாய் அளவுக்கு விளம்பரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கலைஞர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று மேலும் தேவையற்ற விளம்பரச் செலவினங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், சராசரியாக ஒரு கோடி

அளவுக்கு விளம்பரச் செலவினங்களைக் குறைப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விளம்பரங்களைக் கொடுக்க பத்திரிகைகளைத் தேர்ந்தெடுக்கின்றபோது என்ன அளவுகோல் பின்பற்றப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அளிக்கப்பட்ட விளம்பரங்கள் அத்தனையும் விருப்பு வெறுப்பு என்ற அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. குறிப்பாக ஒரு விளம்பரத்தை நாங்கள் அளிக்கும்போது அந்த விளம்பரத்தினுடைய தன்மையைப் பொறுத்தும், எந்தப் பத்திரிகையில் அந்த விளம்பரத்தைக் கொடுத்தால், அது போய்ச்சேர வேண்டிய மக்களுக்கு ஒழுங்காகப் போய்சேரும் என்ற அடிப்படையில்தான் தருகிறோம். குறிப்பாக, விளம்பரங்கள் என்றால் நிலம் கையகப்படுத்துதல், ஒப்பந்தப்புள்ளி, மற்றும் விவர அறிவிப்புகள், வடிவமைப்பு விளம்பரங்கள் என மூன்று வகையான விளம்பரங்களை இந்த அரசாங்கம் வழங்கி வருகின்றது. குறிப்பாக, ஒரு மாவட்டத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற விளம்பரமாக இருந்தால், அந்த மாவட்டத்திலே வருகின்ற பத்திரிகைகளிலே மாத்திரம் நாங்கள் விளம்பரங்களைத் தருகின்றோம். ஆனால் கடந்த காலத்தில் தாம் விரும்புகின்ற பத்திரிகைகளிலே, ஒரு மாவட்டத்திலே தரவேண்டிய விளம்பரத்தை மாநிலம் பூராவும் இருக்கிற பத்திரிகைகளில் விளம்பரமாகத் தந்த காரணத்தால்தான் கூடுதலாகச் செலவு ஆகியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு, குறிப்பிட்ட ஒரு விளம்பரம், ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலும், இரண்டு தமிழ்ப் பத்திரிகைகளிலும் வந்தால் போதும் என்ற அளவிலேதான் விளம்பரங்களைத் தருகிறது. கடந்த காலத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் தரப்பட்டன. அப்படி தரப்பட்டாலும்கூட, குறிப்பாக, இந்து, இண்டியன் எக்ஸ்பிரஸ், தினமணி, கதிரவன், முரசொலி, தீக்கதிர், தினப்புரட்சி ஆகிய பத்திரிகைகள் எவற்றிற்கும் விளம்பரங்கள் தரப்படாமல் தட்டிக் கழிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் கட்சி வேறுபாடு

1996 ஆகஸ்ட் 6]

இல்லாமல் எல்லாத் தரப்புப் பத்திரிகைகளையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்கின்ற கலைஞர் அவர்கள், எல்லோருக்கும் விளம்பரம் தரப்பட வேண்டும் என்ற அடிப்படையில் செயலாற்ற வேண்டும் என்று சொன்னதையொட்டி, அந்த அணுகுமுறையைக் கையாண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. இராசேந்திரன் என்கிற *தீரன்.*

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே, ஏராளமான விளம்பரங்கள் தங்களுக்கு வேண்டிய பத்திரிகைகளுக்கு வளர்ந்த, பிரபலமான பத்திரிகைகளுக்குத் தரப்பட்டன. அந்த வளர்ந்த, பிரபலமான பத்திரிகைகளுக்குத் தனியார் துறையிலே இருந்து நிரம்ப விளம்பரங்கள் கிடைக்கின்றன. ஆனால் வளர்ந்து வருகின்ற சிறு சிறு பத்திரிகைகளுக்குத் தனியார் துறையிலே இருந்து விளம்பரங்கள் கிடைப்பதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சிறு சிறு பத்திரிகைகளுக்கு இந்த அரசு விளம்பரங்களைச் சற்றுக் கூடுதலாகக் கொடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்தவர்களைக் கைதூக்கி விடுவதற்காக இருக்கிற தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, பத்திரிகைத் துறையிலே, சிறிய பத்திரிகை, பெரிய பத்திரிகை என்று பாராமல், இலட்சிய உணர்வோடு நடத்தப்படுகின்ற பத்திரிகைகளைக் கைதூக்கி விடுவதற்கும், அந்தப் பத்திரிகைகள் நசுங்கிப் போகாமல் இருப்பதற்கும் ஏற்றவகையில் விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குழந்தை. தமிழரசன்.

முற்பகல் 10-25

திரு. குழந்தை. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் விளம்பரங்களை எந்த ஆண்டு முதல் பத்திரிகைகளுக்கு வழங்கி வருகின்றது? எந்தெந்த வகையான விளம்பரங்களை, யார் யார் மூலம் வழங்கி வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விளம்பரங்கள், 1948–ஆம் ஆண்டிலிருந்தும், அரசைச் சார்ந்த கழகங்கள், வாரியங்கள், மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் 1971–ஆம் ஆண்டிலிருந்தும் செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. அந்த விளம்பரங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று நிலம் கையகப்படுத்துகிற விளம்பரம்; இரண்டாவது ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் இதர அறிவிப்புகள்; மற்றும் மூன்றாவது வடிவமைப்பு விளம்பரங்கள். இந்த மூன்று பெயர்களிலே, அரசாங்கத்தின் சட்ட ரீதியாகவும், அரசு நடைமுறைகளைப் பின்பற்றியும், நாளிதழ்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. அரசின் அனைத்து விளம்பரங்களும், அரசின் அங்கீகாரப் பட்டியலிலுள்ள விளம்பர நிறுவனங்கள் மூலம் நாளிதழ்களுக்கும், பருவ இதழ்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி.

Thiru B. Venkatasamy : Hon' Speaker Sir, may I request the Hon. Minister to state whether any benami publications have received any amount? If so, is there any benami names other than newspapers? Sir, I wanted to know this.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 65 அரசு அங்கீகாரம் பெற்ற விளம்பர நிறுவனங்கள் இருக்கின்றன. இதில், கிட்டத்தட்ட 15 விளம்பர நிறுவனங்கள் பினாமியாக இருக்கலாம் என்பதற்காக, அவைகளைக் கண்டிபிடித்து, ஊர்ஜிதப்படுத்துவதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். நிச்சயமாக அவைகள் முன்னாள் அமைச்சருடைய பின்னணியில் பினாமி நிறுவனங்களாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் விளம்பரம் கொடுப்பதன் நோக்கம், செய்தி மக்களுக்குச் சென்று அடைய வேண்டும் என்பதற்காகத்தான். எனவே அதிக விற்பனை உள்ள பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தால்தான், விஷயம் மக்களுக்குப் போய்ச் சேரும். குறைந்த அளவு விற்பனை உள்ள பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தால், பத்திரிகை

1996 ஆகஸ்ட் 6]

நடத்துகிறவர்களுக்கு வேண்டுமானால் உதவிகரமாக இருக்குமே ஒழிய, அதனால் அரசாங்கத்திற்கு ஏதாவது நன்மை கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், எந்த விளம்பரம் யாரைப் போய்ச் சேரவேண்டுமோ, அதற்குண்டான பத்திரிகையிலே அந்த விளம்பரத்தைக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்குப் பயன் பெறும் என்ற அடிப்படையிலே விளம்பரங்கள் வழங்கப்படுகின்றன. சிறு பத்திரிகை என்று வருகிறபோது, மாவட்ட அளவில் நடக்கிற பத்திரிகைகள் எல்லாம் கிராமங்களுக்குப் போய்ச் சேருகின்றன. எனவே சிறிய பத்திரிகைகளுக்கு, மாவட்ட அளவோடு பார்த்து விளம்பரங்களை வழங்குகிறோம். வண்ண வடிவமைப்பு விளம்பரங்களைப் பொறுத்தவரையில், வார இதழ்களுக்குத் தருகிறபோது, அது எல்லாப் பகுதி மக்களுக்கும் போய்ச் சேருகிறது. குடும்பத்தில் இருக்கின்ற எல்லோரும் படிக்கிற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே அதிலே சின்ன பத்திரிகை, பெரிய பத்திரிகை என்ற வேறுபாடு பார்க்காமல், விளம்பரங்களின் தன்மையைப் பொறுத்து, வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 பத்திரிகைகள் பினாமி பத்திரிகைள் அதற்கு விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த 15 பினாமி பத்திரிகைகளுக்கு, மக்களுடைய வரிப் பணத்திலேயிருந்துதான், பணத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பினாமி பத்திரிகைகள் மீதும், விளம்பரம் கொடுத்தவர்கள் மீதும், விளம்பரம் கொடுப்பதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் மீதும், அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் ? அவர்களிடமிருந்து அரசு அந்தப் பணத்தைத் திரும்பக் கைப்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1996 ஆகஸ்ட் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 103, டாக்டர் ஆ. ஞானசேகரன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்.

103--

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தைப் புதுப்பித்தல்

*1491--**டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரியம்மன் ஆலயத்தைப் புதுப்பிக்க தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஆ. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிரபலமான அங்காளபரமேஸ்வரியம்மன் ஆலயத்திற்கு நாளும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அம்மனைத் தரிசிப்பதற்காக வருகை தருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு இடம் இல்லாமலும், குடிப்பதற்குக் குடிநீர் இல்லாமலும் ஒரு அவல நிலை இருப்பதால், தங்கும் விடுதி ஒன்றும், நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரியம்மன் கோயிலில் ஏற்கெனவே தங்கும் விடுதி இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. மேலும் அதுபற்றிச் சரியான விவரம் இல்லை. எனவே உறுப்பினர் வேறு கேள்வி போட்டால், விளக்கமாகப் பதில் தருகிறேன்.

1996 ஆகஸ்ட் 6]

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அறங்காவலர்களை நியமிக்க, பரிந்துரை செய்ய 1989-ல் கழக ஆட்சியிலே இருந்ததைப் போல ஏரியா கமிட்டி உடனடியாக அமைக்கப்படுமா, எவ்வளவு காலத்திற்குள் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்குத் தகுந்த பதில் அளித்து இருக்கிறேன். என்றாலும், கடந்த ஆட்சியிலே நியமிக்கப்பட்ட அறங்காவலர்களுடைய செயல்பாடுகள் எல்லாம் பொதுமக்கள் மத்தியிலே திருப்திகரமாக இல்லை என்று புகார் வந்ததன் அடிப்படையில் 26-6-1996 அன்று ஆளுநரால் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு கடந்த காலத்தில் நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் எல்லாம் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு முறையான சட்டமுன்வடிவு இந்த அவையிலே கொண்டுவரப்பட்டு, பின்பு அறங்காவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. பன்னீர்செல்வம்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறை மூலம் கோவில் கட்டுமானப் பணிக்கு அரசின் மூலம் மானியத் தொகை வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் ஆகியும் அந்தத் தொகை இதுவரை வழங்கப்படவில்லை. எப்போது வழங்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கோவிலுக்கு அப்படி வழங்கப்படவில்லை என்பதற்கு சரியான விவரம் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. பன்னீர்செல்வம்: சீர்காழி தொகுதியில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இரண்டு பேரும் மாற்றி மாற்றிப் பேசக்கூடாது. உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களைப் புதுப்பிப்பதற்காக பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த கால ஆட்சியிலே கோவில்களிலே பல கோடிக்கணக்கான ரூபாய் நகைகளும், பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டு இருக்கிறதே, அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு மேற்கொண்டு இருக்கிற நடவடிக்கைகள் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் 645 களவுகள் நடைபெற்று இருக்கின்றன என்று ஏற்கெனவே பதில் அளித்து இருக்கிறேன். இந்தப் புதிய அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையின்கீழ் வந்த பின்பு, ஊழல் நிறைந்த முறைகேடான நிர்வாகங்கள் அகற்றப்பட்டு, நல்ல முறையிலே நிர்வாகங்கள் கவனிக்கப்பட ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, மாண்புமிகு உறுப்பினர் ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்.

104--

தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

*564--**திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏனாதி, காடந்தங்குடி, ப்ழஞ்சூர், மண்ணாங்காடு, வாட்டாகுடி, வாட்டாகுடி வடக்கு போன்ற கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று கேட்டு இருக்கிறார்கள். இத்திட்டம் ஆதிதிராவிடர் நலத்துறையிலிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு மாற்றப்பட்டு, அத்துறையின் மூலமாகத்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, இது சம்பந்தமான வினாவிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரிடமிருந்துதான் தக்க பதிலை எதிர்பார்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பாலசுப்பிரமணியன் : எப்போது பணிகள் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடு என்கிற காரணத்தால் அதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பழுதுபட்ட வீடுகள் எத்தனை என்ற விவரங்களைச் சென்ற அரசு தயாரிக்கவில்லை. பழுதினுடைய தன்மையைப் பற்றியும் எந்தக் குறிப்பும் அவர்கள் எடுத்து வைக்கவில்லை. எனவே, பழுதுபார்க்க வேண்டுமென்றால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற முறை பொறுப்பு ஏற்றபோதுதான் தீப்பிடித்து எரியாத வீடுகள் கட்ட வேண்டுமென்று இந்த காங்கிரீட் வீடு கட்டும் திட்டத்தை அமல்படுத்தினார்கள். அந்தக் காலத்தில் கட்டிய வீடுகள் கூட, இந்தக் காலம் வரையில் பல வீடுகள் சரியாக இருக்கின்றன. ஆனால், சமீப காலங்களில் கட்டிய வீடுகளில் பல பழுதடைந்து போய் இருக்கின்றன. எனவே, இது தானாக பழுதடைந்ததா, கட்டுமானப் பணியின் தவறால் பழுதடைந்து இருக்கிறதா என்றெல்லாம் விவரம் அறிந்து, அதற்குத் தகுந்தவாறுதான் இந்தப் பணியை நிவர்த்தி செய்கிற சூழ்நிலை ஏற்படும். ஆனாலும் கொள்கை அளவில் பழுதடைந்து இருக்கிற, இயற்கையாகப் பழுதடைந்த வீடுகளைப் பழுது பார்க்கும் பணியை இந்த அரசு துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு முன்பு வழங்கியதைப் போல 3 சென்ட் மனைப்பட்டா வழங்கப்படுமா என்று நான் கேட்ட கேள்விக்கு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) சொல்கிறபோது, மக்கள் தொகை வளர்ந்து வருகிற காரணத்தினால் 2 சென்ட் தான் அளிக்க முடியும் என்கிற அரசு நிலையைக் குறிப்பிட விரும்புகிறேன் என்று அரசினுடைய குறிப்பாகக் கூறினார்கள். ஆனால், துறையினுடைய செயலாளர் அளித்து இருக்கிற பதிலில், இது குறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். அரசே 3 சென்ட் நிலத்திற்கு மனைப்பட்டா வழங்கத் தயாராக இருந்தால் கூட அமைச்சர் தடையாக இருப்பாரோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. எனவே 3 சென்ட் இலவச நில மனைப்பட்டா வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேரிலே அப்படிக் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. இப்படிச் செயற்குறிப்பு இருக்கிறதே அது அமைச்சருக்குத் தெரியுமா என்று கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : செயற்குறிப்பு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் நான் விளக்கமாகப் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர், நேற்றையதினம் நீங்கள் 2 சென்ட் தான் என்று சொன்னீர்கள். உங்கள் துறைச் செயலாளர் அவர்கள் 3 சென்ட் என்பது பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொல்லி இருக்கிறார். அதுபற்றி நீங்களும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால் போதும். தனிக் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு

1996 ஆகஸ்ட் 6]

விஷயம் தெரியும். தெரியாத உறுப்பினர் என்று சொல்ல முடியாது. மூலக் கேள்விக்கு சம்பந்தமே இல்லாமல் ஒரு கேள்வியை எழுப்பி இருக்கிறார். நேற்றைக்கு விவரமாக அமைச்சர் பதில் சொன்னார். அந்த பதிலை அவர் கேட்டு விட்டு, இப்போது ஏதோ ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அப்படி இருக்கிறது என்று சொன்னால் (குறுக்கீடு) பதில் வந்திருக்கிறது என்று சொல்கிறார். அதுபற்றிக் கூட அவைக்கு சொல்லும்போது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு விளக்கம் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று காலையில் என்னுடைய அறையில் வந்து, துறையினுடைய பதிலுக்கும் அமைச்சருடைய பதிலுக்கும் வேறுபாடு இருக்கிறது என்றும், இதை ஒரு தனிப் பிரச்சினையாக, தீர்மானமாகக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார். நான் இந்தத் துணைக் கேள்வியிலே உங்களை அனுமதிக்கிறேன். நீங்கள் விளக்கம் கேட்டுக் கொள்ளலாம் என்று நான் அனுமதி கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொண்டாலும் கூட அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல அமைச்சர் தயாராக இருக்க வேண்டும் அல்லவா? சம்பந்தமே இல்லாமல் அதை எழுப்பி இருக்கிறபோது அமைச்சர் சரியான பதிலைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் உரிமை மீறல் பிரச்சினையாக வந்து விடும். அதனால் தான் மாண்புமிகு அமைச்சர் அந்த பதிலைச் சொல்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு பேர் சேர்ந்தாற்போல எழுந்து நிற்கிறீர்களே, எப்படி? திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைச் செயலாளர் 3 சென்ட் அளவுக்குத் தர முடியும் என்று சொல்லி இருக்கிறார். அமைச்சரோ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தர முடியும் என்று சொல்லவில்லை. நீங்கள் அவர் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். தரமுடியும் என்று சொல்லவில்லை. பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். அமைச்சரோ 2 சென்ட் தான் தர முடியும் என்று சொல்லி இருக்கிறார். இந்தப் பிரச்சினைக்கு ஒரே பரிகாரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து, முதலமைச்சர் அவர்களைக் கலந்து முடிவு எடுக்கிறேன் என்று சொன்னால் பிரச்சினை முடிந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிர்க்கட்சியில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். இருந்தாலும் பழைய அனுபவத்திலே அமைச்சர் அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து முடிவெடுக்கப்படும். *(சிரிப்பு)*

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் விஷயம் தெரிந்தவர்தான். இந்தக் கேள்விக்கான பதிலில் அரசின் செயற்குறிப்பிலே இருப்பதாகத் துறைச் செயலாளர் தெரிவித்து இருக்கிறார். ஆனால் அதே பதிலில் அமைச்சர் கொடுக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார். எனவே உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தால் நான் தான் கொண்டு வர முடியுமே தவிர, உங்கள் தரப்பிலிருந்து கொண்டு வர முடியாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விளக்கத்தை நான் சொல்லிவிட்டேன்.

திரு. ச. அழகிரி: நானும் அப்படித்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே நீங்கள் கருத்துப் பரிமாற்றமே செய்யத் தேவையில்லை. அமைச்சர் அவர்களுக்கு விளக்கம் நான் சொல்லி விட்டேன். நீங்கள் தனித் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்று என்னுடைய அறையில் கேட்டீர்கள். துணைக் கேள்வி மூலமாக இதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்று நான் உங்களிடம் சொல்லிவிட்டேன். பிரச்சினை முடிந்தது.

1996 ஆகஸ்ட் 6]

அடுத்து, வினா எண் 105, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் நாசர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

105--

மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

1112*--திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிதம்பரம் தாலுக்கா, பறங்கிப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரம் தாலுக்கா, பறங்கிப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்து, பெங்களூரிலுள்ள மத்திய கடலோரப் பொறியியல் நிறுவனம் தொழில் நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ள மைய அரசுக்குப் பெருந்திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளது. ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் பறங்கிப்பேட்டையில் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டபின் திட்டத்தைச் செயலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-40*

திரு. அ.வ. அப்துல் நாசர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய வெள்ளாற்று முகத்துவாரம் தூர்ந்து போய் இருக்கிற காரணத்தால், தற்காலிகமாகவாவது அங்கே தூர் வாரும் கப்பலை வைத்து, மேடிட்ட மண் பகுதிகளை அகற்றி, அந்தப் பகுதி மீன்பிடி மக்களுக்குப் பயன்தரும் வகையில், அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை. தமிழரசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

தமிழ்நாட்டிலுள்ள சட்டக் கல்லூரிகள்

*2796--**திரு. குழந்தை. தமிழரசன் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சட்டக் கல்லூரிகள் உள்ளன?

(ஆ) அவைகளில் உள்ள பி.எல்., மற்றும் எம்.எல்., வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் இப்போது 4 அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஒன்று சென்னையில், மற்றொன்று மதுரையில், பிறிதொன்று திருச்சியில், இன்னொன்று, கோவையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருநெல்வேலியில், ஒரு சட்டக் கல்லூரியை இவ்வாண்டு துவக்க அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோக சேலத்தில் தனியார் ஒருவருடைய சட்டக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) பி.எல்., மற்றும் எம்.எல். வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்:

1996 ஆகஸ்ட் 6]

பி.எல். 3 ஆண்டு படிப்புக்கு 684 இடங்கள். பி.எல். மாலைநேரக் கல்லூரிக்கு 689 இடங்கள். பி.எல். 5 ஆண்டுக் கல்விக்கு 594 இடங்கள் எம்.எல். 90 இடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் தனியார் சட்டக் கல்லூரி துவங்க அனுமதித்ததைப் போல, மற்ற இடங்களிலும் தனியார் சட்டக் கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளை ஊக்குவிக்கக்கூடாது என்பது அரசினுடைய கொள்கை. தனியார் கல்லூரிக்கு எதிராக அரசு ஏற்கனவே உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள தனியார் சட்டக் கல்லூரிக்கு அரசின் சார்பில் மாணவர்களைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த உன்னிகிருஷ்ணன் என்பவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். அந்த வழக்கைத் தொடுத்ததில் தொழில் கல்விகளுக்கு எல்லாம் ஒரு அமைப்பின் மூலமாகத்தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்புதான் இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எல்லா மாநிலங்களிலேயும் பின்பற்றப்படுகிறது. அதே அடிப்படையிலே, சட்டக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக சேலம் கல்லூரிக்கு அரசே மாணவர்களைத் தேர்ந்தெடுக்க முற்பட்டபோது, அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் உச்சநீதிமன்றத்தில் ஒரு தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, தற்போது அரசால் அந்த சேலம் கல்லூரிக்கு அரசு சார்பில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. என்றாலும் அந்தத் தடையாணையை

நீக்குவதற்கு தமிழக அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முகம்மது கோதர் மைதீன்.

திரு. முகம்மது கோதர் மைதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு சட்டக் கல்லூரியை இந்த ஆண்டிலே தந்திருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், இந்த ஆண்டு தொடங்க இருக்கக்கூடிய சட்டக் கல்லூரியில், மாலை நேரத்தில் மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, ரெகுலர் கோர்ஸ், இயல்பாகவே உள்ள படிப்புக்கான இடத்தைக் கண்டுபிடித்து, அதற்கான இடத்தைப் பெறுவதில் கொஞ்சம் சிரமம் எல்லாம் இருக்கிறது. எனவே, மாலை நேரக் கல்லூரி துவங்குவது பற்றி அரசு பரிசீலிக்கும். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு அது அனுகூலமாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. ஆவுடையப்பன்.

திரு. இரா. ஆவுடையப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் துவக்க இருக்கின்ற சட்டக் கல்லூரியில் நடப்பு ஆண்டில் 5 ஆண்டு சட்டப் படிப்பு கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, அதுவும் சேர்த்துத்தான் கற்றுக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குழந்தை. தமிழரசன்.

திரு. குழந்தை. தமிழசரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள சட்டக் கல்லூரிகளில் படிக்கின்ற, பி.எல்., மற்றும் எம்.எல். மாணவர்களுடைய தேர்ச்சியில் முதல் வகுப்புத் தேர்ச்சியின் அளவு குறைவாக இருப்பதை இவ்வரசு அறியுமா? அப்படியிருந்தால், முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற

1996 ஆகஸ்ட் 6]

அளவிற்கு அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இவ்வரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பி.எல். படிப்பில் முதல் வகுப்பில் மாணவர்கள் தேறவில்லை என்ற உண்மையை நான் ஒத்துக்கொள்கிறேன். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இயக்குநர் அவர்களிடத்திலே நான் ஆலோசனை நடத்தி மாணவர்களுக்கு தனியாகப் பயிற்சி அளித்து ஒரு குறிப்பிட்ட சதவீத மாணவர்களாவது நிச்சயமாக முதல் வகுப்பில் 'ஃபர்ஸ்ட் கிளாஸ்' எடுக்கக் கூடிய அளவிற்கு சட்டக் கல்லூரிகள் முயற்சிக்கவேண்டுமென்று நான் பணித்திருக்கிறேன். அது அகில இந்திய அடிப்படையில் அந்த மாணவர்களுக்குத் துணை செய்வதாக அமையும். எனவே, உறுப்பினருடைய ஆலோசனைக்கு அரசு தீவிர கவனம் செலுத்துகிறது என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பா. துரைசாமி.

திரு. பா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகள் இல்லாத சட்டக் கல்லூரிகளுக்கு விடுதிகள் கட்ட அரசு ஆவனசெய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரிகளுக்குப் போதுமான விடுதிகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மதுரையில் இருக்கிற சட்டக் கல்லூரி விடுதிக்குத் தேவையான மாணவர்கள்கூட சேரவில்லை. ஆனால் பிற ஏதாவது கல்லூரிகளுக்குப் போதுமான இடமில்லை என்பதைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவாரேயானால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும், புதிய கட்டிடங்கள் எழுப்பப்படும் என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சேலம், திராவிட முன்னேற்றக் கழக மாவட்டக் கழகக் கட்டடத் திறப்பு விழா குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) மூன்று பேர் சேர்ந்தாற்போல் எழுந்திருக்கிறீர்கள் என்றால் அதை எப்படி அனுமதிக்கமுடியும்?

திரு. பி.ஆர். சுந்தரம்: இந்த அரசு பதவியேற்றவுடன் நாங்கள் ஆடம்பரத்தை விரும்பவில்லை, விளம்பரத்தை விரும்பவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்விக்கு வாருங்கள். இந்த முன்னுரையெல்லாம் தேவையில்லை. பாயின்ட் ஆப் ஆர்டரை ஒழுங்காகச் சொல்லுங்கள். இதெல்லாம் நீங்கள் சொல்லத் தேவையில்லை. பிரச்சினை என்ன வேண்டுமானாலும் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. பி.ஆர். சுந்தரம்: பிரச்சினைதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசுங்கள். நீங்கள் கேட்டதற்கு நான் அனுமதி மறுத்துவிட்டேன். இருந்தாலும் எழுந்து நிற்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த 4-ஆம் தேதி சேலம் வந்தபோது அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டன. 20-க்கும் மேலான அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. தயவுசெய்து முழுமையாக...(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லாம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவேண்டும்.

திரு. பி.ஆர். சுந்தரம்: என்னுடைய பேச்சை முழுமையாகக் கேட்டதற்குப் பிறகு ஆளும்கட்சியினர் தங்களுடைய பதிலைச் சொல்லலாம் என்று சொல்கிறேன். அது கட்சியினுடைய....(குறுக்கீடு)

1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: இது எப்படிப் பாயின்ட் ஆப் ஆர்டராக வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம் நீங்கள் அறையில் என்னிடம் கேட்டீர்கள். அனுமதி மறுத்துவிட்டேன். அதே பிரச்சினை என்றால் நான் அனுமதி தரமுடியாது. நீங்கள் உட்காருங்கள். திரு. ரங்கநாதன். (குறுக்கீடு)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சேலத்தில் நடைபெற்றது திராவிட முன்னேற்றக் கழக மாவட்டக் கழகக் கட்டிடத்திற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்ற கட்சி விழா. அது அரசு விழா அல்ல என்பதை சாதாரண அறிவு படைத்தவர்கள்கூடத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உறுப்பினருக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் உட்காரவேண்டும், அல்லது நடவடிக்கை எடுப்பேன். அவர் பேசுவது அவைக் குறிப்பில் இடம்பெறாது.

(ஆ) தெலுங்கு-கங்கைத் திட்ட கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் ஆந்திர மாநிலத்தில் ராயலசீமா பகுதியிலே அமைந்திருக்கிற வெள்ளக்கோடு என்ற ஒரு இடத்தில் நேற்று ஆந்திர மாநில முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள் கர்நூல் மாவட்டத்தினுடைய ஏறத்தாழ 27,000 ஏக்கர் பயிர் சாகுபடிக்கு அந்த தெலுங்கு கங்கை நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டுள்ளார்கள். நம்முடைய பகுதிக்கும் நம்முடைய சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நமது பகுதியிலே அமைந்துள்ள அந்தக் குடிதண்ணீர்த் தேவைகளை எப்போது நிறைவு செய்யமுடியும், எப்போது நமது சென்னைக்குக் குடிதண்ணீர், கிருஷ்ணா நதியிலிருந்து

[திரு. ப. ரங்கநாதன்] [*1996* ஆகஸ்ட் *6*

தெலுங்கு கங்கைத் திட்டத்தின் கீழ் வரும்? அது சென்னைக்கு எப்போது வரும், எந்தத் தேதியில் வரும், எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் ஒரு நாளைக்கு வரும் என்பதையும் நீங்கள் குறிப்பிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கடந்த பல ஆண்டுகளாக அடுத்த மாதம் வருகிறது, அடுத்த மாதம் வருகிறது என்று பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் *10–50*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு, நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும். இந்த 'இஷ்யூ'வில் நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி அவர்கள் உட்கார்ந்து கொண்டே அவையை நடத்தக்கூடாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதலில் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோள். பொதுவாக, உறுப்பினர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றிக் கேட்க வேண்டுமேயானால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தமது இருக்கையிலிருந்து, குறிப்பிட்ட அமைச்சரைப் பார்த்து நீங்கள் தயாரா என்று கேட்பார்கள். ஆனால் நம்முடைய திரு. ரங்கநாதன் அங்கிருந்து ஒரு பத்திரிகையைக் காண்பித்தார். நான் என்ன நினைத்துக் கொண்டேன் என்றால், ஏதோ ரெக்கமன்டேஷன் என்று நினைத்துக்கொண்டு, கேள்வி நேரம் முடிந்த பிறகு வாருங்கள் என்று சொன்னேன். ஆனால், அதற்குப் பிறகு அவர் எழுதியிருக்கும் பேப்பரைக் காண்பிக்கிறார். இருந்தாலும், அவர் கேட்டுவிட்ட காரணத்தால், நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் கேட்டார்கள். அவர்கள் கேட்டதற்குத்தான் நான் பதில் சொன்னேன். ராயலசீமா பகுதிக்கு, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் தெலுங்கு-கங்கைத் திட்டத்திலிருந்து தண்ணீரைப் பாசனத்திற்காகத் திறந்துவிட்டிருக்கிறார்கள் என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சிகரமான ஒரு செய்திதான். ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து பூண்டி வரையிலே வருகிற அந்தக் கால்வாய்க்கு, ஆந்திர எல்லை வரையிலே தெலுங்கு-கங்கைத் திட்டம் என்று பெயர். தமிழ்நாட்டின் எல்லைக்குள் அதற்கு கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் என்று பெயர்.

1996 ஆகஸ்ட் 6] [திரு. துரைமுருகன்]

ராயலசீமா மிக வறண்ட பகுதி. இந்தத் திட்டம் போடுகிறபோது, அந்தப் பகுதிக்குத் தண்ணீர் தரவேண்டும் என்பது அதனுடைய ஷரத்துக்களில் ஒன்று. எனவே, ஸ்ரீசைலம் அணைக்கட்டிலே, அதனுடைய பிற்பகுதியிலே போத்திரெட்டிப்பட்டு என்ற இடத்திலே தண்ணீர் எடுக்கிறார்கள். போத்திரெட்டிப்பட்டு-பனகசாலா ரெகுலேட்டர், பனகசாலா ரெகுலேட்டர்-பெலுகோடு ரிசர்வாயர், பெலுகோடு ரிசர்வாயர்-செண்ணமுகப்பள்ளி, செண்ணமுகப்பள்ளி -பெர்மகாரிமடம், செண்ணமுகப்பள்ளி-வடப்பண்ணை, வடப்பண்ணை-சோமசீலா, சோமசீலா-கண்டலேறு, கண்டலேறு-சத்தியவேடு, சத்தியவேடு-ஊத்துக்கோட்டை, ஊத்துக்கோட்டை-பூண்டி, பூண்டி-மெட்ராஸ். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதாவது சென்னை, இதுதான் தெலுங்கு கங்கைத் திட்டத்தினுடைய வழித்தடம். ஆகையினாலே, அவர்கள் பெலுகோடு ஏரியை இப்போது கட்டி முடித்திருக்கிறார்கள். எனவே, ராயலசீமா பகுதிக்குத் தண்ணீரைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கேள்வியிலே நம்முடைய ஆந்திர முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்--உறுப்பினர் படித்த பத்திரிகையை நானும் படித்தேன், ஏனென்றால் சப்ஜெக்ட் இருப்பதினாலே உடனே படித்துவிட்டேன்--சென்னைக்குத் தண்ணீர் தருவீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். கண்டலேறு பகுதியிலிருந்து தமிழ்நாடு ஜீரோ பாயிண்ட் வரையில் இருக்கிற பகுதிகளில் சில வேலைகள் முடிய வேண்டும். அது முடிந்துவிட்டால் செப்டம்பருக்குள் சென்னைக்கு, தண்ணீர் தருவதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு, நம்முடைய கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைப் பார்க்கின்ற தலைமைப் பொறியாளர் அவர்கள், நேற்றைக்கு முன்தினம் தலத்துக்கு அனுப்பப்பட்டார்கள். சில பகுதிகளில் மட்டும் வேலைகள் பாக்கியிருந்தன. வேகமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னதைப்போல், ஜூன் மாதம் வரும், ஜூலை மாதம் வரும் என்று 6, 7 முறை தவணைகளைச் சொன்னார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்றால், சில பகுதியிலே கால்வாயே வெட்டவில்லை. சில பகுதியிலே ரெகுலேட்டரே போடவேயில்லை. ஆனால் 3 வருடத்திற்கு முன்னாலேயே கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வரும் என்று இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது, கலைஞர் அவர்கள் எங்களுக்கு அளித்திருக்கிற கட்டளை, எப்படியும் இந்த நதிநீரை வேகமாகக்

கொண்டுவர வேண்டுமென்பது. எனவே வேகமாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். நானே அவரிடத்திலே பலமுறை சொல்லி இருக்கிறேன். செப்டம்பருக்குள் வந்து விடும், செப்டம்பருக்குள் வந்துவிடும் என்று சொன்னால் கூட பதிலே பேச மாட்டார், கொண்டு வந்த பிறகு உறுதிமொழி கொடுக்கலாம் என்று. எனவே, எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கத் தக்க வகையில் செப்டம்பர் இறுதிக்குள் சென்னை நகருக்குக் கிருஷ்ணா நதி நீர் வரும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு என்னுடைய நிலையை விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தூக்கத்திலேகூட எல்லாப் பெயர்களையும் வரிசையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்த அவையைப் பொறுத்தவரை எந்த மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் வந்தாலும் எந்தக் கேள்விக்கும் பொதுப்பணித் துறை அமைச்சர் உடனே பதில் சொல்லத் தயாராக இருக்கிறார், நீங்கள்தான் தடையாக இருக்கிறீர்கள் என்று என் மீது குற்றச்சாட்டு சொல்கிறார்கள். இன்று காலையிலேகூட ரங்கநாதன் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார், ஆகவே நான் கேட்கப் போகிறேன் என்றுதான் என்னிடம் வந்து கேட்டார்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அடுத்த சப்ஜக்ட்டிலே பேசுங்கள். கிளாரிபிகேஷன் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் 250 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். தினம் ஒன்று நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். இன்னொரு உறுப்பினர் நிற்கிறார்.

TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 6]

3. தகவல் கோரல்

(அ) அறந்தாங்கித் தொகுதி மீனவர்வாழ் ஜெகதாப்பட்டினம் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 56-ன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து உள்ளேன். என்னுடைய தொகுதியில் அறந்தாங்கியில் ஜெகதாப்பட்டினம் என்கின்ற மீனவர்கள் வாழ்கின்ற ஒரு கிராமத்தில் நேற்று திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதால் ஏறக்குறைய 1,500 மீனவ வீடுகள் தீப்பற்றி எரிந்து அதனால் பல இலட்ச ரூபாய் பொருள் இழப்பும், பெரும் நஷ்டமும் மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய வலை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் அழிவும் ஏற்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தின் வாயிலாக நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கின்றேன். அதே இடத்திலே 3 முறை அதாவது ஒரு வருடத்திற்குள்ளாகவே 2, 3 முறை தீப்பிடித்து எரிந்துவிட்டது. எனவே மீண்டும் தீப்பிடிக்காத விதத்திலே தீப்பிடிக்காத கூரைகள் கொண்ட வீடுகள் கட்டித் தருவதற்கும்-மீனவ தொழிலாளிகள்தான் அங்கே அதிகமாக இருக்கிறார்கள்--அரசு மானியமாக ஒரு தொகையும் அல்லது அதோடு சேர்த்து கடனாகக்கூட ஒரு தொகையுமாக சேர்த்துக் கொடுத்து, நிரந்தரமாகத் தீப்பிடிக்காத விதத்திலே வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன். அதற்கும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இன்னொரு கவன ஈர்ப்பு வந்தபோது, பாம் பிளாஸ்ட், குண்டு வெடித்தபோது நான் சொன்னேன். அதற்குப் பிறகு நான் மருத்துவமனையிலே எல்லாம் போய்ப் பார்த்தேன். அரசுத் தலைமைக் கொறடா அவர்கள் கூட வந்து பார்த்தார். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான் கேட்டபோது நீங்கள் கேள்வி கேட்டீர்கள், முதலமைச்சர் பதில் சொன்னார், அந்த அளவோடுதான் இருக்கிறது. டி.வி.யிலே செய்தி பார்த்தேனே தவிர என்ன நிவாரணம்

வழங்குவது என்று இன்னும் ஒன்றும் முடிவாகவில்லை, எங்களுக்கு ஒன்றும் செய்தி வரவில்லை என்று சொன்னார். ஏறக்குறைய 25 பேர், 26 பேர் பெண்கள் குழந்தைகள் உட்பட தீக்காயங்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு புதுக்கோட்டை மருத்துவமனை, அறந்தாங்கி மருத்துவமனையிலே படுத்திருந்தார்கள். நான் போய் என்னால் முடிந்த அளவுக்கு 1,000, 500, 400, 300 என்று சொல்லி ஏதோ என்னாலே முடிந்த அளவு 10,000 ரூபாய்க்கு உதவி செய்துவிட்டு வந்தேன். ஆனால், முதலமைச்சர் அறிவித்த நிவாரணங்கள் அங்குபோய்ச் சேரவில்லை. உடனடியாக அதற்கும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும். பொதுவாக சட்டப்பேரவையிலே முதலமைச்சர் சொல்லிவிட்டால் அந்தத் துறையினுடைய அதிகாரிகள் அங்கு உடனடியாக வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்றத்தில் சொன்னாலும் அது வாக்குறுதிதான். முதலமைச்சரே சொன்ன பிறகு திரும்ப ஒரு ஸ்பெஷல் ஆர்டர் அதற்குத் தேவையில்லை என்று கருதுகிறோம். எனவே சீப் செக்ரட்டரியோ, சம்பந்தப்பட்ட செயலாளர் அவர்களோ உடனடியாக முதலமைச்சர் உத்தரவாதம் தந்தவுடனே அந்தத் துறையினுடைய அதிகாரிகளோ, மாவட்ட ஆட்சித் தலைவரோ உடனடியாக இதை வைத்தே ஆணை பிறப்பிக்கலாம். அதற்காகக் காத்திருப்பது நல்லது அல்ல என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்ற நேரத்திலே அந்தப் பகுதியிலே பதட்ட நிலை நிலவுகின்ற காரணத்தினாலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிவாரணம் வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு இங்கே எழுப்பியுள்ள இந்த இரண்டு பிரச்சினைகளைப் பற்றியும் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொடர்புகொண்டு ஆவன செய்யப்படும் என்ற உறுதியை வழங்குகின்றேன். (குறுக்கீடு)

1996 ஆகஸ்ட் 6]

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்கிறேன். பிறகு பேசலாம். பேரவைத் தலைவரைப் பேசவிடமாட்டேன் என்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் என்னை இங்கு இருக்கை அருகில் வந்து பார்த்து இப்போது திடீரென்று 8 மணிக்கே கொடுத்தாகிவிட்டது என்று சொன்னார்கள். விதியைப் பார்க்க வேண்டும். அவ்வளவு அவசரமான பொருளாக இருந்தால் உறுப்பினர்கள் நேரடியாக பேரவைத் தலைவரிடமோ, செயலாளரிடமோ கொடுக்க வேண்டும் என்றுதான் விதி. அப்படி நீங்கள் கொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை.

முற்பகல் 11-00

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஏற்கனவே சட்டமன்ற மேலவையில் எல்லாம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, இதில் மரியாதைப் பிரச்சினைக்காகச் சொல்லவில்லை. நீங்கள் வந்து திடீரென்று நான் கொடுத்தேன் என்றால் நான் உங்களைப் பார்க்கவில்லை இதுவரைக்கும், அதற்காக நான் சொல்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம். விதி எல்லாம் உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். நானும் துணைத் தலைவராக இருந்து இருக்கிறேன். 1975-லிருந்து 20 வருடமாக இந்தச் சட்டமன்றத்தில் இருந்து இருக்கிறேன். இந்த வருடம் வந்தால் 20 வருடம் ஆகிறது தொடர்ச்சியாக. சபையில் உள்ள விதியில் என்ன இருக்கிறது என்று சொன்னால், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் 3 பிரதிகள் தரவேண்டும். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் 3 பிரதிகள் தரவேண்டும். ஆனால் அந்த 3 பிரதிகளையும் நேரடியாக வந்து கொடுத்தால் அரை மணி நேரத்திற்கு முன்பாகவோ, முன்னால் அனுப்பினால் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவோ, உங்களிடத்திலே சேர்ப்பிக்கவேண்டும். ஒரு மணி நேரம் என்றால் நான் 8-25க்கு ரெக்கார்டு செய்து கொடுத்திருக்கிறேன். 8-25க்கு ரெக்கார்டு செய்து கொடுத்திருக்கிறேன், அப்போதுதான் உங்களுடைய பி.ஏ. எல்லாம் வந்திருக்கிறார்கள். நான் 8 மணிக்கே

இங்கே ஆளை அனுப்பி விட்டேன் டைப் பண்ணி. நேற்று இரவே டைப் பண்ணி காலை 8-20-க்கு இங்கே ஆள் வந்தாகி விட்டது. 8-25க்கு மினிட்ஸில் ரெக்கார்டு செய்து வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, 1 மணி நேரத்திற்கு முன்னால் கொடுத்தால் போதும். நேரில் வந்து உங்களிடத்திலே தருவது என்றால் அவசர நிமித்தம் கருதி அரை மணி நேரத்திற்கு முன்பு கொடுத்தால் போதும். எனவே, அப்படி முறைப்படி தான் செய்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகக் கொடுக்கவேண்டும் என்றுதான் நான் படித்த விதியிலே இருக்கிறது. நீங்கள் அறையிலே வந்து எனக்கு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் தான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறேனே. நீங்கள் அறையில் வந்து விளக்கம் சொல்லுங்கள் எனக்கு. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள். (குறுக்கீடு) அறையில் வந்து சொல்லுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : சொல்கிறேன், மேலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையில் வந்து சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டேன் இல்லையா ! அப்புறம் நீங்கள் திருப்பிப் பேசிக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? நீங்கள் நான் சொல்லுவதைக் கேட்கவேண்டும். உட்காருங்கள்.

(இ) நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்கத்தினர் தாக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு எனக்கு ஒரு தந்தி வந்தது. நாகர்கோவிலில் ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்கத்தின் சார்பில் நியாயமான முறையில், ஜனநாயக பூர்வமாக தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம்

1996 ஆகஸ்ட் 6] [திரு. கே. சுப்பராயன்]

செய்யச் சென்ற 50-க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட பங்கு கொண்ட அந்த ஊர்வலத்தினர் மீது டி.எஸ்.பி. அவர்கள் எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் தடியடி நடத்தி கடுமையான காயத்திற்கு ஆட்படுத்தியிருக்கிறார்கள். ஏறத்தாழ 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், செங்கல் சூளையில் பணியாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய அரசு அமைந்ததற்குப் பின்னால் எல்லா விஷயங்களிலும் நல்ல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிறபோது தங்களுடைய உள்ள உணர்ச்சிகளை ஜனநாயக ரீதியில் வடிக்கின்ற வாய்ப்பு வழங்குவதைக் கூட மறுத்து இந்த அரசுக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட்டிருக்கிற அந்த டி.எஸ்.பி.யின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே இந்த அவையிலே சொல்லித் தான் இந்த செய்தியே என் காதுக்கு எட்டுகிறது. அவர் சொல்லுவது போல் நடந்து இருக்குமானால் காவல்துறையினுடைய செயல் கண்டனத்திற்குரியது. அதுபற்றி மேலும் விசாரித்து உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து--தொடர்ச்சி

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேட்டு விட்டேன், உறுப்பினர் உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: அவை உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கவில்லை. நாளைக்கு வைத்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.

[*1996 ஆகஸ்ட் 6*

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அவை உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் முடியாது, உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: என்ன தலைவரே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன தலைவர் என்றால்; என்ன உறுப்பினர் நீங்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) நான் தலைவர்தான், நீங்கள் உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நான் 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். அவை உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை, ஒரு விளக்கம் சொல்கிறேன் . நீங்கள் என்ன இப்படிச் செய்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த மாதிரி செய்யவேண்டும்? (குறுக்கீடு) நீங்கள் வம்பை வளர்க்காதீர்கள். உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இது வம்பு இல்லை, அவை உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை தலைவரே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய தலைவருக்குக் கொடுத்தாகி விட்டது. அது உங்களுக்குக் கொடுத்த மாதிரி தான், உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அவையினுடைய உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் டீசல் டாங்க் வெடித்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. 55-வது

1996 ஆகஸ்ட் *6*] [பேரவைத் தலைவர்]

விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசத்திலிருந்து திருநெல்வேலிக்கு வந்து கொண்டிருந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் டீசல் டேங்க் வெடித்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கடந்த *21-7-96* அன்று கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து எண் டி.எண் *72* எண் *0174* (தடம் எண் *77*) பாபநாசத்தில் இருந்து *12-15* மணிக்கு திருச்செந்தூருக்கு புறப்பட்டுச் சென்றது. பேருந்து சுமார் *13-40* மணிக்கு சுத்தமல்லி விலக்கு அருகே வரும் பொழுது, பேருந்து டீசல் டேங்கின் பராக்கெட் திடீரென உடைந்த காரணத்தினால் டீசல் டேங்க் கீழே விழுந்து தொங்கிய நிலையில் சாலையில் உரசியபடி சுமார் *235* மீட்டர் வந்த காரணத்தினால் டீசல் டேங்க் எதிர்பாராத விதமாக தீப்பிடித்து எரிந்த நிலையில் பேருந்து உடன் நிறுத்தப்பட்டது. பின் பேருந்திலும் தீ பரவியதால் பேருந்து முற்றிலும் எரிந்து போனது. பேருந்தின் சேதார மதிப்பு ரூ.*1,75,000*/-என மதிப்பிடப்பட்டுள்ளது. பேருந்தின் பராமரிப்பு பேரேட்டில் டீசல் டேங்க் பழுது சம்பந்தமாக எவ்வித முன் புகாரும் பதிவு செய்யப்படவில்லை. ஆகவே இது தற்செயலாக நடந்த விபத்து. இச்சம்பவம் குறித்து பேருந்தின் ஓட்டுநர் சுத்தமல்லி காவல் நிலையத்தில் புகார் செய்து அதன்படி குற்ற எண் *114/96* தீ விபத்து (Accidental Fire) என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பேருந்தில் பயணம் செய்த பயணிகளில் யாருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை. திரு. எம்.வி. மகாதேவன் *20-7-96* இரவு மேற்படி பேருந்தைப் பராமரிப்பு பார்த்துள்ளார். அவரது கவனக்குறைவான

பாரமரிப்பும் இந்த விபத்திற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்பதால் திரு எம்.வி. மகாதேவன் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் டீசல் டேங்க் கழன்று கீழே விழுந்த உடன் பேருந்தை நிறுத்தாமல் ஓட்டிவந்த ஓட்டுநர் திரு. எஸ். ராமநாதன் பொறுப்பு என்பதால் இவரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு இருவர் மீதும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இது போன்ற விபத்துக்கள் மீண்டும் ஏற்படாவண்ணம் பேருந்துகளைச் சரிவர பராமரிக்குமாறு அனைத்துக் கிளைகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் செய்யப்பட்டு, துணை மேலாளர் (தொழில்நுட்பம்), கிளை மேலாளர்களே நேரடியாகப் பேருந்துகளை ஆய்வு செய்யுமாறு நிர்வாக இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது தமிழ்நாட்டிலேயே போக்குவரத்துக் கழகங்களில் மிக அதிக வயதுள்ள பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கிற கழகம் கே.டி.சி. ஆகும். அந்த கே.டி.சி. போக்குவரத்துக் கழகம் மிக அதிக வயதுள்ள பேருந்துகளோடு இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதே போல் அந்த நிறுவனம் ஒரு கடுமையான நோயுற்ற நிறுவனம் என்ற முறையிலேயும், கடந்த காலங்களில் நடைபெற்ற ஜாதீயக் கலவரங்களினால் பேருந்துகள் பாதிக்கப்பட்ட பின் பராமரிப்பு செய்யாமலேயே இயங்கிக் கொண்டிருந்த அந்த நிலையில் அது ஒரு நோயுற்ற நிறுவனமாகவே இயங்கிக்கொண்டிருந்தது. அதோடு, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நடைபெற்ற ஆட்சியிலேயும் பேருந்துகளுக்குத் தேவையான உதிரி பாகங்களை வாங்குவதிலேயும் ஏராளமான ஊழல் நடந்து, தரக்குறைவான உதிரி பாகங்களைக் கொண்ட பேருந்துகள்தான் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. விவர அறிக்கையிலேகூட இந்த விபத்து ஒரு தற்செயல் விபத்து என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இதற்காக அந்த ஓட்டுநரும், வண்டியைப் பராமரிக்கப் பொறுப்பாக்கப்பட்டவரும் தண்டிக்கப்படுவது சரியல்ல. ஒரு தற்செயல் விபத்து என்று விவர அறிக்கையிலேயே சொல்லப்பட்டுவிட்ட பின்னர், ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக ஓட்டுநர் மீதும், பேருந்தைப் பராமரிப்பதற்குப் பொறுப்பாக இருந்தவர் மீதும் நடவடிக்கை எடுத்திருப்பது சரியல்ல. எனவே, அமைச்சரவர்கள் கருணையின்

1996 ஆகஸ்ட் 6] [திரு. கே. சுப்பராயன்]

அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்ட அந்த இரண்டு பேரின் மீதும் உள்ள ஒழுங்கு நடவடிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்ள முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-05*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விபத்துத் தொடர்பாக பேருந்துகளைச் சோதனை செய்கிற அதிகாரியும், அதை ஓட்டி வந்த ஓட்டுநரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்காலிக வேலைநீக்கம் என்றாலே, விளக்கம் கேட்கப்படும். அந்த விளக்கத்திலே அவர்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை திரும்பப் பெறப்படும்.

(ஆ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அரியூர் கூட்டுறவு நூற்பாலையின் இயக்கம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சி. ஞானசேகரன், பி.என். சுப்பிரமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[திரு. என். கே. கே. பெரியசாமி] [1996 ஆகஸ்ட் 6

அறிக்கை

வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை 4-10-1963-ல் பதிவு செய்யப்பட்டு 1-11-1965 முதல் உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊசி முனைகள் 50,000 ஆகும். இதில் 30,240 ஊசி முனைகள் மட்டுமே நிறுவப்பட்டன. இவ்வாலையில் 20,40,60, 2/17, 2/40 மற்றும் 2/60 கவுண்டு நூல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாலையில் 726 தொழிலாளர்கள், 43 பணியாளர்கள் மற்றும் 9 தொழில் நுட்ப உதவியாளர்கள் ஆக மொத்தம் 778 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவ்வாலையின் தொடக்கத்திலிருந்து இதன் உற்பத்தித் திறன் மற்றும் லாபம்/நட்டம் மற்றும் குவிந்த லாபம்/நட்டம் இவற்றின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அட்டவணையினை நோக்குங்கால், இவ்வாலை 1981-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவது தெரிய வருகிறது.

இந்த ஆலைக்கு இதுவரை ஆலையை நவீனப்படுத்துவதற்காக முதல் கட்டமாக ரூ. 55 இலட்சம் வழங்கப்பட்டு அது முழுமையும் செலவிடப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்ட நிதி ரூ. 85.73 இலட்சத்தில் இதுவரை ரூ. 42.31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு காரணங்களால், இவ்வாலை மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளது. ஆலையின் அன்றாட இயக்கத்திற்குத் தேவைப்படும் கச்சாப் பொருள் விலை ஏற்றம், பருத்தி விலை ஏற்றத்திற்கு இணையாக நூல் விலை ஏறாமை, ஆலையில் தேவைக்கு அதிகமாக தொழிலாளர்கள் இருப்பது, இதன் காரணமாக அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இவ்வாலைக்கு அனுமதிக்கப்பட்ட காசுக்கடன் ரூ. 150 இலட்சம் அளவிற்கு அதிகமாக ரூ. 12.53 இலட்சம் அளவிற்கு கணக்கு வைத்துக் கொண்டு, அதற்கு ஈடாக ஆலையில் பஞ்சு இருப்போ நூல் இருப்போ இல்லாததால், மத்திய கூட்டுறவு வங்கி ஆலை செய்து வந்த வரவு-செலவுக் கணக்கை மார்ச் 1995-டன் முடக்கிவிட்டது போன்ற பல்வேறு காரணங்களால் ஆலையில் நிதி நெருக்கடி

1996 ஆகஸ்ட் 6] [திரு. என். கே. கே. பெரியசாமி]

ஏற்பட்டு உற்பத்தி முடக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு முழுமையாக வேலை வாய்ப்புத் தர இயலாத நிலை உருவாகியுள்ளது.

தொழிலாளர்களுக்கு முழு வேலை வாய்ப்பு மற்றும் உரிய காலத்தில் சம்பளம் வழங்காத காரணத்தால் அவர்கள் பல்வேறு போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கோன்வைண்டிங், ரீலிங், பண்டிலிங் மற்றும் பேலிங் பிரிவுத் தொழிலாளர்கள் *2/17* கவுண்டில் ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டிய வேலைப் பளுவினை கொடுக்காத காரணத்திற்காக ஆலை நிர்வாகம் அபராதம் விதித்து வந்ததைக் கண்டித்து *15-9-1995* முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக மற்றப் பிரிவுத் தொழிலாளர்களுக்குத் தொடர் விளைவினால் வழங்கப்படும் லே-ஆப் *15-9-1995* முதல் வழங்கப்பட்டது. பின்னர்த் தொழிலாளர் நல அலுவலர் (சமரசம்), வேலூர் அவர்கள் முன்னிலையில் பல காலக் கட்டங்களில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இறுதியாக *4-12-95* அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் அரசிடமிருந்து நிதி உதவி பெற்று ஆலையைத் தொடர்ந்து நடத்தலாம் என்ற அடிப்படையில் குறைந்தது *20* பிரேம்களாவது ஓட்ட வேண்டுமென்று சமரசம் ஏற்பட்டு *6-12-1995* முதல் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பினர்.

பொதுவாகக் கூட்டுறவு நூற்பாலைகளில் ஒவ்வொரு திங்களிலும் ஏழாம் தேதியன்று தொழிலாளர்களுக்கு ஊதியம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தமட்டில் நிதி பற்றாக்குறை காரணமாக கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு ஊதியம் உரிய காலத்தில் பட்டுவாடா செய்ய இயலவில்லை. ஆலைத் தொழிலாளர்கள் மே மற்றும் ஜூன் திங்களுக்கான ஊதியம் ஒரே தவணையில் வழங்கவேண்டுமென *10-7-1996* முதல் *13-7-1996* வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மேற்படி தொழிலாளர்களுக்கு கடந்த *20-7-1996*-ல் மே மற்றும் ஜூன் *1996* திங்களுக்கான ஊதியம் வழங்கப்பட்டது. தற்போது இவ்வாலையில் எவ்விதமான பதட்ட நிலையும் இன்றி தொழிலாளர்களுக்குச் சுழற்சி முறையில் வேலை வழங்கப்பட்டு ஆலை இயங்கி வருகிறது. எனினும், நிதிப்

பற்றாக்குறையினால், ஆலை முழுவதும் இயக்கத் தேவையான பஞ்சு வாங்க இயலாத நிலையில் இந்த ஆலை உள்ளது. வட ஆற்காடு மாவட்ட கூட்டுவு நூற்பாலையில் உள்ள மொத்தம் 30,240 கதிர்களில் (70 பிரேம்கள்), 23-7-1996 அன்றைய தேதியில் சராசரியாக 4,400 கதிர்கள் (11 பிரேம்கள்) இயங்குகின்றன. மொத்தமுள்ள 726 தொழிலாளர்களில் நாளொன்றுக்கு சுமார் 297 தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில் வேலை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாலையில் தற்சமயம் நான்கு நாட்களுக்குத் தேவையான பஞ்சு (55 பேல்கள்) கையிருப்பில் உள்ளது. மேலும் இவ்வாலையில் கையிருப்புத் தொகை ஏதுமில்லை. இவ்வாலையை நல்ல முறையில் நடத்துவதற்குரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 6] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

இணைப்பு

1968–69-ம் ஆண்டு முதல் வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையின் ஊசிமுனைத் திறன் ஈட்டிய லாபம்/நட்டம் மற்றும் ஒருமித்த லாப/நட்ட விவரங்கள்:-

வருடம்	பயன்படுத்திய ஊசிமுனைத் திறன்.	இலாபம்/நட்டம்	இலாபம்/நட்டம்
1968–69	90.50	7.41	3.23
1969–70	96.20	7.22	3.99
1970–71	97.20	7.84	7.84
1971–72	95.50	2.25	2.25
1972–73	81.96	2.20	2.20
1973–74	93.50	9.44	11.64
1975	84.78	–9.00	–19.00
1976	81.85	–17.12	–36.12
1977	74.10	–19.12	–55.24
1978	87.82	10.56	–44.68
1979	68.98	21.93	–22.75
1980	68.15	21.50	–1.25
1981	78.62	–51.20	–52.45
1982	82.91	–18.12	–70.57
1983	69.55	–35.14	–105.71
1984	94.45	–32.36	–138.07
1985	88.14	–10.81	–148.88
1986	80.25	–84.58	–233.46
1987–88	53.86	–113.79	–347.25
1988–89	58.02	–138.90	–486.15
1989–90	85.70	–51.07	–537.22
1990–91	89.06	–87.41	–624.63
1991–92	61.63	–262.91	–887.54
1992–93	74.46	–322.30	–1209.84
1993–94	72.51	–290.04	–1499.00
1994–95	61.79	–291.12	–1791.00

[*1996 ஆகஸ்ட் 6*

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1963-ஆம் ஆண்டு கர்மவீரர் காமராஜரால் தொடங்கப்பட்ட இந்த நூற்பாலை, சில ஆண்டுகள் இலாபத்தோடு அங்கே நடத்தப்பட்டது. பிறகு நிர்வாகச் சீர்கேடு காரணத்தினால் இன்று அந்த ஆலை நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே விவர அறிக்கையிலே தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது பயன்படுத்துகின்ற ஊசிமுனைத்திறன் 61.79 சதவீதம் இயங்குவதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கைப் பார்த்தாலே இன்று 30,240 கதிர்கள் இயங்கிக் கொண்டிருந்த இடத்தில் 4,400 கதிர்கள்தான் இயங்குகின்றன. அதாவது 70 பிரேம்கள் ஓட வேண்டிய இடத்தில் இன்று 11 பிரேம்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்தக் கணக்கைப் பார்த்தால் 14.55 சதவீதம்தான் இன்று செயல்திறன் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. இதிலே நிர்வாகச் சீர்கேடுதான் இதற்கு முழுமையான காரணம். இன்று கிட்டத்தட்ட 900 தொழிலாளர்கள் உள்ளார்கள். இப்பொழுது ஆலையில் 4 நாளைக்கு சரக்கு இருப்பு இருக்கிறது. 4 நாட்களுக்குத் தேவையான பஞ்சு அங்கே 55 பேல்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது அறிக்கையிலே. ஆனால் இப்பொழுது ஆலை மூடிக் கிடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வரவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். மூடியிருக்கக்கூடிய பஞ்சாலைகளையெல்லாம் திறப்பதாகவும், அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதாகவும் தேர்தல் அறிக்கையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. அதன்படி இப்பொழுது நிதிநிலை அறிக்கையிலேயும் அதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆக 5 கோடி ரூபாய்--சென்ற ஐந்தாண்டுக்காலம் நான் படாதபாடு பட்டு, கேட்டுக்கேட்டு--கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். இந்த முறை மாண்புமிகு முதல்வரவர்களுடைய தாராள மனத்தைப் பயன்படுத்தி மாண்புமிகு அமைச்சரவர்கள் ரூ. 5 கோடியைக் கொடுத்து, எங்களுடைய அரியூர் நூற்பாலையைத் திறப்பதற்கு, இலாபகரமாக இயங்க வைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. என். சுப்பிரமணி. இரண்டு பேருக்கும் சேர்த்துச் சொல்லிவிடுங்கள்.

1996 ஆகஸ்ட் 6]

திரு. பி. என். சுப்பிரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேலூர், அரியூர் நூற்பாலையில் *1981* முதல் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நானும் அந்தக் கூட்டுறவு மில்லில் ஒரு உறுப்பினர் என்கின்ற காரணத்தினால், சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *1981*-க்கு முன் இலாபம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், தரமான பஞ்சு கொள்முதலோடு, இயந்திரங்கள் நல்ல முறையில் இயங்கி வந்தன. *1981*-க்குப் பின் தரம் இல்லாத பஞ்சு கொள்முதல் செய்தும், இயந்திரங்கள் பழுது அடைந்ததைச் சீர் செய்யாமையினாலும், தரம் இல்லாத கார்டா நூல் தயாரிக்கும் பஞ்சு கொள்முதல் செய்ததாலும் கூட்டுறவுச் சங்கங்களும், தனியார்களும் விருப்பமாக நூல் வாங்கவில்லை. அதனால் புதிய இயந்திரங்களைப் பொருத்தியும் 'கோழுடு நூல்' அதாவது உயர்ந்த நூல் தயாரிப்பதற்கு பருத்தி விளைச்சல் நேரத்தில் அதிகமாக உயர்ந்த பஞ்சைக் கொள்முதல் செய்தும், தொழிலாளர்களுக்கு மாதம் முழுவதும் வேலை கொடுத்து பதட்டத்தைக் குறைக்கக் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், சுப்பிரமணி அவர்களும் இங்கே கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தையொட்டி அரியூர் ஆலை பற்றிய நிலையையும் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை கூட்டுறவு நூற்பாலைகளுடைய பொருளாதார நிலையையும் இந்த அவைக்குத் தெரிவிப்பது இந்த அரசினுடைய கடமையாகும். *1963*-ல் இந்த ஆலை பதிவு செய்யப்பட்டு, *1965*-லே தன்னுடைய உற்பத்தியைத் துவங்கியுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதனுடைய லைசன்ஸ்டு கெப்பாசிட்டி *50* ஆயிரம் ஸ்பின்டிலாக இருந்தும் *30,240* ஸ்பின்டில்கள், *70* பிரேம்கள் என்ற அளவிலே அங்கே *20, 40, 60, 2/17, 2/40, 2/60* என்று எல்லா ரகமான நூல்களும் நல்ல முறையிலேதான் மார்க்கெட்டிலே சந்தைக்கு, கோ-ஆப்டெக்ஸ்க்கு என்று கொடுக்கப்பட்டு வந்தது. இடையிலே *1981*-லேயும் அதற்கடுத்தும் இரண்டு தடவை மாடர்னைசேஷன் என்ற முறையிலே *55* இலட்சம் ரூபாய் செலவிலே அதாவது முதற்கட்டத்திலே சில சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டும் இரண்டாவது கட்டத்தில் *85* இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும் *42* இலட்சம்

[திரு. என். கே. கே. பெரியசாமி] [1996 ஆகஸ்ட் 6

ரூபாய் அளவிலே மீண்டும் சீரமைப்புப் பணி அங்கே செய்யப்பட்டும் வங்கியினுடைய Cash Credit- ஆக 1½ கோடி ரூபாய் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் பஞ்சை வாங்குவதிலும், நூல் விற்பதிலும் ஏற்பட்ட ஊழலின் காரணமாக Cash Credit-க்கு மேல் 12 இலட்சம் ரூபாய் வங்கியிலிருந்து பெற்ற காரணத்தினால் இன்று அதுவும் முடக்கப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை அந்த ஆலையிலே ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மார்ச் 1995-லே இந்த வரவு-செலவுக் கணக்கு freeze செய்யப்பட்டுவிட்டது. இது வங்கியிலே ஏற்பட்டிருக்கிற நிலைமை. அடுத்துத் தொழிலாளர் தரப்பிலே 2/17 என்று சொல்லப்படுகிற நூலை, அதனுடைய டார்கெட்டை அச்சீவ் பண்ணக்கூடிய அளவிற்கு தொழிலாளர்கள் பணி புரிந்தார்களா என்றால், பணி புரியாத காரணத்தினால் இடையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு 4-12-1995-லே, பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்று, 6-12-1995-ல் குறைந்தபட்சம் ஒரு 20 பிரேம்களாவது ஓட்டுவது என்ற அடிப்படையிலே இந்த ஆலை மீண்டும் திறக்கப்பட்டது. திறக்கப்பட்டவுடனே சம்பளம் கொடுப்பதற்குப் பணமில்லை. ஒவ்வொரு ஆலையிலும் 7-ஆம் தேதி சம்பளம் கொடுக்க வேண்டுமென்றாலும், கொடுப்பதற்குப் பணம் இல்லாத காரணத்தினால் மீண்டும் வேலைநிறுத்தம் ஏற்பட்டு, மீண்டும் நமது ஆட்சியில் கலைஞருடைய அரசு, நம்முடைய அரசு, 10-7-1996 முதல் 13-7-1996 வரை 4 நாட்கள் அவர்கள் செய்த ஸ்டிரைக்கையொட்டி 20-7-96 அன்று, மே, ஜூன் ஆகிய இரண்டு மாதங்களுடைய சம்பளமும் இந்த மில்லிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, on rotation அதாவது சுழற்சி முறையிலே 700 பேருக்கு வேலை என, இந்த ஆலையிலே சுழற்சி முறையிலே எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 297 பேர் என்ற அடிப்படையிலே 4 நாட்களுக்குத் தேவையான பஞ்சு இருந்தாலும் ஏதோ இயன்ற அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஆலையினுடைய நஷ்டம் இந்த ஆண்டு 17 கோடியே 95 இலட்சம் ரூபாய் என்பதை நீங்கள் நினைவிலே நிறுத்திக்கொள்ளவேண்டும். பஞ்சு வாங்குவதிலும், நூல் விற்பதிலும் ஏற்பட்ட தவறின் காரணமாக இவ்வளவு பெரிய நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. இப்போது நம்முடைய நலிவடைந்த ஆலைகளை எடுத்து நடத்திக் கொண்டிருக்கிற பணியிலே,

1996 ஆகஸ்ட் 6] [திரு. என். கே. கே. பெரியசாமி]

மானியத்தைக் கேட்காமல், அரசிடமிருந்து கடன் பெற்றாவது இந்த நலிவடைந்த ஆலைகளை ஓட்டுவது என்ற அடிப்படையிலே, சில ஆலைகளையெல்லாம் ஓட்டுவது என்ற அடிப்படையிலே, பல திட்டங்களை, வழிமுறைகளை எல்லாம் இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. தற்சமயம், ஏறத்தாழ 11 பிரேம் அளவிலேதான் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதெல்லாம் உண்மைதான். விரைவிலே சீர்திருத்துகின்ற பணியிலே ஈடுபடுவோம் என்பதை நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன்.

முற்பகல் 11-15

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி இப்போது நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற ஆலையைச் செம்மைப்படுத்துவதற்கு, ஏற்கெனவே மிக இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் தனியார்களை ஆலோசகர்களாக நியமித்து - சொக்கர் அவர்கள் கூட அதேபோல் ஸ்பின்னிங் மில் எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார் - அவரைப் போன்ற நண்பர்களையெல்லாம் நீங்கள் ஆலோசனைக் குழுவிலே போட்டு இந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு நல்ல மறுவாழ்வினைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

5. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

கோரிக்கை எண் 4--பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்

கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1996–97–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். கோரிக்கை எண் 4 – பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் – நிருவாகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 77,01,17,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 205, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே,

“விற்பனை வரி வசூலில் நடைபெறும் முறைகேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்க வேண்டிய அவசியம் குறித்து” விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வழங்கப்பெறும் ரூ. 77,01,17,000-ல் ரூ. 100–குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 149, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“செங்கல், மணல், கருங்கல் மற்றும் வீடு கட்டும் பொருட்களின் மீதான விற்பனை வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தைக் குறித்து” விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப்பெறும் ரூ. 77,01,17,000–ல் ரூ. 100–குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 99, திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற மாநிலங்களில் உற்பத்தியாகும் பனியன்களுக்கு விற்பனை வரிவிலக்கு இருப்பதுபோல் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பனியன்களுக்கும் விற்பனை வரிவிலக்கு அளிப்பது குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப் பெறும் ரூ. 77,01,17,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 274, திரு. அ. வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உபயோகப்படுத்தப்பட்டு காலியான பழைய காலி பாட்டில்களுக்கு ஒருமுனை வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்- நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப் பெறும் ரூ. 77,01,17,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 456, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தங்கும் விடுதிகளின் கட்டணங்களின் உச்சவரம்பு ரூ. 50-ஐ உயர்த்த வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப்பெறும் ரூ. 77,01,17,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 95,27,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 196, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அமைச்சர்கள் மற்றும் அரசுத் துறைத் தலைவர்களைச் சந்திக்க வரும் பார்வையாளர்களுக்குத் தலைமைச் செயலகத்தில் பொதுக் கழிப்பிட வசதியும், சிறந்த உணவக வசதியும் செய்து தரவேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப் பெறும் ரூ. 95,27,01,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 165, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் மனுக்களுக்கு அமைச்சர்கள் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப் பெறும் ரூ. 95,27,01,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 88, திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கைப் பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக்கோரிக்கையின் கீழ் வழங்கப் பெறும் ரூ. 95,27,01,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 3,11,89,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 98, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சட்ட ஆலோசனை வழங்க சட்ட ஆலோசகர்களை நியமிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப் பெறும் ரூ. 3,11,89,27,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 170, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையை தனித் தாலுக்காவாக மாற்றுவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப்பெறும் ரூ. 3,11,89,27,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 87, திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கைப் பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வழங்கப்பெறும் ரூ. 3,11,89,27,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடங்குகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்ட மானியக் கோரிக்கைகளான மாவட்ட நிருவாகம், பொது விற்பனை வரி முதலிய வரிகள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகியவை குறித்து விளக்க அறிக்கைகள் அவையிலே வைக்கப்பட்டுள்ளன. அவற்றின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைக்குப் பிறகு விடையளிக்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதாக இருக்கிறேன். எனவே, இவற்றில் தமிழில் உள்ள விளக்க அறிக்கைகளை @ நான் இங்கே உரையாற்றியதாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர் (குறுக்கீடு) திரு. எஸ். திருநாவுக்கரசு, என்ன?

திரு. எஸ். திருநாவுக்கரசு: இந்த டிமாண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்று மானியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இரண்டாவது மானியக் கோரிக்கை 9-வது எண், அதையும் தான் படித்ததாக ஏற்றுக்கொண்டு சபைக் குறிப்பிலே

@471-513 ஆம் பக்கங்களில் இணைப்புக்கள் I மற்றும் II ஆகச் சேர்க்கப்பட்டுள்ளன.

ஏற்றுமாறு கேட்டிருக்கிறார்கள். அது உறுப்பினர்களுடைய வீட்டிற்கும் அனுப்பப்படவில்லை, இங்கேயும் வைக்கப்படவில்லை. இரண்டாவது டிமாண்ட் வந்திருக்கிறது. ஏறக்குறைய ரூபாய் 100 கோடி சம்பந்தப்பட்ட டிமாண்ட் எண் 4 வந்திருக்கிறது. 11–ம் வந்திருக்கிறது. டிமாண்ட் நம்பர் 9 வீட்டிற்கும் படிப்பதற்கு அளிக்கவில்லை. டேபிளிலேயாவது வைப்பார்கள், ஏதோ அமைச்சர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறது. தலைமைச் செயலாளர், தலைமையிடப் பணியாளர்கள் என்று வருவதனாலே, ஒருவேளை பிளேஸ் பண்ணுவீர்களோ என்று நினைத்தேன். இப்போது இங்கேயும் கிடையாது. அதனாலே அதைப் படித்ததாக, சபையிலே, வைக்காமலேயே எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இரண்டாவது நாங்கள் படிக்கவும் இல்லை.

முற்பகல் 11–20

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளுக்கான நூல்கள் இரண்டு வைக்கப்பட்டிருந்தாலும் நான் இங்கே குறிப்பிட்டுள்ள எல்லா மானியங்களைப் பற்றிய குறிப்புகளும் அதிலே அடங்கி இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு, அதைப் பார்த்து செக்–அப் செய்து சொல்கிறேன். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொன்னதை நான் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி டிமாண்டு, 100 கோடி ரூபாய்க்குச் சம்பந்தப்பட்டது. நானும் படித்தேன். படிக்கின்றபோது மாநிலத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சம்பந்தமான குறிப்புகள் எதுவும் அந்த இரண்டு புத்தகங்களில் கிடையாது. வருவாய்த்துறை தனியாக இருக்கின்றது. வணிகவரித் துறை தனியாக இருக்கின்றது. அதிலே இது சம்பந்தமான எந்தக் குறிப்பும் கிடையாது. ஆகவே, தனியாக வந்திருந்தால் இப்பொழுதுகூட வைத்துவிடலாம். அதில் தவறு ஒன்றும் இல்லை. ஒருவேளை துறையின் சார்பில் அனுப்பாமல் இருந்தால் இப்பொழுதுகூட வைத்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நான் பார்த்துச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சொக்கர்.

*திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பெருமைப்படுகிறேன். 'பொது விற்பனை வரி'யைப் பொறுத்தவரையில் என்னுடைய ஊருக்கும், பொது விற்பனைக்கும் ஒரு பிரிக்க முடியாத தொடர்பு உண்டு. என் ஊர் என்றால் விருதுநகரைக் குறிப்பிடுகிறேன். 1938–ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விருதுநகருக்கு ஒரு குடிநீர்த் திட்டத்தைத் துவக்கி வைக்க வந்திருந்தபோது, அங்கு இயங்கி வந்த இலவசப் பள்ளிக்கூடம் ஒன்றைப் பார்வையிட்டார்கள். ஒரு அரசு இலவசக் கல்வி அளிக்கக்கூடிய நிலையைக் கஷ்டமாகக் கருதும்போது, ஒரு ஊரைச் சேர்ந்த வணிகர்கள் எப்படி இலவசப் பள்ளியை நடத்துகிறார்கள் என்று பார்த்தபோது, அங்கே வாழ்கின்ற வணிகர்கள் ஒவ்வொரு பொருளையும் விற்பனை செய்யும்போது, ரூபாய்க்கு அரை தம்படி மகமை செலுத்த வேண்டும் என்ற முறையைக் கையாண்டு அந்த மகமையின் மூலமாக வரக்கூடிய பணத்திலிருந்து அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்தி, இலவசக் கல்வியை அளித்து வந்தார்கள். அதை முன்னோடியாகக் கொண்டு, 1939–ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்தில் 'பொது விற்பனை வரிச் சட்டம்' என்ற சட்டத்தை அவர்கள் நிறைவேற்றி அந்த விற்பனை வரிச் சட்டம் 1939 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது. அது அமலுக்கு வந்த பின்னர், அந்த ஆண்டு விற்பனை வரியின் மூலமாக அந்த அரசுக்கு வந்த வருவாய் ரூ. 33,53,548 ஆகும். அது அந்த ஆறு மாத காலத்திற்கு வந்த வருவாய் ஆகும். அடுத்த ஆண்டு, அதாவது 1940–41–இல், அந்த வருமானம் 67,40,641 ரூபாயாக உயர்ந்தது. ஆக, ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில் சுமார் ரூ. 33 லட்சம் விற்பனை வரியின் மூலம் வருவாய் வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். முதலமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கை நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே அவரைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். அவர் விவாதத்தைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திரு. ஆர். சொக்கர்: எனவே 1939–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டபோது 33 லட்சம் ரூபாயாக விற்பனை வரியின் மூலமாக வந்த வருவாய் இந்த ஆண்டு 5,000 கோடி ரூபாயாக வந்திருக்கிறது என்றால் நாமெல்லாம் நிச்சயமாகப் பெருமைப்படலாம்.

ஆனால் 1939-ல் வணிகர்கள் கழுத்தில் போடப்பட்ட அந்த மாலை, கடந்த ஆட்சிக் காலத்தில் கழுத்தை இறுக்கும் கயிறாக மாற்றப்பட்டது. இந்த ஆண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறுக்கிய கயிற்றைத் தளர்த்தி, அந்தக் கயிற்றில் மலர்களைத் தொடுத்து, மீண்டும் அதனை மாலையாக ஆக்கி விடக்கூடிய ஒரு முயற்சியை ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியையும், பாராட்டுதல்களையும், வரவேற்பையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனையோ வரிச் சீர்திருத்தங்களை மிகவும் பிரமிக்கத்தக்க அளவிற்கு இந்த ஆண்டு இந்த அரசு செய்திருக்கிறது. இருந்தாலும் இன்னும் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் எண்ணற்ற அளவிலே இருக்கின்றன. எவ்வளவோ கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும்கூட, இன்னும் கோரிக்கைகளா என முதல்வர் அவர்கள்கூட மலைக்கக்கூடிய அளவிற்கு கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இந்த இடத்தில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

மணம் வீசக்கூடிய மலருக்குத்தான் வண்டுகள் அதிகமாக வரும். நீங்கள் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறீர்கள். ஆகவே கோரிக்கைகளும் தொடர்ந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. இதைக் கண்டு மலைக்காமல், சளைக்காமல் இன்னும் கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றித் தந்து விற்பனை வரித் துறையை முழுமையாகச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையிலும் எந்த ஒரு பொருளுக்கும் விற்பனை வரியிலிருந்து நீங்கள் விலக்கு அளிப்பதை உண்மையிலேயே விரும்பவில்லை. விற்பனை வரிச் சீர்திருத்தத்தினைத் தான் நாங்கள் விரும்புகிறோம். எந்தெந்தப் பொருள்களுக்கு விற்பனை வரி அதிகமான அளவில் விதிக்கப்பட்டதன் காரணமாக வணிகர்களும், பொது மக்களும் கஷ்டப்படுகிறார்களோ அந்தப் பொருள்களுக்குரிய வரி விகிதங்களைக் குறைக்க வேண்டுமென்றுதான் சொல்கின்றோம். எந்தப் பொருளுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதை நாங்கள் விரும்பவில்லை. ஏற்கெனவே அளிக்கப்பட்ட சலுகையினங்கள் போக இன்னும் சலுகை அளிக்கப்பட வேண்டிய இனங்களைச் சுட்டிக்காட்டி அடுத்தக் கட்டத்திற்குச் செல்லலாம் என்று

எண்ணுகிறேன். மிகக் குறிப்பாக உணவு எண்ணெய். அதனுடைய மூலப் பொருள்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தினை இன்னும் பெருக்கக்கூடிய அளவிற்கு அந்தப் பொருள்களுக்கு ஒரு சதவீதம் விற்பனை வரியாக நீங்கள் நிர்ணயம் செய்வீர்களேயானால் அந்த வருமானம் குறையாமல் வணிகர்களுக்கும், பொது மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய அளவிலே அது அமையும்.

அதேபோன்று, கற்கண்டு, தேன், தயிர், நாட்டு வெண்ணெய், நெய், பட்டாணிப் பருப்பு, பொரிகடலை, டிராக்டர் என்ஜின் அதன் உதிரிப் பாகங்கள், கைக்கடிகாரம், காலி டின்கள், சாம்பிராணி, செங்கல் தயாரிக்கக்கூடிய மண் மற்றும் ஜெல்லி-ஆகியவை உள்ளன. செங்கல்லுக்கு 4 சதவீத வரி, அது இருக்கட்டும். ஆனால் செங்கல் தயாரிக்கக்கூடிய மண்ணுக்கு 8 சதவீத வரி. இதை எப்படிக் கணக்கிடுவார்கள், எப்படி பில் போடுவார்கள், அதை யார் வசூல் செய்வார்கள் என்று தெரியாது. இதைப் போன்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்தால் தவறில்லை. அவைகளையெல்லாம் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்ட் சில்க், பாலியெஸ்டர் மற்றும் நூல் வகைகள், கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான மின்னனு மற்றும் மின்சாரச் சாதனங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் போன்றவற்றிற்கும் விற்பனை வரிச் சீர்திருத்தம் நிச்சயமாகச் செய்யப்பட வேண்டும். இந்தச் சீர்திருத்தங்கள் செய்வதன் மூலமாக அரசுக்கு நிச்சயமாக வருமானம் உயரும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக 'எமர்ஜென்சி லைட்', மின்சாரத் தடை ஏற்படுகிறபோது பேட்டரி மூலம் இயக்கப்படுகிற ஒரு லைட் இருக்கிறது. இந்த பட்ஜெட்டிற்கு முன்பாக மூன்று சதவீத வரி அதற்கு விதிக்கப்பட்டிருந்தது. அதிகாரிகள் கொடுத்த விளக்கத்தின் காரணமாக இப்போது அதற்கு மூன்று சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக வரி உயர்த்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் கொள்கை அடிப்படையில் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். ஆனால் அதற்கு விளக்கங்கள் என்று அதிகாரிகளிடமிருந்து வரும்போது முற்றிலும் நேர்மாறான கருத்துக்கள் வந்து இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன. ஆகவே முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு இவைகளைப் பரிசீலனை செய்து சீர்செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசினுடைய முக்கியப் பணி குடிநீர் வழங்குவது என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கூட மோசமான தண்ணீர் குடிப்பதால் பல நோய்கள் உண்டாகின்றன என்றார்கள். இன்று தனியார்கள் லாபநோக்கோடு நிறுவனங்களை ஆரம்பித்து 'மினரல் வாட்டர்' என்று அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அவர்கள் லாபநோக்கத்தோடு இதனை ஆரம்பித்து இருந்தாலும்கூட, அதைச் சமுதாயப் பணியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். 'மினரல் வாட்டர்'-க்கு 11 சதவீதம் விற்பனை வரி இருக்கிறது. சென்ட்ரல் எக்சைஸ் வரி 15 சதவீதம் என்றிருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் கேட்டு 'சென்ட்ரல் எக்சைஸ்' வரியிலிருந்து விலக்களித்து-- நம்முடைய விற்பனை வரியை நீக்க வேண்டாம்-- 2 சதவீத வரியாக விதித்தால் அது அவர்களுக்கு நாம் அளிக்கக் கூடிய ஊக்கமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி விலக்கு, வரிக் குறைப்பு என்று கேட்டுக் கொண்டே போவதைவிட--அதையும் கேட்க வேண்டும்--அரசாங்கத்திற்கு வருமானம் அதிமான அளவில் வரக்கூடிய சில யோசனைகளையும் சொல்ல வேண்டுமென்ற அடிப்படையிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இப்போது ரூ. 100 கோடிக்கு மேல் விற்பனையளவு இருந்தால் 'அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ்' என்ற முறையை நாம் தொடர்ந்து வருகிறோம். ஆனால் சில உற்பத்தியாளர்கள், சில விற்பனையாளர்கள் அவர்களுடைய பொருள்களின் விற்பனையளவு ரூ. 100 கோடி இலக்கினைத் தாண்டிய போதிலும்கூட 'ஏஜென்ட்'டுகள் மூலமாக, 'டீலர்'-கள் மூலமாக விற்பனையைப் பிரித்து ரூ. 100 கோடி அளவிற்குக் கீழே இருக்கக்கூடிய அளவிற்கு, அந்த 'அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ்'-ஐக் கட்டுவதிலிருந்து தப்பிக்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டினுடைய பதிலுரையின்போதே கோடிட்டுக் காட்டினார்கள். உரிய சட்டத்தினைக் கொண்டுவந்து உற்பத்திப் பொருள், ஒரு தனியார் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பொருளோ அல்லது விநியோகம் செய்யக் கூடிய ஒரு பொருளோ 100 கோடி ரூபாய் இலக்கைத் தாண்டும்போது அதனை டீலர்கள் அல்லது சப்-டீலர்கள் மூலமாக விற்பனை செய்தாலும்கூட அந்த அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ்-க்கு

அவர்களையும் உட்படுத்தக்கூடிய வகையில் விதிமுறைகளைத் தெளிவாக நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மேலும் ரூபாய் நூறுகோடிக்குமேல் விற்பனையாகக்கூடிய நிறுவனங்களுக்கு 'அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ்' 2½ சதவிகிதம் என்றிருப்பதை நீங்கள் 3 சதவிகிதமாக உயர்த்திக் கொள்ளலாம். 300 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையாகக்கூடிய நிறுவனங்களுக்கு 3 சதவிகிதத்திலிருந்து 3½ சதவிகிதமாக நீங்கள் உயர்த்திக் கொள்ளலாம். இவைகளெல்லாம் எண்ணிக்கையில் மிகவும் குறைந்த நிறுவனங்கள். இவைகளுக்கு ½ சதவிகிதம் வரியை உயர்த்துவதால் யாருக்கும் பாதிப்பு இருக்காது. ஆனால் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானத்தைப் பார்ப்போமானால், என்னுடைய கணக்குப்படி, 50 கோடி ரூபாயிலிருந்து 100 கோடி ரூபாய் வரை வருமானம் வரும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, இந்த ஆண்டு 'சேல்ஸ் டாக்ஸ் ரிஜிஸ்ட்ரேஷன் ரினியுவல்'க்கு ரூ. 200/- என்றும், ஐந்தாண்டுகளுக்கு மொத்தமாக 'ரினியுவல்' செய்ய வேண்டுமென்றால், ரூ. 1000/- கட்டி 'ரினியுவல்' செய்துகொள்ளலாம் என்றும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில், இது மிக மிகக் குறைவு. இன்று நீங்கள் அளித்திருக்கின்ற சலுகைக்கு, இன்று நீங்கள் எடுத்திருக்கின்ற முயற்சிக்கு, இந்த 'ஃபீசை' இன்னும் உயர்த்தலாம். தோராயமாக உயர்த்தலாம். ரூ. 200 என்று இருப்பதை ரூ. 500–ஆகக்கூட உயர்த்தலாம். இந்த ஓராண்டு மட்டும் ஒரு 'ஸ்பெஷல் ரினியுவல் ஃபீஸ்' என்று, ஆயிரம் ரூபாயை இரண்டாயிரம் ரூபாயாகப் போட்டீர்களென்றால், நிச்சயமாக அரசுக்கு எளிதாக 60 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரும். கடந்த காலத்தில் நாங்கள் பட்ட கஷ்டத்திற்கு அளவேயில்லை. வேண்டுமென்றே வரியைப் போட்டுவிட்டு, அந்த வரியை நீக்கவேண்டுமென்றால், 'மூட்டை மூட்டையாகப் பணத்தைக் கட்டிக்கொண்டுவா' என்று சொல்லி, அந்த ஆட்சிக் காலத்தில் கோடிகோடியாக இலஞ்சம் வாங்கப்பட்டது. அமைச்சர் திரும்பத் திரும்பக் கூப்பிட்டு விடுவார். "என்ன, அதைக் குறைத்து விடலாமா, நீங்கள் வாங்க, வந்து பாருங்க, வந்து பாருங்க" என்று சொல்வார்கள். ஆனால் யாரும் அவர்கள் பக்கத்தில் போகவில்லை. ஆனால் இன்று திரும்பத் திரும்ப

உங்களையே நாங்கள் மொய்த்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், நீங்கள் நல்லது செய்கின்றீர்கள். ஆகவேதான், அரசுக்குக் கூடுதலாக நாங்கள் வரியைச் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம். இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான், இந்தக் கட்டணத்தை நீங்கள் கூட்டினாலும், அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு கட்டுகின்றோம் என்று சொல்கின்றோம்.

இன்னொன்று, நீங்கள், 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வரையிலே 'டர்ன் ஓவர்' இருந்தால் 3 சதவிகித வரி என்றும், 5 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரையிலே 'டர்ன் ஓவர்' இருந்தால் 5 சதவிகித வரி என்றும் ஒரு சலுகையாக அறிவித்திருக்கின்றீர்கள். அதாவது பட்ஜெட்டிலே பேரா 140,. கொள்கை விளக்கக் குறிப்பிலே பேரா 18. ஆனால் பட்ஜெட்டிலே நீங்கள் சொல்கின்றபோது அதிகாரிகளுடைய விளக்கம் அதிலே இல்லை. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் பேசுகிறேன் என்பதால் கூடுதலாகக் கொஞ்சம் 'டைம்' கொடுப்பீர்கள் என்று நினைத்துப் பேசினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். சரி, 15 நிமிடங்கள் பேசுங்கள்.

திரு. ஆர். சொக்கர்: நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் இல்லை, மொத்தம் 15 நிமிடங்கள்.

திரு. ஆர். சொக்கர்: நன்றி. கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் கருத்துக்களைச் சுருக்கிக் கொள்கிறேன். இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரை சலுகை என்று நினைக்க முடியாது. அந்த விளக்கத்தைப் பற்றி வரி வரியாக படித்துப் பார்த்தோமென்றால், அந்தச் சலுகை சுத்தமாக மறைக்கப்பட்டிருப்பது தெரியவரும். அதாவது, அத்தைக்கு வரிவிலக்கு என்று நீங்கள் கொள்கையில் சொல்லிவிட்டீர்கள். இந்த விளக்கத்தில் எப்படி இருக்கின்றது

என்றால், அத்தைக்கு மீசை முளைத்திருந்தால்தான் வரிவிலக்கு. ஆனால், அந்த மீசை முளைத்திருந்தாலும், அந்த அத்தையைச் சித்தப்பா என்று சொல்லக் கூடாது. ஆக, இதுதான் வரிவிலக்கு என்று அந்த வரிவிலக்கை எடுத்துக் கொள்ளமுடியாத அளவிற்கு அந்த விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விளக்கம் கொடுத்திருப்பதைப் பற்றி நான் தவறாகச் சொல்லவில்லை. இந்த விளக்கம் கொடுக்கப்படாமல் இருந்திருந்தால், இந்த சலுகையைப் பயன்படுத்தி அதிக அளவிற்கு வரி ஏய்ப்பு நடைபெறும். ஆகவே, அந்தச் சலுகையை, 3 சதவிகிதம், 5 சதவிகிதம் என்று அறிவிக்கப்பட்ட சலுகையை அறவே நீக்கி விடுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பதிலாக ரூ.10 இலட்சம் 'டர்ன் ஓவர்' இருந்தால், 'செல்ப் அசெஸ்மென்ட்' என்று வைத்திருக்ககூடிய ஒரு முறையை வைத்தால் மட்டும் போதும். ஆனால், 'பேரா' 18இல் குறிப்பிடப்பட்டுள்ள சலுகை வணிகர்களுக்கு எந்தவிதமான பயனையும் தராது. அரசாங்கத்திற்கு எந்தவிதமான பயனையும் தராது என்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தீப்பெட்டிக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். ஆனால் இது, 'பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காக ஆனது' போன்ற கதையாகத்தான் இருக்கிறது. எப்படியென்றால், கடந்த ஆட்சிக் காலத்தில் அதற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் மூலப்பொருட்களைக் குறைந்த செலவிலே, குறைந்த வரி விகிதத்திலே வாங்கக்கூடிய ஒரு அமைப்பு இருக்கிறது. அது டி.என்.ஜி.எஸ்.டி. ஆக்ட்டில் செக்ஷன் 3 (3) பிரகாரம், ஃபார்ம் 17 கொடுத்து வாங்கக்கூடிய ஒரு அமைப்பு. அதுபோன்ற ஒரு அமைப்பை மீண்டும் நீங்கள் அமல்படுத்த வேண்டும். உங்களுடைய நோக்கம் தீப்பெட்டிக்கு வரிவிலக்கு கொடுக்கவேண்டும் என்பது. அந்த நோக்கத்திற்கு மாறாமல், 'நோட்டிபிகேஷன்' இருக்கவேண்டும் என்ற கருத்தைச் சொல்லி, அதன்படி அந்த 'நோட்டிபிகேஷ'னை நீங்கள் அமைத்துத்தர வேண்டும். இன்னொன்று, மூலப்பொருட்களுக்கு 3 சதவிகிதமாக வரியைக் குறைத்திருக்கிறோம். இது முழுக்க முழுக்க வரவேற்கத்தக்கது. அதிலே ஒரு சின்ன குழப்பம் இருக்கிறது. அதாவது, 'கேப்பிட்டல் குட்ஸ்'. அதாவது, 'மெஷினரிஸ், ஜெனரேட்டர் செட்ஸ்', அதனுடைய உதிரிப் பாகங்கள் வாங்கும்போதுகூட இந்த வரிச்சலுகையைப் பயன்படுத்தி 'ஃபார்ம்–17' கொடுத்து வாங்கலாம் என்ற முறை இருக்கிறது. ஆனால், ஃபார்ம் 17–இல், செக்ஷன் 3(3)–ஐ நாம் பயன்படுத்தும்போது, செக்ஷன்

3(4)-ம் அதுவாக வந்துவிடும். செக்ஷன் 3(4) என்ன சொல்கிறது என்றால், தமிழ்நாட்டிலே உற்பத்தி ஆகக்கூடிய ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது, அதனுடைய மூலப் பொருளை சலுகை வரியில் வாங்கினால், அந்த உற்பத்திப் பொருளைத் தமிழகத்தில் விற்காமல், வெளி மாநிலத்தில் விற்கும்போது, தமிழகத்திற்கு வரி வராமல் போய்விடுகிறது; ஆகவே, அப்படிப்பட்ட பொருளை வெளி மாநிலத்தில் விற்கும்போது, இரண்டு சதவிகித வரி என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட 'கால்குலேஷனை' நாம் கடைப்பிடித்து, அந்த வரி விதிக்கப்பட வேண்டுமென்று டி.என்.ஜி.எஸ்.டி. ஆக்ட், செக்ஷன் 3(4) கூறுகிறது. இது, மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், மின்சாரம், ஜெனரேட்டர்களின் உதிரிப் பாகங்களை வாங்கும்போது, அந்த மின் சாதனங்களை உபயோகப்படுத்தி, தயார் செய்யக்கூடிய பொருள்களுக்கு, இந்த செக்ஷன் 3(4)-லிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தை நான் கூறிக் கொள்கிறேன். அடுத்து, மிக முக்கியமான ஒன்று; 'வேல்யூ ஆடட் டாக்ஸ் சிஸ்டம்' என்பது.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) எல்லாமே முக்கியம்தான்.

திரு. ஆர். சொக்கர் : அதனைக் கொள்கை ரீதியாக வரவேற்கிறோம். ஆனால், அதை அமல்படுத்தும்போது, மிகமிகக் கவனமாக, நிதானமாக, எச்சரிக்கையோடு அமல்படுத்த வேண்டும். ஏனென்றால், இதில் பல குழப்பங்கள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினால், இதனை எச்சரிக்கையோடு அமல்படுத்துங்கள். இதை அமல்படுத்தும்போது, 'ரீ-செல்லர் பாயின்ட்'-இல் அமல்படுத்த வேண்டாம். ஏனென்றால், ஷெட்யூல் 6-இல், ஏற்கெனவே, கடந்த ஆட்சியின்போது, பலமுனை விற்பனை வரி, மறைமுகமாகக் கொண்டு வரப்பட்டது. இந்த 'வேல்யூ ஆடட் டாக்ஸ் சிஸ்டட'த்தை நீங்கள் மறுபடியும், 'ரீ-செல்லர் பாயின்ட்'-இல் அமல்படுத்தினால், the same wine will be bottled in a new bottle. ஆகவே, பலமுனை விற்பனை வரியை மறைமுகமாகக் கொண்டு வரக்கூடிய அளவிலே அது வந்துவிடும். எனவே, உற்பத்தியாளர்களிடமும், சர்வீஸ் இண்டஸ்ட்ரியிலும், இதனைப் பரீட்சார்த்தமாக ஒன்றிரண்டு துறைகளின் மூலம், இந்த ஆண்டு அமல்படுத்தி, அது எப்படிப்

பயன்பெறுகிறது என்பதைப் பார்த்து, வரும் ஆண்டுகளில் அதனை நீங்கள் விருத்தி செய்து கொள்ளலாம்.

கடைசியாக, இரண்டே இரண்டு பாயின்ட்ஸ். 'சேல்ஸ் டாக்ஸ் அட்வைஸரி கமிட்டி' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மாவட்ட அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி, அதை அமைக்க வேண்டும். அதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரையும் உள்ளடக்கி, அதில் மிக முக்கியமாக 'டாக்ஸ் பிராக்டிஷனர்ஸ்' என்ற வகையில் தனியார் வக்கீல்கள் குறைந்தது 3 பேரையாவது ஈடுபடுத்த வேண்டும். அரசாங்கத்தினுடைய வக்கீல்களும்--வழக்குரைஞர்களும்--அதில் இருப்பது நல்லது. அந்தக் கமிட்டிக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்து, வரக்கூடிய கோரிக்கைகளை அந்தக் கமிட்டியில் பரிசீலனை செய்து, அரசுக்கு ஆலோசனைகளை வழங்கக்கூடிய ஒரு கமிட்டியாக அதை அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். சொக்கர் : கடைசியாக ஒன்று; கடந்த ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவோ ஊழல்கள் நடந்தன. அதில் மூர்த்தி பெரிதா, கீர்த்தி பெரிதா என்று கேட்டு, ஒவ்வொரு துறையும் போட்டியிட்டுக் கொண்டார்கள். ஆனால், இந்தத் துறையில் இருந்தவர் மூர்த்திதான் பெரிது என்று அசத்தி விட்டார். வெளிநாட்டிலே இருந்து வரக்கூடிய 'லிக்கர் பாட்டில்கள்' சம்பந்தமாக பலவகையில் மோசடி செய்து, அவற்றைத் திரும்பவும் ஏற்றுமதி செய்கிறோம் என்ற போர்வையில், உள்நாட்டிலேயும் விற்பனை வரியைக் கட்டாமல், வருமான வரியை ஏய்த்து, உண்மையைத் தன்னுடைய பெயரிலே மட்டும் கொண்ட அமைச்சர் ஒருவர்--ஏனென்றால் பெயரெல்லாம் சொல்லக்கூடாது என்கிறார்கள்; ஆகவே, உண்மையைத் தன்னுடைய பெயரிலே மட்டும் கொண்ட அமைச்சர் ஒருவர்--மூர்த்தி பெரிதா, கீர்த்தி பெரிதா என்று பார்த்து, அசத்திக் காட்டினவர்களையெல்லாம் நீங்கள் புத்தகத்திற்குக் கொண்டுவந்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே வெளிப்படையாக 2 கோடி ரூபாய்தான் மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், விசாரித்துப் பார்க்கும்போது, 40 கோடி ரூபாய் அளவிலே, அதிலே மோசடி நடந்திருக்கும் என்று சொல்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் நடவடிக்கை எடுக்க நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டும்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இப்போது மாவட்டங்களைப் பல மாவட்டங்களாகப் பிரிக்கிறோம். என்னுடைய கருத்து என்னவென்றால் 39 மாவட்டங்களாகப் பிரித்து அமைக்க வேண்டும். ஒவ்வொரு பார்லியமெண்டரி கான்ஸ்டிடியூவென்ஸியும், ஒவ்வொரு மாவட்டமாக இருக்க வேண்டும். அந்த ஒவ்வொரு பார்லியமெண்டரி கான்ஸ்டிடியூவென்ஸிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராக இருக்கும்போது, அந்தந்த பாராளுமன்ற உறுப்பினருடைய கோரிக்கையைக் கேட்டறிந்து, ஒரு கோ-ஆர்டினேட்டராக அவர் இருந்து செயல்படமுடியும். அதேபோல், சட்டமன்றத் தொகுதிகளைப் பொறுத்தவரையிலும், 234 சட்டமன்றத் தொகுதிகளையும், 234 தாலுகாக்களாகப் பிரித்து, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியும் ஒவ்வொரு தனித் தாலுக்கா என்று இருக்குமேயானால், அங்கே மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்து, அரசு அதிகாரிகள் மூலமாக மக்களுடைய குறைகளை நிவாரணம் செய்வதற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அது பயன்தரத்தக்க வகையிலேயும் அமையும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கோரிக்கை எண் 9-ன் மீது எந்த விளக்கமும் தங்களுக்குத் தரவில்லை என்று சொன்னார்கள். நான் என்னுடைய அலுவலகத்திலே விசாரித்துப் பார்த்தேன். கோரிக்கை எண் 9-ல் மேதகு ஆளுநர் அவர்கள் சம்பந்தப்பட்ட செலவினமும் இடம்பெறுவதால் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பொதுவாக உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைதான் இது என்று என்னுடைய அலுவலகத்திலிருந்து குறிப்புச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை இந்த டேபிளிலேகூட பிளேஸ் பண்ணவேண்டிய அவசியம் கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிடையாது. டாக்டர் கிருஷ்ணசாமி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி, என்னுடைய ஒருசில கருத்துக்களை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக முதல்வர் அவர்கள் பட்ஜெட் உரையின்போதும், அவருடைய பதிலுரையின் போதும் ஏறக்குறைய 414 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். அது உண்மையிலேயே பாராட்டக்கூடிய விஷயம். என்னுடைய கோரிக்கை, இந்த வரிச் சலுகைகள் மக்களுக்குப் போய்ச் சேரக்கூடிய அளவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான். ஏனென்றால் தாராளமாக என்ன வரிச் சலுகைகள் கொடுத்தாலும்கூட, சில்லறை விற்பனைக்குப் பொருட்களை விற்கின்றபோது இந்த வரிச் சலுகைகள் சாதாரண மக்களுக்குப் பயன் தருவதில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. முதலிலே 306 கோடி ரூபாய்க்கும், பின்பு 108 கோடி ரூபாய்க்கும் வரிச் சலுகைகள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அவைகள் எல்லாம் அடித்தள மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், நடைமுறையிலே போய்ச் சேருவது கிடையாது. எனவே, அவைகள் அடித்தள, நடுத்தர மக்களுக்கும் போய்ச் சேர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சிறப்புச் சலுகை பெரிய அதிபர்களுக்கு மட்டுமல்லாமல் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் கொடுக்கப்பட வேண்டும். என்னுடைய வேண்டுகோள் employment of Women and suppressed people பற்றியது. பெண்களும், தாழ்த்தப்பட்டோரும் mainstream of Socio-Economic life, அதாவது பிரதான சமூக நீரோட்டத்திற்குள் அவர்களைக் கொண்டு வருவதற்காக பெண்கள் தொடங்கக்கூடிய வியாபாரம், தொழில், தாழ்த்தப்பட்ட மக்கள் தொடங்கக்கூடிய தொழில், வியாபாரம் அவைகளுக்கு முழுச் சலுகை அளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தமட்டிலும் இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல மாவட்டங்களை இன்னும் சிறிய அளவிலே பிரிக்கலாம். அதுதான் சிறந்த நிர்வாகத்திற்கு உகந்ததாக இருக்கமுடியும். ஆனால் இன்னொன்று. மாவட்ட ஆட்சித் தலைவர்களை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுகிறோம். அதேசமயத்தில் அடிமட்டம் வரையில் இருக்கக்கூடிய

ஊழியர்களை நாம் மாற்றுவது கிடையாது. இந்த மாற்றம் இல்லாத காரணத்தால் அடிப்படை மக்கள் மத்தியிலே அவர்களுடைய அணுகுமுறைகள் வித்தியாசமாக இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் அங்கே போகிறபோது, பல்வேறு வேறுபாடுகளுடனும், நோக்கங்களுடனும் நடந்து கொள்கிறார்கள். நாம் ஆட்சியில் இருப்பவர்களைக்கூட 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைத்து விடுகிறோம். எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள், அமைச்சராக இருக்கக்கூடியவர்களைக்கூட தவறு செய்தால் இப்போது எப்படி வேலூர் சிறைக்கும், சென்னை சிறைக்கும் அனுப்புகிறோமோ அதைப்போல அனுப்ப முடிகிறது. ஆனால் அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் என்ன தவறு செய்தாலும் அவர்களைத் தட்டிக் கேட்பதற்கோ அல்லது கண்டிப்பதற்கோ உடனடியாக முடிவதில்லை.

எனவே, அவர்களைக் கவனிப்பதற்கும், அவர்களைத் தட்டிக்கேட்பதற்கும் தாலுகா அளவில் அல்லது ஒன்றிய அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்தால், அந்த கண்காணிப்புக் குழுக்கள் ஓரளவுக்கு அவர்களின் தவறுகளைத் தட்டிக் கேட்பதற்கு ஏதுவாகும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்தக் கருத்தை மட்டும் நான் வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. த. பூவேந்தன்.

முற்பகல் 11–45

திரு. த. பூவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை அரசியலில் ஆளாக்கி, இந்த மாமன்றத்தின் உறுப்பினராகப் பேசுகின்ற வாய்ப்பளித்த எங்களது ஆருயிர்த் தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தொட்டு வணங்கி என்னுடைய முதல் கன்னிப்பேச்சைத் தொடங்குகிறேன். என்னுடைய தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கின்ற காரணத்தால், குறிஞ்சி மலரைத் தொட்டு, நாட்டுக்கு வெளிச்சம் தருகின்ற இளைய சூரியனாகத் திகழ்கின்ற தளபதி அவர்களை வணங்கி இங்கே நான் பேச வாய்ப்புப் பெற உறுதுணையாக இருந்த எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழக வரலாற்றில் முதல் முறையாக ஏழை மக்களுக்காகவும், பெண்களுக்காகவும் பாடுபட்டுவரும் எங்களது தலைவர் முதல்வர்

அவர்களின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய, மிளகாய், சீரகம், மஞ்சள், மிளகு, வெல்லம், பனங்கற்கண்டு, புளி போன்ற 11 பொருட்களுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளித்தமைக்காக ஏழை எளிய, நடுத்தர மக்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் தொழிலாளர்கள் வளரவும், வாணிபம் வளரவும், விஞ்ஞானக் கருவிகள் மற்றும் அன்றாடம் உபயோகப்படுத்தப்படும் பொருட்களின் வரியை 11 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசு வாணிபர்களைப் பொன் முட்டையிடும் வாத்தாகக் கருதாமல் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் அரசாகச் செயல்பட்டமைக்காகவும், வணிகர் நல வாரியம் அமைத்து, வணிகர்களின் சிகிச்சைக்கும், அவர்களது குழந்தைகளின் கல்விக்கும் உதவி செய்வதற்காகவும், அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வணிகர்களின் குடும்பங்கள் வாழ உதவிகள் செய்வது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

மாநில ஆட்சி நிர்வாகத்தில் கடந்த காலத்தில் செய்யப்பட்ட முறைகேடுகள், அதிகார மீறல்கள் ஆகியவற்றைச் சீர் செய்யும் முக்கியப் பணி இந்த அரசுக்கு இருக்கிறது. நிர்வாகத்தில் ஊடுருவிவிட்ட லஞ்சம், ஊழல் போன்றவற்றை அடியோடு ஒழித்து முறையான நிர்வாகத்தைத் தருவதற்காக ஒரு உயர்மட்டக் குழுவை அரசு அமைத்திருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பல்வேறு குறைகளை முன்னால் ஆட்சி செய்தவர்கள் கவனிக்காமல் இருந்தார்கள். 1967 முதல் 1971 வரை நமது கழக ஆட்சி முதலில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது பழனியில் பாலாறு-பொருந்தலாறு, வரதமாநதி, குதிரையாறு போன்றவற்றில் சிறிய நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டன. அந்தப் பகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. மீண்டும் நமது தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சி அமைந்திருக்கின்ற இந்த நேரத்தில் கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் எனது பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். வரதமாநதி நீர்த்தேக்கத்தில், மேல் வரதமாநதி நீர்த்தேக்கம் கட்டினால்

பழனி தொகுதியில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும், பக்கத்தில் உள்ள ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும் அதனால் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அதற்கு ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் குதிரையாற்றில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் கட்டித் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆந்திர மாநிலத்தில் திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்தில் பல்கலைக்கழகம் அமைத்ததுபோல், அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோவில் மிகப்பெரிய புண்ணியத் தலமாக இருக்கிற காரணத்தால் அங்கே ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பழனித் தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி இருக்கிற காரணத்தால் அங்கே சித்த மருத்துவத்திற்கான மூலிகைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அங்கே இருந்த சித்த மருத்துவக் கல்லூரியை கடந்த ஆட்சியாளர்கள் சென்னைக்கு மாற்றிவிட்டார்கள். அருள்கூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை மீண்டும் பழனிக்கே மாற்றித்தர ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. உ. திசைவீரன்.

***திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கும் இரண்டாம் அம்பேத்கார் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, எங்கள் இளைய தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி கூறி, சமூக நீதிக்காவலரை ஆட்சிக் கட்டிலிலே அமரச்செய்த இரண்டு கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், என்னை பரமக்குடி தொகுதியிலே, ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பிறகு தி.மு.க. சார்பாகச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, இந்த மாபெரும் புகழ்மிக்க 11-ஆம் சட்டமன்ற அவையிலே ஒரே ஒரு இன்ஜினியரிங் கிராஜுவேட் என்கிற பெருமையையும் தேடித் தந்த எனது பரமக்குடி தொகுதி மக்களை நோக்கித் தொழுது, என்னுடைய கன்னிப்பேச்சைத் தொடங்குகிறேன்.

இங்கே அறிவிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுவதோடு, என்னுடைய தொகுதியினுடைய முக்கியமான இரண்டு அல்லது மூன்று கோரிக்கைகளை தங்கள் முன் வைத்துவிட்டு, பிறகு, இங்கே அறிவித்திருக்கிற மானியக் கோரிக்கையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. எங்கள் தொகுதி ஏறத்தாழ 40,000 நெசவாளப் பெருங்குடி மக்கள் வாழுகின்ற பகுதியாக இருக்கின்றபடியால், அவர்கள் அங்கே நெய்து வைத்திருக்கின்ற கிட்டத்தட்ட ரூ.5 கோடி மதிப்புள்ள ஜவுளிகள் தேங்கிக் கிடப்பதை, தயவுசெய்து அரசின் சார்பாகக் கொள்முதல் செய்துகொள்ள மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல அரசு ரிபேட் பாக்கியாக ரூ.170 லட்சம், மாநில சங்க நிலுவையாக ரூ.83 லட்சம் இருப்பதால், முதல்வர் அவர்கள் தலையிட்டு, நெசவாளப் பெருங்குடி மக்களுடைய குறையைப் போக்கி கொள்முதல் செய்து அவர்களின் பசியினைத் தீர்க்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களது தொகுதியில் வைகை ஆற்றுக்கு அக்கரையில் இருக்கும் எமனேஸ்வரம் பகுதியில் சுமார் 20,000 நெசவாளர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். ஆற்றில் வெள்ளம் வரும் சூழ்நிலையில் பெண்களுக்கு பிரசவம் பார்க்கக் கூட மருத்துவமனை இல்லாத காரணத்தால், பெண்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு எமனேஸ்வரத்தில் பிரசவ மருத்துவமனை ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய எங்கள் தொகுதியில் தொழில் கல்லூரிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு தொழில் கல்லூரியையும், பொறியியல் கல்லூரியையும் அமைக்க முன் வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, தொடங்கப்பட்டுள்ள கலைக் கல்லூரி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இயங்குவதால் அரசுக் கல்லூரிகளுக்குத் தனியாகக் கட்டிடம் கட்ட நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்காக, பரமக்குடியிலே 20 ஆண்டுகளுக்கு முன்பே நிலம் வாங்கப்பட்டிருந்தும் இதுவரையில் அங்கே கட்டிடம்

கட்டப்படவில்லை. அதையும் இந்த நிதியாண்டில் கட்டித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக தென் மாவட்டங்களிலே, பரமக்குடியிலே அடிக்கடி இனக்கலவரங்கள் ஏற்பட்டு மக்கள் அவதிக்கு ஆளாவதால், அங்கே ஒரு நிலையான அமைதிக் குழுவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் அங்கே பணியாற்றுகின்ற தாழ்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் அவர்களது பதவி உயர்விலே இடஒதுக்கீட்டு முறைப்படி அங்கே இடங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தென் மாவட்டங்களில் ஏற்படும் நிரந்தரமான மின்தடையை முறியடிக்கிற வகையில் இராமேஸ்வரம் பகுதியில் காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் wind mill power station ஒன்றை ஏற்படுத்தி மின் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேவனேரி கிராமத்திலே தேர்தலுக்கு முன்பு ஒரு தலித் இளம் பெண் சிலரால் கற்பழிக்கப்பட்டு அங்கே கொடூரமான முறையிலே கொலை செயயப்பட்டார். அதற்கு இதுவரை அரசு சார்பாக எந்தவித நிதி உதவியும் வழங்கப்படவில்லை. அந்த நிதி உதவியையும் தந்துவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக எனது தொகுதியிலே வைகை ஆறு இருந்தும்கூட, அது விளையாட்டு மைதானமாகப் பயன்படுகிறதேயொழிய, பாசனத்திற்குப் பயன்படவில்லை. வைகை அணையிலே தண்ணீர் இருக்கும்போது, மணல் நனையும் அளவிற்குத் தண்ணீர் திறந்துவிட்டால், குடிநீர்ப் பிரச்சினை முற்றிலுமாக நீங்கிவிடும். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இந்த மானியக் கோரிக்கை தொடர்புடைய கருத்துக்களாகக் கூறுங்கள்.

திரு. உ. திசைவீரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையிலே ஒன்று மிகவும் பாராட்டுக்குரியது. அதிலும், என்னைப்போன்ற ஆளும் கட்சிக்காரர்கள் பாராட்டுவதைவிட, எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் பெருமையாகப் பாராட்டியிருக்கின்றார்கள். அதேநேரத்தில், இந்த விற்பனை வரி

மானியக் கோரிக்கையிலே 6-வது அட்டவணையிலிருந்து, மதுபானம் தவிர, மற்ற பொருட்களை முதல் அட்டவணைக்குக் கொண்டு வந்து, ஒருமுனை வரியாக விதிக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

முற்பகல் 11-55

அதேபோல, மேல் வரி மற்றும் கூடுதல் வரி போன்றவை 17–7–96–லிருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டிருப்பதை என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, மூலப் பொருட்கள் கொள்முதல் வரியை 5.6 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைத்திருப்பது மிக்க மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

சிறு வணிகர்களுக்கு அதிகமான சலுகைகளைக் கொடுத்திருப்பதன் மூலம் எங்கள் பகுதியிலே இருக்கின்ற சிறு வணிகர்கள் அதிகப்படியான நன்மைகளைப் பெறுகின்றார்கள் என்பதை வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி விதிப்பு வரம்பை ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. அதைப்போல ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாத விற்பனை அளவுள்ள வரி விதிப்புக்குரியவர்களுக்கு வரி செலுத்துவற்கு இணக்க வரி விதிப்பு முறை Compounding System ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான வரி விதிப்புக்குட்பட்டவர்கள் மொத்த விற்பனை அளவிற்குக் கணக்குகளைப் பராமரித்தால் போதுமானது. விரிவான கணக்குகள் பராமரிக்கத் தேவையில்லை என்று அறிவித்திருப்பது, வரி விதிப்பு மற்றும் வரி செலுத்தும் முறையை எளிமைப்படுத்துகின்றது.

அதைப்போல, ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுக்கு முழு வரிச் சலுகை அளித்திருப்பது என்பது, எந்த நோக்கத்திற்காக நமக்கு வாக்காளர்கள் வாக்களித்தார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும்படியாக இருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வணிக வரித் துறையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீடு இருப்பதைப்போல மற்றவர்களுக்கு....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது முக்கியமான மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விதிமுறை என்னவென்றால், ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிலே, மற்றொருவர் குறுக்கிட்டு வரக்கூடாது என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறுக்கே நடந்து வருகிறார்கள். நீங்களும் அனுமதிக்கிறீர்கள். இது முறைதானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைத்தான் நானும் அடிக்கடி சொல்கிறேன். உறுப்பினர்கள் எல்லாம் அவரவர்களுடைய இடத்தில் அமரவேண்டும் என்று சொல்கிறேன். அப்படிச் சொன்னால் என் மேலே கோபித்துக் கொள்கிறீர்கள். திரு. திசைவீரன், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கோபித்துக் கொள்கிறார்கள் என்பதற்காக, சபை நடத்தும்போது நீங்கள் கூறாமல் இருக்கக்கூடாது, கூறித்தான் ஆகவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்வரிசையிலே இருப்பவர்கள் எழுந்துபோனால் ஒன்றும் குற்றம் இல்லை. ஆனால், பேரவைத் தலைவருக்கும், பேசுகின்ற உறுப்பினருக்கும் இடையில் யாரும் குறுக்கே வரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், உட்காருங்கள். உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார். இப்படி அடிக்கடி குறுக்கிட்டால் அவர் தடுமாறி விடுவார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், அவர் பேசட்டும். திரு. திசைவீரன், நீங்கள் பேசுங்கள்.

[1996 ஆகஸ்ட் 6

திரு. உ. திசைவீரன் : வணிக வரித் துறையிலே தாழ்த்தப் பட்டவர்களுக்குப் பதவி உயர்விலே இட ஒதுக்கீடு இருப்பதுபோல மற்ற துறைகளிலும் அவர்களுக்குப் பதவி உயர்விலே இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களில் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு வசூலிக்கப்படும் மேல்வரியானது மாநகராட்சிகளுக்கு வழங்கப்படும் 50 சதவீதத்தைப் போல வழங்கப்பட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகையின் கீழ் ரூ. 175.31 கோடி சலுகை அளித்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. தொழிலில் பின்தங்கிய எங்கள் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் தொழில் துவங்க முன்வருவோருக்கு உரிமம் பெறும் வகையை எளிமையாக்கி, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக, மாட்டுத் தீவனத்திற்குப் பயன்படும் கோதுமைத் தவிட்டிற்கு 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதை ரத்து செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பழைய நகைகளை உருக்கி விற்கும்போது அதற்கு 2 சதவீதம் வரி விதிக்கப்படுகின்றது. அப்படிச் செய்பவர்கள் பெரும்பகுதி ஏழை, மற்றும் நடுத்தர மக்கள்தான். எனவே, அதையும் ரத்து செய்ய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீப்பெட்டித் தொழிலுக்கு படிவம் 17-ன் கீழ் மூலப் பொருட்களை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் "KOR" என்ற தனியார் இரசாயன நிறுவனம் இருக்கிறது. அதற்கு வழங்கப்படும் மானியத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று அரசு தரப்பிலேயிருந்து அறிக்கை வந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடியின் மையப் பகுதியிலே உள்ள நீதிமன்ற வளாகத்தில் அதிகப்படியான இடவசதி இருப்பதால், அங்கே சப்-கோர்ட் ஒன்று துவங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடி, இராமநாதபுரம் வருவாய் மாவட்டத்தினுடைய பிரிவாக இருந்தாலும்கூட, அங்கே இருக்கின்ற சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் சிவகெங்கை பதிவு மாவட்டத்திலே இருக்கின்றது. எனவே, அங்கே வருகின்ற அதிகப்படியான நிதி ஆதாரங்கள் அனைத்தும் சிவகெங்கைக்கே செல்கிறபடியால் அதை மாற்றி இராமநாதபுரம் பதிவு மாவட்டத்திலேயே மீண்டும் வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. திசைவீரன், சீக்கிரம் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

நன்பகல் 12-00

திரு. உ. திசைவீரன்: அதைப்போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிர்வாக வசதிக்காக பல்வேறு மாவட்டங்களைப் பிரித்தார்கள். கடைசியாக ஒரு வேண்டுகோள். பரமக்குடியைத் தலைநகராகக் கொண்டு, சுற்றியிருக்கின்ற 8 யூனியன்களை இணைத்து ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியாக இருக்கின்ற பரமக்குடியின், கிழக்குப் பக்கம் பார்த்தால், மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் மந்திரியாக இருக்கிறார்கள்; மேற்குப் பக்கம் பார்த்தால், மாண்புமிகு திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் மந்திரியாக இருக்கிறார்கள்; தெற்குப் பக்கத்திலே மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்கள்; வடக்குப் பக்கத்திலே மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் மந்திரியாக இருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தப் பகுதியில், இந்த எளிய சாமானியன் இருக்கின்ற பரமக்குடித் தொகுதிக்கு, அதிகப்படியான நிதியினை ஒதுக்கித் தந்து எங்களை, வாழ்விலே முன்னேற்றுமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெற்றுச் செல்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அண்ணாந்து பார்த்தால் உதயசூரியன் முதலமைச்சராக இருக்கிறார்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கணேசன்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் மீதான மானியக் கோரிக்கை தொடர்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அதற்கேற்ப, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழை மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களை அறிவித்து, நல்லாட்சி மலரப் பாடுபட்டு வருகிறார்கள். இந்த அரசு பந்தயக் குதிரை வேகத்திலே சென்று கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன். மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்பட, என் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாகச் சொல்லி, பிரித்திருக்கிறார்கள். எனது சேலம் மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். தமிழினத் தலைவர், தமிழ்ச் சமுதாயத்தின் தலை நாயகன் 4-வது முறையாக இந்த மாமன்றத்தில் முதல்வராகப் பொறுப்பேற்று உள்ளார் என்று உலகமே வியந்து பாராட்டும் டாக்டர் கலைஞர் அவர்கள், எடப்பாடியைத் தனித் தாலுகாவாக ஆக்கியுள்ளார்கள். தங்களுக்கு, எடப்பாடித் தொகுதி மக்களின் சார்பாக, இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே உளமார்ந்த நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மகிழ்ச்சி, தொகுதி மக்களுக்குப் பூரணமாக அடைய முடியாதபடி, புண்பட்டவிதத்திலே, இதிலே நடந்து விட்ட ஒன்றைத் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவந்தால், தாய் உள்ளத்தோடு கேட்டு, பரிவோடு பரிகாரம் செய்வீர்கள் என்ற முழு நம்பிக்கையோடு இப்பிரச்சினையை எடுத்துச் சொல்கிறேன். எடப்பாடியைத் தனித் தாலுகாவாக ஆக்கினீர்கள். அதே நேரத்தில், எடப்பாடி ஒன்றியம், கொங்கனாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களையும் இணைத்து, ஒரே தாலுகாவாக இருக்க வேண்டுமென்று, தொகுதி மக்கள் ஒருமனதாக விரும்பினார்கள். ஆனால் மகுடஞ்சாவடி இதில் விடுபட்டு விட்டதைக் கண்டு மக்கள் பதறிப் போய் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள். நான் பட்ட அதிர்ச்சியும், வேதனையும் சொல்ல இயலாது. 234 தொகுதிகளையும் தனது தொகுதியாகக் கருதும் தாய்மனம் தங்களுக்கு இருக்கிறது. இந்தக் கருத்து, எதிர் முகாமிலிருந்து வந்த பேருண்மையாகும். ஆகவே கருணைகூர்ந்து, மகுடஞ்சாவடி ஒன்றியத்தை எடப்பாடித் தாலுகாவிலே சேர்க்க வேண்டுமென்று பணிவோடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தப் பகுதி மக்களின் தொழில்..

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தாலுகாதான் முதலில் இருந்தது. இப்போது மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்கிறது. சங்ககிரி டிவிஷனாக வரவேண்டுமென்று ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டது. இந்த சங்ககிரி டிவிஷன் ஆரம்பிக்க வேண்டுமானால், இரண்டு தாலுகாக்கள் தேவைப்படுகின்றன. அதனால்தான் சங்ககிரி டிவிஷனில், பொதுமக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த வந்த அடிப்படையில், எடப்பாடி நகரத்தை மையமாக வைத்து ஒரு தாலுகா புதிதாக ஆரம்பித்திருக்கிறோம். சங்ககிரி ஒரு வட்டமாக இருக்க வேண்டும். சங்ககிரி ஒன்றியத்தை மட்டும் வைத்து ஒரு வட்டமாக ஆக்க முடியாது. அதற்குத்தான் மகுடஞ்சாவடி ஒன்றியத்தை இணைத்து ஒரு வட்டம் என்று அறிவித்து இருக்கிறோம். அதை வைத்து, சங்ககிரி டிவிஷன் என்று வைத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைவிட, மகுடஞ்சாவடி சேலத்திற்குப் பக்கமாக இருக்கிறது; அதனால் முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது. இதிலே உறுப்பினர் ஒன்றும் சங்கடப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், பொதுமக்கள் இதை வரவேற்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–05

திரு. இ. கணேசன்: ஏனென்றால் இந்தப் பகுதி மக்களின் தொழில் நெசவுத் தொழில். இதனுடைய மூலப் பொருளான நூல், பாவு, வண்ணத்திற்குத் தேவையான பவுடர்கள், பவர்லூமுக்கு இதர உதிரி பாகங்கள் அனைத்தும் எடப்பாடியிலே கிடைக்கிறது. தங்களுக்குத் தெரியாதது அல்ல. நெசவுத் தொழில் என்பது பிரியாதது; மாறாக இணைப்பது; சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் இந்த எடப்பாடியோடு ஒரு இழைகூட பிரியாமல், மகுடஞ்சாவடியை இணைக்க வேண்டுமாய் மீண்டும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எடப்பாடி தலை என்றால், மகுடஞ்சாவடி, மகுடமாக விளங்குகிறது. நான் ஞாயிற்றுக்கிழமை இரவு எடப்பாடியிலிருந்து சட்டமன்றப் பணிக்கு சென்னை வரும்போது என் பின்னால் நூற்றுக் கணக்கான தொகுதி மக்கள் இப்பிரச்சினைபற்றிப் பேசிப் பேசி என் பின்னால் தொடர்ந்து வந்து என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டார்கள். நான் அவர்களிடத்திலே, தாய் உள்ளத்தோடு இருக்கும் கலைஞரிடம் நாம் போராடிப் பெற வேண்டிய அவசியம் இருக்காது; குறிப்பறிந்து,

நிலை உணர்ந்து, நமது முதல்வர் கோரிக்கையை ஏற்பார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வந்து உள்ளேன். என்னை ஏமாற்ற மாட்டார்கள் என்றும், என்னை மட்டுமல்ல, என் தொகுதி மக்களையும் ஏமாற்ற மாட்டார்கள் என்றும் ஆறுதல் கூறி வந்து உள்ளேன். ஆகவே, அருள்கூர்ந்து ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தாலுகா அந்தஸ்தில் உள்ள எனது எடப்பாடி தொகுதியிலே ஏற்கெனவே வீட்டுவசதி வாரியத்திற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிட்டத்தட்ட 300 ஏக்கர் நிலம் மீதியாக உள்ளது. அந்த இடத்தில் தாலுகா அலுவலகம் கட்டலாம்; மேலும் நீதிமன்றங்கள், சப்-ஜெயில், தீயணைப்பு நிலையம், கருவூலம் மற்றும் அனைத்துத் துறை அலுவலகங்களும் கட்டலாம். இத்துடன் அந்தப் பகுதியில் காவிரிக் குடிநீர் உள்ளது. தொகுதி முழுவதும் சென்றுவர நகரப் பேருந்து உள்ளது. எடப்பாடி-டு-ஈரோடு செல்லும் ஹைவேஸ் சாலை உள்ளது. மீண்டும் மீண்டும் நான் நினைவுபடுத்திக் கொள்வது எல்லாம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தை எடப்பாடி தாலுகாவிலே இணைக்க வேண்டும் என்று அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மத்தியில் பேசும்போது கோப்புகள் சிவப்பு நாடாவில் உறங்கி கொண்டு இருக்கும்போது, ஊழல் ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது என்று ஒரு அருமையான உதாரணத்தினை எடுத்துக் காட்டினார்கள். அதற்கு சாட்சியாக இன்பசாகரனும், தியானேஸ்வரனும் போன்ற வரலாறு மன்னிக்காத, மறக்க முடியாத அதிகாரிகள் என் நினைவுக்கு வருகிறார்கள். ஆட்சியில் கட்சியின் தலையீடு கூடாது என்பதை மூதறிஞர் இராஜாஜி ஒருமுறை கூறி இருக்கிறார் என்பதனை இங்கே நினைவுகூர்கிறேன். நிர்வாகம் என்பது ஒரு நேர்கோடாக இருக்க வேண்டும். ஜனநாயகத்தில் நிர்வாகத்திலே தனிப்பட்டவர்கள் குறுக்கீடு இருப்பது ஒரு சாபக் கேடுதான். நேர்கோடாக இருக்க வேண்டிய நிர்வாகம் குறுக்கீடு ஏற்பட்டு வளைந்து கொடுக்கும் நிலை ஏற்பட்டால், ஆட்சி வளைந்து போவது மட்டுமல்ல, தொலைந்தே போய் விடும். இதை நாம் காலஞ்சென்ற அரசிடம் கண்டு இருக்கிறோம். மக்கள் ஆட்சி முறையில் தனிப்பட்டவர்கள் செல்வாக்கு, நிர்வாகத்தில் அவர்களுடைய தலையீடு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாய் இந்த மாமன்றத்தின் மூலமாக இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

213494

இம்மாமன்றத்தின் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொத்துக் கணக்கு காட்ட உள்ளார்கள். அது மட்டும் போதாது. உயர் அதிகாரிகளும், கோட்ட ஆட்சியாளர்களும், தாசில்தார்களும், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களும், ஆணையாளர்கள் உட்பட உத்தரவிடும் அதிகாரம் பெற்ற அதிகாரிகள் அத்தனை பேரும்கூட சொத்துக் கணக்கை அரசுக்கும், மக்கள் மன்றத்திற்கும் காட்ட வேண்டுமாய் இம்மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வரும்போதுதான் அரசியல் பொது வாழ்வு நம்பிக்கைக்கு உரியதாக இருக்கும்; மக்களாட்சித் தத்துவம் மதிக்கப்படும்; ஊழலின் ஆணிவேர் அறுத்து எறியப்படும். சாலை ஓரத்தில் வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் மனதிலே விபரீத எண்ணங்கள், இதுதான் காலத்தின் கோலம் என்ற, பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக்கடல் அறிஞர் அண்ணா அவர்களின் பொன்னான வசனங்களை எண்ணிப் பார்க்கிறேன். சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகுகூட பணம் படைத்தவர்களுக்கு 100 ஏக்கரில் பங்களாவும், 900 ஏக்கரில் தோட்டங்களும் இருக்கின்றன.

பிற்பகல் 12–10

நெடுஞ்சாலைப் புறம்போக்கில் குடிசை போட்டுக் கொண்டு நாட்களை யுகமாகக் கழிக்கும் ஏழைகளை இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நண்டிற்கு ஒரு வளை உண்டு. சிறு குருவிக்கு ஒரு கூடு உண்டு. ஏன் பாம்பிற்கு கூட புற்று உண்டு. ஆனால் இந்த நாட்டின் முடிசூடா மன்னர்களாக இருக்கும் ஏழைகளுக்கு எட்டு அடி நிலம் கூட இல்லை. இது ஊர் அறிந்த உண்மை. இந்த அவல நிலையைப் போக்க எங்களுடைய மக்கள் காவலர், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், டாக்டர் ஐயா அவர்கள் ஒவ்வொரு கூட்டம் கூட்டமாகச் சொல்லி வருகிறார். அவர்களுடைய மனக்குறையே இதுதான். குடிமனைப் பட்டா இல்லாத ஏழைகளுக்கு குடிமனைப்பட்டா வழங்க உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தேரோடும் வீதியில், திருவாரூரில் நீதிக் கொடி பறக்கவிட்ட மாமன்னன் மனுநீதிச் சோழன் மண்ணிலே பிறந்த முதல்வர், கலைஞர் இன்று மனுநீதித் திட்டம் கொண்டு வந்தது மிகவும்

D
V211, 31'N96 N96.9.2

பொருத்தமானதாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், பல்வேறு துறைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொரு கோட்டத்திற்கும் சுழற்சி முறையில் சென்று அந்தந்தக் கிராமத்தின் குறைகளை அந்தந்த இடத்திலேயே தீர்க்கும் வழிவகை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை வருவாய்த் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மனு நீதித் திட்டத்தை எத்தனை முறை பாராட்டினாலும் தகும். ஏழைகளின் கண்களில் ஆனந்தக் கண்ணீரை மட்டுமே உண்டுபண்ணும் அற்புதமான திட்டம் என்பதைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பா.மு. முபாரக்.

திரு. பா.மு. முபாரக்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுகிற வாய்ப்பைத் தந்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன் பட்ஜெட் கூட்டத்தில், பொது விவாதத்தில் பேசும்போதே இந்த வரலாற்றுச் சிறப்புமிகு பட்ஜெட் குறித்து நான் குறிப்பிட்டிருந்தேன். அப்படி நம்முடைய அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகிற, எதிர்க்கட்சிகள் கூடக் குறை சொல்ல முடியாமல் இருக்கிற ஒரு அருமையான பட்ஜெட்டைத் தந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அள்ளிக் கொடுக்கமுடியாவிட்டாலும் கிள்ளிக் கொடுக்கும் அளவுக்கு இருக்கிற பட்ஜெட் என்று தன்னடக்கத்துடன் அதைக் குறித்து விவரித்து இருந்தார்கள். கிள்ளிக் கொடுத்ததற்கே இவ்வளவு பாராட்டு என்றால் அள்ளிக் கொடுத்தால் நாடு எப்படி இருந்திருக்கும் என்று நான் வியக்குமளவுக்கு எண்ணுகிறேன்.

ஒரு அருமையான, மக்கள் மதிக்கிற பட்ஜெட்டை இந்த அவையிலே தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பெரிதும் மகிழ்வோடு பாராட்டி இந்த மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன். வரிச் சலுகைகளைப் பொறுத்தவரையிலும், பொதுவாக எல்லாத் தரப்பு வியாபாரிகளும் மகிழ்கிற அளவுக்கு ஒருமுனை வரி, ஒரு லட்சத்திலிருந்து 3 லட்சம் வரையிலும் விதிவிலக்கு, 3 லட்சத்திலிருந்து 10 லட்சம் ரூபாய் வரையிலும் காம்பவுண்டிங் வரி முறை என்ற நிலையைக் கொண்டு வந்ததும் மகிழ்ச்சிக்குரியது. பாராட்டிற்குரியது. இது எல்லோரும் பாராட்டுகிற

நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. நான் நீலகிரி மாவட்டம், மலை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறேன். எழில் குலுங்கும் எங்கள் மாவட்டம், உலக மக்களைக் கவர்கிற மாவட்டம், சுற்றுலாத் துறையில். மாவட்ட நிர்வாகம் குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற இந்த அறிக்கையில் மக்களுடைய குறைகள் குறித்துப் பார்ப்பதற்காக, அதை உடனே தீர்ப்பதற்காக, மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் என்கிற நிலையில், அதற்கு கீழ் நிலையில் உள்ளவர்கள் உடனுக்குடன் மக்களிடம் மனுக்களைப் பெற்று அந்தப் பிரச்சினைகள் குறித்து, மக்களுக்கு ஏற்படுகிற இன்னல்கள் குறித்து, உடனுக்குடன் தீர்வு காண வேண்டுமென்று விதிமுறைகள் வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் பேரன்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்வது, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற என்னிடத்தில் இதுவரையில் சுமார் 20 ஆயிரம் மனுக்கள் தரப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12–15

ஏறத்தாழ 3 அல்லது 4 ஆயிரம் மனுக்களைத்தான் கழகத் தோழர்களை, நண்பர்களை வைத்துப் பிரித்து அந்தந்த அலுவலகங்களுக்குக் கொடுத்து அதை முறைப்படுத்தியிருக்கிறேன். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கும்போது, 15 ஆயிரம் மனுக்கள் என்னுடைய கையிலே இருக்கிறது. அதைக்கூட இலாக்கா வாரியாக பிரித்து எடுத்து, அந்தந்த அதிகாரிகளுக்குக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஒரு உதவி செய்கிற வகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுகிற மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கொண்டு போய்க் கொடுத்தால், அதற்காக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய மனுக்களைப் பரிசீலிப்பதற்காக, தனியாக ஒரு அலுவலரை நியமித்து மனுக்களைக் கொடுத்திருப்பவர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் பெறப்பட்டிருக்கிற மனுக்கள்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து தகவல்களை அனுப்பி அந்த மனுக்களுக்கும் உடனடியாகப் பரிகாரம் காணவேண்டும். ஏன் என்றால், அதிகாரிகள் சில குறிப்பிட்ட இடங்களுக்கு குறிப்பிட்ட நேரத்திலேதான், இந்த இடத்திலே இருக்கிறோம், எல்லோரும் வாருங்கள் என்று கூப்பிட்டுவிட்டு வருவார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நாங்கள் ஒவ்வொரு வீதியாக, தெருத்தெருவாகப்

போய், அந்த மக்கள் இருக்கிற இடத்திலேயே போய் அவர்களுடைய குறையைக் கேட்கும்போது, ஏராளமான மனுக்கள் எங்களிடத்திலே வருகிற காரணத்தால், அந்த மனுக்களை எல்லாம் சரிசெய்து, சீர்செய்து, ஒழுங்குபடுத்தி, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, அதன்மீது நடவடிக்கை எடுக்கிற ஒரு அமைப்பாக ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய மனுக்களைப் பரிசீலனை செய்து, முடிவுகளை எடுக்கிற ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தவேண்டும் என்று நான் மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மாவட்டங்களைப் பிரிப்பது குறித்து இங்கே பேசும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாவட்டங்களைப் பிரிக்கும்போது, 39 மாவட்டங்களாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் அது கொஞ்சம் ஆபத்தான விஷயம். ஏனென்றால், மூன்றே மூன்று சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, அதற்கு ஒரு மாவட்டம் என்கிற அந்தஸ்தோடு எங்கள் மாவட்டம் நீண்டகாலமாக இருக்கிறது. அப்படிப் பாராளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்றால், கோவை மாவட்டத்திலேயிருந்து மேட்டுப்பாளையம், அவினாசி, தொண்டாமுத்தூர் ஆகிய இந்த மூன்றும் கூட என்னுடைய மாவட்டத்திற்குள்ளே சேருகிற நிலை வந்துவிடும். இந்த 3 தொகுதிகளை வைத்துக் கொண்டு, அங்கே கடந்த ஆட்சியிலே செய்த இன்னல்கள் காரணத்தால், தொடர்ந்து எங்களாலே, மக்களுக்கு முழுவதுமாக பயன்படமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், நீங்கள் வேறு எங்காகிலும் கூட இந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும்கூட, நீலகிரிக்கு இந்தத் திட்டத்தை கொண்டு வந்துவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் எந்தக்காலத்திலும் இனி நீலகிரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற சூழலும் ஏற்படாது. மாவட்டங்களைப்பிரிக்கிற அதே நேரத்திலே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முபாரக் அவர்கள் சொல்வதைப் போல, நாடாளுமன்ற தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்று பிரிக்கக்கூடிய

குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையும் இல்லை.

திரு. பா.மு. முபாரக்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகுந்த நன்றி. ஏனென்றால், ஒரு வித்தியாசமான மாவட்டம் எங்கள் மாவட்டம். இன்னும்கூடச் சொல்லப் போனால், 2 லட்சம் மக்களுடைய பிரதிநிதி நான் என்றும், ஒரு லட்சம் மக்களுடைய பிரதிநிதி, 5 லட்சம் மக்களுடைய பிரதிநிதி என்று எல்லா உறுப்பினர்களும் சொல்வார்கள். அதிலேகூட எனக்குக் ஒரு வித்தியாசமான நிலை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்த்தபோது, நான் அவரிடத்திலே தமாஷாகச் சொன்னேன். எல்லாத் தொகுதியினுடைய எம்.எல்.ஏக்களுக்கும் மக்களைப் பார்க்கிற ஒரு வேலை இருக்கிறது. ஆனால், கூடலூர் தொகுதியிலே வெற்றி பெற்று வந்திருக்கிற எனக்கு ஏறத்தாழ 50 ஆயிரம் வன விலங்குகளும் என்னுடைய தொகுதியிலேதான் வருகிறது என்று சொன்னேன். ஆகவே ஒவ்வொரு வகையிலே வித்தியாசம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிமேல் நாம் ஊட்டிக்கு அல்லது குன்னூர் பகுதிக்குப் போனால், முபாரக் அவர்களுடைய துணையோடுதான் போகவேண்டும். ஆபத்தாகச் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஓட்டு போட்ட மக்களைப் பார்க்கவேண்டும், விலங்குகள் ஓட்டுப் போடவில்லை.

திரு. பா.மு. முபாரக்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், என் துணையோடுதான் போகவேண்டும் என்று சொன்னார்கள். கட்சியைப் பொறுத்தவரையிலும் எப்போதுமே, என்னைப் பார்ப்பார். சாதாரணமாக வந்தாலும்கூட, எப்போதுமே என்னோடு தொடர்பு கொள்ளாமல் போனாலும்கூட, ஊட்டியிலே அவருடைய புதல்வர்

பயிலுகிற நேரத்திலேகூட, தொலைபேசியிலே பேசும்போது முபாரக் எப்படி இருக்கிறார், இன்ன நாளிலே நான் வருகிறேன் என்று சொல்வார். ஆகவே, அந்தப் பழக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் சொந்த விஷயங்களை எல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம். முதலிலே மானியத்தின் மீது பேசுங்கள்.

திரு. பா.மு. முபாரக்: சொந்த விஷயம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை தொடர்பாகப் பேசுங்கள்.

பிற்பகல் 12-20

திரு. பா.மு. முபாரக்: என்னுடைய கோரிக்கையை வலுப்படுத்தி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல், நம்முடைய வீட்டு வசதித்துறை அமைச்சர் அவர்களும் இடையிலே குறுக்கிட்டு விவரம் சொன்னார். ஓட்டுப் போட்ட மக்களைப் பற்றித்தான் உறுப்பினர் கவலைப்படவேண்டும், வனவிலங்குகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்று சொன்னார். ஒரு வேளை வனத்துறை அமைச்சருக்குப் பக்கத்திலே அவர் உட்கார்ந்திருப்பதால் அந்தப் பொறுப்பை அவர் கவனித்துக் கொள்வார் என்பதற்காகச் சொல்லியிருக்கலாம். எப்படியோ அனைத்து ஜந்துக்களையும் காக்கவேண்டுமென்ற பொறுப்புத்தான் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே எல்லோரையும் நாம் காக்கவேண்டும். ஆக பல வகையிலே மாறுபட்டிருக்கிற என்னுடைய இந்தக் கூடலூர் தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டும். அதுவும்கூட நான் வனத்தைப் பற்றிப் பேசியதற்குக் காரணம், வனத்துறையின் சார்பிலே இந்த அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே நான் மிகுந்த அன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வனத்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால் அங்கே 'டேன்டீ' அரசு தேயிலைத் தோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் கதியற்று நம் நாட்டிலே நிற்பார்கள் என்ற நிலை வந்தபொழுது அன்றைக்கு முதல்வராக இருந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அப்போது சகோதர தமிழர்களுக்கு வாழ்வு தருவதற்காக வேண்டி 'டேன்டீ' அரசு தேயிலைத் தோட்டத்தை ஆரம்பித்தார்கள். 10,000 ஏக்கருக்கும்

அதிகமான நிலப்பரப்பில் இன்றைக்கு பெரிய அளவிற்கு வருமானத்தைத் தருகிற, மக்களைப் பாதுகாக்கிற ஒரு அமைப்பாக அந்த 'டேன்டீ' நடக்கிறது. கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா எல்லையோரங்களை ஒட்டியிருக்கிற இந்தத் தொகுதியில் இருக்கிற மக்களைப் பாதுகாக்கிற வகையில் ஊட்டியிலிருந்து 75 கிலோமீட்டர் தொலைவிலே கூடலூர் இருக்கிறது. கலைக் கல்லூரியில் பயிலவேண்டுமென்றால் கூடலூரிலேயிருந்து 75 கிலோமீட்டர் தாண்டித்தான் ஊட்டிக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே வெகு தொலைவிலிருந்து வரவேண்டும். இன்னும் சொல்லப் போனால் கூடலூரில் ஒரு பாலிடெக்னிக் கூடக் கிடையாது. 123 கிலோமீட்டர் சுற்றளவு இருக்கிற ஒரு தாலுக்கா. அந்தத் தாலுக்காவில் கல்விக்கு என்று எந்த வசதியும் இல்லாதிருக்கிற காரணத்தால் மிகுந்த அவசியமாக மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி வனத் துறை அமைச்சகத்தின் பொறுப்பில் இருக்கிற டேன்டீயின் சார்பில் தமிழ், மலையாளம் இரு மொழிகளும் சேர்ந்து பயில்கிற, மாணவ, மாணவிகள் கலந்து பயில்கிற ஒரு அரசு கலைக் கல்லூரியை இந்தத் தொடக்க காலத்தில் நீங்கள் கூடலூர் தொகுதிக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மாவட்டங்களைப் பிரிக்கும்போது வட்ட நிர்வாகத்தைப் பிரிப்பதற்கான வேண்டுகோள் எங்களுடைய மாவட்டத்திலிருந்து, நீண்டகாலமாக இருக்கிறது. உதகை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, உதகை வட்டம், குந்தா வட்டம் என்கிற வகையிலே பிரிக்கவேண்டும். 123 கிலோமீட்டர் சுற்றளவுள்ள ஒரு வட்டம் இருக்கிறது என்றால், அது கூடலூர்த் தாலுக்காதான். இந்த கூடலூர்த் தாலுக்காவைப் பந்தலூர்த் தாலுக்கா, கூடலூர்த் தாலுக்கா என்று பிரிக்கவேண்டும். இதை உணர்ந்து நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராகவும் இருக்கிற காரணத்தால், நேரிலே 8 ஆண்டுகளுக்கு முன்னால் கூடலூருக்கு வந்தபோது கடந்த ஆட்சியில் இவ்வளவு பெரிய இடத்திற்கு ஒரு ஒன்றியச் செயலாளர் பணியாற்ற முடியாது என்பதை உணர்ந்து அதைக் கூடலூர் வட்டம், பந்தலூர் வட்டம் என்று சொல்லி இரண்டாகப் பிரித்துக் கட்சியிலே கொடுத்தார்கள். ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் இதிலே ஒத்துழைத்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும்

தெரிவித்து அதையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு சிறப்பும், மகிழ்ச்சியும் நிறைந்த இந்த நிதிநிலை அறிக்கையில் நான் பேசுவதற்கான வாய்ப்பைத் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாகச் சொல்வார்கள், 'முன்னோர் சொல்லும் முது நெல்லிக்காயும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்' என்று. நாங்கள் பல நேரங்களில் சொன்னோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் சொன்னார், "ஒரு அநியாயமான ஆட்சி, முன்னாலே நடந்த ஆட்சி. அக்கிரமமான ஆட்சி. இது ஆகாது. இது மக்களுக்கு விரோதமானது" என்று. மக்கள் ஒரு கட்டத்திலே கேட்காமல் இருந்தாலும்கூட, இன்று ஒன்று சேர்ந்து இன்றைக்கு நாமெல்லாம் இந்த அவைக்கு வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள். இப்போது மக்கள் பேசிக் கொள்கிறார்கள், "கலைஞர் 1989-90-லே ஆட்சி நடத்திவிட்டு 1991-லேயே சொன்னார். உங்களுக்கு உழைக்க எங்களை ஆதரியுங்கள் என்று. நாம் கேட்கவில்லை. அதனுடைய பலனை இப்போது அனுபவித்துவிட்டோம். இப்போதுதான் தெரிகிறது கலைஞர் சொன்னது எவ்வளவு சரியானது" என்று கடந்த ஐந்து ஆண்டு கால ஊழல் ஆட்சியை முழுவதும் பார்த்துதான் மக்கள் இப்போது 'முன்னோர் சொல்லும் முது நெல்லிக்காயும் முன்னே கசக்கும், பின்னே இனிக்கும்' என்பதற்கு உதாரணமாக இருக்கிறது என்று சொல்கிற அளவிற்கு பாராட்டுக்குரிய, மகிழ்ச்சிக்குரிய இந்த நிதிநிலை அறிக்கையை நான் மிகுந்து வாழ்த்தி, பாராட்டி, விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் மீதான மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வேண்டுகோளை ஏற்று 12 சதவீதமாக இருந்த வரியை 11 சதவீதமாகக் குறைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆயத்த ஆடை வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்து, சி.எஸ்.டி.-யையும் தள்ளுபடி

செய்தமைக்காக வியாபாரிகள் சங்கத்தின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் பினாமி விற்பனை முறை–'பில் டிரேடர்ஸ்' என்ற ஒரு முறையை வியாபாரிகள் பயன்படுத்தி, அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரியைக் கிடைக்காமல் செய்து கொண்டு இருக்கிறார்கள். இதன் மூலம் நமது அரசுக்கு பலகோடி ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாகக் கன்னியாகுமரி மாவட்டத்திலே 'ஷா & ஷா' என்ற கம்பெனியின் மூலம் நமக்கு வரவேண்டிய வருவாய் சுமார் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் ஆகும். அது வராமல் இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஒரு கம்பெனி மட்டுமல்ல. இதுபோல் தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 200 கோடிக்கும் மேற்பட்ட ரூபாய்க்கு மேல் இந்த 'பில் டிரேடர்ஸ்' மூலம் வரி வராமல் இருந்துகொண்டிருக்கின்றது. இதை அரசு கவனத்தில் கொண்டு வருவாயைப் பெருக்குவதற்காக 'பில் டிரேடர்ஸ்' முறையைத் தடை செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நாகை–காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைந்துள்ள எம்.ஆர்.எல். எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டுகளில் நமது மாநிலத்திற்குக் கிடைத்த வரி ரூபாய் 32 கோடி ஆகும். இது, இவ்வாண்டு குறைந்து, 24 கோடி ரூபாயாகி உள்ளது. இந்தக் குறைவுக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்தி செய்து, மேலும் வரியை அதிகமாகப் பெற்றிட ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நிறைய உணவுப் பொருள்களுக்கு வரிச் சலுகை அளித்துள்ள இந்த நேரத்தில், ஏழை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் கடலை எண்ணெய்க்கு--மணிலா எண்ணெய் என்று சொல்வார்கள்-- வரிவிலக்கு அளிக்கப்படவில்லை. அதையும் முதல்வர் அவர்கள் கவனத்தில் கொண்டு கடலை எண்ணெய்க்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய வரி விதிப்பு முறைகள் மற்றும் தொழில் வளர்ச்சி ஊக்குவிப்பு என்ற தலைப்பின் கீழ் 8–ஆம் பக்கத்தில் 9–ஆ-வில் மாநிலங்களுக்கான இணக்கமான வரி விதிப்பை உருவாக்குதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 12 சதவீதமாக இருந்த வரியை 11 சதவீதமாகக் குறைத்தும், மாநிலங்களுக்கிடையேயான சுமுகமான வரி விதிப்பு இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நமது அண்டை மாநிலமான கர்நாடகத்தில், அதே வரி 10.6 சதவீதமாக உள்ளது. ஆந்திராவில் 9 சதவீதமாக உள்ளது.

கேரளாவில் 8 சதவீதமாக உள்ளது. பாண்டிச்சேரியில் 5 சதவீதமாக உள்ளது. ஆனால், தமிழ்நாட்டிலோ அது 11 சதவீதமாக உள்ளது. இந்த வித்தியாசத்தைப் போக்கிட ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால், சாதாரணமாக ஒரு டிராக்டருக்கு டயர் மற்றும் டியூப் வாங்குவது என்றால், கர்நாடகத்திலே ரூ.20,936 செலவிட வேண்டியுள்ளது. ஆந்திராவிலே ரூ.20,633ம், கேரளாவிலே ரூ.20,444ம் செலவிட வேண்டியுள்ளது. பாண்டிச்சேரியில் ரூ. 19,876 தான் செலவிட வேண்டியுள்ளது. ஆனால், தமிழகத்திலோ, ரூ. 21,200 செலவிட வேண்டிய நிலை இருப்பதால், இது அதிகமான வித்தியாசமாக இருப்பதால், இதனைக் கவனத்தில் கொண்டு மாநிலங்களுக்கு இடையேயான சுமுகமான வரி வகையை மானியக் கோரிக்கையில் நீங்கள் அளித்துள்ளதுபோல் நடைமுறைப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பெட்டிக்கு வரிவிலக்கு அளித்து ஷெட்யூல் 1-லிருந்து 3க்கு மாற்றி உள்ளீர்கள். அது வரவேற்கத்தக்கது. இந்த ஷெட்யூல் 3க்கு மாற்றப்படுவதன் மூலம் படிவம் 17-ன் மூலம், மூலப்பொருட்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மூலப்பொருட்களுக்கு 8 முதல் 11 சதவீத வரிகளைச் செலுத்த வேண்டிய நிலையிருப்பதால், குடிசைத் தொழிலாகிய தீப்பெட்டித் தொழிற்சாலை உற்பத்தியாளர்கள், படிவம் 17–ஐப் பயன்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேப்பர் போர்டு போன்றவற்றிற்கு புதிய பட்ஜெட்டிலே 8 சதவீதம் வரி விதிக்கப்பட்டு, பிறகு அவற்றில், எழுதும் பேப்பர், பிரின்டிங் செய்யப்படும் பேப்பர், கம்ப்யூட்டர் பேப்பர் முதலியவற்றிற்கு 4 சதவீதமாக வரி குறைக்கப்பட்டது. ஆனால் பேப்பர் போர்டுகள், தயார் செய்யப்படுகின்ற திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்து மடல்கள் போன்றவற்றிற்கு என்ன சதவீதம் என்று வரிவிதிப்பில் தெளிவாகக் குறிப்பிடவில்லை. எனவே, இது 8 சதவீதமா அல்லது 4 சதவீதமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வரிவிதிப்பில், 'சி' பார்ம் கொடுத்து மாநிலங்களிலிருந்து வாங்கும் பொருள்களுக்கு 4 சதவீதம் மத்திய வரி உள்ளது. அதை வாங்கி உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மீது, அங்கும் உள்ளூரில் வரி விதிக்கப்படுகிறது. இது முறையானதுதான். ஆனால், உள்ளூர் வரி விதிக்கப்பட்டு, ஏற்கனவே வாங்கிய அந்தப் பொருட்களுக்கு, மீண்டும் இரண்டாவது முறையாக உள்ளூரிலேயே வரி விதிக்கப்படுகின்றது. இதைக் கவனத்தில் கொண்டு, ஒருமுறையே

வரி விதிக்கும் முறையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரிவிதிப்புக்கு இலக்காகும் தங்கும் விடுதிக் கட்டண வ்ரம்பை ரூபாய் 50 லிருந்து உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு 12 ஆண்டுக்காலம் முடிந்துவிட்ட நிலையில், விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு இந்த தங்கும் விடுதிக் கட்டண வரம்பை உயர்த்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, கேளிக்கை வரி அலுவலகத்தைப் பொறுத்தவரையில் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கான கேளிக்கை வரி அலுவலகம் தனியாக தஞ்சையிலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. இதை உடனடியாக மாற்றி, நாகைக்கு மாற்றித்தர வேண்டுமென்றுக்கு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியாளர்களால் தொழிலாளர் வரி விதிக்கப்பட்டது. இது அனைத்து கடைநிலை தொழிலாளர்களுக்கும் விதிக்கப்பட்டது. ஆனால், அவர்கள் மட்டும் 1,000, 2000 கோடி ரூபாய் என்று கொள்ளை அடித்துக் கொண்டு, வரி செலுத்தாமல் ஏமாற்றிக் கொண்டு இருந்த நிலையில் 1,000, 2,000 ரூபாய் என்று கீழ்நிலையில் சம்பாதித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு ஒரு கடுமையான வரிவிதிப்பை அறிவித்து, அந்த வழக்கும் நீதிமன்றத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. இதை இவ்வரசு கருத்தில் கொண்டு அந்தத் தொழில் வரியை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கை-9 பற்றிய அறிக்கையை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மீதான செலவினம் இருப்பதால் சபையில் வைப்பது வழக்கம் இல்லை என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் செலவுகள் சபையில் வைக்கப்படும்போது அவையும் வைக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதத்திற்கு முன் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த 3 மானியக் கோரிக்கைகளின் மீது கருத்துச் சொல்ல வேண்டிய அவசியமும் தேவையும் அதிகம் இருந்தாலும்கூட காலத்தின் அருமை கருதி

சுருக்கமாக ஒரு சில விஷயங்களைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். முதலில் இன்றைக்குத் தமிழ்நாட்டில் பொதுவாக சமூகம் ஜாதீய ரீதியில் சிறுகச் சிறுக பிளவுபட்டு வருகிற காலமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நிலையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் ஜாதீய மாநாடுகளில் பங்கு பெறுவதைத் தடை செய்வதற்குரிய வழிவகைகளை நாம் கண்டாக வேண்டும். ஏனென்றால் மக்களை ஒன்றுபடுத்த வேண்டியவர்களே மக்களைக் கூறுபோடுவதற்கு வாய்ப்பு அளிக்கின்ற ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிடக்கூடாது என்பதை உணர்ந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் உள்பட யாரும் ஜாதீய அமைப்புக்களில் அங்கம் பெறவோ பங்கு பெறவோ கூடாது என்ற ஒரு தடையாணையைப் போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல மாவட்டங்களானாலும் வேறு எந்த வடிவத்திலும் ஜாதீயப் பெயர்களை பின்னால் இணைப்பதை நிச்சயமாக ஒரு கொள்கை நிலையிலிருந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு நிர்வாகத்தில் இருக்கக்கூடிய ஒரு மிக முக்கியமான பிரச்சினையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒரு முறை குறிப்பிட்டார்கள். தேர்தலுக்குப் பின்னர் மிகுந்த நம்பிக்கையோடு பல்லாயிரக்கணக்கான மனுக்கள் தலைமைச் செயலகத்திற்கு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மூலம் என்று அவை வந்துகொண்டே இருக்கின்றன. குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதில் ஆக்கபூர்வமான முன்முயற்சியை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் வருகிற மனுக்கள் மீது முடிவு காண வேண்டும் என்கிற நல்லநோக்கம் கொண்ட இந்த அரசின் நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான கருவிகளாக இன்றைய அதிகாரிகள் இருப்பார்களா என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இந்த அரசின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான கருவிகள் அமையவில்லை என்றால் நிச்சயமாக நோக்கம் பாழ்பட்டுப் போய்விடும் என்பதால் இவற்றில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் உண்மையில்

ஒரு விஷயத்தை வெளிப்படுத்தியவுடன் அதை மிக எளிதில் கிரகித்துக்கொண்டு மிக விரைவில் தீர்வு அளிப்பதைத் தன்னுடைய இயல்பாகக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் இந்த கவர்ன்மென்ட் மெஷினரியைத் தன்னுடைய நோக்கத்திற்குத் தக்கபடி எப்படி இயக்குவது என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பல இடங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே அதிகமாக இருக்கின்ற மக்கள் நிறைந்த இந்த நாட்டில். கி.பி. 2030-லும் கல்வி அறிவு அற்றவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு நாடாக இந்தியா இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற நிலையில்-மனுக்களை முறைப்படி எழுதத் தெரிந்தவர்களாக இல்லாத பொதுமக்கள், மனுக்களைக்கூட முறைப்படி தன்னுடைய தேவைகளை வெளிப்படுத்துகின்ற அளவில் எழுதும் வல்லமையற்ற பொதுமக்கள் நிறைந்த மாநிலமாக இன்றைக்கும் நம்முடைய மாநிலம் இருந்துகொண்டிருப்பதால் அதிகாரிகளுக்கு சமூகப் பொறுப்புணர்ச்சியை உருவாக்க வேண்டியதும் அவசியம் ஆகிறது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிந்த மொழி அறிவில் எழுதிக் கொடுப்பார்கள். அவற்றை அதிகாரிகள் எப்படி உரியபடி ஒழுங்கமைப்பது என்பது குறித்துக்கூட நாம் பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, மனுக்கள், அவை அமைச்சரிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற மனுக்களானாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கீழிருந்து வருகின்ற மனுக்களானாலும். மனுக்களைப் பெறுகிறவர்கள் ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய மார்க்கம் உண்டா, இல்லையா என்பது குறித்து அறிவிக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, நேரம் இல்லை என்பதால் நான் உடனடியாக விஷயத்திற்குள்ளே வர விரும்புகிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்ல வருகிறேன். திருப்பூர் நகரத்தில் பனியன் இல்லை என்றால் திருப்பூர் நகரம் இல்லை. திருப்பூர் நகரினுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பனியன் மிக முக்கியமானது.

பிற்பகல் *12–35*

நான் இன்னும் விரிவாகச் சொல்ல விரும்புவது, நான் அறிந்ததைக் காட்டிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதன் மீது மிகுந்த பரிவோடு அறிந்து இருக்கிறார்கள் என்பதை நான்

அந்தரங்க சுத்தியோடு உணருகிறேன். எனவே, இதிலே ஒரு தீர்வு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அதிகாரிகளைக் குறை சொல்லவேண்டும் என்று விரும்பவில்லை. ஏனென்றால் கடந்த காலங்களிலே ராஜீய விவகாரங்களில் அமைச்சர்களை அதிகாரிகள் வழி நடத்துவது என்பது தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. இதற்கு இந்த மாநிலத்திலே பல முன் உதாரணங்கள் உண்டு. இந்திய ஆட்சி இயலிலும் பல முன் உதாரணங்கள் உண்டு. ஆனால் தனிப்பட்ட முறையில் எனக்கு மிகத் தெளிவாகத் தெரியும், அதிகாரிகள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வழி நடத்தி விட முடியாது என்பதை நான் உள்ளூர உணர்ந்தவன். எனவே, அவர்கள் வழி நடத்த முற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் நான் எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த நல்ல நம்பிக்கையோடு, நான் இந்த விண்ணப்பத்தினுடைய முழு விவரங்களை எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. அவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தந்துவிட விரும்புகிறேன். பாறைகளில் எப்படிப் பாசி படிந்து அவர்கள் நடக்க முயல்கிறபோது கால் வழுக்கி விழுந்து விடுவார்களோ, அதேபோல், அதிகாரிகள் எல்லோரும் அப்படி அல்ல. மக்களின் தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கிற மந்திரிகளை பாறையில் படர்ந்துள்ள பாசமாய், பாசியாய் இருந்து வழுக்கி விழ வைக்கிற முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்கிறார்கள் என்பதைக் குறிப்பாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அத்தகைய அதிகாரிகள் பல துறைகளிலும் இருக்கிறார்கள். நான் குறிப்பாக எந்த அதிகாரி என்று சொல்ல விரும்பவில்லை. அத்தகைய அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் யாரும் இரையாகி விடக்கூடாது என்பதோடு அதேநேரத்திலே அதிகாரிகள் சொல்லுவதை முழுக்க நிராகரிக்கவும் வேண்டும் என்றும் நான் சொல்லவில்லை. மக்களின் மன உணர்வு நிலைகளிலிருந்து, சமூக வளர்ச்சிக்கு உரிய தேவைகளை எப்படி நிறைவேற்றுவது என்கிற நிலையிலிருந்து சிந்தித்து அவற்றிற்குத் தீர்வு அளிக்கவேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த பனியனைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு விஷயம். கல்கத்தாதான் பிரதான போட்டியாளர். இந்தியாவிலேயே திருப்பூருக்கு கல்கத்தா பிரதான போட்டியாளர். கல்கத்தாவில் அதிகமான பனியன் உற்பத்தியாகிறது. அங்கே மூலப் பொருளான நூலுக்கும் வரி இல்லை, பனியனுக்கும் வரி இல்லை என்கிறபோது

இங்கே நம்முடைய தமிழ்நாட்டில் பனியனுக்கும் 4 சதவீதம் வரி; நூலுக்கும் 4 சதவீதம் வரி; மொத்தம் 8 சதவீதம் வரி ஏற்படுகிறது. 100 ரூபாய் கொண்ட பனியனைத் தயாரிக்க 8 ரூபாய் அதிகமாகச் செலவழித்துத்தான் விற்க வேண்டியிருக்கிறது, தமிழ்நாட்டில். ஆனால் கல்கத்தா போட்டியாளர்கள் 100 ரூபாய்க்கு இந்திய மார்க்கெட்டில் விற்பார்கள். தமிழ்நாட்டில் 108 ரூபாய்க்குத்தான் விற்க முடியும். எப்படிப் போட்டியில் வெற்றி பெற முடியும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உண்மையிலேயே தாழ்ந்து விழுந்து கிடக்கிற தமிழ்நாட்டைத் தொழில் துறையில் முன்னேற வைக்கவேண்டும் என்பதற்காக பல்வேறு அரிய பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சியில் தமிழகத்தில் தயாரிக்கும் பொருட்களின் விலை குறைந்து, பிற மாநிலத் தயாரிப்பாளர்களுடன் விற்பனையில் போட்டியிட முடியாமல் இருந்த நிலை அகன்று தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும் என்று மிகத் தெளிவாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பொருத்தமாக கல்கத்தா போட்டியாளர்களை திருப்பூர் நகரம் சந்திப்பதற்கு வாய்ப்பு அளிக்கின்ற முறையில் அவற்றின் மீதான வரியை இந்த ஆண்டு முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய இருதயம் அகலமானது, ஆழமானது, அதனால் அவர் திருப்பூரை தன் இதயத்தில் கொஞ்சம் கட்டாயம் வைத்துக்கொள்ளவேண்டும். வைத்துக் கொண்டால்தான் அடுத்த நிதிநிலை அறிக்கையிலாவது ஒரு தீர்வு வரும். அவற்றில் இப்போது நடைமுறையில் இருக்கிற சிக்கல் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் திரும்பவும் சொல்கிறேன். குற்றம் சாட்ட விரும்பவில்லை. அதிகாரிகள் வரியை எடுக்கக்கூடாது என்று சொல்வதற்கு அடிப்படைக் காரணமே, தங்களுடைய வசூல் வேட்டைக்கு இது வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்ற நிலையில் இருந்துதான் இந்த ஆலோசனைகளை அரசுக்குத் தருகிறார்கள். நான் திருப்பூரில் பல உதாரணங்களை, பல்வேறு ஆதாரங்களோடு குறிப்பிட முடியும். தொழிலதிபர்களை மிரட்டி பணம் பண்ணுவதற்குரிய கருவி வரி விதிப்பு என்ற நிலையில் அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றைத் தவிர்ப்பதற்காகவாவது, ஊழல் அற்ற ஒரு முறை நிர்வாகத்தில் நிலவுவதற்காகவாவது அந்த வரியை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்சைன்மென்ட் சேல், டிப்போ சேல் என்பது பனியன் தொழில் தோன்றிய காலத்திலிருந்து இருந்து வருகிறது. அதன் மீதும் பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துகிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தங்கள் மூலமாக, கன்சைன்மென்ட் சேல், அதேமாதிரி டிப்போ சேல் செய்வது என்பதில் இந்தியா ஒரே நாடு, ஒரு மாநிலத்திலிருந்து பிறிதொரு மாநிலத்திற்கு விற்பனை செய்வதை வரி விதிப்புக்கு உள்ளாக்குவது சட்டப்படி சரியல்ல என்பதை மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு மன்மோகன்சிங் நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார்கள். அந்தக் கொள்கை நெறிக்கு எதிரான ஒன்றைத் தமிழ்நாட்டில் நிகழ்த்தி விடக்கூடாது. ஆகவே, கன்சைன்மென்ட் சேலுக்கு வரி நிர்ப்பந்திக்கக் கூடாது என்று சொன்னால் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு, அலுவலர்களுக்கு கன்சைன்மென்ட் சேல் அல்லது டிப்போ சேல் வரி விலக்குக்கு உரிய ஒன்று என்று சொல்ல வேண்டும். வரி விலக்குக்கு உரிய ஒன்றே, மத்திய நிதியமைச்சராக இருந்த மன்மோகன்சிங்கே நாடாளுமன்றத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றை, மீண்டும் வரிக்கு உள்ளானது என்று நிர்ப்பந்தித்து விடக்கூடாது என்பது குறித்துச் சம்பந்தப்பட்ட துறைக்கு ஆணையிட தாங்கள் முயற்சியெடுக்க வேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அடுத்து, எங்களுடைய மாவட்டத்திற்கு அருகிலே இருக்கக் கூடியது காங்கேயம். தமிழ்நாட்டிலேயே எவ்வளவு மோசமான நிலையிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். காங்கேயத்திலிருந்துதான் கொப்பரைகள் ஏற்றுமதியாகின்றன; பிற மாநிலங்களுக்குப் போகின்றன. அந்தக் கொப்பரைக்கு தமிழ்நாட்டில் வரி. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர்.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும்போது கன்சைன்மென்ட் சேல்ஸ் வரிவிதிப்புக்கு உள்ளாகி விடக்கூடாது என்று சொன்னார்கள். கன்சைன்மென்ட் சேல்ஸை எப்படி வரி

விதிப்புக்கு அதிகாரிகள் உள்ளாக்குகின்றார்கள் என்றால், கன்சைன்மென்ட் சேல்ஸ் முடிந்த பிறகு கணக்குக் காட்ட வரும்பொழுது, தேவையற்ற 23 கேள்விகளைக் கேட்டு, ஆகவே இந்த கன்சைன்மென்ட் சேல்ஸை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம், ஆகவே 10 பர்செண்ட் வரி நீங்கள் கட்ட வேண்டும்; அதற்கு பெனால்ட்டியாக 150 சதவீதம் வரியைக் கட்ட வேண்டுமென்று கணக்கு முடிக்கக்கூடிய இடத்திலே அவர்கள் சொல்கின்றார்கள். கன்சைன்மென்டில் அனுப்பும்பொழுது பார்ம்-எஃப் இருந்தால் போதும்; விற்று முதல் பட்டியல் இருந்தால் போதும். இதுதான் சட்டம், அடிப்படைச் சட்டம் சொல்கின்றது. ஆனால், எப்படியாவது வரியை வாங்க வேண்டும் என்று சொல்லி, சட்டத்தின் மூலமாக அனுமதிக்கப்பட்ட அந்த கன்சைன்மென்ட் சேல்ஸை கணக்கு முடிக்கும்போது அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்து அவர்கள் தவறு செய்கின்றார்கள்; வரிவிதிப்புக்கு உள்ளாக்குகின்றார்கள். அந்த முறை அதிகாரிகள் மட்டத்தில் களையப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் அவர் தெளிவாகச் சொன்னார் என்று நினைக்கிறேன்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். நான் இதில் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய முதலமைச்சரவர்களை ஏறத்தாழ ஒரு மணி நேரம், நான் நேரில் சந்தித்து, பல்வேறு விஷயங்களை வெகு விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது. ஆகவே, அதையே திரும்ப நான் இங்கே எடுத்து வைக்க விரும்பவில்லை.

இறுதியாக, நிறைவாகச் சொல்ல விரும்புவது, அடிக்கடி இந்த பனியன் தொழில் அதிகாரிகளால் ஏராளமான இடையூறுக்கு ஆளாகிறது. நான் அவ்வப்பொழுது உங்களுக்கும் அந்த விஷயத்தில்தான் முறையிட்டு இடையூறு செய்யக் கூடும். ஆகவே, நீங்கள் பொறுத்து அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்பதை மட்டும் கேட்டு, என்னுடைய முழுமையான விவரங்கள் மனுக்களாகக் கொடுக்கப்பட இருக்கின்ற காரணத்தால் அவற்றையே திரும்ப எடுத்துச் சொல்லி நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பாமல் அவற்றை முழுவதும் உங்களுக்கு நான் பின்னர் கொடுத்து விடுகிறேன் என்பதைச் சொல்லி நன்றி கூறி முடித்து விடுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1995–96ஆம் ஆண்டு மொத்தமாக வசூல் ஆகிய தொகை 5023 கோடி என்றும், இது மொத்த மாநில மக்களிடமிருந்து-மாநில அரசு பெறுகின்ற மொத்த வரியில் ஏறக்குறைய 70 சதவீதம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல, இது மிக முக்கியமான துறையாகும். மொத்த மாநில அரசுக்கு வரக்கூடிய வருமானத்திலே ஏறக்குறைய 70 சதவீதம் அளவிற்கு வரக்கூடிய இந்தத் துறையிலே பணியாற்றுகிற அதிகாரிகள், வசூலிலே ஈடுபடுபவர்கள் மிகவும் பாராட்டுக்கு உரியவர்கள். அதிலே இன்னமும் இந்த வரி ஏய்க்கப்படுவதைத் தடுப்பது, முறைகேடுகளைத் தடுப்பது, இவற்றிலெல்லாம் முழுமையான கவனத்தை அரசு அதிகாரிகள் செலுத்துவார்களேயானால் இன்னமும்கூட ஏறக்குறைய ஒரு ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்காவது முறையாக அரசுக்கு வந்து சேர வேண்டிய வருமானம் இந்தத் துறையிலே கிடைப்பதற்கு நிச்சயமாக வாய்ப்பு இருக்கிறது.

இதிலே மண்டலவாரியாக அல்லது மாவட்ட வாரியாக நீங்கள் டார்ஜெட்டை ஃபிக்ஸ் பண்ணுகிறபொழுது அவர்களுக்கு ஏதாவது ஊக்குவிப்பாக, யார் அந்த டார்ஜெட்டை நிறைவேற்றுகிறார்களோ, கூடுதலாகச் செய்தார்களோ அந்தத் துறையில் இருக்கிற சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை ஊக்குவிக்கின்ற விதத்திலே அரசாங்கம் அதற்கு ஏதாவது தனியான திட்டம் அறிவித்தால் இன்னமும் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கிற அரசு அலுவலர்கள்-வணிக வரித் துறையிலே ஈடுபட்டிருக்கிற அரசு அலுவலர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்துவார்கள் என்பது என்னுடைய எண்ணமாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தத் துறையைப் பொறுத்தவரை இதிலே ஏறக்குறைய 70 மிக முக்கியமான பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதாகவும், அதுபோல துணை ஆணையர், உதவி ஆணையர் பதவிகள் போல் வணிக வரி அலுவலர் பதவிகளுக்கும் அரசு மட்டத்திலே நியமனம் செய்கிற அதாவது டிரான்ஸ்பர்ஸ் செய்கிற அந்த அதிகாரம் அரசாங்கத்திற்கு இருந்தால் நல்லது என்று இந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகள் கருதுகிறார்கள். அதுகுறித்தும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரிசீலிக்கலாம்; பரிசீலிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

பொதுவாக வரி விதிப்பு என்று வருகிறபோது, எனக்கு முன்னாலே பேசிய சொக்கர் அவர்கள் வியாபார நகரமான அந்தப் பகுதியிலிருந்து வருபவர், மிக விவரமாக, பல புள்ளிவிவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும், சுப்பராயன் போன்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். சுருக்கமாக நான் சொல்ல விரும்புவது, கொள்கை அளவிலே வரி போடுகிறபோது அதிகமாக ஏழை எளிய மக்கள் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய பொருள்களுக்கு அதிகமான வரி விதிக்கப்பட்டிருக்கக் கூடாது. இது ஒன்று. அந்த வரி விதிப்பில் சிறிய தொழில்கள் பாதிக்கப்படக் கூடாது என்பது இரண்டு. மூன்றாவதாக, வரி விதிக்கிறபோது, இத்தனை சதவீதம் ஒரு முனை வரியாக ஆக்கியிருக்கிறீர்கள் என்று, 2, 4 ஆக ஆகிறது, 4, 8 ஆக ஆகிறது, 8, 12 ஆக ஆகிறது என்றெல்லாம் போகிறபோது, மற்ற மாநிலங்கள், பாண்டிச்சேரி, கர்நாடகம்-இந்த மாநிலங்களோடு ஒப்பிட்டு, அதே பொருளை இங்கே வாங்கினால் என்ன விலையாகிறது, பாண்டிச்சேரியிலே வாங்கினால் என்ன விலையாகிறது என்பதைக் கணக்கிலே கொண்டு, இந்த வரி விதிப்பிலே, சதவீதத்திலே மாறுதல் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம், ஒரு பொருளை இங்கே வாங்குவதற்குப் பதிலாக பாண்டிச்சேரியிலே வாங்கினால் விலை குறைவு என்று எடுத்துக்கொண்டால், போக்குவரத்துச் செலவைக் கூட்டி, நீங்கள் பார்த்து அந்தச் சதவீதத்தோடு போட வேண்டும். இங்கே வாங்கினாலும் 500 ரூபாய், பாண்டிச்சேரியிலே வாங்கினாலும் 500 ரூபாய் என்று சொன்னால், 500-க்கு 550 என்றால்கூட இங்கே வாங்குவார்கள். அதற்குப் பதிலாக, 500, 800 ஆனால் பாண்டிச்சேரியிலே போய் வாங்கிக் கொண்டு வந்தால், போக்குவரத்துச் செலவுக்கு 50 ரூபாய் ஆனாலும்கூட 550 ரூபாயோடு முடிந்து போகும். எனவே, எந்த வரியாக இருந்தாலும், எந்தப் பொருளின் மீதும் நிர்ணயிக்கின்றபோது, பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரி, கர்நாடகம், இப்படியிருக்கின்ற மாநிலங்களை ஒப்பிட்டு, அதிலே அவற்றுக்கு எவ்வளவு சதவீதம் வரி விதித்திருக்கிறார்கள் என்று பார்த்து வரி விதித்தால், அந்த வருமானம் இங்கே வரும். இல்லையென்றால் அங்கே போய், மற்ற மாநிலங்களிலே வாங்குகின்ற காரணத்தினால் ஏற்கெனவே வந்து கொண்டிருந்த வருமானமும் தடைப்பட்டுப் போகும், வராமல் போகும் என்பதை மனதிலே

கொண்டு வரி விதித்திருக்க வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தை இந்த அரசுக்கு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றபடி, ஒன்றிரண்டு அல்ல, நிறைய விஷயங்களை இங்கே சொன்னார்கள். நான்கூட போன பட்ஜெட்டில் பேசுகிறபோது, அடுத்த பட்ஜெட்டுக்கு ஏதாவது வேண்டுமென்ற முடிவுரையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில விளக்கங்களை அளிக்கிறபோது, கடைசியாக நான் கேட்ட காரணத்தினால் பதில் சொல்லவிலலை. அதிலே, பேபி மில்க்ஃபுட், குழந்தைகள் சாப்பிடக்கூடிய சில உணவு, சைக்கிள், இன்னும் சில பொருள்கள் பற்றிச் சில சங்கங்களின் சார்பிலேகூட முதல்வர் அவர்களிடத்திலேயும் கொடுக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் என்ற முறையில் எங்களிடத்திலேயும் தருகிறார்கள்.

கோதுமைப் பொருட்கள் என்று எடுத்துக்கொண்டால், பக்கத்து மாநிலமான கர்நாடகத்திலே வரி விதிக்கப்படவில்லை. இங்கே 4 சதவீதம் கோதுமைத் தவிட்டிற்கு மற்ற எந்தத் தவிட்டிற்குமே வரி கிடையாது. இங்கு கோதுமை தவிட்டிற்கு 4 சதவீதம். இதெல்லாம் எங்களைப் பாதிக்கும் என்று பல்வேறு கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அவற்றையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவற்றையெல்லாம் நீங்கள் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, கரும்புக்கு வரி ஏறக்குறைய 14% இருந்தது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதன் மூலம் அது சர்க்கரை ஆலைக்கு நன்மை செய்வதற்காக, ஏறக்குறைய ரூ.50,55 கோடி அதிலே இழப்பு ஏற்பட்டாலும் வரி சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டது. எனக்குத் தெரிந்தவரை அநேகமாக எல்லா சர்க்கரை ஆலைகளும் லாபத்தில்தான் இயங்குகின்றன. எனவே, அதிலே 55 கோடி அளவிற்குச் சர்க்கரை ஆலைகளுக்கு லாபம் கிடைக்கிற விதத்திலே, நன்மை கிடைக்கிற விதத்திலே கரும்புக்கான வரியைக் குறைக்க வேண்டியது அவசியம்தானா? அரசு ஆலைகள் நஷ்டத்திலே போகின்றன, அதைக் காக்க வேண்டுமென்பதற்காக இந்த முடிவா? ஏனென்றால் தனியார் ஆலைகளைப் பொறுத்தவரையில் லாபத்தில்தான் போகின்றன. அதற்கான காரணத்தையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல மாவட்டங்கள் என்று வருகிறபோது எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல, மாவட்டங்கள் மிகச் சிறியதாக இருப்பது நல்லது. பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே போய்ப் பார்த்தால், 3 தாலுக்கா, 4 தாலுக்கா எல்லாம் சேர்ந்து ஒரு மாவட்டமாக இருக்கிறது. உ.பி.யிலேகூட அப்படியிருக்கிறது. இந்தமாதிரி பல்வேறு வட மாநிலங்களிலே பார்த்தால் அப்படியிருக்கிறது. அதிலே பல நன்மைகள் உண்டு. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய முழுமையான கவனமும், மக்கள் மீது வரும். மாவட்ட அளவு குறைந்து, மக்கள் தொகை குறைந்து, தாலுக்கா குறைகிறபோது முழுமையான கவனமும் மக்கள் மீது வரும். மாவட்ட வாரியாக மாநில அரசு நிதிகள் ஒதுக்குகிறபோது, உலக வங்கி மற்ற அமைப்புகள் நிதி ஒதுக்கம் செய்கிறபோது, இந்த மாவட்டங்கள் அதிகமான நிதிகள் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்களும் வரும். நம்முடைய மாநிலத்திலேகூட, 5 தொகுதிகள் கொண்ட மாவட்டமும் உண்டு. முன்னாலே எல்லாம் 22, 21 தொகுதிகள் கொண்ட மாவட்டங்கள் இருந்தன. இப்போதும்கூட, 10, 11 எல்லாம் இருக்கிறது. பெரியார் மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால் 11 தொகுதிகள் இருக்கின்றன. கோவையில் 14.

பிற்பகல் 12–50

அதேபோல் சென்னை மாவட்டம். சென்னைகூட ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அதையும்கூட மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கலாம். ஒரே மாவட்டமாக இல்லாமல் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திலே வரலாம். அதாவது, சென்னை கேபிடல் என்கிற காரணத்தாலே, தலைநகரம் என்கிற காரணத்தாலே ஒரே மாவட்ட ஆட்சித் தலைவர்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஏனென்றால், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறோம். சட்டசபையும் இங்கேதான் இருக்கிறது. நிர்வாக வசதிக்காக இப்படி ஐந்து தொகுதிகள், அதிக பட்சம் போனால் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் கொண்ட ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்கிற விதத்திலேயும்கூட ஏறக்குறைய 39 மாவட்டங்களாகப் பிரிப்பது நல்லது. அப்படிப் பிரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கொள்கையாக, ஆண்டுக்கு ஆண்டாக ஒவ்வொரு மாவட்டமாகப் பிரித்துப் பிரித்துச் செய்யலாம்

என்பது என்னுடைய அபிப்பிராயம். அதேபோல் வட்டங்கள் என்கிறபோதுகூட *234* தொகுதிகள் இருக்கின்றன, வட்டங்களைப் பார்த்தால் *195*-தான் இருக்கின்றன. தொகுதியே *234*, தாலுக்காவோ *195*. எனவே, அவற்றிலேயும் எப்படியெல்லாம் மாறுதல் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்து குறைந்தபட்சம் *234* தாலுக்காக்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு தாலுக்காவினுடைய அளவு அமையவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மணல்மேல்குடியை தனித் தாலுக்காவாக மாற்றித் தரவேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முதலிலே அறந்தாங்கித் தாலுக்கா ஒரே தாலுக்காவாக இருந்தது. ஆவுடையார் கோவில் தாலுக்கா என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கிறபோது அவர்களிடத்தில் சொல்லிப் பிரித்தோம். கடலோரப் பகுதிகள் ஒரு நீண்ட பகுதி. *60, 70* கிலோ மீட்டர் தஞ்சாவூரிலிருந்து தொடங்கி, இராமநாதபுரத்திலே முடிகிறது. அந்தப் பகுதியிலே புதுக்கோட்டை மாவட்டமும் வருகிறது, அந்தப் பகுதியிலே ஒரு ஒன்றியம் இருக்கிறது. ஒன்றியத்தைத் தலைநகராக ஆக்கிக்கொண்டு மணல்மேல்குடியை தனித் தாலுக்காவாக மாற்றித் தரவேண்டும் என்கிற வேண்டுகோளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பிறகு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மிகமிக முக்கியமானவை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்கிறார்கள், அது பவர்லெஸ் என்று. பவர்லெஸ் என்று சொன்னாலும்கூட அங்கே எல்லா அதிகாரிகளும் வருகிற காரணத்தாலே, மாவட்ட ஆட்சித் தலைவரும் இருக்கிறார், சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளும் வருகிறார்கள். குறைந்தபட்சம் எம்.எல்.ஏ., வந்தால் சப்தம் போடுவார்கள் என்று பயந்தாவது ஒன்றிரண்டு காரியங்களை அங்கு இருக்கிற அதிகாரிகள் செய்வார்கள். பதில் சொல்லவேண்டும் என்பதற்காகவாவது தயாராக வருவார்கள். எனவே, மாவட்டந்தோறும் இருக்கிற மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை மாதம் ஒருமுறை--இது ஒன்றும் பெரிய கஷ்டமான காரியம் அல்ல, கண்டிப்பாக மாதம் ஒருமுறை--மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடத்தவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மக்கள் பிரச்சினைகளைச் சட்டமன்றம் கூடுகிறபோது

சட்டமன்றத்திலே சொல்லலாம், பிறகு தனியாகவும் ஆர்.டி.ஓ.விடத்திலே, கலெக்டரிடத்திலே அல்லது தாசில்தாரிடத்திலே சொல்லமுடியுமே தவிர, பொதுவாக எல்லா அதிகாரிகளும் இருக்கிற இடத்திலே-வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே- இந்த சட்டமன்றத்திலே பேசுகிறமாதிரி-சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கருத்துக்களைச் சொல்லமுடியும். மக்கள் பிரச்சினைகளை எடுத்துப் பேச முடியும். எனவே மாதம் ஒரு முறை வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடக்கிற விதத்திலே அரசு அதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது) புதிய மாவட்டங்களை, பல மாவட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள். புதிய மாவட்டங்கள் உருவாவது வரவேற்கத்தக்கது. நானே சொன்னேன், இன்னும் நிறைய சிறிய மாவட்டங்களாகப் பிரித்து உருவாக்குங்கள் என்று. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே திண்டுக்கல்லுக்கு அண்ணா மாவட்டம் என்று வைத்தார்கள். 1989–லே தி.மு.க. ஆட்சி வந்து அண்ணா மாவட்டத்தை எடுத்தீர்கள். வேறு பெயர் திண்டுக்கல்லுக்கு வைக்கப்பட்டது. பிறகு 1991–லே அ.இ.அண்ணா தி.மு.க. ஆட்சி வந்து திண்டுக்கல், அண்ணா மாவட்டமானது. பிறகு 1996–ல் தி.மு.க. ஆட்சி வந்து அண்ணா மாவட்டம் போனது. இப்போது நீங்களே கூட்டத்திலே பேசியிருக்கிறீர்கள், எந்தப் பதவியும் நிரந்தரம் இல்லையென்று. பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்து அ.இ. அண்ணா தி.மு.க. திருப்பி வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்போது மீண்டும் திண்டுக்கல், அண்ணா மாவட்டம் என்று வரும். அப்புறம் ஐந்து ஆண்டுகள் கழித்து தி.மு.க. திருப்பி வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். திருப்பி திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் என்பது போகும். இப்படியே போய்க்கொண்டிருந்தால் எங்கே அண்ணா மாவட்டம் இருக்கிறது என்று மக்களுக்கும் தெரியாமல் போகும். அண்ணாவின் பெயரும் அநாவசியமாக அடிபடுகிறது. என்னுடைய யோசனைகூட என்னவென்றால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க, திண்டுக்கல் அண்ணா மாவட்டம், காஞ்சிபுரம் அண்ணா மாவட்டம் என்று இரண்டு மாவட்டங்கள்கூட இருக்கலாம், அதிலே ஒன்றும் தவறு கிடையாது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு காஞ்சி அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு திண்டுக்கல் அண்ணா மாவட்டம் என்று பெயர் வைக்கலாம்.

ஏனென்றால் இதில் கட்சிப் பிரச்சினை வருகின்றது. (மணியடிக்கப்பெற்றது) எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் வைத்த பெயரை மாற்றுகிறார்கள். பின்னர் மீண்டும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தி.மு.க. ஆட்சியில் வைத்த பெயரை மாற்றுகிறார்கள் என்று போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்ற காரணத்தால், அதைப் பெருந்தன்மையோடு அப்படியே அண்ணா மாவட்டம் என்றே இருந்துவிட்டுப் போகிறது என்று விட்டுவிடலாம். இன்னும் சொல்லப் போனால் அண்ணாவின் பெயரில் இரண்டு மாவட்டங்கள் இருக்கட்டும் என்றுகூட விட்டுவிடலாம். ஏனென்றால், எல்லோருமே அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, இதில் பிரச்சினை வளராமல் இருப்பதற்கு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற என்னுடைய அபிப்பிராயத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மாவட்டங்களுக்கு ஜாதிப் பெயரை அவர் வைக்கவில்லை. அதற்கு தி.மு.க. ஆட்சியில்தான் பிள்ளையார் சுழி போடப்பட்டது. முதன்முதலில் ஜாதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ஒரு மாவட்டத்திற்கு வைத்திருக்கிறீர்கள். அதன் பிறகு ஐந்து வருடத்தில் நிறைய மாவட்டங்களுக்கு ஜாதிப் பெயர் வைக்கச் சொல்லி கேட்கும் நிலைமை வந்தது. எனக்கு ஜாதியில் நம்பிக்கை இல்லை, நான் அதைப் பற்றிப் பேசமாட்டேன். நீங்கள் தேவர் பெயர் வைத்தாலும் சரி, நாடார் பெயர் வைத்தாலும் சரி, ஆதிதிராவிடர் பெயர் வைத்தாலும் சரி, நான் சொல்ல வந்தது என்னவென்றால், அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நீங்கள் ஒப்புக்கொண்டீர்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு ஜாதியிலும் பெயர் வைக்கச் சொல்லி கோரிக்கைகள் கூடிக்கொண்டேயிருந்தன. (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். கடந்த ஆட்சியில் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம் என்று பெயர் வைத்தார்கள். அதை நீங்கள் தீரன் சின்னமலை கரூர் மாவட்டம் என்று மாற்றியிருக்கிறார்கள். இதில் கவுண்டர் மட்டும் என்ன பாவம் செய்தார்? அந்தப் பெயரை எடுத்துவிட்டீர்கள். எனவே, இப்படி மாவட்டத்தில் ஜாதிப் பெயர் ஆரம்பித்து அது

டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், தாலுக்கா என்ற அளவுக்குப் போய்விடுகிறது. எங்கள் ஜாதிப் பெயரிலும் வையுங்கள் என்று மற்றவர்கள் கேட்கிறார்கள். இதில் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், ஜாதிப் பெயர் வைப்பதைவிட, தலைவர்களுடைய பெயரை மட்டும் வைத்தால் போதும், ஜாதிப் பெயர் சேர்த்து வைத்தால்தான் அந்தத் தலைவர் பற்றி மக்களுக்குத் தெரியும் என்று அர்த்தம் இல்லை. ஒரு ஜாதியின் பெயரை சேர்த்துச் சொன்னால்தான் தெரிந்துகொள்வார்கள், மக்கள் அவரை உணர்ந்து கொள்வார்கள் என்றால் அப்படிப்பட்ட தலைவர் பெயரே வேண்டியதில்லை. இன்னும் சொல்லப்போனால், ஊரோடு சேர்த்து வைக்கலாம். மொழிக்காக, நாட்டுக்காகத் தியாகம் செய்த தலைவர்களின் பெயரால் அவர்களை நினைவுகூரும் வகையில் அந்தப் பெயர்கள் இருக்கவேண்டும். குறிப்பிட்ட பெயருக்காகத்தான் பெயரே தவிர, ஜாதிக்காகப் பெயர் அல்ல. இப்பொழுது எப்படி இருக்கிறது என்று சொன்னால், தலைவருக்காக, பெயருக்காக என்றெல்லாம் இல்லாமல், ஜாதிக்காகப் பெயர் என்று ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே, நீங்கள் இதில் துணிச்சலோடு முடிவு எடுக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனாக இருந்தாலும் சரி, மாவட்டங்களாக இருந்தாலும் சரி, தலைவர்களுடைய பெயர் அவர்களை மதிப்பதாக இருக்கவேண்டும், கௌரவிப்பதாக இருக்கவேண்டும். எனவே, நீங்கள் ஜாதிப் பெயர்களை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடிக்கிறேன் என்று சொல்லிவிட்டுப் பேசிக்கொண்டே இருக்கிறீர்களே, 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே மொத்தமாக, தலைவர்கள் பெயரையே அந்தந்த மாவட்டத்திற்கு வைக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதை என்னுடைய வேண்டுகோளாகவும், ஆலோசனையாகவும் சொல்லி, இதை நீங்கள் யோசிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. மோகன் கந்தசாமி.

திரு. ப. மோகன் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நான் இந்தப் பேரவைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளல் பெருமானைப் போல' வாடிய பெருமக்களுடைய வாட்டத்தினை அறிந்து சிறப்பானதொரு வரி விலக்கை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணிகர்கள் சார்பிலேயும் என் சார்பிலேயும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நாட்களாக போராட்டங்களை நடத்தியும், கடை அடைப்புகள் செய்தும்கூட கிடைக்காத இந்தச் சலுகை இன்றைக்கு இந்த ஒரு முனை விற்பனை வரி என்ற சலுகை மூலம் கிடைத்ததால் இந்த அரசை வணிகர்கள் எல்லாம் பெருமளவில் வரவேற்றுப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–00

ஒரு சில குறைகளை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரைத்த மாவையே அரைத்து, சுட்ட தோசையையே சுட வேண்டிய சூழ்நிலை எனக்கு வந்திருக்கிறது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு மேலாக பனியன் தொழிலினுடைய தொழிற் சங்கத் தலைவனாக நான் இருந்து கொண்டிருக்கிறேன். 30 ஆண்டுகளாக நாங்கள் போராடிப் போராடி இந்தப் பனியன் தொழிலுக்கு விற்பனை வரியை எடுக்க வேண்டும் என்று சொல்லி வருவதற்குக் காரணம் மற்ற மாநிலங்களிலே பனியனுக்கு வரி கிடையாது.

பருத்தியினாலான பின்னலாடை தயாரிக்கக்கூடிய குறிப்பான இரண்டு கேந்திரங்களில் ஒன்று மேற்கு வங்காளத்திலே கல்கத்தா, அடுத்தது நம்முடைய தமிழகத்திலே திருப்பூர். வரி கொடுப்பது எங்களுக்கு உகந்தது என்றாலும்கூட ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுக்கு ஹோல்சேல் மார்கெட் டெல்லியும், பம்பாயும்தான். அங்கிருக்கின்ற வர்த்தகர்கள் திருப்பூர் பனியன்களை வாங்கி வைக்கும்போது கணக்கு வைக்க வேண்டியிருக்கிறது. மற்ற பனியன்களை வாங்கி வைக்க அவர்கள் கணக்கு வைக்க வேண்டியதில்லை. எனவே, அந்தப் போட்டியினைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் பல நேரங்களிலே, பல நாட்கள் நாங்கள் போராடிப் போராடி இறுதியாகக் கடந்த ஆட்சியிலே நம்முடைய மதிப்பிற்குரிய அமரர் சாதிக் பாட்சா அவர்களோடு சென்று, முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து நாங்கள் கேட்டபோது,

எப்படியும் அடுத்த தடவை எடுத்து விடுவதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக 3 நாட்களிலே அந்த அமைச்சரவை போய்விட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு எங்களுடைய வரியைக் குறைத்திருக்கிறார்கள். நாங்கள் ஏன் இந்த வரி வேண்டாம் என்று சொல்வதைப் புரிந்து கொண்டு அதை நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று பனியன் தொழிலினுடைய சங்கத்தினுடைய தலைவர் என்ற முறையிலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது நெய்க்கு வரி விதித்திருக்கிறார்கள். அந்த வரி அப்படியே இருக்கட்டும். ஆனால் அதனுடைய வாசகத்தினை கொஞ்சம் மாற்ற வேண்டும். 'பிராண்ட் நெய்'-க்கு 11 சதவீத வரியும் 'பிராண்டு இல்லாத நெய்'-க்கு 4 சதவீத வரியும் விதித்திருக்கிறார்கள். வியாபாரிகளுக்கு இதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. 1987-இலே இருந்ததைப் போல 'பிராண்ட்' என்பதை 'ரிஜிஸ்டர்ட் பிராண்ட்' என்றும் 'அன்-ரிஜிஸ்டர்ட் பிராண்ட்' என்றும் வாசகத்தினை மட்டும் மாற்றி, வரிவிகிதத்தினை 11 சதவீதம் என்றும் 4 சதவீதம் என்றும் அப்படியே இருந்தாலும் நடைமுறை சிக்கல்கள் இருக்காது என்றும், அதிகாரிகள் கொடுக்கின்ற தொல்லைகள் குறையும் என்றும் வியாபாரிகள் நினைக்கிறார்கள். ஆகவே, வரிவிகிதங்கள் அப்படியே இருக்கட்டும். வாசகத்தினை மாத்திரம்-- 'பிராண்ட் நேம்' இல்லாமல் எந்தப் பொருளையும் விற்கமுடியாது-- 'ரிஜிஸ்டர்ட் பிராண்ட்' மற்றும் 'அன்-ரிஜிஸ்டர்ட் பிராண்ட்' என்பதனை மாத்திரம் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வெண்ணெய்க்கு முந்திய அரசு திடீரென்று 5 சதவீத வரி விதித்தார்கள். முன்பு வெண்ணெய்க்கு வரி இல்லாமல் இருந்ததைப் போல தற்போதும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அந்த வரியை நீக்க முடியாவிட்டாலும் கொள்முதல் வரியையாவது நீக்கி அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கல்லுக்கு 4 சதவீத வரி இருக்கிறது. ஆனால் சலவைக் கல்லுக்கு 8 சதவீத வரியைப் போட்டிருக்கிறார்கள். இரண்டும் வீடு கட்டுவதற்கு பயன்படக்கூடிய பொருள்கள். எனவே, சலவைக் கல்லுக்கும் 4 சதவீத வரியாகக் குறைத்துப் போட வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். செங்கல் செய்யக்கூடிய அந்த மணலுக்கு வரி இருக்கிறது. மண்ணுக்கு வரி விதிப்பதால் அந்த மண்ணுக்குள்ள மரியாதையே போய் விடும். ஆகவே, செங்கல் செய்வதற்கு உபயோகப்படுத்தும் களிமண்ணுக்கு வரியிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கற்கண்டு குறைந்த அளவே உற்பத்தி செய்யப்படுவதால் மொத்தமுள்ள தொழிற்சாலைகளே 25 தான். அதற்கு வரி விதித்திருக்கிறார்கள். கற்கண்டுக்கு இருக்கின்ற வரியை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொரிகடலைக்கு வரி விதித்திருக்கிறார்கள். பருப்பு வகைகளுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பருப்பை வறுத்து பொரிகடலையாகத் தந்தால் அதற்கு வரி விதித்திருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களிலே ஏழைகளுடைய உணவு பொரிகடலை என்று சொல்வார்கள். உணவு இல்லாத நேரத்திலே அந்த பொரிகடலையைத்தான் உண்கிறார்கள். அது ஒரு சத்தான உணவும்கூட. அப்படி இருக்கின்ற அந்தச் சூழ்நிலையிலே, பருப்புக்கு வரி இல்லாத நேரத்திலே, அந்தப் பருப்பை வறுத்து, உபயோகப்படுத்தக்கூடிய அந்த வறுகடலைக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அது ஏழை எளியவர்களுடைய உணவுப்பொருள். ஆகவே, அதை நீக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்து, இன்றைக்கு மிளகாய் மெர்ச்சண்ட் போன்றவர்களெல்லாம் வரிநீக்கம் பெற்று, அவர்கள் இன்றைக்கு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். மிளகாயை வைத்துத் தயாரிக்கக்கூடிய மசாலாப்பொடிக்கு விதித்திருக்கின்ற வரியை நீக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற பரபரப்பான சூழ்நிலையில், முன்புபோல் யாரும் மிளகாயை அரைத்து, ஆட்டிச் சமையல் செய்வதில்லை. அந்தத் திடீர் மசாலா போன்றவைகளுக்கு இருக்கின்ற வரியை நீக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புண்ணாக்கு. பருத்தியை அரைத்து வரக்கூடிய புண்ணாக்கை இன்றைக்கு நம்முடைய மாடுகளுக்கு வைப்பதில்லை. வெளிமாநிலங்களுக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அந்தப் புண்ணாக்கிற்கு வரி அதிகமாக இருக்கிறது. அந்த 4 சதவிகித வரியைக் குறைத்துத் தந்தால் வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு உதவியாக இருக்கும்.

உணவுப் பொருளான ரொட்டிக்கு வரி விதித்திருக்கிறார்கள். ஆனால், 'கேட்டகிரி'யை மாற்றி, அதுதான் அதிகாரிகளுடைய தந்திரம். பிஸ்கெட் போன்று அந்த 'கேட்டகிரி'யை மாற்றி, சாதாரணமாக உண்ணக்கூடிய அந்த ரொட்டிக்கு வரி விதித்திருக்கிறார்கள். அதனை நீக்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, பேப்பர். இன்றைக்கு இந்தப் பேப்பரைப் பொறுத்தவரையில், பேக்கிங் பேப்பர் தயாரிப்பதற்கு இன்றைக்கு யாருமே இல்லை. 175 பேக்டரி என்று இருந்தது இன்றைக்குக் குறைந்து 75 ஆகியிருக்கிறது. கிராமங்களிலேதான் இதைச் செய்கிறார்கள். இன்றைக்கு அந்தப் பேப்பருக்கு வரி விதித்திருக்கிறார்கள். நீண்ட நாட்களாக அந்த பேப்பருக்கு வரி இல்லாத சூழ்நிலையில், வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, ஸ்வீட் ஸ்டால், ஹோட்டல் மற்றும் ஜவுளிக் கடைகளில்தான் இந்தப் பேப்பரை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு 11% வரி போட்டிருக்கிறார்கள். நாங்கள் சுத்தமாக வரியே வேண்டாம் என்று சொல்லவில்லை. முடிந்தால் நீக்கிக் கொடுங்கள். இல்லையென்றால் பழையபடி 4% வரி இருந்தாலும் பரவாயில்லை. இது ஒரு சிறுதொழில். 175 'பேக்டரி' என்று இருந்தது இன்றைக்கு 75–ஆகக் குறைந்திருக்கிறது. இன்னும் குறைந்துவிடும் போலிருக்கிறது. இன்றைக்கு இந்தப் பேப்பரை அதிகமாகக் கேரளாவிற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பேப்பருக்கு வரியைக் குறைத்துக் கொடுங்கள். வரியை நீக்குங்கள். இல்லாவிட்டால் குறைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருப்பத்தூரை..

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உறுப்பினர் பேசும்போதுகூட 'பாயிண்ட் ஆஃப் ஆர்டரா? சொல்லுங்கள்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பேச்சினுடைய நடை, பழக்கத்தின் காரணமாக, “இன்றைக்கு, இன்றைக்கு’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இந்த அரசுதான் போட்டதாக அது பொருள் அல்ல. கடந்த ஆட்சி, இதற்கு முன்னால் இருந்த அரசு போட்ட வரியைக் குறைக்கவேண்டும் என்றுதான் சொல்கிறார். அவ்வாறு பொருள்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. மோகன் கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு என்று சொன்னேன். அந்த வெண்ணெய்க்குப் போட்டதுகூட முந்தைய அரசுதான் என்று சொன்னேன். அதைத் தொடர்ச்சியாகப் பார்க்கும்போது புரிந்து கொள்வீர்கள் என்றுதான் சொன்னேன். ஆகவே, சொக்கர் அவர்களுடைய திருத்தத்திற்கு நன்றி. ஆகவே, மிக முக்கியமான கோரிக்கை, மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும்போது, ஜாதிப் பெயர்களை வைக்கவேண்டாம் என்று சொன்னார்கள். ஜாதிப் பெயரெல்லாம் வேண்டாம். கொடிகாத்த குமரனுடைய பெயரை வைத்து, தயவு செய்து, திருப்பூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். இந்த ஆட்சி போனால், மறுபடியும் வேறு ஆட்சி. தி.மு.க. போனால், மறுபடியும் வேறு கழக ஆட்சி என்று சொன்னார்கள். அவர்கள் தமிழ் மாநிலக் காங்கிரஸைச் சுத்தமாக மறந்துவிட்டார்கள் போல் இருக்கிறது. அடுத்தது நாங்கள் ஆட்சிக்கு வரும்போது அந்த ஜாதிப் பெயரை, அவர் சொன்னது போல, நீக்கிக் கொடுக்க முடியும்.

இறுதியாக, எங்களுடைய மாவட்டத்திலே ஒரு சோகமான சம்பவம் நடந்தது. மரியாதைக்குரிய வனத்துறை அமைச்சர் அவர்களும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானும், உறுப்பினர் திருமதி சரஸ்வதி. போன்றவர்களெல்லாம் அந்த பரிதாபகரமான சூழ்நிலையைச் சென்று பார்த்தோம். அந்த ஜனங்கள், பாராட்டப்படவேண்டியவர்கள்; ‘அவார்டு’ கொடுக்கப்பட வேண்டியவர்கள் என்று நான் முதலிலே சொன்னேன். ஆனால், இன்றைக்கு ‘கேஸ்’ போட்டுவிடுவார்களோ என்று அவர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித்

தலைவரிடம் சொல்லி--அன்றைக்கு அமைச்சர் அவர்களும் உறுதி கூறிவிட்டுத்தான் வந்தார்கள்; இருந்தாலும் நேற்றைக்கு இரவு தொலைபேசியில் சொல்கிறார்கள், இன்னும் பயந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்று; அந்த இடத்திலே போலீஸ் காவல் எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டுதான் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, 'கேஸ்' போட்டுவிடுவார்களோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள்; அப்படி இல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி--அவர்களுக்கு ஒரு தைரியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம். *(குறுக்கீடு)*

பிற்பகல் *1–10*

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் பேசும்போது, தமிழ் மாநிலக் காங்கிரஸ் ஆட்சிக்கு வருமென்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநிலக் காங்கிரஸினுடைய தேனிலவு முடிந்து விட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமுறை அண்ணா அவர்கள் இதே அவையிலே சொன்ன பதிலையே சொல்ல விரும்புகிறேன்: "தேனிலவு முடிந்தது; குடும்ப வாழ்க்கை நடைபெறுகிறது." *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள், *5* நிமிடங்களிலே முடித்து விடவேண்டும். அந்த நிபந்தனையின்பேரிலேதான் நான் அவருக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், மிகப் பெருவாரியான வரிச் சலுகைகளை இதில் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அவர் உள்ளத்தில் ஏனோ கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்குச் சில வரிச் சலுகைகளைச் செய்ய வேண்டும் என்பது தென்படவில்லை

என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு, கிராமப் புறங்களிலே இருக்கின்ற ஏழைகள் எல்லோரும், வீடுகளைக் கட்டுவதற்குச் செங்கற்களை உபயோகிக்கிறார்கள். அந்தச் செங்கற்களைத் தயார் செய்கின்ற மண்ணுக்கு ஒரு வரி; அந்தச் செங்கல்லுக்கு ஒரு வரி என்று இருமுனை வரியாக ஆக்கியபோது, வியாபாரிகள் எல்லோரும், தங்களுக்கு ஒரு முனை வரி வேண்டும்; இருமுனை வரி வேண்டாம் என்று கூறி சென்ற அரசு அறிவித்திருந்ததைத் தவிர்க்க வேண்டும் என்பதற்குப் பல போராட்டங்களை நடத்தினார்கள். இன்றைக்கு, இருமுனை வரி என்ற வகையில், செங்கல்லைத் தயார் செய்கின்ற மண்ணுக்கும், செங்கல்லுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கருணையுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஜல்லி என்று சொல்லக்கூடிய பொருளை என்னுடைய பகுதியில் கிரஷர்களை வைத்து, ஜல்லி உற்பத்தி செய்யக்கூடியவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு, ஏற்கெனவே சென்ற ஆட்சிக் காலத்திலே 8 சதவிகிதமாக இருந்த வரி, 11 சதவிகிதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. அதையும் கருணையுள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பருப்புக்கு வரிவிலக்குச் செய்திருக்கிற தமிழக முதலமைச்சர் அவர்கள், ஏழையெளியவர்கள் எல்லோரும் பசி வருகின்ற நேரத்திலே வாங்கி உண்ணுவதாக இருக்கின்ற பொரிகடலைக்கு வரியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள், 3 சதவிகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாக அதையும் கருணை உள்ளத்தோடு பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லி, எனக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி அமைகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலிருந்து, பொது விற்பனை வரி மற்றும் தீர்வைகள் நிர்வாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய தலைப்புகளில், மாண்புமிகு

உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை, தங்களுடைய கோரிக்கைகளை, இந்த அரசுக்குத் தேவையான, ஆழமான ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சி சார்பாகப் பேசிய உறுப்பினர்களைத் தவிர, எதிர் வரிசையிலே அமர்ந்துள்ள திரு. சொக்கர் அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. கணேசன் அவர்களும், திரு. நிஜாமுதீன் அவர்களும், திரு. கே. சுப்பராயன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும், திரு. மோகன் கந்தசாமி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும், இந்த மானியக் கோரிக்கையிலே தங்களுடைய பாராட்டுக்களை வழங்கியிருப்பதோடு இன்னும் சில மாறுதல்கள் செய்யப்பட்டால் வரிக் கொள்கையில் ஏற்றம் பெறமுடியும் என்பதையும், நிர்வாகத்திலே மேலும் வேகத்தை, விரைவைக் காணமுடியும் என்பதையும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

முற்பகல் 1–15

அவர்கள் தெரிவித்த ஆலோசனைகள் எதுவும் புறக்கணிப்படக்கூடியவை அல்ல. உடனடியாக நடைமுறைப் படுத்தக்கூடியது என்று நான் சொல்ல முடியாவிட்டாலும் மீண்டும் மீண்டும் கலந்து பேசி, மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல அடுத்து வரும் நிதிநிலை அறிக்கைகளுக்கும் சரக்குத் தேவையென்பதற்காக அவைகளை எல்லாம் சற்று ஒத்திவைத்து பின்னர் படிப்படியாக-இன்னும் 5 ஆண்டு காலத்திற்கு ஜனநாயக ரீதியிலே இருக்கக்கூடிய ஆட்சி இது என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே எல்லாவிதமான சலுகைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்றிவிட்டால் பிறகு உங்களுக்கும் வேலை இருக்காது, எங்களுக்கும் வேலை இருக்காது என்ற அந்த சிரமத்தை எண்ணி சற்று உங்களுடைய வாய்ப்புகள் பெருக, உங்களைத் தேர்ந்தெடுத்த மக்கள் உங்களை அடிக்கடி நாடி வந்து தங்களுடைய கோரிக்கைகளைத் தர வசதி செய்து கொடுக்கக்கூடிய வகையிலே சிலவற்றைப் பின்னுக்குத் தள்ளி செய்யப்பட்டவைகளுக்கான விளக்கங்களையும், செய்ய வேண்டியவைகளுக்கான கருத்துக்களையும் உங்களுடைய மேலான முன்னிலையில் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு வைத்திட நான் நின்றுகொண்டிருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்திலே பிற மாநிலங்களில் உள்நாட்டு

பனியன் உற்பத்திக்கு விற்பனை வரி விதிக்காத நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் விற்பனை வரி விதிக்கப்பட்டுள்ளது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். இதுபற்றி நான் விசாரித்து அறிந்தபோது பிற மாநிலங்களில் உள்நாட்டுப் பனியன்கள் உற்பத்திக்கு விற்பனை வரி இருக்கிறது என்ற தகவல் வந்துள்ளது. ஆந்திராவிலே 2 சதவிகிதம், கர்நாடகத்திலே 3 சதவிகிதம், மராட்டியத்திலே 4 சதவிகிதம், புதுவையிலே 3 1/2 சதவிகிதம், கேரளாவிலே 6 சதவிகிதம் உள்நாட்டு பனியன் உற்பத்திக்கு அங்கெல்லாம் விற்பனை வரி விதிக்கப்பட்டுத்தான் இருக்கிறது என்பதற்கு இவை ஆதாரங்கள். ஆனால் அதேநேரத்திலே ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பனியன்களில் 85 சதவிகிதம் வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. 15 சதவிகிதம்தான் தமிழ்நாட்டுக்குள்ளே விற்பனை ஆகின்றன. இவ்வாறு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் பனியன்களுக்கு மத்திய விற்பனை வரி இதுவரையிலே 2 சதவிகிதமாக இருந்ததை--அந்த வரியையும் மாநிலம்தான் வசூலிக்கிறது--2 சதவிகிதமாக இருந்ததை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளையும் திரு. மோகன் கந்தசாமி அவர்களை விட்டுவிடக் கூடாது, அவருடைய வேண்டுகோளையும செவிமடுத்து, அதை 1 சதவிகிதமாக ஏற்கெனவே குறைத்து நிதிநிலை அறிக்கைக்கான என்னுடைய பதிலுரையிலே நான் தெரிவித்திருக்கிறேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பனியன்களுக்கு மத்திய விற்பனை வரி எதுவும் கிடையாது என்பதையும் நான் அறிவேன். எனவே 2 சதவிகிதத்தை 1 சதவிகிதமாகக் குறைத்து இருக்கிறோம். இது மகிழ்ச்சிக்குரிய செய்தியென்று அவர்கள் ஏற்றுக்கொண்டாலும்கூட, பனியன்களுக்கு அறவே விற்பனை வரியை எடுத்துவிட வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து வைத்துள்ள இந்தக் கோரிக்கையை நான் அலட்சியப்படுத்தமாட்டேன். இந்த பனியன்களுக்கான வரியை நீக்க வேண்டுமென்பதில் திரு. சுப்பராயன் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, திரு. மோகன் கந்தசாமி அவர்களுக்கு எவ்வளவு ஆர்வமிருக்கிறதோ, அதைப்போன்ற ஆர்வம் எங்களுக்கும் இருக்கிறது. சிக்கலில்லாமல் இதைத் தீர்த்து வைக்கின்ற முயற்சியில் நான் ஈடுபடுவேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

மதிப்பு கூட்டு வரி பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இது மீண்டும் பலமுனை வரிக்கு வழி வகுத்துவிடுமோ என்ற ஐயத்தை இங்கே கிளப்பினார்கள். உதாரணத்திற்கு ஒரு உற்பத்தியாளர் ஒரு பொருளை 100 ரூபாய்க்குச் செய்வதாக வைத்துக்கொள்வோம். ஒரு மர நாற்காலி செய்வதாக வைத்துக் கொள்வோம். அப்படிச் செய்யும்போது அதற்கு 10 சதவீதம் வரி விதித்தால் 100 ரூபாய் பொருள் 110 ரூபாயாக ஆகிறது. 110 ரூபாய்க்கு வாங்கிய ஒருவர் அதற்கு மெத்தை தைத்து, குஷன் வைத்து அதை 150 ரூபாய்க்கு விற்கிறார் என்றால் அந்த 150 ரூபாய்க்கு வரி போடப்படாமல், 110லேயிருந்து உயர்த்தி 40 ரூபாய் மதிப்பை உயர்த்துகிறார் அல்லவா அந்த 40 ரூபாய்க்குத்தான் வரி போடப்படுகிறது. அதனால்தான் இது மதிப்புக் கூட்டுவரி என்ற பெயரைப் பெற்றுள்ளது. அந்த வரிதான் 'Value Added Tax--VAT' என்று சுருக்கமான பெயரிலே அழைக்கப்படுகிறது. மொத்தமாக ஒருவர் நாற்காலியைச் செய்து, அதிலே குஷன் வைத்து 150 ரூபாய்க்கு விற்கும்போது அதற்கு வருகின்ற வரியைவிட, இது இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டு--முதலிலே செய்யப்பட்டது சாதாரண நாற்காலி, பிறகு பளபளப்பாக்கப்பட்ட நாற்காலி என்று இரண்டுக்கும் வரியைப் பிரிக்கும்போது--வரி குறைகிறது. இதிலே ஏதாவது தகராறு ஏற்படுமானால், பிரச்சினை ஏற்படுமானால், மாண்புமிகு சொக்கர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல அது மறுபரிசீலனைக்கு உரியது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகர்கள் தங்களுடைய Renewal of Registration அதாவது, பதிவுகளைப் புதுப்பித்தலைப் பற்றி சொக்கர் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள், அது அரிய யோசனை. தனியாக அவர்கள் என்னிடத்திலே பேசும்போது சொன்னார்கள். என்னிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் பேசும்போது சொன்னார்கள். நீங்கள் இவ்வளவு சலுகைகள் அளித்திருப்பதற்கு நாங்கள் ஒவ்வொரு வணிகரும் இந்த ஆண்டு 5 ஆயிரம் ரூபாயை பதிவுத் தொகையாகக் கட்டிவிடுகிறோம், பிறகு ஆண்டுதோறும் 200 ரூபாய் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குள்ள சங்கடம் என்னவென்றால், சலுகை அளித்துவிட்டதற்கு 5 ஆயிரம் ரூபாயை அவர்களிடம் பெறுவது என்பது பிடித்தமான காரியமாக எனக்குத்

தெரியவில்லை. இருந்தாலும் சொக்கர் அவர்களுடைய வார்த்தையை முழுமையாகப் புறக்கணித்துவிடக்கூடாது என்பதற்காக நாம் செய்துள்ள திருத்தம்: 5 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை--இப்போது ஆண்டுதோறும் பணத்தைக் கட்டித்தான் பதிவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக, ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் அவர்கள் கட்ட வேண்டும், இல்லாவிட்டால் 5 ஆண்டு காலத்திற்கு ஒரு முறையாக-ஆயிரம் ரூபாய் கட்டிவிட்டால் பிறகு 5 ஆண்டுகாலத்திற்குப் பிறகு அந்தப் பதிவைப் புதுப்பித்துக்கொள்ளலாம். இதனால் ஆண்டுதோறும் அலைச்சல் மிச்சம், ஆண்டுதோறும் அதிகாரிகளோடு அவர்களுக்கு ஏற்படுகின்ற சங்கடங்கள் மிச்சம். எனவேதான் இதை வணிகர்களுடைய விருப்பத்திற்கே-Option-க்கே இந்த அரசு விட்டுவிடுகிறது. 200 ரூபாய் ஆண்டுதோறும் கட்டினாலும் கட்டலாம், அல்லது 1000 ரூபாயைக் கட்டிவிட்டு 5 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிவு செய்துகொண்டாலும் செய்துகொள்ளலாம். வேண்டுமானால் ஒன்றை யோசித்துப் பார்க்கலாம். 5 ஆயிரம் ரூபாய், ஆவலைத் தூண்டுகின்ற யோசனை. எனவே 5 ஆயிரம் ரூபாய் கட்டிவிட்டால் 25 ஆண்டுகளுக்கு அவர்களிடத்திலே மறுபதிவுக்கான பணத்தை கேட்பதில்லையென்று ஒரு முடிவை அரசு எடுப்பதை வணிகப் பெருமக்கள் அவர்களுடைய சங்கங்களின் சார்பாக ஒப்புக்கொள்வார்களேயானால் 5 ஆயிரம் ரூபாயைக் கட்டிவிட்டு ஒரு வெள்ளி விழா வரையில் 25 ஆண்டுகள் வரையில் மறுபதிவுக்கு பணம் கட்டாமல் இருக்கலாம். இதை மாண்புமிகு சொக்கர் அவர்கள் வணிகர் சங்கங்களுடன் கலந்து பேசி முடிவு செய்து சொல்வாரேயானால், இந்த ஆண்டே பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரும் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கிருஷ்ணசாமி பேசும்போது சொன்னார்கள். இவ்வளவு சலுகைகளை அளித்திருக்கிறீர்களே, அது சாதாரண மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்க்கிறீர்களா என்று கேட்டார். மாண்புமிகு சந்தானம் அவர்களும் சொன்னார்கள். ஏழை எளிய மக்களுக்கு இந்த வரிகளால் என்ன லாபம் என்ற சங்கடத்தை அவர் இங்கே புலப்படுத்தினார். இந்த பட்ஜெட்டுக்கு முன்பு இருந்த விலைவாசிகளுக்கும் பட்ஜெட்டுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள விலைவாசிகளுக்கும் உள்ள வேறுபாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். இது ஏதோ ஒரு கடையிலே எடுக்கப்பட்ட புள்ளி

விவரம் அல்ல. வடசென்னையிலே, வண்ணாரப்பேட்டைப் பகுதியிலே உள்ள 40 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கூட்டுறவுப் பண்டக சாலையிலிருந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரம். இந்த பட்ஜெட் வருவதற்கு முன்பு மஞ்சள் விலை ஒரு கிலோ 41 ரூபாய் 50 காசு. இன்று 40 ரூபாய் 50 காசு. இந்த பட்ஜெட் வருவதற்கு முன்பு துவரம்பருப்பின் விலை 33 ரூபாய் 20 காசு. இன்று 30 ரூபாய். உளுத்தம்பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய், இன்று 27 ரூபாய் 50 காசு. பயத்தம் பருப்பு ரூ. 27.70 லிருந்து ரூ. 23.50க்கும் புளி ரூ. 29–லிருந்து ரூ. 21-க்கும் குறைந்திருக்கிறது. சீரகம் ரூ. 90–லிருந்து ரூ. 77–ஆகக் குறைந்திருக்கிறது. மிளகு ரூ. 89–லிருந்து ரூ. 84 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. கடுகு ரூ. 23.20–லிருந்து ரூ. 20 ஆகக் குறைந்திருக்கிறது. தனியா ரூ. 28.70–லிருந்து ரூ. 22 ஆகக் குறைந்திருக்கிறது. சீயக்காய் ரூ. 41–லிருந்து ரூ. 34 ஆகக் குறைந்திருக்கிறது. பொன்னி அரிசி ரூ. 16–லிருந்து ரூ. 15 அளவிலும், விலை உயராமல் சில இடங்களில் அதே 16 ரூபாய் அளவிலும் விற்பனை ஆகிறது. நல்லெண்ணெய் ரூ. 56.70 என்கிற நிலையிலிருந்து 54 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ரேடியோ ஆயில் ரூ. 48–லிருந்து ரூ. 45–ஆகக் குறைந்திருக்கிறது. மிளகாய் ரூ. 49லிருந்து ரூ. 42 அல்லது ரூ. 45 வரையிலேதான் இன்றைக்கு விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-25

இவைகளன்னியில், இந்த வரிச் சலுகைகளால் ஏற்பட்ட இந்த லாபம் அன்னியில், தமிழ்நாட்டில் வணிகப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரமல்ல, தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையிலேயும் தரப்பட்டுள்ள சலுகைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பாராட்டிப் பேசி இருக்கின்றார்கள். தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் "ரா மெட்டிரியல்ஸ்" கொள்முதல் செய்வதில் ஏற்கெனவே செலுத்தப்பட்டு வந்த 5, 6 சதவிகிதம் ஒட்டுமொத்த வரி தற்போது 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில், நான் சேலம் சென்றிருந்தேன் அங்கேயும் சரி, சென்னையில் என்னைச் சந்திக்கின்ற பல நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் சரி, என்னிடத்தில் கொஞ்சம் கோபமாகவே வாதிடுகிறார்கள். மூன்றாக இருந்ததை நான்காக ஆக்கி விட்டீர்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே, மூன்றாக இருந்தது அடிப்படை வரி, அந்த மூன்று, சர்சார்ஜ்

அதற்கு மேலும் இன்னொரு சர்சார்ஜ், அதற்கு மேலும் கூடுதல் விற்பனை வரி 'அடிஷனல் சேல்ஸ் டேக்ஸ்' என்ற முறையிலே 5·6 ஆக இருந்ததை 4–ஆகக் குறைத்து இருக்கின்றோம். ஆனால் வந்து பேசுகின்றவர்கள் மூன்றை நான்காக ஆக்கிவிட்டார்கள் என்கிறார்கள். இல்லை. 5.6 ஐத் தான் 4 ஆக ஆக்கி இருக்கிறோம். இல்லை, நாங்கள் 3–ஐத்தான் கட்டினோம் என்றால், அப்படியானால், நீங்களும் இடையிலே உள்ள அதிகாரிகளும் ஏதோ அட்ஜஸ்ட் பண்ணியிருக்கிறீர்கள். இந்த வரியினால், எங்களுக்கு இனிமேல் அதிக வருமானம் வரும். பரவாயில்லை மகிழ்ச்சி என்று நான் அவர்களை வழிஅனுப்பி வைக்கிறேன். தொழிற்சாலைக்கு பயன்படுத்தப்படும் 'கேப்பிடல் குட்ஸ்', முதலீட்டுப் பொருள்களுக்கு ஏற்கெனவே உள்ள 11.6 சதவிகித ஒட்டுமொத்த வரி தற்போது மூன்று சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அரசால், அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களுக்கு வாங்கப்படும் முதலீட்டுப் பொருள்களுக்கு 16.4 சதவிகிதமாக இருந்த ஒட்டுமொத்த வரி, தற்போது மூன்று சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காவும், இது போன்று நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களின் உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த அளவிற்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. 100 சதவிகித எக்ஸ்போர்ட் ஓரியன்டட் யுனிட்ஸ், அதாவது 100 சதவிகித ஏற்றுமதி நிறுவனங்கள், 'யுனிட்ஸ்' அதாவது அலகுகள் என்று அழைப்பது உண்டு. அவைகளும் மற்றும் சென்னை ஏற்றுமதி மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் மாநிலத்திற்குள் வாங்கும் மூலப் பொருட்களுக்கு தற்போது 5.6 சதவிகித ஒட்டுமொத்த வரி விதிக்கப்பட்டு வந்தது. இதற்கு முற்றிலுமாக விற்பனை வரி விதிப்பதிலிருந்தே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். மீண்டும் இதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கரும்பின் மீதான கொள்முதல் வரி 14.7 சதவிகிதம் ஒட்டுமொத்த வரியிலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது ஏன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு கேட்டார். சர்க்கரை ஆலைகளினுடைய லாபத்திற்கா என்று கேட்டார். அதை ஓரளவுக்கு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏன் என்றால், சர்க்கரை ஆலைகளில் பெரும்பாலானவை நம்முடைய அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. எனவே, அந்த லாபத்தைக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் பெறமுடியும் என்பதற்காகத்தான்

இந்த 14.7 சதவிகிதத்தை 8 சதவிகிதமாகக் குறைத்து இருக்கிறோம். இப்படித் தரப்பட்ட சலுகைகள் மூலம் பயன்பெற்றவர்களுடைய எண்ணிக்கையையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வரி விதிப்பு எல்லைக்குள்ளே வர தற்போதுள்ள விற்பனை அளவு ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 40 ஆயிரம் சிறு வணிகர்கள் பயனடைகிறார்கள்.

ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாத விற்பனையளவுள்ள வணிகர்களுக்கு இணக்க வரி விதிப்பு முறை-Compounding Tax அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வணிகர்கள் மொத்த விற்பனை அளவிற்குக் கணக்குகளைப் பராமரித்தாலே போதுமானது. அதாவது மொத்த விற்பனைக் கணக்குகளைப் பராமரித்தால் மாத்திரம் போதும். அடிக்கடி அதிகாரிகளுடைய தொல்லைக்கு ஆளாகத் தேவையில்லை. விரிவான பராமரிப்புக் கணக்குகளை வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. கம்பவுண்டிங் முறை, இது கூட வணிகர்களுடைய விருப்பத்தின்பால் அதாவது 'ஆப்ஷன்' என்ற அடிப்படையிலேதான் அமைகிறதே தவிர, கட்டாயம் எதுவும் கிடையாது. அவர்கள் கம்பவுண்டிங் முறையை ஒத்துக்கொண்டாலும் சரி, இல்லை, அடிக்கடி அதிகாரிகளைப் பார்த்து, அந்த அளவிலே தீர்த்துக் கொள்ளலாம் என்றாலும் சரி, அது அவர்களுடைய 'ஆப்ஷன்'. இதன்மூலம் சுமார் 40 ஆயிரம் வணிகர்கள் பயன்பெறுகிறார்கள்.

சுயவரி மதிப்பீடு முறை-Self Assessment பற்றி இங்கே பேசப்பட்டது. இதில் 5 இலட்சம் ரூபாய்க்கு மேல் 10 இலட்சம் ரூபாய் வரை விற்பனையளவுள்ள வணிகர்களுக்கு இது விரிவாக்கப்படுகிறது. இதனால் 70,000-க்கும் மேற்பட்ட வணிகர்கள் பயனடைகிறார்கள். கூடுதல் விற்பனை வரி வரம்பை ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 100 கோடியாக உயர்த்தியதன் காரணமாக சுமார் 70,000 பேர் பயனடைகிறார்கள்.

நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்குப் பதிலளித்தபோது முகவர்களின் விற்பனைத் தொகையை ஒருங்கிணைத்து--வெளி மாநிலத்திலிருந்து பொருள்களை இங்கே கொண்டுவந்து விற்கிறார்களே அந்த நிறுவனத்தினுடைய முகவர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுடைய விற்பனைத் தொகையை எல்லாம் ஒருங்கிணைத்து--அவர்கள் முதன்மை நிறுவனத்தின் மீது, கூடுதல் விற்பனை வரி விதிப்பது தொடர்பாக ஆராயப்படும் என்று கூறியிருந்தேன். இப்படி நன்கு ஆராய்ந்து அதன் விளைவாக எடுத்துள்ள முடிவு, தமிழகத்திற்கு வெளியே தலைமையகத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களின் கிளைகள் அல்லது முகவர்களுக்கு, கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான உயர்த்தப்பட்ட உச்சவரம்பு பொருந்தாது. அவர்களுக்கு முன்பிருந்த நிலையே நீடிக்கும் என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தமிழகத்திலே உள்ளவர்கள் இந்த 100 கோடி ரூபாய்க்கு மேல் 'டர்ன் ஓவர்' உள்ளவர்கள் இந்த வரிக்கு ஆளாக வேண்டியிருக்கும். அதே நேரத்திலே, வெளி மாநிலத்திலே உள்ளவர்கள் இந்த வரிக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ள நேரிடும் என்பதற்காகத்தான் வெளி மாநிலங்களிலிருந்து வந்து இங்கே பொருள்களை விற்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இந்தக் கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான உச்சவரம்பு பொருந்தாது என்று திட்டவட்டமாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்வரி (சர்சார்ஜ்), கூடுதல் வரி (அடிஷனல் சர்சார்ஜ்) ஆகிய வரிகளை அறவே நீக்கியதால் அவை சம்பந்தப்பட்ட படிவங்களையும் கணக்குகளையும் வணிகர்கள் பராமரிக்கத் தேவையில்லை என்று அறிவித்துவிட்டதனால், இதன் மூலமாக 1 இலட்சத்து 50 ஆயிரம் வணிகர்கள் பயனடைகிறார்கள் என்பதையும் நான் பெருமிதத்தோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'ரேண்டம்' சுயவரி மதிப்பீடு பற்றி திரு. சொக்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வரம்பு 10 இலட்சம் ரூபாய் விற்பனை அளவுள்ள வணிகர்களையும், தொழிற்சாலைகளையும் உள்ளடக்கும் வகையில் 10 இலட்சம் ரூபாயாக வரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான வரி விதிப்பாளர்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே உள்ள நிபந்தனைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 25 சதவீதம் பேர் 'கம்ப்யூட்டர்' மூலமாக அங்கொன்றும்,

இங்கொன்றுமாகத் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்கள் மாத்திரம் விரிவான கணக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவார்கள். வணிக வரி ஆணையரால் கணிப்பொறியைப் பயன்படுத்தி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் தேர்வு செய்யப்படும். இத்தேர்வில் உள்ளூர் வணிகவரி அலுவலர்களுக்குத் தம் சொந்த விருப்புரிமை இல்லை. மீதம் உள்ள 75 சதவீத வரி விதிப்புக்குரியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தாக்கல் செய்த கணக்கின்படி வரி விதிப்பு செய்யப்படும். அவர்கள் தவறு செய்தார்கள் என்றால் அடுத்த ஆண்டு இந்த கம்யூட்டர் முறையின் மூலம் அந்த வகையில் 25 சதவீதம் பேரைப் பொறுக்கி எடுக்கும்போது அதில் அவர்கள் சிக்கிக் கொள்ளக் கூடும். எனவேதான் இதையும் ஒரு பரீட்சார்த்தமாக இந்த அரசு செய்துபார்க்க, வணிகர்கள் நலனுக்காக முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

சில தவறான செய்திகள் பத்திரிகைகளிலே வந்துவிடுகின்றன. பத்திரிகைக்காரர்களுக்குச் சரியான தகவல் கிடைக்காத காரணத்தால் வரக்கூடும். இன்று காலையிலேகூட, ஆயத்த ஆடைகளுக்கு 8 சதவீத வரி இருப்பதாக பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆனால் ஆயத்த ஆடைகள் என்று சொல்லப்படுகின்ற ரெடிமேட் கார்மென்ட்ஸ் இவைகளுக்குப் புதிய வரி விதிப்பு முறையிலே உள்ள பிரச்சினைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அந்த வணிகர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு--குறிப்பாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஊரான மதுரையிலிருந்து வணிகர்கள், வந்தார்கள். இந்த ஆயத்த ஆடைகளுக்கு வரி குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு வந்தார்கள். அவர்களுக்கு அந்த வரியைக் குறைப்பதற்காக வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் ரெடிமேட் துணிகளுக்கு 'சி' ஃபாரம் கிடைக்காதபட்சத்தில், 10 சதவிகிதம் வரி கட்ட வேண்டியிருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள். வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல், தமிழகத்திலேயே விற்கப்படும் துணிகளுக்கு 8 சதவிகிதமாக வரி இருக்கிறது.--இனி மேல் ரெடிமேட் ஆடைகளை நம்முடைய மாநிலத்தில் விற்றாலும் சரி, 'சி' ஃபாரம் பெற்றோ, பெறாமலோ வெளி மாநிலங்களுக்கு அனுப்பினாலும் சரி, அவர்கள் 4 சதவீதம் வரி மாத்திரமே செலுத்தினால் போதும் என்று ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இன்றைக்குப்

பத்திரிகையிலே 8 சதவிகித வரி இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது ஒரு தவறான தகவல் என்பதை மாத்திரம் நான் பணிவன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொக்கர் அவர்கள் சொன்னார்கள். எமெர்ஜென்சி லைட், அதற்கு முன்னால் ஒட்டுமொத்த வரி 16.4 என்று இருந்ததை, இப்போது 16 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம். 0.4 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை ஒட்டுமொத்த வரி; அடிப்படை வரி மூன்றாக இருக்கலாம். ஒட்டுமொத்த வரி; சர் சார்ஜ், சர் சார்ஜ்க்கு சர் சார்ஜ், அடிஷனல் சர் சார்ஜ். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஆர். சொக்கர்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படை வரி 3 சதவீதமாக இருக்கும்போது, சர் சார்ஜ், அடிஷனல் சர் சார்ஜ், அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் மூன்றும் சேர்ந்து அது 5.6 சதவீதமாகத்தான் மாறும். ஆனால் அடிப்படை வரி 12 சதவீதமாக இருக்கும்போதுதான் சர் சார்ஜ், அடிஷனல் சர் சார்ஜ், ஏ.எஸ்.டி. சேர்ந்து அந்த 16.6 சதவீதமாக மாறும். ஆனால் இந்த எமர்ஜென்சி லைட்டைப் பொறுத்தவரையிலே, முன்னால் 3 சதவீத வரிதான், அடிப்படை வரியாக இருந்தது. இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம் என்றால், அது எலக்ட்ரிகல் கூட்சா, எலக்ட்ரானிக் கூட்சா என்பதில் தவறாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆகவே முன்னால் இருந்தது 3 சதவீத வரி, அடிப்படை வரி, மொத்த வரி என்று கணக்குப் பார்த்தால் 5.6 சதவீதமாகும். இப்போது ரிவைஸ் செய்ததன்படி 4 சதவீத வரிதான் அதற்கு இருக்க வேண்டும். அதில் ஏதோ ஒரு தவறு நடந்து இருக்கிறது. சாவகாசமாக பார்த்துகூட நீங்கள் நியாயம் வழங்கினால் போதுமானது.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** சாவகாசமாக அல்ல; சகவாசமாகவே பார்க்கிறேன். கையினால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களுக்கு பிரிவு 3 (3)ன்படி சலுகை கொடுக்க வேண்டுமென்று சொக்கர் அவர்கள் சொன்னார்கள். இதற்குத் தேவையான சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும் என்பதை இங்கே அவருக்கும், மற்றவர்களுக்கும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

செங்கல்லுக்குப் பயன்படும் மண்ணுக்கு 8 சதவீத வரி இருக்கிறது. இதை ரத்துச் செய்ய வேண்டுமென்று சொக்கர் அவர்களும் சொன்னார்கள். நம்முடைய சந்தானம் அவர்களும் கிராம மக்களின் சார்பாக இங்கே போர்க் குரல் கொடுத்தார்கள். முன்பு அடிப்படை விற்பனை வரி 8 சதவீதமாகவும், மேல்வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளோடு சேர்ந்து மொத்த வரி 11.6 சதவீதமாகவும் இருந்தது. அதை இந்த அரசு ஏற்கெனவே 4 சதவீதமாகக் குறைத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நண்பர் நிஜாமுதீன், அவர் எந்தக் கோரிக்கையை வைத்தாலும் வீண்போவதில்லை. இன்றைக்கும் ஒரு கோரிக்கை வைத்தார். லாட்ஜ்களுக்கு ஆடம்பர வரி வரம்பு தற்போது ரூபாய் 50 ஆக இருப்பதை உயர்த்த வேண்டும் என்றார். வரி வரம்பை, 50 ரூபாய் லாட்ஜ்களுக்கு; அறைகளுக்கு வாடகை வாங்குவதால் வரி உண்டு என்று இருப்பதை, இந்த ரூ. 50-ஐ உயர்த்தி வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். இது வரை இந்த ஆடம்பர வரி, அறை வாடகை ரூபாய் 50க்கு மேல் இருந்தால் உண்டு என்று இருந்தது; அறை வாடகை 50க்கு மேல் இருந்தால் அதற்கு வரி உண்டு என்று இருந்தது; இனி அந்த வரம்பை தற்போது, ரூபாய் 200-ஆக உயர்த்த இந்த அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-40

வரி விதிப்பில் அதிகாரிகள் ஊழல்கள் புரிகிறார்கள் என்ற கருத்தைப் பரவலாக எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார். ஆனால், அவர்கள் இங்கே எதிர்க்கட்சியிலே அமர்ந்து இருந்த போது கடந்த காலத்தில் இந்த வரி விதிப்பில் எவ்வளவு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை அவர் மறந்து இருந்தாலும் நினைவுக்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை ஆகும். இரண்டே இரண்டு மாத்திரம். (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் அதுபற்றிச் சொல்லவில்லை. ஒரே ஒரு நிமிஷம். சாரி. நான் சொல்வது, ஊழல் அதிகாரிகள் என்று சொன்னால், கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் எல்லாம் கோபித்துக் கொள்ளப் போகிறார்கள். நான் சொன்னது, அதை

முறைப்படுத்தினால், இன்னும் கூட வருமானம் வருமே என்று சொன்னேனே தவிர, அதிகாரிகள் எல்லாம் ஊழல் பண்ணுகிறார்கள் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் சொல்ல வருவது என்ன என்பது, இரண்டே இரண்டு எடுத்துக்காட்டுகள்தான்; நிறைய இருக்கின்றன; நேரம் இல்லாத காரணத்தால் இரண்டு எடுத்துக்காட்டுகள் மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

தமிழ்நாடு மாவு ஆலைகள் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்தச் சங்கம் ஒரு கோரிக்கை வைத்தது கடந்த கால அரசின் முன்னால். கோதுமை மாவை அறிவிக்கப்பட்ட பொருளாக–declared goods- ஆக அப்படி என்றால், 4 சதவீத வரி கூட இல்லாத goods, declared goods- ஆகக் கருத வேண்டுமென்று வழக்குப் போட்டார்கள், அதை declared goods- ஆக அறிவிக்க வேண்டும் என்று, எங்களுக்கு வரி கூடாது என்று வழக்கே போட்டார்கள். உயர்நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றது. தீர்ப்பு அந்த வணிகர்களுக்குப் பாதகமாக அமைந்தது. ஏன் வரி கொடுக்கக்கூடாது, declared goods- ஆக அறிவிக்க முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். வணிகர்கள் அல்லவா? எனவே கடைசி வரையிலும் பார்ப்பது என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலும் அவர்களுக்குப் பாதகமாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது; அரசாங்கத்திற்குச் சாதகமாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்த வழக்கு நடைபெற்ற இடைப்பட்ட காலத்தில் அவர்கள் மேல் வரி, கூடுதல் மேல் வரி, மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளை அரசுக்கு செலுத்தாமலேயே இருந்தார்கள், வழக்கு நடைபெற்ற காரணத்தால். 1967 ஆம் ஆண்டு அரசாணையின்படி ஒரு நிறுவனம் உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்து அதிலே தோல்வியுற்றால், உச்ச நீதிமன்றத்திலும் தொடர்ந்து வழக்கில் தோல்வியுற்றால் அவர்கள் வரித் தள்ளுபடிக்குத் தகுதியற்றவர்கள். இதுதான் 1967 ஆம் ஆண்டு அரசு ஆணை. ஆனால், தமிழ்நாடு மாவு ஆலைகள் சங்கத்தின் வரித் தள்ளுபடிக்கான கோரிக்கையை ஏற்று அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த ஆட்சியில் அவர்களுக்கு வரியைத் தள்ளுபடி செய்ய முடிவு எடுக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்திலும் அவர்களுக்குப் பாதகமான தீர்ப்பு; உச்ச நீதிமன்றத்திலேயும் அவர்களுக்குப் பாதகமான தீர்ப்பு; அரசுக்குச் சாதகமான தீர்ப்பு. ஆனால், அவர்களுடைய கோரிக்கையை ஏற்று

13–3–1990–லே இருந்து 31–3–1993 வரை retrospective effect கொடுத்து, மேல் வரி, கூடுதல் மேல் வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்ய 7–6–1995 அன்று முடிவு எடுக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 20 கோடி ரூபாய் என்பதை மிகுந்த வேதனையோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-45

இன்னொன்று, 1995 ஆம் ஆண்டு வரை கனிம எண்ணெய்-மினரல் ஆயில் மற்றும் லேப் ஃபிட் ஸ்டாக், மண்ணெண்ணை போன்ற இன்னொரு பொருள் ஆகியவை எல்லாம் பிரிவு 3 (3)–ன் கீழ் சலுகை வரிக்குத் தகுதி இல்லாமல் இருந்து வந்தன. அவைகளுக்கு சலுகை வரி கிடையாது, சட்டப் பிரிவு 3(3)-ன்படி. 1994–95-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தப் பொருள்களுக்கு சலுகை வரி 3 சதவீதம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது; நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். 1994–95 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை அநேகமாக நாவலர் அவர்கள்தான் படித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன்; இந்தப் பொருள்களுக்கு சலுகை வரி 3 சதவீதம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மினரல் ஆயில் மற்றும் லேப் ஃபிட் ஸ்டாக் முழுவதற்கும் வரி விகிதம் 12 சதவீதம் ஆகும். அதைத்தான் குறைத்து 3 சதவீதம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், முந்தைய அரசு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த அந்தச் சலுகைக்கு சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரவே இல்லை. எதையோ எதிர்பார்த்து சட்டத்திருத்தத்தைக் கொண்டு வரவில்லை. காரணத்தை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளலாம். இதற்கு பிறகு லேப் ஃபிட் ஸ்டாக் பயன்படுத்துகிற ஒரு தனியார் நிறுவனத்திற்கு லேப்ஃபிட் ஸ்டாக்கை மண்ணெண்ணெயாக கருதி அதற்கு 3 சதவீதம் சலுகை வரி கொடுத்தார்கள் பிறகு. இதற்கான முடிவு 7–6–95 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்த வரிச் சலுகை 1987–88 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டது. 1995-ல் வரிச் சலுகை கொடுக்கும்போது ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து 1987-88 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டது. எப்படி ஆம்னி பஸ்களுக்கு வரியைக் குறைத்து விட்டு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்பட்டதோ, அதைப்போலவே கடந்த ஆட்சியில் இதற்கும் கொடுக்கப்பட்டது. இதனால் 18.5 கோடி ரூபாய் வரியும், அதற்கு மேல் வட்டியும், தண்டத் தொகையும் 27.7 கோடி ரூபாயும், ஆக

மொத்தம் 46.2 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. இதை அமைச்சரவையில் விவாதித்து இப்படி ஒரு முடிவு எடுக்கிற நேரத்தில் இரண்டு பேர் கேட்டார்கள். எங்களுக்கும் இந்த வரியைக் குறைத்துக் கொடுங்கள் என்று கேட்டபோது ஒருவரை விலக்கி வைத்துவிட்டு ஒருவருக்கு மட்டும் கொடுத்தார்கள். அப்போது திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சொன்னார்களே, அதிகாரிகள் சில நேரங்களிலே சிக்கலுக்கு ஆளாகிறார்கள் என்று, எப்படி சிக்கலுக்கு ஆளாகி இருக்கலாம் என்பதற்கு சில உதாரணங்கள். --Commercial Tax Department opposed the request. They quoted the principles embodied in G.O. No. 973 dated 27-5-67. The department opposed by stating that when there has never been a finding in favour of the dealer and only the dealer has always been feeling that it would be in his favour, retrospective waiver is not considered favourable. Otherwise it would seriously affect revenue. In fact, such an order may even create an unhealthy precedent which other dealers may start exploiting. Therefore any major retrospective effect would amount to a major new policy decision revising the decisions embodied in G.O. Ms. No. 973, Revenue, dated 27-5-67. But they have not taken any policy decision. The Finance Department also opposed giving retrospective effect.-- இவ்வளவுக்கும் பிறகு, அதிகாரிகள் எல்லாம் மறுத்துரைத்த பிறகு, ஒரே ஒரு அதிகாரி ஆதரவாக இருந்ததாகக் கேள்வி. அவர் அப்போது இண்டஸ்ட்ரீஸ் செகரட்டரியாக இருந்தவர். அவர் யார், எவர் என்று தெரியலாம். இவ்வளவுக்கும் பிறகு அரசுக்கு 46.2 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் வகையில் 1987–88–ஆம் ஆண்டு முதல் வரிச்சலுகை தரப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, அதே அமைச்சரவைக் கூட்டத்தில் மற்றொரு நிறுவனம்-மணலி பெட்ரோ கெமிக்கல்ஸ்-இந்தச் சலுகையை எங்களுக்கு எட்டு வருடங்கள் முன்பிருந்து தர வேண்டாம். 1994–95லிருந்து கொடுங்கள் என்று கேட்டார்கள். அந்தக் கோரிக்கை அதே அமைச்சரவைக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஒரு வருடத்திற்கு கொடுக்கவில்லை. ஆனால் 1987–88 முதல் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட் கொடுத்து 46.2 கோடி ரூபாயை இழந்திருக்கிறார்கள். இதற்கு அப்போது சட்டம் கொண்டு வராமல் 1995–96–ல் தான் அதற்கான சட்டத்தையே கொண்டு வருகிறார்கள். அறிவித்தது 2 ஆண்டுகளுக்கு முன்பு. இவ்வளவும் நடந்த பிறகு 1995–96–ல் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

வருவாய்த் துறை பற்றியும் இங்கே பேசப்பட்டது. வருவாய்த் துறை மானியத்திலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பல நல்ல விளக்கங்களை எல்லாம் அளித்திருக்கிறார்கள். வருவாய்த் துறை பல துறைகளுக்கும் தாய்த் துறையாக எப்படி விளங்குகிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு 1989 ஆம் ஆண்டு பொறுப்பிலே இருந்தபோது, உங்களுக்கு நினைவு இருக்கும், காவல் துறையில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்து அத்துறையின் பணிகளை செம்மைப்படுத்தும் வகையில் அரசுக்கு கருத்துரைகளும் ஆலோசனைகளும் வழங்கும் பொருட்டு காவல் துறை ஆணைக்குழு-போலீஸ் கமிஷன் - ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் பல்வேறு நல்ல மாற்றங்கள் அந்தத் துறையில் நிறைவேறியதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதுவரையில் காவலர்களுக்கு 80 ரூபாய் சம்பளம், 70 ரூபாய் சம்பளம் என்று இருந்த நிலையை மாற்றி, முதன் முதலாக காவல் துறையினர்களுக்கு 200, 250 ரூபாய் என்று சம்பளம் உயர்த்தப் பட்டதே அந்தக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் தான் என்பதை அறிவீர்கள். அதைப்போல பொது நிர்வாகத்திற்கு முதுகெலும்பாக விளங்குகிற வருவாய்த் துறையில் மக்களின் அன்றாடத் தேவைகளை ஒட்டிய பல பணிகள் கவனிக்கப்படுகின்றன. அத்துறையில் போதுமான அளவிற்கு வேகம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன குறைபாட்டை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனவே, இந்தத்துறை சம்பந்தப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்தவும், இதன்மூலம் இந்தத்துறை மேலும் வேகமாகச் செயல்படவும், தக்க யோசனைகளையும், பரிந்துரைகளையும் அரசுக்கு வழங்கிட வருவாய் ஆணைக்குழு, (ரெவின்யூ கமிஷன்) ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

இந்த வருவாய்த் துறையின் மூலமாக மாவட்டத்திலே உள்ள ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர் ஆகியோர் மாதம் ஒருநாள் ஒரு கிராமத்திற்குச் சென்று மக்களின் குறைகளை நேரில் கேட்டறியத்தான் மனுநீதித் திட்டத்தை மீண்டும் நாம் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். இதிலே சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு, தங்கள் பணியினைச் செய்து வருகிறார்கள். பத்திரிகையிலே பார்த்தேன்,

நானும் கேட்டு அறிந்து கொண்டேன். வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், கட்டிடங்களிலே அமர்ந்துதான் இந்தப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும் என்று இல்லாமல், வெய்யிலிலே, மரத்தடியிலே, மரத்து நிழலிலேகூட அமர்ந்து மக்களைச் சந்தித்து, மனுக்களைப் பெற்று, அந்த மனுக்களுக்கான முடிவுகளை உடனடியாக அதே இடத்திலே அன்று மாலை நேரத்திற்குள்ளாக அறிவித்தார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். அந்த முறையை மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஆங்காங்குள்ள வருவாய் அலுவலர்களும், கோட்டாட்சித் தலைவர்களும் பின்பற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

25 நாட்களுக்கு ஒரு முறை இந்த மனுநீதித் திட்டம் கிராமங்களுக்குச் சென்று, இன்றைக்கு நடைமுறையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்த இடத்திலேயே தீர்வு காண முடியாத மனுக்களை, இரண்டு வார காலத்திற்குள் முடிவு கண்டு, ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும், அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு 3 ஆண்டுகால இடைவெளிக்குள் வருவாய்த்துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், அனைத்து வருவாய்க் கிராமங்களையும் சென்று பார்த்து விட வேண்டும் என்றும் கூறப்பட்டு இருக்கின்றது.

முதியோர் உதவித் தொகை பெறக் கோரும் மனுக்கள் மீது அதிகபட்சம் 60 நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும். கருவுற்ற ஏழாவது மாதத்தில் பேறுகால உதவியை 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அது ரூ. 300-லிருந்து 500 ஆக உயர்த்தப்பட்டு இருப்பதும் உறுப்பினர்களுக்குத் தெரியும்.

விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும். 30 நாள் என்பதால், அதுவரையிலேயும் காத்திருக்கத் தேவையில்லை. ஒரு வாரத்திற்குள்ளேகூட அதை வழங்கினால் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமண உதவி ரூ. 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது. கடந்த ஆட்சியில் இந்தத் திட்டம் சீர்குலைக்கப்பட்டது. 18 வயது நிரம்பிய பெண்கள் என்பதை 21 வயது நிரம்பிய பெண்கள் என்று மாற்றியதன் காரணமாக கிராமப்புறத்திலே இருக்கிற ஏழை எளிய வீட்டுப் பெண்களால், அந்த உதவியைப் பெற முடியவில்லை. அதுமாத்திரமல்ல, நானே

பல மனுக்களை-புறக்கணிக்கப்பட்ட மனுக்களை எதிர்க் கட்சியிலேயிருந்தபோது நானே காண நேரிட்டது. சில பேர்கள் அச்சடித்திருக்கிற அழைப்பிதழில், இன்ன மண்டபத்தில் திருமணம் நடைபெறும், எனவே, இந்த உதவியைத் தாருங்கள் என்று கேட்டபோது, மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிற காரணத்தால் உதவி அளிக்க முடியாது என்றே பதில் தரப்பட்டது. மண்டபத்தில் திருமணம் நடத்தாமல் மரத்தடியிலா நடத்த முடியும்? மண்டபத்தில்தான் நடத்த முடியும். இருந்தாலும் கூட இந்தத் திருமண உதவி அன்றைக்கு கைவிடப்பட்ட நிலையிலே ஆகிவிட்டது. இந்தத் திருமண உதவியை அளிப்பதிலே இந்த மனுநீதி நாட்களிலே கலந்து கொள்கின்றவர்கள் சுறுசுறுப்பாக, ஆர்வத்தோடு, அக்கறையோடு செயல்பட வேண்டும்.

கிராம அதிகாரிகளைப் பற்றி இங்கே அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவது குறித்து நிதி நிலை அறிக்கையிலே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தொடுத்த வழக்கில், டிரிபியூனல் தீர்ப்பு அளித்துவிட்டது.. அப்படித் தீர்ப்பு அளித்த பிறகும், உச்சநீதிமன்றத்திலே அரசாங்கம் வழக்கு தொடர்ந்தது. ஏற்கனவே அவர்கள் அல்லோலகல்லோலப்பட்டு அகற்றப்பட்டார்கள். திடீரென்று நள்ளிரவில் அவர்கள் நடுத்தெருவிலே விடப்பட்டார்கள். அவர்களுடைய கணக்குகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. அப்படி அவதிப்பட்ட அந்தக் கிராம அதிகாரிகள், தங்களுடைய ஓய்வு ஊதியத்தையாவது பெறவேண்டும் என்பதற்காக டிரிபியூனலை நாடிச் சென்றபோது, சாதகமான தீர்ப்பைப் பெற்றபோது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்குக் கடந்த கால அரசு சென்றது. இப்போது, இந்த அரசு எடுத்துள்ள முடிவின்படி உச்சநீதிமன்றத்திலே கடந்த கால அரசு தொடுத்திருக்கின்ற வழக்கைத் திரும்பப் பெற்று, 8500 பேர் பயனடையத்தக்க அளவிற்கு ஓய்வு ஊதியத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1-55*

மேலும் மாவட்ட நிர்வாகம் நல்ல முறையிலே செயல்பட எந்த நடப்பாண்டிலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கட்டிடங்கள் கட்ட, கட்டிடங்கள் என்றால் கலெக்டர் அலுவலகங்கள் அல்ல. ஆங்காங்கே இருக்கின்ற சிறிய சிறிய கோட்டாட்சி, வட்டாட்சி

அலுவலகக் கட்டிடங்களைக் கட்ட, பழுது பார்க்க, வாகனங்கள், மின் கருவிகள் இவைகள் எல்லாம் வாங்க இந்த ஆண்டு முதன் முதலாக ரூ. 4.4 கோடி இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்டங்களைப் பற்றி இங்கே திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். நான் ஏற்கெனவே இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறேன். 1969-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், நம்முடைய தலைவர் அவர்கள், நம்மைவிட்டு மறைந்து முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டபொழுது நான் கூட எண்ணியதுண்டு-சில மாவட்டங்களுக்கு தலைவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்று. ஏனென்றால் ஆந்திராவில் பிரகாசம் மாவட்டம் என்ற ஒரு மாவட்டம் இருப்பதை நான் அறிவேன். எனவே அப்படித் தலைவர்களுடைய பெயரை வைக்கலாம் என்று எண்ணியபோது இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தலைவர்களுடைய எண்ணிக்கை அதிகம். எனவே ஒன்றை ஆரம்பித்தால் ஒவ்வொன்றாக படிப்படியாக வரும் என்பதற்காகத்தான் நீங்கள் தயவுசெய்து உங்களுடைய கவனத்தைத் திரும்பிப் பார்த்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

1969 முதல் 1976 வரையில் ஆட்சி கலைக்கப்பட்ட அந்தக் காலக்கட்டம் வரையில் அண்ணா பெயரையோ, பெரியார் பெயரையோ, பெருந்தலைவர் காமராசர் பெயரையோ, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரையோ யாருடைய பெயரையும் எந்த மாவட்டத்திற்கும் வைக்கவில்லை. ஒரு மாவட்டத்திற்கு வைத்தால் அது வளர்ந்து கொண்டே போகும் என்பதற்காகத்தான் சாலைகளுக்கு அந்தத் தலைவர்களுடைய பெயர்கள், பெரிய கட்டிடங்களுக்கு அந்தத் தலைவர்களுடைய பெயர்கள், பூஞ்சோலைகளுக்கு அவர்களுடைய பெயர்கள், கல்லூரிகளுக்கு அவர்களுடைய பெயர்கள் என்ற அளவிலே அந்தப் பெயர்கள் வைக்கப்பட்டன. ஆனால் அருமை நண்பர் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெரியார் பிறந்த ஈரோட்டைத் தலைநகராகக் கொண்ட அந்த மாவட்டத்திற்கு பெரியார் மாவட்டம் என்று பெயர் வைத்தார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து அண்ணா மாவட்டம், பெருந்தலைவர் காமராசர்

பெயரால் காமராசர் மாவட்டம் என்று பல மாவட்டங்கள் உருவாயின. இதிலே ஜாதியின் பெயரால் மாவட்டத்திற்கு பெயர் வைக்கக்கூடாது என்பதை நூற்றுக்கு நூறு நான் ஒத்துக் கொள்கின்றேன். அதிலே ஒரு சிறு சிக்கல் இருக்கிறது. சில பேருடைய பெயரை மாத்திரம் சொன்னால், அது எந்தத் தலைவர் என்று தெரியாத நிலை இருக்கின்றது. தமிழ்நாட்டிலே விடுதலை இயக்கத்தை நடத்திய மூன்று பெரும் தலைவர்களை அந்தக் காலத்தில் நாயுடு, முதலியார், நாயக்கர் என்றே அழைத்தார்கள். நாயுடு என்றால் வரதராஜுலு நாயுடு, முதலியார் என்றால் கல்யாணசுந்தர முதலியார், நாயக்கர் என்றால் ஈ.வே. ராமசாமி நாயக்கர் என்று இப்படி அழைக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஜாதி சனி என்ற பிடியிலேயிருந்து விலக வேண்டுமென்று சமுதாய எழுச்சி வலுப்பட வலுப்பட அதிலேயிருந்து நாம் ஓரளவு நம்மை விடுவித்துக் கொண்டிருக்கிறோம் என்றாலும்கூட சில பேருடைய பெயரை ஜாதியோடு சேர்த்துச் சொன்னால்தான் யாருக்கும் தெரியும். திடீரென்று கோயம்பத்தூரில் போய் ஜி.டி.என். சாலை என்று பெயர் வைத்தால் யாருக்கும் புரியாது. ஜி.டி. நாயுடு என்று சொன்னால்தான் புரியும். நாயுடுவை எடுத்துவிட்டு ஜி.டி.என். என்று சொன்னால் புரியாது. அதேபோல் தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரத்திற்கு எஸ்.எஸ். ராமசாமி என்று பெயர் வைத்தால் அது திரு. எஸ். எஸ். ராமசாமி படையாட்சியாருடைய பெயர் என்று நிச்சயமாக யாருக்கும் தெரியாது. அதேபோல் பசும்பொன் முத்துராமலிங்கம் என்று பெயர் வைத்தால் எந்த முத்துராமலிங்கம் என்ற குழப்பம் ஏற்படும். எனவேதான் சில தலைவர்களுடைய பெயர்களோடு ஜாதி ஒட்டிக் கொண்டிருப்பதைப் பிரிக்கமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவேதான் எம்.ஜி.ஆர். அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கம் என்று பெயர் வைத்தபோது அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், தலைவர்கள், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேவர் திருமகன் என்ற பெயர் வைக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில், நாங்கள், அது ஒரு ஜாதியாக முழுமையாகத் தெரியவில்லை என்ற காரணத்தால் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்று பெயர் வைத்தோம். பிறகு அது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றே மறுபடியும் மாற்றப்பட்டது கடந்த ஆட்சியிலே. அதுவும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்றே கருதுகின்றேன். எனவே ராமசாமி படையாட்சியாருடைய பெயருடன் படையாட்சியார் என்ற ஜாதிப் பெயர் சேர்ந்தால்தான் எல்லோருக்கும் விளங்கும். நான்

அன்றைக்கு ஒரு நிகழ்ச்சியிலோ அல்லது இங்கேயோ சொன்னது போல எதிர்காலத்தில் பெயரை விட்டு விட்டு இனிஷியல் மாத்திரம் சொல்ல ஆரம்பித்து எஸ்.எஸ்.ஆர். மாவட்டம் என்று சொல்ல ஆரம்பித்தால் அது, எஸ். எஸ். ராஜேந்திரன் மாவட்டமா என்ற சந்தேகம் கூட எல்லோருக்கும் ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால்தான் சில ஜாதிப் பெயர்கள் ஒட்டிக் கொண்டிருந்தாலும் அதை விடமுடியாத சூழ்நிலை நமக்கு இருக்கின்றது. ஆனால் தீரன் சின்னமலை என்று சொன்னால் போதும். அதிலே கவுண்டரைச் சேர்ப்பது தேவையே இல்லை. அதை கொங்கு வேளாள மக்களேகூட விரும்பவில்லை. ஜாதிப் பெயரைச் சேர்த்து தீரன் சின்னமலையினுடைய பெயரைக் குறுக்காதீர்கள். சின்னப் பெயராக ஆக்காதீர்கள் என்று அவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் கோவை கொங்கு வேளாள இளைஞர் சங்கத்தின் சார்பில் எனக்கு கோரிக்கை வந்ததின் பேரில், இப்போது தீரன் சின்னமலை மாவட்டம் என்று அந்த மாவட்டத்திற்குப் பெயர் வழங்கப்படுகிறது.

பிற்பகல் *2-00*

அண்ணா மாவட்டம் பற்றி சொன்னார்கள், அண்ணாவை அங்கும், இங்கும் போட்டு அலைக்கழிக்கிறீர்கள் என்று. அண்ணாவை யார், அலைக்கழிக்கிறார்கள் என்று நாட்டுக்கு நன்றாகத் தெரியும். அண்ணாவை இதயசுத்தியோடு உள்ளத்திலே வைத்து, அண்ணாவினுடைய கொள்கைப்படி, லட்சியத்தின்படி, நடந்து செல்பவர்கள் யார் என்பது எனக்கும் தெரியும். நாட்டிற்கும் தெரியும். தம்பி திருநாவுக்கரசுக்கும் மிக நன்றாகத் தெரியும். ஆனால், என்னுடைய ஆசையெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகரை மையமாக வைத்து, தலைநகரமாக வைத்து காமராஜர் மாவட்டம் என்று பெயர் இருக்கும்போது, தந்தை பெரியார் பிறந்த இடத்தைத் தலைநகராக வைத்து பெரியார் மாவட்டம் என்று பெயர் இருக்கும்போது, ஏன் அண்ணா பிறந்த காஞ்சீபுரத்தைத் தலைநகராக வைத்து, அது அண்ணா மாவட்டம் என்று இருக்கக்கூடாது என்பதுதான் எனக்கிருந்த ஆதங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏக்கத்தைப் போக்கிக்கொள்கின்ற வாயப்பு இப்போது கிடைத்திருக்கிறது. அடுத்து வருகின்றவர்கள் மாற்றிவிட மாட்டார்களா என்ற வருத்தத்தை திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் மாற்றும்போது திருநாவுக்கரசு அவர்கள்

இங்கேதான் இருப்பார். நம்மோடு இருந்து மாற்றுவதைத் தடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மாவட்டங்கள் 29 மாவட்டங்கள் என்று இங்கே குறிப்பிடப்பட்டன. எங்கெங்கே எந்தெந்த மாநிலத்திலே, மாவட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றெல்லாம் இங்கே பலரும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். தமிழகத்திலே, தற்போது மொத்தமுள்ள மாவட்டங்கள் 29. நான் அந்த மாவட்டங்களினுடைய பெயரைப் படிக்கிறேன். அதுதான் அந்த மாவட்டங்களினுடைய பெயர் என்று நீங்கள் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகளும் குறித்து வைத்துக் கொண்டு, அந்தப் பெயரையே புழக்கத்திலே கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். இங்கு முத்தரையரை எடுத்துவிட்டு பெரும்பிடுகு என்று சொன்னால் நன்றாக இருக்குமா? பெரும்பிடுகு முத்தரையர் என்று சொன்னால்தான், அந்தப் பெயருக்கு ஒரு கம்பீரம் இருக்கிறது. இந்த ஜாதி உணர்வு கூடாது என்று சொன்னாலும்கூட, பெரும்பிடுகு முத்தரையர் என்று சொல்லும்போதுதான் அந்தப் பெயருக்கு கம்பீரம் இருக்கிறது. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம். பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம். வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம். சில அச்சடிக்கப்பட்ட புத்தகங்களில்கூட எங்களுக்குத் தரப்படுகின்ற புத்தகங்களில்கூட, அம்பேத்கர் மாவட்டம் என்று சொல்லுகின்றார்கள். அது தவறு. பேருந்துகளில போய் கார் என்று எழுதவேண்டிய அவசியம் இல்லை. வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பெரியார் மாவட்டம், அண்ணா மாவட்டம், காமராஜர் மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், இராஜாஜி மாவட்டம் என்ற பெயர்களிலும், இஃதன்னியில் சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், மதுரை மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டம், சென்னை மாவட்டம் இப்படி

நிர்வாக வசதிக்காக இந்த மாவட்டங்களுடைய பெயர்களை நாம் அமைத்து, அழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டவேண்டிய மாவட்டங்கள் ஆகும். திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம் இவைகளில் எல்லாம் அறிவிக்கப்பட்ட மாவட்டங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்படவேண்டிய நிலைமையிலே உள்ளன. ஆனால், ஏற்கெனவே கடந்த ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற சிதம்பரனார் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம், கரூர்-தீரன் சின்னமலை மாவட்டம், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் அடிக்கற்கள் நாட்டப்பட்டிருக்கின்றதே தவிர கட்டிடங்கள் எழுப்பப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடங்கள் இன்னமும் கட்டுவதற்கான சூழ்நிலை அங்கே உருவாகவில்லை. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஓரளவிற்கு வேலைகள் துவங்கப்பட்டு, பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக அது கட்டப்படாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றது. வேறு இடத்திலே அந்த அலுவலகத்தைக் கட்டலாம் என்ற திட்டம் இந்த அரசுக்கு இருக்கிறது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம், ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டு இன்னமும் கலெக்டர் அலுவலகங்கள் கட்டப்படாத நிலையிலே உள்ள மாவட்டங்கள் அனைத்திற்கும் இன்னும் 3 ஆண்டுக்காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களும், தேவையான அலுவலகங்களும் கட்டி முடிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 2-05

இதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்ய உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிற்குத் தலைவராக பிரின்சிபல் கமிஷனர்-முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களும் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்

துறை-கட்டிடப் பொறியாளர், முதன்மை கட்டிட கலைஞர், பொதுப் பணித் துறை, நகரமைப்பு வல்லுநர் நகர ஊரமைப்பு இயக்ககம், தனி அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் இதன் அமைப்பாளராகவும் இருப்பார்கள். இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள அந்தக் குழு, அந்தப் பணிகளைச் செவ்வனே விரைவிலே முடிக்கக் கடமைப்பட்டுள்ள குழுவாகும். இந்த மாவட்டங்களில் கோட்டங்கள் அமைப்பது பற்றியும், வட்டங்கள் அமைப்பது பற்றியும் இங்கே பலரும் பேசியிருக்கிறார்கள். நம்முடைய பா.ம.க. சார்பிலே பேசிய கணேசன் அவர்கள் மகுடஞ்சாவடி மகுடஞ்சாவடி என்று சொல்லி எடப்பாடி எடப்பாடி என்று குறிப்பிட்டார். எடப்பாடி இருக்கிறது தலை இல்லை என்றார். என்ன செய்வது? பேரிலேயே 'பாடி' **(Body)** மாத்திரம்தான் இருக்கிறது. (சிரிப்பு) இருந்தாலும்கூட இந்தத் தாலுக்கா பிரச்சினைகள், கோட்டப் பிரச்சினைகள் இவைகளைப் பற்றியெல்லாம் நிச்சயமாக இந்த அரசு பரிசீலித்து நல்ல முடிவுகளை அறிவிக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கோட்டங்கள் என்பது இரண்டு தாலுக்காக்களாவது இருந்தால்தான் ஒரு கோட்டத்தை அமைக்க முடியும். ஒரு தாலுக்காவை வைத்துக்கொண்டு ஒரு வட்டத்தை வைத்துக்கொண்டு அதைக் கோட்டமாக ஆக்குங்கள் எனறால் ஆக்க முடியாது. இந்தச் சூழ்நிலையையும் நம்முடைய அதிகாரிகள் விளக்கியிருக்கிறார்கள். ஆங்காங்கே, தொடர்ந்து இதுபோன்ற கோரிக்கைகள் வரும்போது பொதுவாக தமிழநாட்டிலே உள்ள மாவட்டங்களில் இன்னும் தேவைப்படுகின்ற கோட்டங்கள் எத்தனை, வட்டங்கள் எத்தனை என்ற இவைகள் எல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது வருவாய்க் கோட்டங்கள் 72 இருக்கின்றன. வட்டங்கள் 195 இருக்கின்றன. உள்வட்டங்கள் 1106. வருவாய்க் கிராமங்கள் 17,271 இருக்கின்றன. இந்த மாவட்ட நிர்வாகிகளை நாம் எப்படிப் பயன்படுத்திக்கொள்கின்றோம்? சொன்னால் இந்த நேரத்திலே இது தேவையா என்று திருநாவுக்கரசு அவர்கள் கூட எண்ணக்கூடும். இருந்தாலும் ஒரு மாவட்ட வருவாய்த் துறையிலே உள்ளவர்கள் நிர்வாகத்திலே இருப்பவர்கள் மாவட்ட ஆட்சியாளரின் முதன்மை அலுவலராக இருப்பவர்கள் இவர்கள் எல்லாம் கூட கடந்த கால அரசைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும்.

குடந்தையில் 1992 ஆம் ஆண்டு மகாமக உற்சவம் நடைபெற்றது. அதிலே அரசின் கணக்கின்படி 48 பேர் இறந்தார்கள். 66 பேர் காயமுற்றார்கள். இதுசம்பந்தமாக நீதி விசாரணை வேண்டும் என்று இன்றைய கல்வி அமைச்சரும் கழகத்தினுடைய பொதுச் செயலாளருமான பேராசிரியர் அவர்கள் உயர்நீதி மன்றத்திலே ஒரு வழக்குத் தொடுத்து, நீதிவிசாரணைக்கு ஆணை கேட்டார்கள். ஆனால் நீதிமன்றம், கேட்ட அந்தத் தீர்ப்பை வழங்கவில்லை. அதே நேரத்திலே அதற்கு மாறாக அன்றைய அரசு தஞ்சை மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய கூடுதல் மாவட்ட மேஜிஸ்ட்ரேட் பிரவின் குமார் என்பவரை இந்த விபத்துக்கான காரணங்களை விசாரித்து அறிக்கை தருமாறு ஆணையிட்டது. விசாரணை அதிகாரி கூட்ட நெரிசலில் காயமுற்ற நபர்களில் தானாக விரும்பி சாட்சியளிக்க வந்தவர்களையும், காவல்துறை அதிகாரிகளையும், மருத்துவ அதிகாரிகளையும் மற்றும் பலதுறை அதிகாரிகளையும், பல தனிப்பட்ட நபர்களையும் சாட்சிகளாக விசாரித்துள்ளார். ஆனால் சில அதிகாரிகள், விசாரணை அதிகாரி சம்மன் அறிவிப்பு வழங்கியும் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதிலே வேடிக்கை என்னவென்றால் விசாரணை அதிகாரி--பேராசிரியர் கேட்டது உயர்நீதி மன்றத்திலே ஒரு நீதிபதியைக் கொண்ட விசாரணை வேண்டுமென்று. வழங்கப்படவில்லை. இருந்தாலும் அங்கு விசாரித்த விசாரணை அதிகாரி--கூடுதல் மாவட்ட மேஜிஸ்ட்ரேட் அவர்கள் அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், எந்தச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்த வேண்டும் என்று குறிப்பிடவில்லை, அதனால் சாட்சியங்களை வரவழைப்பதற்கோ, விபத்து சம்பந்தமான பொருள்களைச் சோதனை செய்வதற்கோ, பறிமுதல் செய்வதற்கோ குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்.

பிற்பகல் 2-10

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க இயலாததால் எந்த ஒரு நபரையும் சாட்சியம் அளிக்க நிர்பந்தப்படுத்த முடியவில்லை என்றும் விபத்து சம்பந்தமான பொருட்களைச் சோதனையிடவும், பறிமுதல் செய்யவும் முடியவில்லை என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார். அதற்குச் சான்றாக தூர்தர்ஷன் எடுத்த வீடியோ கேசட் விசாரணை அதிகாரி முன்பு பார்வைக்காகக் காட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். வீடியோ

கேசட் அதுவே சாட்சியமாகக் காட்டப்படவில்லை. "The example of the handicap was the non-provision of the video cassette by the Doordharshan in spite of letter and tele-messages sent" என்று அவர் குறிப்பிடுகிறார். இந்தக் குறைபாடுகளுக்கு இடையே அவருக்குக் கிடைத்த ஆவணங்களை வைத்தும் சாட்சியின் அடிப்படையிலும் சில முக்கியமான முடிவுகளைக் கொடுத்துள்ளார். விசாரணை அதிகாரி, காவல் துறையினர் விபத்து நடந்த நேரத்தை மாற்றி ஜோடிக்க முயன்றதை ஏற்கவில்லை என்று குறிப்பிடுகிறார். ஆனால் சுதந்திரமான சாட்சிகளின் அடிப்படையில் இந்த விபத்து 12-15 மணிக்குத் தான் நடந்து இருக்க வேண்டும் என்றும் 1-00 மணிக்கு நடைபெறவில்லை என்றும் கூறியுள்ளார்.

"Seeing all these above points, the statements of witnesses, and the material evidences, there is no hesitation in saying that the accident occurred around 12-15 p.m. when the Hon. Chief Minister had just left the Mahamaham Tank or was about to leave the Tank" 1980 ஆம் ஆண்டு நடந்த மகாமகம் விழாவில் காலையிலேயே நல்ல நேரம் அமைந்திருந்த காரணத்தால் 1980 ஆம் ஆண்டு காலை முதலே கூட்டம் வந்து சேர்ந்து கொண்டிருந்தது. ஆனால் 1992 ஆம் ஆண்டு அன்று 11-45 மணிக்கு தான் நல்ல நேரம் என்ற காரணத்தால் அதே நேரத்திலே அன்றைய முதலமைச்சரும் மகாமகம் குளத்திற்கு வந்த காரணத்தால் அனைத்து மக்களும் அங்கேயே தங்கி இருக்க வேண்டியதாயிற்று. அன்று பகல் சுமார் 1-00 மணி அளவிலே பாங்கூர் தர்மசாலை சத்திரத்தில் பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் கொடுத்ததாகவும், அதைப் பெற கூட்ட நெரிசல் அதிகமானதால் உணவுப் பொட்டலங்களைக் கூட்டத்தை நோக்கி வீசியெறிய ஆரம்பித்ததாகவும், எனவே உணவுப் பொட்டலங்களைப் பொறுக்கவும் நெரிசலிலிருந்து தப்பவும் தர்மசாலை இரும்பு கிரில் கேட்டையும் பிடித்து ஏறி வர முயற்சித்தபோது அந்த கேட் சிமெண்டு கட்டையோடு சாலையில் விழுந்ததாகவும் அதன் அடியில் மக்கள் சிக்கியதாகவும், சத்தத்தைக் கேட்டு மக்கள் சிதறி ஓடிய போது பலர் தடுமாறி கீழே விழுந்ததாகவும், அவர்கள் மீது ஏறி மிதித்துக் கொண்டு மக்கள் ஓடியதால் சிலர் காயம் அடைந்ததாகவும், மயக்கம் அடைந்தும் கேட்டின் அடியில் சிக்கி இறந்து போனதாகவும், பிறகு ஆம்புலன்ஸ் மூலம் மருந்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், காவல் துறையினர் கூறியுள்ளனர். ஆனால் விசாரணை அலுவலர் பாங்கூர்

தர்மசாலையில் எந்தவிதமான உணவுப் பொட்டலங்களையும் வினியோகிக்கவில்லை என்றும், உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்பட்டன என்று பேசப்பட்டது காவல் துறையின் கற்பனை என்றும் அந்த சாதாரண அதிகாரியே யாருக்கும் பயப்படாமல் உண்மையைக் கூறியிருக்கிறார். "..So, it will be a reasonable conclusion that no plan of food packets distribution was there at the Pangoor Dharmasala and the theory of food packets distribution is only an imaginary one, created by the Police Department for reasons best known to them." எந்த அளவுக்கு உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. (குறுக்கீடு)

1968 ஆம் ஆண்டு அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நான் பொதுப்பணித் துறை அமைச்சர். அப்போது காசிராமன் அவர்கள், ராமன் அண்டு ராமன் பஸ் சர்வீசுக்கு சொந்தக்காரர்-எம்.எல். ஏ. வாக இருந்தார். அவர் இதே சட்டசபையில் அண்ணா அவர்களையும், அவரோடு இணைத்து என்னையும் புகழ்ந்து பேசினார். மகாமகக் குளத்திற்கு முதல் நாளே 2, 3 நாட்களுக்கு முன்பே, சில வாரங்களுக்கு முன்பே பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி வந்திருந்து அந்தக் குளத்தைப் பார்வையிட்டு வடிகால், கொள்கால் வசதிகளை எல்லாம் எப்படிச் செய்யவேண்டும் என்று திட்டமிட்டுச் செய்து வடிகால் திறப்பு விழாவை நடத்தி வைத்து விட்டுச் சென்றார். எனவே, மகாமகம் சிறப்புற நடைபெற்றதாகவும், ஒரு பிக் பாக்கெட் கூட நடைபெறாமல், ஒரு அசம்பாவிதம் கூட நடைபெறாமல் அண்ணா அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட அக்கறையைப் பாராட்டுகிறேன் என்றும் இதே அவையிலே காசிராமன் அவர்கள்-காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பேசியிருப்பது நினைவு கூரத்தக்கது. அப்போது மைசூர் மகாராஜா அந்த மகாமகத்திற்கு வந்தார். அவர் வரும்போது அவரைப் பார்க்கக் கூட்டம் கூடும் என்பதற்காக தனி வழி அமைத்து, தனிப் பாதையில் அவர் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் 1992 ஆம் ஆண்டு மிக முக்கியமான பிரமுகர்களுக்கு இடம் தேர்வு செய்தவர்கள் இந்த விபத்துக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்த அதிகாரி கூறியுள்ளார். அவர் 1968-ஐயும் சுட்டிக்காட்டி 1992-ஐயும் சுட்டிக்காட்டி அதன்படி நடந்து இருந்தால் இந்த விபத்தே வந்து இருக்காது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். நான் நீண்ட நேரம் சொல்ல விரும்பவில்லை, சுருக்கமாகச் சொல்ல

விரும்புகின்றேன். இப்படி ஒரு அறிக்கை வந்தது. இந்த அறிக்கை யாருக்காவது தெரியுமா? இந்த அவையிலே வைக்கப்பட்டதா? அந்த அறிக்கை வந்தவுடன், அந்த அறிக்கை மீது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துக்களைப் பெற்று, 6–5–96 அன்று முன்னாள் முதலமைச்சருடைய கையொப்பம் பெற்று, மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அந்தக் கோப்பு முடிக்கப்பட்டு விட்டது.

பிற்பகல் 2-15

இது மாவட்ட நிர்வாகத்தைப் பற்றியும் பேச வேண்டிய மானியம் என்பதால் இதைப் பேசினேனே அல்லாமல், தொடர்பில்லாத விஷயம் அல்ல என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அமைச்சர்களைப் பற்றியும் பேச வேண்டியிருக்கின்றது. ஆடம்பரச் செலவுகள் ஓரளவு--ஏன், பெருமளவு ஒழிக்கப்பட்டால், வரிச் சலுகையினால் ஏற்படுகின்ற இழப்பை நிச்சயமாக ஈடு செய்ய முடியும். இவ்வளவு வரிச் சலுகை கொடுத்து விட்டாரே, என்ன ஆகுமோ என்ற கவலை நம்முடைய சொக்கருக்குக் கூட இருக்கிறது. நம்முடைய பழனிசாமிக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கிறது. இவ்வளவு வரிச் சலுகையா, இவ்வளவு வரிச் சலுகையா என்று! இதை எப்படி ஈடுகட்டப் போகிறோம் என்ற கவலை எல்லோரையும்விட, முன்னாள் முதலமைச்சருக்கு இருக்கிறது. இவ்வளவு துண்டு விழுகிற பட்ஜெட் வந்திருக்கிறதே, எப்படி ஈடுகட்டப் போகிறார் கருணாநிதி என்று கூட அம்மையார் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள்.

ஆடம்பரச் செலவுகளைப் பெருமளவு குறைத்தாலே நிச்சயமாகச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இன்னும்கூட வரிச் சலுகை வழங்கலாம். நீங்கள் கேட்ட வரிச் சலுகையெல்லாம், இந்த ஆடம்பரச் செலவுகளையெல்லாம் நானும் குறைத்து, அமைச்சர்களும் குறைத்து, அதிகாரிகளும் எங்களோடு ஒத்துழைப்பார்களேயானால் இன்னும்கூட வரிச் சலுகைகளை அடுத்த பட்ஜெட்டிலே உங்களுக்கு அறிவிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

ஒன்றிரண்டைக் கோடிட்டுக் காட்டுகிறேன். கடந்த ஐந்தாண்டுகளில் முன்னாள் முதலமைச்சர் கலந்து கொண்ட விழாக்களுக்கு ஆன செலவு--உலகத் தமிழ் மாநாடு, தெற்காசிய விளையாட்டுப் போட்டி, இரண்டையும் விட்டு விடுகிறேன்.

இரண்டுக்கும் மொத்தம் ஆன செலவு ரூபாய் 27 கோடி விழாச் செலவு. அதை விட்டு விடுகிறேன். ஏனென்றால், விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிகச் செலவு மற்ற நாடுகளில் நடைபெறுகிறது, அதை விட்டு விடுகிறேன்.

உலகத் தமிழ் மாநாடு. அது அதிகச் செலவுதான். அண்ணா இருக்கும்பொழுது ரூ. 2, 3 கோடி. எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திய பொழுது ரூ. 7, 8 கோடி அல்லது 10 கோடி. இப்பொழுது எத்தனை கோடி? ரூ. 74 கோடியோ 80 கோடியோ. அன்றைக்குத் தமிழ்க்குடிமகன் அவர்கள்-அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே அதை வெளியிட்டார்கள். எனவே (குறுக்கீடு) அது ரூ. 74 கோடி.

இந்த இரண்டு மாநாட்டுச் செலவையும், விளையாட்டுப் போட்டிச் செலவையும் சேர்க்காமலே முதலமைச்சர் கலந்து கொண்ட விழாக்களுக்கான மொத்தச் செலவு, இந்த 5 ஆண்டுக் காலத்தில் 27 கோடியே 56 லட்சத்து 43 ஆயிரத்து 856 ரூபாய். 1991-96 இந்த 5 ஆண்டுக் காலத்தில், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தனிப்பட்டவர்களுடைய விமானத்தை வாடகைக்கு உபயோகப்படுத்தியதன் காரணமாக ஆன செலவு-அப்பொழுது விமானம் வாங்கவில்லை--4 கோடியே 8 லட்சத்து 40 ஆயிரத்து 57 ரூபாய். இது தவிர, அரசின் ஹெலிகாப்டரை உபயோகப்படுத்த ஆன செலவு 20 லட்சத்து 62 ஆயிரத்து 481 ரூபாய். அரசாங்கத்தின் விமானத்தைப் பயன்படுத்திய வகையில் ஆன செலவு 39 லட்சத்து 95 ஆயிரத்து 831 ரூபாய். இவ்வாறு பயணம் செய்ய ஒரேயடியாக வாங்கப்பட்ட விமானத்தின் விலை-விமானம் விலை 19 கோடியே 85 லட்சத்து 12 ஆயிரத்து 662 ரூபாய். ஹெலிகாப்டர் விலை 19 கோடியே 69 லட்சத்து 29 ஆயிரத்து 428 ரூபாய். இந்த இரண்டையும்தான் விற்பதாக அரசு முடிவு செய்திருக்கிறது. அதிலே ஒரு 40 கோடி ரூபாய் ஏறத்தாழ வருமானம் வர இருக்கிறது. ஆகவே, வரிச் சலுகைக்காக யாரும் கவலைப்பட வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தற்போது ஆண்டு ஒன்றுக்கு இந்த விமானங்களைப் பராமரிக்க ஆகிற செலவு ரூ. 80 லட்சம். ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்புச் செலவு. இந்த விமானங்கள் நிற்க மாதம்தோறும் தருகின்ற வாடகை 20 ஆயிரம் ரூபாய். இதையெல்லாம் எண்ணித்தான் இந்த விமானங்களை நாம் விற்பதாக இருக்கிறோம்.

இன்னொன்று 1989–90, 1990–91 இரண்டு ஆண்டுகள் நான் முதலமைச்சராக இருந்தது உங்களுக்கெல்லாம் ஞாபகத்திலே இருக்கும். இந்த 1989–90-இல் என்னுடைய இல்லத்தினுடைய-முதலமைச்சருடைய இல்லத்தினுடைய பராமரிப்புச் செலவு 99 ஆயிரத்து 624 ரூபாய்; 1990–91–இல் முதலமைச்சருடைய இல்லத்துப் பராமரிப்புச் செலவு 44 ஆயிரத்து 64 ரூபாய். இரண்டு ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 688 ரூபாய். முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய இல்லப் பராமரிப்புக்கான செலவு, 1991–92–ல், ஒரே ஆண்டில் ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 618 ரூபாய். 1992–93–ல் 22 இலட்சத்து 73 ஆயிரத்து 68 ரூபாய். முதலமைச்சர் வீடாக இருந்தாலும், எந்த அமைச்சர் வீடாக இருந்தாலும், அந்த வீட்டுப் பராமரிப்புக்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு செலவு இருக்கிறது. இப்படி அதிகமாகச் செய்யப்பட்ட செலவை இந்த அரசு பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், இந்த 5 ஆண்டுகளிலே இல்லத்தினுடைய பராமரிப்புச் செலவுக்கு மாத்திரம் 31 இலட்சத்து, 54 ஆயிரத்து 638 ரூபாய்.

பிற்பகல் 2-20

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தினுடைய விமானங்களைப் பயன்படுத்திய பாக்கிகள் ஏதாவது இருக்கிறதா? அப்படி ஏதாவது இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: எல்லாவற்றிற்கும் நிவாரணமாகத்தான் விமானங்களை விற்பதாக இருக்கிறோமே.

நான் 1989–90, 1990–91–ல் தொலைபேசிக்காக செலவழித்தது 6 இலட்சத்து 93 ஆயிரத்து 387 ரூபாய். நானே அடிக்கடி தொலைபேசியிலே, யார் எனக்குத் தொலைபேசியிலே சொன்னாலும், என்னுடைய பி.ஏ. எடுப்பதற்கு முன்பே நானே தொலைபேசியை எடுத்துப் பேசுவது வழக்கம். எந்த ஊரிலே நிகழ்ச்சி என்றாலும் நானே டயல் செய்து அந்த அதிகாரிகளோடு பேசுவது வழக்கம். அப்படி அடிக்கடி தொலைபேசியிலே பேசியும்கூட 6 இலட்சத்து

93 ஆயிரத்து 387 ரூபாய்தான் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஆனது. முன்னாள் முதலமைச்சருக்கு 1993-94-ல் மாத்திரம் 8 இலட்சத்து 28 ஆயிரத்து, 583 ரூபாய். 1994-95-ல் 9 இலட்சத்து 46 ஆயிரம். 1995-96-ல் 9 இலட்சத்து 13 ஆயிரம். 1991-92-ல் 2 இலட்சத்து 51 ஆயிரம். 1992-93-ல் 6 இலட்சத்து 49 ஆயிரம். ஆக மொத்தம், 35 இலட்சத்து 89 ஆயிரத்து 961 ரூபாய்.

பிரயாணச் செலவு இருக்கிறதே அது இந்த 5 ஆண்டு காலத்தில் அவர்களுக்கு ஆனது எனக்கு ஆனது--9 இலட்சத்து 27 ஆயிரத்து 446 ரூபாய். இரண்டு ஆண்டு காலத்திற்கு எனக்கான செலவு 9 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய். 5 ஆண்டு காலத்திற்கு அம்மையார் அவர்களுக்கு ஆனது--3 கோடியே, 8 இலட்சத்து 94 ஆயிரத்து 666 ரூபாய்.

இதோ என்னுடைய கையிலே இருப்பது தமிழக அரசினுடைய, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் நாகமாணிக்கம் என்பவர், தமிழக அரசின் வருவாய்த் துறைச் செயலாளர் அவர்களுக்கு 13-4-96 அன்று எழுதிய கடிதத்தினுடைய நகல். அசல், கோப்பிலே இருக்கிறது. கடிதத்தினுடைய எண் சி.டி.ஒ.சி. 20233/96. இந்த ஆண்டு ஜனவரி 11, 12 ஆகிய நாட்களில், அதாவது 1996, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தங்களுடைய தொகுதியான பர்கூரில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றபோது, பொதுப் பணித்துறை மாத்திரம் செய்த செலவுகளுக்கு ஒப்புதல் பெற எழுதிய கடிதம். பொதுப் பணித்துறை மாத்திரம் செய்த செலவுகளுக்கு. அதில் 47 அயிட்டங்கள். அதிலே முக்கியமானவை, பந்தல், மேடை அலங்காரம், போன்றவைகளுக்கான செலவு 32 இலட்சத்து 62 ஆயிரத்து 684 ரூபாய். பேரிகேடு கட்ட--வழியிலே பேரிகேடு, அதாவது சவுக்குக் கம்புகளைக் கட்டி பிறகு அவற்றை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அந்தப் பேரிகேடு கட்ட 10 இலட்சத்து 45 ஆயிரத்து 415 ரூபாய். தரையைச் சமப்படுத்தி நாற்காலிகள் போட ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 634 ரூபாய். ஹெலிபேட் அமைக்க ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 168 ரூபாய். ராஸ்ட்ரம் அமைப்பதற்கான செலவு ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 543. ராஸ்ட்ரம், நின்று கொண்டு பேசுகிறோமே, அதை வாடகைக்குக்கூட வாங்கலாம் 10 ரூபாய்க்கு. அதற்கு ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 543 ரூபாய். மேடைக்குச் செல்லும் படிகளை அமைக்கச் செலவு 72 ஆயிரத்து 92 ரூபாய். மேடையிலே டாய்லெட் செலவு

3 இலட்சத்து 9 ஆயிரத்து 87 ரூபாய். ஆக மொத்தம் 51 இலட்சத்து 34 ஆயிரத்து 633 ரூபாய். இது பொதுப்பணித்துறை சம்பந்தப்பட்டது மாத்திரம். இன்னும் மின்சாரச் செலவு வேறு இருக்கிறது. வேறு செலவினங்கள் இருக்கின்றன என்று கடிதம் எழுதியிருக்கிறார். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இப்படியெல்லாம் ஆடம்பரச் செலவுகள் நாங்கள் செய்யமாட்டோம். செய்தால் தட்டிக் கேட்போம் என்று சொல்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் எதிரே இருப்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வேறு, மோகன் கந்தசாமி வேறு பயமுறுத்துகிறார் நாங்கள் ஆட்சிக்கு வரப்போகிறோம் என்று. எனவே, நாங்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருப்போம் என்று கூறி, இங்கே வைக்கப்பட்ட கோரிக்கைகள், ஆலோசனைகள் அனைத்தையும் இதயபூர்வமாக வரவேற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகின்றேன். வணக்கம்.

பிற்பகல் 2-25

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : சார், ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை பேருக்கு கிளாரிபிகேஷன்? (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவரைத்தான் அனுமதிப்பேன். (குறுக்கீடு) திரு. எஸ். திருநாவுக்கரசு.

***திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் இராசிபுரத்தை, தனிக்கோட்டமாக ஆக்க வேண்டுமென்று கேட்கவேண்டுமாம். அதைத்தான் உங்களிடம் பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறார். அவர் சார்பிலே அதை வேண்டுகோளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன்.

இரண்டாவது, முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகிறபோது மாவட்டங்களைப் பற்றிச் சொல்கின்றபோது, தொகுத்துச் சொல்லிக் கொண்டு வரும்போது, இரண்டு பேரும் இங்கேதான் இருப்போம். இருக்கிறோம். ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். அது அப்படியில்லை. பத்திரிகையிலே செய்தி வருகிறபோது வேறு மாதிரி வரும். என்ன அர்த்தத்திலே முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னால், நானும் அவரும் எல்லா தேர்தல்களிலும்--அவரும்

எல்லா தேர்தல்களிலும் ஜெயித்துக் கொண்டு வருகிறார். நானும் 6 தேர்தல்களிலே ஜெயித்துக் கொண்டு வருகிறேன். எப்படி ஆட்சிகள் மாறினாலும் கூட கட்சிகள் மாறினாலும் இரண்டுபேரும்-எம்.எல்.ஏ.-வாக வந்து விடுவோம் என்ற பொருளிலே சொன்னதாக அதைப் பத்திரிகைகளிலும் சபைக் குறிப்பிலும் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சாமார்த்தியமாக தப்பித்துக்கொண்டதற்குப் பாராட்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

***திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே மாண்புமிகு திருநாவுக்கரசை தப்பித்துக் கொண்டதாகச் சொன்னார்கள். அது 'எங்கள் அப்பன் குதிருக்குள்ளே இல்லை' என்று சொல்லக்கூடிய கூற்றில் அமைகிறதா என்பது எனக்குத் தெரியவில்லை, இருந்தாலும் ஒரே ஒரு கிளாரிபிகேஷன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது விலையெல்லாம் சென்னையிலே கூட்டுறவு அங்காடியிலே குறைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். அப்படி எல்லா இடங்களிலும், தமிழகத்தில் எல்லாத் தொகுதிகளிலும் இன்னும் ஏனோ விலையெல்லாம் குறையாமல் இருப்பதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு ஏதாவது ஒரு அமைப்பை, ஏதாவது ஒரு பறக்கும் படை போன்றவற்றை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா? அதோடு அவர்கள் சைவமாக மாறிவிட்ட காரணத்தாலே, மட்டன் விலையெல்லாம் நூறு ரூபாய் என்றெல்லாம் ஏறிக்கொண்டே போகிறது. அதிலே வரியும் இல்லை. ஏன் இப்படி ஏறிக்கொண்டே போகிறது? அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது முதலமைச்சர் அவர்கள் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிந்தது, (குறுக்கீடு) அத்தனை பேரையும் பேச விடுகிறேன் நான். (குறுக்கீடு) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், கேளுங்கள். என்னை மிரட்டிக் கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் சொல்லும்போது இந்தக் கிராம அதிகாரிகளைப் பற்றி சொன்னார்கள். அவர்களுக்கு மாத பென்ஷன்

கொடுப்பதை நாங்கள் முழு மனதோடு ஏற்றுக் கொண்டு வரவேற்கின்றோம். அவர்களுக்கு எவ்வளவு மாதா மாதம் கொடுக்கப்படும்? அதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் எந்த மாதத்திலேயிருந்து கொடுக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அவைகளையெல்லாம் பரிசீலித்து, அவர்கள் மகிழத்தக்க அளவிற்கு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் நிறைந்த பிரச்சினைகள் அதிர்ச்சிக்கு உள்ளாக்குவதான ஒன்றாகும். நான் கடந்த முறையும் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். எல்லாத் துறைகளிலும் கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் நடைபெற்ற ஊழல்களை, தொடுக்கப் போகிற வழக்குகளுக்கு இடையூறு இல்லாமல் முழுமையாகத் தொகுத்து இந்தப் பேரவையில் வெள்ளை அறிக்கை கட்டாயம் வைக்கப்படவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில், கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் நடைபெற்ற ஊழல்கள் எதிர்காலத்திலும் நடைபெறாமல் இருக்க எச்சரிக்கையாக அமையும் என்பதால் அவற்றை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கே அதைச் சொன்னேன். இப்போது இங்கே எழுப்பிய கேள்விகளில் திருநாவுக்கரசு எழுப்பியது இராசிபுரம் கோட்டமாக ஆகுமா என்பது-இரண்டு வட்டங்கள்கூட இல்லாத நிலையிலே எப்படிக் கோட்டமாக ஆக முடியும் என்பதை இந்த அவையிலே அனுபவம் பெற்ற திருநாவுக்கரசு அவர்கள்தான் எனக்குச் சொல்ல வேண்டும். தனியாகச் சொன்னாலே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருமே எழுந்திருக்கிறீர்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு (குறுக்கீடு) நான் அனுமதிக்கவே முடியாது. (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கையைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் முக்கியம்தான் (குறுக்கீடு) நீங்கள் எல்லாம் மிரட்டக்கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பேரவைத் தலைவரை மிரட்டக்கூடாது. பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 'அவையை எப்படி நடத்துவது என்று எனக்கு நீங்கள் அறிவுறுத்தக்கூடாது. (குறுக்கீடு) 2, 3 பேர்களுக்கு கிளாரிபிகேஷன் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அதற்காக 234 பேர்களையும் கிளாரிபிகேஷன் கேட்க அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு)

பிற்பகல் 2-30

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் மானியக் கோரிக்கைகளின் மீது அமைச்சர்கள் ஒவ்வொரு ஏடாக அளித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் அனைத்தையும் தொகுத்து அதையே வெள்ளை அறிக்கையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக்கூட முன்னாள் அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதிகாரிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அந்த அமைச்சரோடு சேர்ந்து அதிகாரியும் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதிகாரி யார் என்பதை இந்த அவையிலே உள்ளவர்கள் அறிந்தால் இந்த ஆட்சி தயவுதாட்சண்யம் இல்லாமல், ஆட்சிக்கு நெருங்கியவர்களைச் சேர்ந்த அதிகாரிகளையும் தண்டிக்கிறது, கைது செய்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்--நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 77,01,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன், திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 95,27,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 11–மாவட்ட நிருவாகம்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 311,89, 27,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (7–8–1996) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

44. கோரிக்கை எண் 4-தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் ஏனைய வரிகள், தீர்வைகள்-நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *1996–97* (தமிழ், ஆங்கிலம்).

45. கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *1996–97* (தமிழ், ஆங்கிலம்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - I

கோரிக்கை எண் 4

தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

(376 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

முன்னுரை

வணிகவரித் துறை, மிக அதிக அளவு வருவாய் ஈட்டித்தரும் மாநில அரசுத் துறையாகும். 1995-96 ஆம் ஆண்டில் இத்துறையினால் வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 5023 கோடியாகும். இது மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 70 விழுக்காடாகும். இத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையரின் தலைமையில் இயங்குகிறது.

[1996 ஆகஸ்ட் 6

2. வணிகவரித்துறை பின்வரும் வரிவிதிப்புச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது

* தமிழ்நாடு *1959* ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1970* ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1971* ஆம் ஆண்டு விற்பனை வரி மேல்வரிச் சட்டம்.
* *1956* ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1939* ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1961* ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.
* தமிழ்நாடு *1935* ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1981* ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1983* ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.
* தமிழ்நாடு *1990* ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

3. இத்துறையில் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின்கீழ் ஆண்டு வாரியாக வசூலிக்கப்பட்ட மொத்த வரி வருவாய் பின்வருமாறு:–

1996 ஆகஸ்ட் 6]

வரி வருவாய்

சிறு தலைப்புகள்	1990-91	1991-92	1992-93	1993-94	1994-95	1995-96
			(ரூபாய் கோடியில்)			
பொது விற்பனை வரிச் சட்டத்தில் விற்பனை வரி.	1322	1570	1843	2112	2507	2967
கூடுதல் விற்பனை வரி	297	340	381	443	553	681
விற்பனை வரி மேல்வரி	135	182	230	263	330	395
கூடுதல் மேல்வரி	25	27	..	..	47	56
பிற	..	11	51	..	16	20
பொது விற்பனை வரி (உட் கூடுதல்)	1779	2130	2505	2818	3453	4119
மத்திய விற்பனை வரி	276	330	362	393	477	590
கேளிக்கை வரி	70	69	76	82	88	99
பந்தய வரி	5	5	5	6	5	6
சொகுசு வரி	17	17	22	28	36	51
நுழைவு வரி	20	25	42	70	105	158
மொத்த வரி வருவாய்	2167	2576	3012	3397	4164	5023

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முக்கியக் கொள்கை மாற்றங்கள்:

4. தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தூய்மையான மற்றும் திறமையான நிர்வாகம் அமைய வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கையைக் கருத்திற்கொண்டு *1996–97* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள தொலைநோக்கு வரி விதிப்புக் கொள்கையின் காரணமாக, *1996–97* ஆம் ஆண்டு வணிக வரித் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகத் திகழ்கிறது. இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாவன:—

* வரி விதிப்பில் பெரிதும் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தும் நோக்குடன் வரிவீதம் மற்றும் படிமுறைகளின் (Slabs) கட்டமைப்பைச் சீரமைத்தல், வரி விதிப்பு மற்றும் வசூலினை எளிமையாக்குதல்.

* புதிய வரிவிதிப்பு நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

* மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதுடன் உள்ளூர் கொள்முதல் மற்றும் உற்பத்தி வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

* மிக அதிக எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு வரி விலக்கு, இணக்க வரி முறை மற்றும் சுயவரி விதிப்பு முறைகளின் வாயிலாக நிவாரணம் வழங்குதல்.

* மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுக்கு வரிப் பளுவினைக் குறைத்தல்.

பொது விற்பனை வரிக் கட்டமைப்பில் முக்கிய மாற்றங்கள்:

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொலைநோக்கு வரிவிதிப்புக் கொள்கையின் நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி வீதம் மற்றும் படிமுறைகளைச் சீரமைத்திட பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருமுனை வரி விதிப்பு:

6. அரசின் கொள்கையைக் கருத்திற் கொண்டு அண்மைக்காலம் வரை ஆறாவது அட்டவணையிலிருந்த (முதல் மற்றும் இரண்டாம் முனை வரிவிதிப்புக்குட்பட்டிருந்த) மதுபானம் தவிர அனைத்துப் பொருட்களும் முதல் அட்டவணைக்குக் கொண்டுவரப்பட்டு ஒருமுனை வரி விதிப்பிற்கு மாற்றப்பட்டுள்ளன.

பல்வேறு வரிவிகிதங்களை ஒருங்கிணைத்தல்:

7. பொருள்களின் விற்பனை / கொள்முதல் மீது இதுவரை பின்வரும் வரிகள் விதிக்கப்பட்டு வந்தன.

(அ) அடிப்படை விற்பனை வரி.

(ஆ) விற்பனை வரிமீது மேல்வரி-இதுவரை விற்பனை வரியில் 15 % ஆக விதிக்கப்பட்டு வந்தது.

1996 ஆகஸ்ட் 6]

(இ) கூடுதல் மேல் வரி - இதுவரை விற்பனைவரியில் 5% ஆக விதிக்கப்பட்டு வந்தது.

(ஈ) கூடுதல் விற்பனை வரி - இதுவரை ரூ. 10 இலட்சத்திற்கு மேல் வரிவிதிப்புக்குட்பட்ட விற்பனையளவுள்ள வரிவிதிப்புக் குரியவர்கள் மீது மொத்த விற்பனையளவில் 1.5% முதல் 3% வரை படிப்படியான அளவில் விதிக்கப்பட்டு வந்தது.

8. தற்போதைய சீரமைப்பு முன்மொழிவுகள் கீழ்க்கண்ட வகையில் வரிவிதிப்பை எளிமையாக்கிடும்:-

(i) மாநிலம் முழுவதும் எல்லாப் பொருட்களுக்கும், ஏறத்தாழ 1.5 இலட்சம் வரிவிதிப்புக்குரியவர்களுக்கு சலுகைப் பலனளிக்கும் வகையில் அனைத்துப்பொருட்களின் மீதும் மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி 17-7-1996 முதல் அறவே நீக்கப்பட்டுள்ளன.

(ii) கூடுதல் விற்பனைவரி விதிப்பிற்கான வரிவிதிப்பு - விற்பனையளவை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தியதன் மூலம், தற்போது கூடுதல் விற்பனை வரி விதிப்புக்குட்படும் 70,000 பேர்களில் 99 சதவீதத்தினர்க்கும் மேற்பட்டவர்களுக்குக் கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.100 கோடி வரை வரிக்குட்படும் விற்பனை அளவு உள்ளவர்கள் சூலை 96 முடிய மட்டுமே பழைய வீதங்களில் கூடுதல் விற்பனை வரி செலுத்த வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கப்பட்டபோது முகவர்களின் விற்பனைத் தொகையை ஒருங்கிணைத்து, அவர்களின் முதன்மை நிறுவனத்தின் மீது, கூடுதல் விற்பனை வரி விதிப்பது தொடர்பாக ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கிடையே தமிழகத்திற்கு வெளியே தலைமையகத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களின் கிளைகள் அல்லது முகவர்களுக்கு கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான உயர்த்தப்பட்ட உச்ச வரம்பு, பொருந்தாது. முன்பிருந்த நிலையே நீடிக்கும்.

[*1996 ஆகஸ்ட் 6*

(iii) மேல்வரி, கூடுதல் மேல்வரி அறவே நீக்கப்பட்டு, கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான விற்பனையளவில் குறிப்பிட்ட அளவுக்கு மாற்றம் செய்ததின் காரணமாக அடிப்படை வரிவிகிதங்களில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. பழைய அடிப்படை வரிகளோடு ஒப்பிட்டு ஒட்டுமொத்த புதுவரி விகிதங்கள் பின்வரும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பழைய அடிப்படை வரி விகிதம் 3 சதவீதமானாலும், மேல்வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றைச் சேர்த்து ஒட்டுமொத்த வரிவிகிதம் 5.6 சதவீதமாக அமைகிறது. அது தற்போது 4 சதவீதமாக்கப்பட்டுள்ளது. பிற வரிவிகிதங்களும் அவ்வாறே அமைகின்றன.

தற்போதைய வரிவிகிதம் சதவீதத்தில்	மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வரி விகிதம் சதவீதத்தில்	புதிய வரி விகிதம் சதவீதத்தில்
1	3	2
3	5.6	4
5	8	8
8	11.6	12*
12	16.4	16
16	21.2	20

*நிதி நிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளித்தபோது 12 சதவீதத்தை 11% ஆக 17-7-96 முதலே குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சீர்திருத்தி அமைப்பதில், வரி விலக்கு அளித்தல் அல்லது குறைந்த படிமுறை வரி வீதத்தில் கொண்டு வருதல் மூலமாக அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கவனத்தில் கொண்டு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 6]

புதிய வரி விதிப்பு முறைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு

9. சிறந்த புதிய வரிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் அவசியத்தின் தொடர்பாக, மாநில அரசு மற்றும் வரி நிபுணர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதன் அடிப்படையில் மதிப்புக் கூட்டுவரி **(Value Added Tax)** *அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முனைவர் ராஜா செல்லையா தலைமையிலான குழு இப்பொருள் குறித்து 1994 ஆம் ஆண்டு அறிக்கை கொடுத்துள்ளது. அவ்வறிக்கை பல்வேறு மாநிலங்களின் நிதியமைச்சர்களைக் கொண்ட குழுவினால் ஆய்ந்து விவாதிக்கப்பட்டது. அக்குழுவில் தமிழ்நாடும் அங்கம் வகித்தது. அக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:*

(அ) வரிக் கட்டமைப்பைச் சீரமைத்தல் மற்றும் எளிமைப்படுத்துதல்.

(ஆ) மாநிலங்களுக்கிடையே இணக்கமான வரி வீதங்களை உருவாக்குதல்.

(இ) மதிப்புக் கூட்டுவரி முறையைப் படிப்படியாக அறிமுகப்படுத்துதல்.

மேற்சொன்ன வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு பின்வருமாறு ஒட்டுமொத்த நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:-

(அ) தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருட்கள் :

10. இதுவரை சட்டத்தின் பிரிவு 3(3)ன் கீழ் மூலப் பொருட்கள் கொள்முதல் செய்வதில் சலுகை வரி வீதம் அனுபவித்து வரும் தொழிற்சாலைகள் ஒட்டுமொத்த வரி 5.6 சதவீதம் செலுத்தி வந்தன. இது 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ஆ) முதலீட்டுப் பொருட்கள் கொள்முதலில் சலுகைகள் :

11. மூலப் பொருட்களுக்கான 3 சதவீத சலுகை வரிவிகிதம் முதலீட்டுப் பொருட்களுக்கு இதுவரை இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு எந்திரங்கள், விசை பம்புகள், பவர்ஃபாக்டர்ஸ்

[*1996 ஆகஸ்ட் 6*

(Power factors) மற்றும் ஷண்ட் கப்பாசிட்டர்ஸ் (Shunt capacitors), ஆயில் என்ஜின்கள், எரிஉலை மற்றும் கொதிகலன்கள், ஜெனரேட்டர்செட் மற்றும் தொடர்புடைய உட்பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கு தற்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) மின் உற்பத்திக்கான முதலீட்டுப் பொருட்கள்:

12. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மின் உற்பத்திக்காக, மாநிலத்துக்குள் வாங்கப்படும் முதலீட்டுப் பொருட்களுக்குச் சலுகை *12* சதவீதமாக இருந்த வரி விகிதம் *3* சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ஈ) 100% ஏற்றுமதி அலகுகள்:

13. 100% ஏற்றுமதி அலகுகள் மற்றும் சென்னை ஏற்றுமதி மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள அலகுகள் (MEPZ) மாநிலத்திற்குள் வாங்கும் அனைத்து மூலப் பொருட்களுக்கும் விற்பனை வரிவிதிப்பிலிருந்து முற்றிலும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

(உ) கரும்பின் மீது கொள்முதல் வரி:

14. கரும்பின் மீது இதுவரை *11* சதவீதமாக இருந்த அடிப்படை வரிவிகிதம் பிற வரிகளோடு சேர்ந்து *14.7* சதவீதமாக இருந்தது. அது சர்க்கரைத் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் வகையில் *8* சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ஊ) மதிப்புக் கூட்டு வரி:

15. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மதிப்புக் கூட்டுவரி, (VAT) முதற்கட்டமாக ரூ.*75* இலட்சத்திற்கு மேல் விற்பனையளவு கொண்டவர்கள் மறுவிற்பனை கட்டத்தில் செய்யும் மதிப்புயர்வின் மீது விதிக்கப்படும். இவ்வரிவிதிப்பு *1-10-96* முதல் நடைமுறைக்கு வரும்.

சிறு வணிகர்களுக்கான சலுகைகள்.

16. இதுவரை வரிதிப்பு அலுவலர்களின் விரிவான கணக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் அதிக எண்ணிக்கையிலான சிறு வணிகர்களின் இடர்நீக்க சீரமைப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. முன்பிருந்த நடைமுறைப்படி பொருள்

1996 ஆகஸ்ட் 6]

வாரியாகக் கணக்குப் பராமரிக்கப்படவேண்டும். மேலும் அது சிக்கலான வரிவிதிப்பு நடைமுறைகளைக் கொண்டது. பின்வரும் சீர்திருத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) வரிவிலக்கு வரம்பு அதிகரிப்பு :

17. வரிவிதிப்பு வரம்புக்குள் வர இதுவரை விற்பனையளவு ரூபாய் ஒரு இலட்சம் ஆகும். இது ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,000-க்கும் அதிகமானவர்கள் பயனடைவர்.

(ஆ) இணக்க வரி விதிப்பு முறை (Compounding System) :

18. ரூ.3 இலட்சத்துக்கு மேல் ரூ.10 இலட்சத்துக்கு மேற்படாத விற்பனையளவுள்ள வரி விதிப்புக்குரியவர்களுக்கு வரி செலுத்துவதற்கு இணக்க வரிவிதிப்பு முறை பின்வருமாறு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ரூ. 3 இலட்சம் மற்றும் அதற்கு மேல்; ரூ. 5 இலட்சத்திற்கு உட்பட்டவர்கள்	:	மொத்தவிற்பனைத் தொகையில் 3%
ரூ. 5 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்கு உட்பட்டவர்கள்	:	ரூ. 15,000 மற்றும் ரூ. 5 இலட்சத்திற்கு மேற்பட்ட விற்பனைத் தொகையில் 5%

அவ்வாறான வரி விதிப்புக்குட்பட்டவர்கள் மொத்த விற்பனை அளவிற்குக் கணக்குகளைப் பராமரித்தால் போதுமானது. விரிவான கணக்குகள் பராமரிக்கத் தேவையில்லை. இந்த முறையானது, வரிவிதிப்புக்குரியவர்களின் விருப்பத்தின்பாற்பட்டது. அவ்வாறு இந்த முறைக்கு வர விருப்பம் தெரிவிக்கும் வரி விதிப்பிற்குரியவர்கள் பொருள்வாரியாக விரிவான கணக்குகளை வைத்திருக்க வேண்டியதில்லை. பட்டியல்கள், கொள்முதல், விற்பனை, இருப்பு இவற்றிற்கான கணக்கை மட்டும் பராமரித்தால் போதுமானது. அந்த வரி விதிப்பிற்குரியவர்கள், வரியைச் சேர்த்து வாங்கும்போது, அவ்வரி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்திலேயே அமைய வேண்டும். இணக்க வரிவிதிப்பு முறையில் செலுத்த வேண்டிய

[1996 ஆகஸ்ட் 6

வரித் தொகையைவிட, வசூலிக்கப்பட்ட வரித்தொகை கூடுதலாக இருப்பின், அத்தொகையை அரசிற்குச் செலுத்த வேண்டும். இணக்க வரி விதிப்பு முறை, வரி விதித்தல் மற்றும் வரி செலுத்தும் முறைகளை எளிமைப்படுத்தவே கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் திருத்தப்படவுள்ள சட்டத்தில் வெளியிடப்பட உள்ளன.

(இ) சுயவரி மதிப்பீடு (Self Assesment)

19. சுயவரி மதிப்பீட்டு முறை இதுவரை ரூ.5 இலட்சத்திற்குள் விற்பனையளவுள்ள வரி விதிப்புக்குரியவர்களுக்கே உள்ளது. இந்த வரம்பு ரூ.10 இலட்சம் விற்பனையளவுள்ள வணிகர்களையும் தொழிற்சாலைகளையும், உள்ளடக்கும் வகையில் ரூ.10 இலட்சமாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான வரி விதிப்பாளர்கள் பயன்பெறும்வகையில் ஏற்கெனவே உள்ள நிபந்தனைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு 25 சதவீதம் வரி விதிப்புக்குரியவர்களே விரிவான கணக்காய்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வணிகவரி ஆணையரால் கணிப்பொறியைப் பயன்படுத்தி அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்வு செய்யப்படும். இத்தேர்வில் உள்ளூர் வணிகவரி அலுவலர்களுக்குத் தம் சொந்த விருப்புரிமை இல்லை. மீதமுள்ள 75 சதவீத வரிவிதிப்புக்குரியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள தாக்கல் செய்த கணக்கின்படி வரி விதிப்பு செய்யப்படும். இம்முறையின்கீழ் 70,000-க்கும் மேற்பட்ட வரிவிதிப்புக்குரியவர்கள் பயனடைவர். மற்றும் சிறு வணிகர்கள் எதிர்நோக்கிவந்த பல இடர்கள் நீக்கப்படும். இம்முறைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொருத்து வரம்பை மேலும் உயர்த்துவது குறித்து ஆய்வு செய்யப்படும்.

பதிவு செய்தல்

20. ஒவ்வொரு ஆண்டும், பதிவினைப் புதுப்பித்துக் கொள்வது மிகவும் கடினமாக உள்ளது என்று வணிகர்கள் அரசுக்கு முறையீடு செய்துள்ளனர். அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலித்து, ரூ.1000 செலுத்தி, 5 ஆண்டுகாலத்திற்கு பதிவு செய்து கொள்ள அனுமதிக்க முடிவு செய்துள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளும் முறையும், வணிகர்கள் விருப்பத்தின் பேரில் தொடரும். ஓராண்டுக்கான பதிவுக் கட்டணம் ரூ.200 ஆகும்.

1996 ஆகஸ்ட் 6]

மேலும் சலுகைகள்

21. ஏழைக் குடும்பங்களுக்குச் சலுகை காட்டும் வகையில் அன்றாடம் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருட்களுக்கு வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(1) பயறு பருப்பு வகை - கடலைப்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு, மசூர்பருப்பு, உளுத்தம்பருப்பு, நரிப்பயறு, கேசரிப்பருப்பு.

(2) மிளகாய்

(3) புளி

(4) தனியா

(5) மஞ்சள்

(6) மிளகு

(7) வெல்லம்

(8) பெருங்காயம்

(9) சீரகம்

(10) சியக்காய்

(11) பனங்கற்கண்டு

இவை தவிர பின்வரும் பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(1) கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகள்

(2) தேங்காய் மட்டை

(3) நெல் உமி மற்றும் குருணை

(4) அலுமினிய வீட்டு உபயோகப் பாத்திரங்கள்

(5) வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு

22. குறைந்த படிமுறைகளுக்குக் கொணர்வதன் மூலம் பின்வரும் பொருட்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது:

[*1996 ஆகஸ்ட் 6*

11 சதவிதத்திலிருந்து 4 சதவிதமாகக் குறைக்கப்பட்டவை:-

கம்ப்யூட்டர்கள், அதன் உதிரிப் பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், அதன் உதிரிப் பாகங்கள், பொரிகடலை, பட்டாணி, பட்டாணிக்கடலை, புகைப்படத் தொழிலில் பயன்படுத்தப்படும் சுருள், தாள் மற்றும் இரசாயனங்கள்.

11 சதவிதத்திலிருந்து 8 சதவிதமாகக் குறைக்கப்பட்டவை:-

சமையல் எரி வாயு, எலக்ட்ரானிக் கேஷ் ரிஜிஸ்டர், கணக்கிடும் மற்றும் பட்டியலிடும் பொறிகள், எலக்ட்ரானிக் கருவிகள் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள், எலக்ட்ரானிக் கால்குலேட்டர்கள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், மரம், எலெக்ட்ரிக் பம்பு, செருப்பு (காலணிகள்), பாக்கு சீவல் உள்ளிட்ட வாசனைப் பாக்கு, பிரஷ்ஷர் குக்கர், உலர் பாட்டரிகள், உலர் செல்கள், இங்க், மின்விசிறி, மின்சார பல்புகள், டியூப் லைட்டுகள், பிட்டிங்ஸ் சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள், நீர் வழங்குவதற்குப் பயன்படும் குழாய் போன்ற சாதனங்கள், காமிரா, என்லார்ஜர் மற்றும் இலென்சுகள், பித்தளை, செம்புப் பாத்திரங்கள், ஆடியோ காசட்டுகள், அலுமினியப் பொருட்கள்.

8 சதவிதத்திலிருந்து 4 சதவிதமாகக் குறைக்கப்பட்டவை:-

வணிகக் குறியிடப்படாத வெண்ணெய், நெய், பிஸ்கட், மிட்டாய் மற்றும் சாக்லெட்டுகள், எழுதுகிற காகிதம், அச்சடிக்கத் தேவைப்படும் காகிதம், கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் காகிதம், பால் கொண்டு செல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் ஆயுத்த (Ready made) ஆடைகள்.

4 சதவிதத்திலிருந்து 2 சதவிதமாகக் குறைக்கப்பட்டவை:-

பருப்பு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவுவகைகள்.

துறையின் அமைப்பு

23. வணிகவரித் துறை நான்கு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகிறது:-

* வரி மதிப்பீட்டுப் பிரிவு
* மேல் முறையீட்டுப் பிரிவு
* செயலாக்கப் பிரிவு
* தணிக்கைப் பிரிவு

1996 ஆகஸ்ட் 6]

வரி மதிப்பீட்டுப் பிரிவு

இம்மாநிலம் ஒன்பது வணிகவரி கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகவரி கோட்டமும் ஒரு வணிகவரி துணை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கோட்டம், வணிகவரி மாவட்டங்கள் அல்லது வணிகவரி சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது 40 வணிகவரி மாவட்டங்கள் / சரகங்கள் உள்ளன. ஒவ்வொரு வணிகவரி மாவட்டமும் / சரகமும் ஒரு வணிகவரி உதவி ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

வணிகவரி மாவட்டம் / சரகம் பல வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டது. இம்மாநிலத்தில் 317 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் 'மத்திய வரி விதிப்பு வட்டங்கள்' என அழைக்கப்படும் 6 வரிவிதிப்பு வட்டங்கள் (சென்னையில் 4 மற்றும் கோயம்புத்தூரில் 2) வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையின் கீழ் இயங்குகின்றன; 226 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், மீதமுள்ள 85 வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் இயங்குகின்றன.

நிர்வாக மேம்பாட்டினையும், வணிகர் நலனையும் கருத்திற் கொண்டு பெரிய வரிவிதிப்பு வட்டங்களைப் பிரித்து சில புதிய வரி விதிப்பு வட்டங்களைத் தோற்றுவிக்க உததேசிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலையினைக் கருத்திற்கொண்டு இவ்வாண்டில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரைக் கோட்டங்களில் 5 பெரிய வரிவிதிப்பு வட்டங்களைப் பிரித்து மேலும் 3 புதிய வரி விதிப்பு வட்டங்கள் தோற்றுவிக்கப்படும். அத்துடன் சேலம் மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் துணை வணிகவரி அலுவலர் தலைமையில் உள்ள 2 வரிவிதிப்பு வட்டங்கள் வணிகவரி அலுவலர் நிலைக்கு உயர்த்தப்படும். மூன்று வரிவிதிப்பு வட்டங்களில் தற்போது உள்ள அலுவலகங்களின் வேலைப்பளுவைக் குறைக்க புதிதாக 2 வணிகவரி அலுவலர்கள், ஒரு உதவி வணிகவரி அலுவலர் மற்றும் மூன்று இளநிலை உதவியாளர்கள் பதவிகள் வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு ரூ.21.05 இலட்சம் உத்தேசமாக செலவாகும்.

இவைகளைத் தவிர அலுவலர்களின் நிர்வாகத்திறனை மேம்படுத்தவும், அலுவலகங்களின் செயல்பாட்டிற்கு உதவவும் 4 துணை ஆணையர்களுக்கு நேரடித் தொலைபேசி வசதியும் பல

அலுவலகங்களுக்கு அலுவலகத் தளவாடங்களும் நகல் எடுக்கும் கருவிகளும் வழங்க ரூ.11.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேல் முறையீட்டுப் பிரிவு :

மேல்முறையீட்டுப் பிரிவைப் பொறுத்தவரையில், விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், 2 மேல் முறையீட்டு துணை ஆணையர்களும் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பணி முன்னேற்றத்தை மேல்முறையீட்டு நடுவர்மன்றத் தலைவர் ஆய்வு செய்கிறார். நிர்வாகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மேல்முறையீடுகளைத் தீர்வு செய்வது தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து அரசும் ஆய்வு செய்து வருகிறது.

மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் சென்னை மற்றும் கோவையில் உள்ள மத்திய வரிவிதிப்பு வட்ட உதவி ஆணையர்களின் வரிவிதிப்பு ஆணைகளின் மீதான மேல்முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வார்கள். மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிக வரி அலுவலர்கள் மற்றும் உதவி வணிகவரி அலுவலர்கள், வரிவிதிப்பு ஆணை மீதான மேல் முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வார்கள்.

செயலாக்கப் பிரிவு :

இந்த மாநிலத்தில் 6 செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. சென்னை-1 செயலாக்கக் கோட்டம் வணிகவரி இணை ஆணையரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. பிற கோட்டங்கள், அதாவது சென்னை-2, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள செயலாக்கக் கோட்டங்கள் துணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தற்போதைய கோயம்புத்தூர் செயலாக்கக் கோட்டம் மிகப் பெரியதாக உள்ளதால், நிர்வாக வசதிக்காக இரண்டாக பிரித்து சேலத்தை தலைமையகமாகக் கொண்டு புதிய கோட்டம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சோதனைச் சாவடிகளும் இணை / துணை ஆணையர்கள் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய செயலாக்கப் பிரிவில் சுழற்படைகள் உள்ளன.

1996 ஆகஸ்ட் 6]

தற்போது, மாநிலத்தில் 63 வணிகவரிச் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 31 சோதனைச் சாவடிகள் மாநில எல்லையோரத்தில் உள்ளன.

சோதனைச் சாவடிகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து வாகனங்களை விரைவாகத் தணிக்கை செய்ய வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு ஒரு நாளைக்கு 1000 வண்டிகளுக்கு மேல் கடந்து செல்லும் சோதனைச் சாவடிகள் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 63 சோதனைச் சாவடிகளில் 23 பெரிய சோதனைச் சாவடிகளாகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஒசூர், கந்தேகவுண்டன் சாவடி, இராணிப்பேட்டை, இரும்புலியூர், புழல், தோப்பூர் மற்றும் கணியூர் ஆகியவை இருவழிச் சோதனை சாவடிகள் ஆகும்.

லாரிகளில் கொண்டு செல்லப்படும் பொருட்களின் மீது செலுத்தப்பட வேண்டிய வரியினைத் தவிர்க்க சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாமல் வேறு வழிகளில் செல்லும் வாகனங்களை நிறுத்தி சோதனையிட கரூர் மற்றும் மதுரை செயலாக்கப் பிரிவுகளுக்குக் கூடுதலாக இரண்டு சுழற்படைகள் வழங்கப்படும். பொய்யான பட்டியல் தயாரித்து வரி ஏய்ப்பு செய்வதைத் தடை செய்ய சேலம் செயலாக்கப் பிரிவில் ஒரு படை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன், குறிப்பாக இம்மாநிலத்திற்குள்ளே அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளைக் குறைப்பதற்காக, சோதனைச் சாவடிகளின் செயல்பாடு குறித்து இந்த நடப்பு ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தணிக்கைப் பிரிவு :

துறைத் தணிக்கைப் பிரிவு, வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிக்கிறது. இதன் மூலம் மாநிலக்கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே அவற்றைச் சரிப்படுத்த முடிகிறது. மாநிலத்தில் தற்போது 41 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை சம்பந்தப்பட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல்திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகத்தில் துறைத்

[*1996 ஆகஸ்ட் 6*

தணிக்கைப் பணி மற்றும் மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக் களையும் பணி ஆகியவை வணிகவரி ஆணையரின் கீழ் ஒரு இணை ஆணையரைக் கொண்ட தனிக் குழுவினால் கவனிக்கப்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிலும் அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரிவிதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கை குழுவால் தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. துறைத் தணிக்கை குழுவின் அறிக்கை மீதான குறை நிவர்த்தி நடவடிக்கை, குறைகள் முற்றிலுமாக நிவர்த்தி செய்யப்படும் வரையில் மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகிறது. துறைத் தணிக்கைக் குழு மற்றும் கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கை குறிப்புகள் வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களின் சமீப காலத் தீர்ப்புகள், அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை சுற்றறிக்கைகளாகவும், செய்தித் தொகுப்புகளாகவும் வணிகவரி ஆணையரால் தணிக்கைக் குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு வரிவிதிப்புச் சிறப்பு நடுவர் மன்றம் :

24. தேங்கியுள்ள வரிவிதிப்பு வழக்குகளில் விரைவாக தீர்ப்பு வழங்கவும், அதனால் அரசுக்குச் சேர வேண்டிய ஏராளமான வரித்தொகைகளை வசூல் செய்யவும், "வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுகாறும் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் வணிகவரி வழக்குகளை இந்தச் சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். இம்மன்றம் 1-1-1996 முதல் இயங்கி வருகிறது.

கட்டிடங்கள் :

25. வணிகவரித் துறை அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாக அரசுக் கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின்

1996 ஆகஸ்ட் 6]

கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும் (சென்னை மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அலுவலகம் நீங்கலாக) அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. இதுபோன்று 6 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. 13 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 7 மேல்முறையீட்டு உதவி ஆணையர் மற்றும் ஒரு துணை ஆணையர் அலுவலகங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்ற 367 அலுவலகங்களில் 134 அரசுக் கட்டிடங்களிலும் 233 தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசு கட்டிடங்கள் கட்டப்படும்.

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்:

26. வணிகவரித் துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் பிரிவுக்கு வணிகவரித் துணை ஆணையர் ஒருவர் தலைவராக உள்ளார். இவருக்கு வணிகவரி உதவி ஆணையர் இருவரும் வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம் உதவி வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர், வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு "நினைவுகூர் பயிற்சி" வகுப்புகளை நடத்துகிறது. இப்பயிற்சி நிலையம் வரி நிர்வாகத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட துறைகளில் தனித்திறமை பெற்ற வல்லுநர்களைக் கொண்டு முக்கியத் தலைப்புகளின் கீழ் சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்கிறது. 1995-96-ஆம் ஆண்டில் துணை வணிகவரி அலுவலர் பணி நிலையில் 70 அலுவலர்களும் உதவி வணிகவரி அலுவலர் பணிநிலையில் 46 அலுவலர்களும் நிலையத்தில் பயிற்சி பெற்றனர்.

கணிப்பொறி மயமாக்குவதற்காக, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்குக் கணிப்பொறி பற்றிய தெளிவும்

அனுபவமும் தேவை. எனவே உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக் கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்குக் கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது.

கணிப்பொறி மையம் :

27. வணிகவரித்துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும் நிருவாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக் கொள்ள கணிப்பொறி மையம் நிறுவப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் 1959-ன் கீழ் பண்டவாரியான விற்றுமுதல் தொகை மற்றும் வருவாய் ஆகிய தகவல்கள் வணிகரிடமிருந்து பெறப்படும் மாதாந்திர அ1 அறிக்கையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் வரிவிதிப்பு நடவடிக்கையில் மிகவும் பயன்படுகின்றன.

இது தவிர, டிசம்பர் 1994, மார்ச் 1995, ஜூன் 1995, செப்டம்பர் 1995 மற்றும் டிசம்பர் 1995 உடன் முடிந்த காலாண்டுகளுக்கு வணிகவரி சோதனைச் சாவடிகளிலிருந்து பெறப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்கள் விவரங்கள் தொகுக்கப்பட்டன. இத்தகவல்கள் வரி ஏய்ப்பைத் தடுக்க செயலாக்கப் பிரிவினரால் பயன்படுத்தப்படுகின்றன. வணிகர் விவரப்பட்டியல் 1-4-1995 அன்றைய நிலைவரை தயாரிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, சேலம் மற்றும் வேலூர் (வணிக வரி) துணை ஆணையர்கள் மற்றும் வணிகவரி மாவட்ட உதவி ஆணையர்கள் அலுவலகங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில், கணிப்பொறி அமைப்பு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் அனைத்து நிர்வாக அலுவலகங்களுக்கும் கணிப்பொறி வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட வணிகர்கள், அதிக வரி செலுத்தும் முதன்மை வணிகர்கள் மாதாந்திரப் படிவத்தில் அளிக்கப்படும் விற்பனைத் தொகை, சோதனைச் சாவடியில் சேகரிக்கப்படும் பட்டியல்கள், ஆவணங்கள், பல்வேறு பொருட்கள் மூலம் பெறப்பட்ட வருவாய், வணிகவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், உயர்நீதி மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புகள் போன்றவை கணிப்பம் (Computerised) செய்யப்படும். குறுகிய காலத்தில், முக்கிய

1996 ஆகஸ்ட் 6]

விவரங்களைப் பெறவும், சீர்படுத்தவும், வரி ஏய்ப்பு இனங்களைக் கண்டு கொள்ளவும், நிருவாகத்தை மேம்படுத்தவும், இம்முறை துறைக்கு ஏதுவாக இருக்கும். தகுதி வாய்ந்த அலுவலர்களின் பணியினை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளவும். நிருவாகத் திறமையினை மேம்படுத்தவும், துறையில் உள்ள அலுவலர்களது குறிப்புகள் மற்றும் செயல்திறன் ஆகியவை கணிப்பம் செய்யப்படும். துணை ஆணையர் நிலையில் இத்துறையினை நிருவகிக்க ஒரு பதவி ஏற்படுத்தப்படும்.

மேற்கூறியவை தவிர வரிவிதிப்பு முறையில் செய்யப்பட்டுள்ள பெருமளவிலான கட்டமைப்பு மாற்றங்களை கருத்திற்கொண்டு துறையின் தேவைகளுக்கு ஏற்றவாறு கணிப்பொறி மற்றும் நிர்வாக தகவல்முறை தொடர்பாக நடப்பாண்டில் விரிவான ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வணிகர் நல வாரியம்:

28. வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் முதலமைச்சர் தலைமையில் வணிகர் நல வாரியத்தை 1989-ஆம் ஆண்டில் அரசு அமைத்துள்ளது. இவ்வாரியத்தில் அலுவலர்களும், அலுவலர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். 31-3-1996 வரை 29118 பேர் ஆயுட்கால உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர். அவர்கள் மொத்தம் ரூ.35.48 இலட்சம் பதிவுக் கட்டணமாகச் செலுத்தியுள்ளனர். அரசு 1989-ஆம் ஆண்டில் ரூ. 2 கோடி மானியம் வழங்கியுள்ளது.

வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாத அனைத்து உறுப்பினர்களும் வாரியத்தின் கீழ்க் கண்ட உதவிகளைப் பெறலாம்:-

(அ) இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவச்சான்றின் பேரில் ரூ.25,000.

(ஆ) வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு குடும்ப நல நிதி ரூ.50,000.

(இ) நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க உதவி.

*பாலிடெக்னிக், கலைக்கல்லூரி அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ஆண்டிற்கு ரூ.2,000.

[1996 ஆகஸ்ட் 6

*முதுநிலை படிப்பு, தொழிற்கல்வி அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ஆண்டிற்கு ரூ.2,000.

(ஈ) உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும்.

தவிர, வருமான வரி செலுத்தும் வாரிய உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் கீழ்க்கண்ட திட்டங்கள் நடைமுறையில் உள்ளன--

(அ) 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு பின்வரும் தொகை பரிசாக வழங்கப்படுகிறது.

முதல் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு ரூ.5,000; இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு ரூ.3,000; மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு ரூ.2,000.

(ஆ) விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் உறுப்பினர்களின் மகன் / மகளுக்குப் பின்வரும் தொகை பரிசாக வழங்கப்படுகிறது--

சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 25,000
அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 10,000
மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 5,000

குறை தீர்க்கும் பிரிவு:

29. வணிகர்கள், தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய அமைப்பாகத் திகழ, 1984-ஆம் ஆண்டில் குறை தீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு இணை ஆணையரைத் (நிர்வாகம்) தலைவராகவும் மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு), உதவி ஆணையர் (வணிகவரி-2) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 6]

விற்பனை வரி ஆலோசனைக் குழு:

30. விற்பனை வரி நிர்வாகம் குறித்த வணிகர்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அரசு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும், வணிகவரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்களில் அலுவலர்கள் மற்றும் வாணிபக் கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவு மற்றும் வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலர் அல்லாத பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். வணிகவரிச் சட்டங்களினால் வர்த்தகத் துறையில் எழும் பல்வேறு வணிகப் பிரச்சினைகள், விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான பிரச்சினைகளை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும், வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், இக்குழுக்களின் தீர்மானங்களும் அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

மேல்வரி மற்றும் கேளிக்கை வரி வசூலில் இருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளித்தல்:

31. உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, சென்னை மாநகராட்சி பகுதியில் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல் வரியின் மொத்த வசூலில் 50 சதவீதத்தொகை சென்னை மாநகராட்சிக்கு மானியமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. அது போன்றே மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள் பிற நகராட்சிகள், நகரப் பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளில் வசூலிக்கப்படும் விற்பனை வரியின் மீதான மேல் வரியின் மொத்த வசூலில் 20 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மக்கட்தொகை அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மானியமாக வழங்கப்படுகிறது.

அவ்வாறே கேளிக்கை வரி வசூலில் மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு 70 சதவீதமும், தேர்வுநிலை நகராட்சிகள், முதல் நிலை நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கு 65 சதவீதமும், பிற உள்ளாட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் ஒப்படைக்கப்படுகின்றன.

[*1996 ஆகஸ்ட் 6*

காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்பட தொழிலகங்களுக்கான விற்பனை வரிச் சலுகைகள்

32. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்கள் செலுத்த வேண்டிய வரியைக் கைவிட அரசு அனுமதிக்கிறது. அத்துடன் புதிய தொழில்கள், தொழிலக வரிவாக்கங்கள், நலிந்துபோன தொழிலகங்கள் மற்றும் நூற்பு ஆலைகள் ஆகியவை செலுத்த வேண்டிய வரிகளை, காலம் தள்ளி வட்டியின்றி செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கிவருகிறது. *1995–96*–ஆம் ஆண்டில் அவ்வகையில் தொழிலகங்களுக்கு ரூ.*191.31* கோடி வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகையாக, வழங்கப்பட்டுள்ளது.

முறைப்படுத்துதலும் வரி சீரமைப்பும்

33. தொழில் முனைவோர் மற்றும் வணிகர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, வரி விதிப்பு முறை மற்றும் வரி விதிப்பு தொடர்பான படிவங்களைச் சீரமைக்கவும், எளிமைப்படுத்தவும் இத்துறை முயற்சி மேற்கொண்டுள்ளது. நீதி மன்றங்களின் ஆணைகள், அரசின் வரி விதிப்புக் கொள்கை மற்றும் பிற மாநிலங்களில் பின்பற்றப்படும் வழிவகைகளைக் கருத்திற்கொண்டு வணிகர்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் கோரிக்கைகள் பரிவுடன் பரிசீலிக்கப்படும். வெளிப்படையான வரி விதிப்பு நிர்வாகம் நடப்பதுடன், வணிகர்களின் நியாயமான குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும். தொடர்ச்சியாக பெருமளவில் வரி ஏய்ப்புச் செய்யும் நிறவனங்களும், வரி ஏய்ப்புக்குள்ளாகும் இனங்களும் கண்டுபிடிக்கப்பட்டு திடீர் ஆய்வுகள் மூலமும், சட்டத்திலுள்ள குறைகள் தீர்க்கப்படுவதன் மூலமும் வரி ஏய்ப்புகள் தடுக்கப்படும். இடைவிடா முயற்சிகள் மேற்கொண்டு, நிர்வாகத்தைச் சீர்செய்து, வரி விதிப்புச் சட்டங்களை நன்கு செயற்படுத்தி வருவாயைப் பெருக்க வழிவகை காணப்படும்.

இணைப்பு II

(376ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 11 வருவாய்த் துறை

மாவட்ட நிர்வாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு 1996-97

1. முன்னுரை

1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் (Board of Revenue) கலைக்கப்பட்ட பின்னர் மாநில அளவிலான வருவாய் மற்றும் நில நிர்வாகம் குறித்த பணிகள், வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று ஆணையர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

2. வருவாய் நிர்வாகத் துறையின் கீழ் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல் மற்றும் சமூக நல பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற பணிகள் உள்ளன.

3. நில நிர்வாகத் துறையின் கீழ் நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டுமனை ஒப்படை, நில அளவைப் பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் நிலப்பட்டா வழங்குதல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

4. நிலச்சீர்திருத்தத் துறை நில உச்சவரம்பு, குடிவாரம், வேளாண்மை வருமான வரி போன்ற சட்டங்களை அமுல்படுத்துவதுடன் வேளாண்மை வருமானவரி, நகர்ப்புற நிலவரி வசூல் போன்ற பணிகளையும் செய்து வருகின்றது.

5. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால், கோட்டாட்சியர், தனித் துணை ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோரது உதவியுடன் வருவாய் மற்றும் நில நிர்வாகப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

[1996 ஆகஸ்ட் 6

6. சுதந்திரம் பெற்ற காலத்திற்குப் பின்னர் மாவட்ட வருவாய் நிர்வாகம் மேற்கூறிய சாதாரணப் பணிகளுடன், பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் செய்து வருகின்றது.

2. மாவட்ட வருவாய் நிர்வாகம்

நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட காலக் கட்டம் வரையிலும், மாவட்ட வருவாய் நிர்வாகம், பல்வேறு அமலாக்கப் பணிகளை கவனிப்பதிலேயே பெரும் பங்கு வகித்து வந்துள்ளது. அதன் பிறகு மக்களிடையே சமூகப் பொருளாதார மற்றும் பண்பாடு தொடர்பான குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மக்களுக்கு, தங்களது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு, முற்போக்கு சட்டங்கள், நலத்திட்டங்கள் அத்தியாவசிய பண்டங்களின் விரைவான விநியோகம் மற்றும் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளுதல் போன்றவற்றிற்கு மக்கள் மாவட்ட வருவாய் நிர்வாகத்தினை எதிர்பார்க்கும் நிலை உருவானது.

2. அரசின் பல்வேறு நலத்திட்டங்களும், வருவாய்த் துறையின் மூலமே செயல்படுத்தப்படுவதால், அன்றாடம் அரசு நிர்வாகத்தில் பொதுமக்கள் தங்களின் பல்வேறு தேவைகளுக்காக அடிக்கடி வருவாய்த்துறை அதிகாரிகளையே நாடி வருகின்றனர். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் மனுக்கள் பெறுவதற்கென ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களை வழி நடத்திச் செல்வதற்கும், அரசுத் திட்டங்களின் சிறப்பு அம்சங்களை எடுத்துரைப் பதற்கும், தகவல் அறிவிப்புப் பலகை வைத்தல், பல்வேறு அரசு நலத் திட்டங்களின் கீழ், நன்மை பெறுவதற்கென துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு விநியோகித்தல், நிரந்தர சாதிச் சான்றிதழ்களை வழங்குதல், அலுவலக நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் போன்றவற்றின்மூலம் மாவட்ட வருவாய் நிர்வாகத்தை அரசு சீர்திருத் தம் செய்துள்ளது. தங்கள் தேவைகளையும், குறைகளையும் தெரிவித்து பொதுமக்கள் அளிக்கும் மனுக்களின்மீது துரித நடவடிக்கை எடுக்கவும், வருவாய்த்துறை அதிகாரிகளை பொதுமக்கள் பல்வேறு நிலைகளில் சந்திக்க ஒரு வாய்ப்பை அளிப்பதற்கும் ஏதுவாக மனுநீதித் திட்டம் மற்றும் குறைதீர்க்கும் நாள் ஆகிய இரு பெரும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

1996 ஆகஸ்ட் 6]

(அ) பொதுமக்கள் தொடர்புத் திட்டம் (மனுநீதித் திட்டம்)

மனுநீதித் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், பல்வேறு துறைத் தலைவர்களுடன், தனது ஆட்சி எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கோட்டத்திற்கும், ஒவ்வொரு மாதமும், சுழற்சி முறையில் சென்று, அந்தந்த கிராம மக்களின் குறைகளை அந்தந்த இடத்திலேயே தீர்வு செய்கின்றனர். அதுபோன்றே, கோட்ட ஆட்சியர்களும் தங்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட, ஒவ்வொரு வட்டத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளை தீர்க்கின்றனர்.

2. தற்போதுள்ள அறிவுரைகளின்படி, ஒரு சார்நிலை அலுவலர் ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு மனுநீதி நாள் நடப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாகச் சென்று, பொதுமக்களுக்கு மனுநீதி நாள் குறித்து அறிவிப்பு செய்து, பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று, அவற்றைத் தொடர்புடைய குறிப்பிட்ட துறை அலுவலர்களுக்கு குறைகளைத் தீர்க்க ஏதுவாக அனுப்பி வைப்பார். மனுநீதித் திட்ட நாள் அன்று, இந்த அலுவலர், ஏனைய துறை அலுவலர்களுடன் கிராமத்திற்குச் சென்று, ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது முடிவான ஆணைகளைப் பிறப்பித்து, மனுதாரர்களிடம், அதனை அவ்விடத்திலேயே தெரிவிப்பார். மேலும், மனுநீதித் திட்ட நாளில் பெறப்படும் மனுக்களின் மீதும் நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு முடிவான பதில் அனுப்பப்படுகின்றன.

3. மாவட்ட வருவாய் அலுவலரும், மாவட்ட ஆட்சியரும் ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் சுழல் முறையில் மனுநீதித் திட்டம் நடத்த வேண்டும். இவ்வாறு, மாவட்ட வருவாய் அலுவலர் ஒரு மனுநீதித் திட்டமும் மாவட்ட ஆட்சியர் ஒரு மனுநீதித் திட்டமும் நடத்துவதால், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கோட்டத்திலும் இரண்டு கிராமங்களில் மனுநீதித் திட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

4. மனுநீதித் திட்ட செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்ததில், அதை நடத்தும் அதிகாரிகளால் இத்திட்டத்திற்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை எனத் தெரிய வந்துள்ளது. எனவே, பொதுமக்களின் தேவைகளை அறிந்து பொதுமக்களுக்கு மேலும் பயன் தரத்தக்க வகையில், அரசு இத்திட்டத்தைச் சீரமைக்கக் கருதியுள்ளது.

[*1996 ஆகஸ்ட் 6*

(ஆ) மக்கள் குறை தீர்க்கும் நாள்

1984-ஆம் ஆண்டு முதல் எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. குறை தீர்க்கும் நாள் அன்று, மாவட்ட ஆட்சியர்கள், கோட்ட ஆட்சியர்கள், வட்ட ஆட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து, பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்று, அவர்களது முறையீடுகளைத் தீர்ப்பதற்கு முறையான துரித நடவடிக்கை எடுக்கின்றனர். முறையான தொடர்பு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, குறைதீர்க்கும் நாளை நடத்துவதற்கான முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள திட்டத்தின்கீழ், அனைத்து மனுக்களும் நடவடிக்கை எடுத்து முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டதற்கான 'வெள்ளை அட்டை' கொடுக்கப்படுகின்றது. அந்த வெள்ளை அட்டையில், விண்ணப்பத்திற்கு பதில் என்று கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கும். அடிக்கடி தொடர்ச்சியாக வரக்கூடிய மனுக்களைப் பொறுத்தவரை, அந்த மனுதாரர்களுக்கு 'இளஞ் சிவப்பு' அட்டை கொடுக்கப்படுகிறது. அந்த அட்டையில் அந்த மனுமீதான முடிவை தெரிந்துகொள்ளும் பொருட்டு, மீண்டும் அவர்கள் எந்த தேதியில் அலுவலகத்திற்கு வரவேண்டும் என்ற விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும். மாவட்ட ஆட்சியர்களும் மற்றும் மனுக்களை அனுப்பும் இதர அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர்களிடம் இருந்தும் இதர துறை அதிகாரிகளிடமிருந்தும், குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அறிக்கைகளைப் பெற சிறப்பு நடவடிக்கை எடுத்து, இளஞ்சிவப்பு அட்டையைத் தாக்கல் செய்யும் மனுதாரரிடம் முறையான பதிலொன்று கொடுக்கப்படவேண்டும்.

2. மேலும், "மக்கள் குறை தீர்க்கும் நாள்" மாவட்ட ஆட்சியர்களால் பிர்க்காவாரியாக ஒரு மாத காலத்திற்கு முன்னதாக உரிய விளம்பரம் கொடுத்து நடத்தப்படுவதற்கு அரசால் தக்க அறிவுரைகள் வழங்கப்படவுள்ளன. இதன்படி, இத்திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதத்திலும் மூன்று அல்லது நான்கு நாட்கள் ஒதுக்கப்படவேண்டும். ஒரு காலாண்டில், அனைத்துப் பிர்க்காக்களிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ், மாவட்ட

1996 ஆகஸ்ட் 6]

ஆட்சியர், மாவட்ட தலைமை அலுவலர்களுடன் இருந்துகொண்டு காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரை பொதுமக்களிடம் மனுக்களைப் பெறவேண்டும். இக்கூட்டத்திற்கு உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர்/ சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் மாவட்ட ஆட்சியர் அழைக்கவேண்டும். இந்நாளில் மனுக்களைப் பெற்று முடிந்தவுடன், குறைகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட இடங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரடியாக அனுப்பி பார்வையிடச் செய்து, அதே நாளில் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். கூடுமானவரை அனைத்து மனுக்களின் மீதான முடிவுகளும், அதே தினத்தன்று மாலையில் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். உடனடியாக முடிவுகள் எடுக்க இயலாத நேர்வுகளைப் பொறுத்தவரை, அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய அதிகபட்சமாக நான்கு வாரங்கள் எடுத்துக் கொள்ளப்படலாம். இவ்வாறாக நடத்தப்பெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் திட்டம் குறித்த விவரங்கள், தலைமைச் செயலருக்கு அனுப்பப்படும் அறிக்கையில் ஒரு கூடுதல் பத்தியாக சேர்க்கப்படவேண்டும்.

3. ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள், அனைத்து மாவட்டங்களிலும் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படுகிறது. அப்போது துறை அலுவலர்களும் ஓய்வூதியதாரர்களும் ஓரிடத்தில் ஒன்றாக அமர்ந்து, உடனுக்குடன் குறைகளை தீர்வு செய்கின்றனர்.

4. ஒவ்வொரு மாவட்டாட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, சிறப்புத் துணை ஆட்சியரின் தலைமையிலும் மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையிலும் செயல்பட்டு வருகிறது. குறை தீர்க்கும் பிரிவு துணை ஆட்சியர்களுக்கு தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு மேற்கொள்கின்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள 'நிக்நெட்' என்ற கணிப்பொறியின் உதவியுடன் குறைதீர்க்கும் திட்ட மனுக்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை, மாவட்டத்திலுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் சென்று பார்வையிடுகின்றனர். மாவட்டங்களில் உள்ள குறை தீர்க்கும் பிரிவுகள் நன்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[1996 ஆகஸ்ட் 6

5. குறை தீர்க்கும் பிரிவுத் தனித் துணை ஆட்சியரின் பணிகளை ஊக்குவிக்கும் வண்ணம், சிறப்பாக செயல்படும் அலுவலர்களுக்கு ரூ. 10,000, ரூ. 7,500 மற்றும் ரூ. 5,000 மதிப்புள்ள இந்திர விகாஸ்/தேசிய சேமிப்புப் பத்திரம் முதல், இரண்டு, மூன்றாம் பரிசாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளன.

6. பொதுமக்கள், முதலமைச்சரிடமோ, முதலமைச்சர் அலுவலகத்திலோ அல்லது முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகவோ கொடுக்கும் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அதன் முடிவுகள் 30 நாட்களுக்குள் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என தற்போது அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

7. இவ்வாறாக, பொதுமக்கள் குறை தீர்க்கும் பணிக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அப்பணி சிறப்பாக செயல்பட வழிவகை செய்துள்ளது.

(இ) வருவாய் அலுவலர்களுக்குப் பயிற்சி

அரசின் பல்வேறு துறைகளுக்கு மூத்ததும், தாய்த்துறையும் நிர்வாகத்தில் மிகப் பழமை வாய்ந்ததுமான வருவாய்த்துறை, நிலவரி வசூல், நில நிர்வாகம், சட்டம் ஒழுங்கை பராமரித்தல், உணவுப்பொருள் பொது விநியோகம் போன்ற பணிகளுடன் பல்வேறு அரசு நலத் திட்டங்களை நிறைவேற்றும் பணிகளையும் செய்துவருகிறது. இவ்வளவு முக்கிய பொறுப்புகளை வகித்துவரும் இத்துறையில் அலுவலர்கள் அனைத்து சட்டங்கள், விதிமுறைகள், நிலை ஆணைகள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்கள் ஆகியவற்றை முழுமையாக அறிந்துகொள்வது சிரமமாக உள்ளது. வருவாய்த்துறை அலுவலர்கள், பல தருணங்களில் கூட்டுறவு நூற்பாலை, கூட்டுறவு சர்க்கரை ஆலை போன்ற அரசு மற்றும் அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களையும் நிர்வகிக்க வேண்டியுள்ளது. ஆனால் இவ்வாறு நிர்வகிக்கத் தக்கவகையில் நவீன தொழில் நுட்பங்களில் வருவாய்த்துறை அலுவலர்கள் பயிற்சியற்றவர்களாக உள்ளனர். எனவே வருவாய் அலுவலர்கள் திறம்பட செம்மையாகப் பணியாற்றுவதற்கு, அவர்களுக்கு நிர்வாகத்தில் பயிற்சி அளிக்கப்படல் வேண்டுமெனவும், இவ்வாறான பயிற்சி அவர்களது திறமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கும்,

1996 ஆகஸ்ட் 6]

அடிப்படையிலேயே மாற்றத்தை உருவாக்குவதற்கும் உறுதுணையாக அமையும் என அரசு கருதியது.

2. எனவே, வருவாய்த் துறையில், மாவட்ட வருவாய் அலகுகளில் உள்ள அலுவலர்களின் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல், பொதுமக்களின் தேவைகளுக்கேற்ப மேலும், அதிவிரைவிலும், பொறுப்புடனும், திறமையுடனும் செயல்படுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு கிராம நிர்வாக அலுவலர்கள் முதல் வட்டாட்சியர்கள் வரையிலான அலுவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளிக்க ஓர் பயிற்சித் திட்டத்தை அரசு ஆரம்பித்துள்ளது.

3. இப்பயிற்சித் திட்டம், கீழ்க்கண்ட இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது: –

பிரிவு-1 : சென்னையில் உள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தால் பயிற்சியாளர்களுக்கு (வட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சியர்) நடத்தப்படும் பயிற்சி.

பிரிவு-2 : மாவட்டங்களில், வட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சியர்களால் வருவாய் அலுவலர்களுக்கு நடத்தப்படும் பயிற்சி.

4. மேலும், வருவாய்த் துறையில் பணிபுரியும் 56 வயதிற்கு மேற்படாத துணை ஆட்சியர் பதவி உயர்வு பரிசீலனையில் உள்ள வட்டாட்சியர்களுக்கும் அதேபோன்றே 56 வயதிற்கு மேற்படாத மாவட்ட வருவாய் அலுவலர் பதவி உயர்வுப் பரிசீலனையில் உள்ள துணை ஆட்சியர்களுக்கும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படவேண்டுமெனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

3. மாவட்டங்களைச் சீரமைத்தல்

மாவட்ட நிர்வாகம் திறம்பட செயல்படவும், பின்தங்கிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குறைகளைத் தீர்க்கவும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சமூக நலத் திட்டங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும் மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் மற்றும் உள்வட்டங்கள் ஆகியவை சீரமைக்கப்படுகின்றன.

[1996 ஆகஸ்ட் 6

2. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சீரமைத்து திருவள்ளூரைத் தலைமையிடமாகக் கொண்டு செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டமும், சேலம் மாவட்டத்தைச் சீரமைத்து நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு இராஜாஜி மாவட்டமும், மதுரை மாவட்டத்தைச் சீரமைத்து தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு வீரன் அழகுமுத்து மாவட்டமும், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களைச் சீரமைத்து திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டமும் ஊராட்சி ஒன்றிய எல்லைகளின் அடிப்படையில் புதிதாக ஏற்படுத்த ஒரு வல்லுநர் குழு 27-6-1996-ஆம் நாளிட்ட ஆணையின்படி அமைக்கப்பட்டது.

3. அதேபோல், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், கரூர்-தீரன் சின்னமலைக் கவுண்டர் மற்றும் பெரம்பலூர்-திருவள்ளுவர் ஆகிய மூன்று மாவட்டங்களையும் நிருவாக வசதியையும், பொதுமக்கள் நலனையும் கருத்திற்கொண்டு, ஊராட்சி ஒன்றிய எல்லைகளின் அடிப்படையில் சீரமைக்க ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

4. வல்லுநர் குழு தனது அறிக்கையை அரசுக்குத் தந்துள்ளது. வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, மாவட்டங்களைச் சீரமைத்தும், கீழ்க்கண்டுள்ள புதிய மாவட்டங்களை 25-7-1996 முதல் அமைத்தும் அரசு ஆணையிட்டுள்ளது:-

1.	எம்.ஜி.ஆர். மாவட்டம்	தலைமையிடம் திருவள்ளூர்
2.	திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம்	தலைமையிடம் திருவாரூர்
3.	இராஜாஜி மாவட்டம்	தலைமையிடம் நாமக்கல்
4.	வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம்	தலைமையிடம் தேனி

5. திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், கரூர்-தீரன் சின்னமலைக் கவுண்டர் மற்றும் பெரம்பலூர்- திருவள்ளுவர் மாவட்டங்களைச் சீரமைத்து அரசு மேலும் ஆணையிட்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 6]

6. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தின் பெயரை "திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம்" என்றும், கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டத்தின் பெயரை "தீரன் சின்னமலை கரூர் மாவட்டம்" என்றும், பிரித்தமைக்கப்பட்டபின், காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட எஞ்சிய செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு "அண்ணா மாவட்டம்" என்றும் பெயர் மாற்றம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

7. மாவட்டங்கள் சீரமைப்பு மற்றும் புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டதையடுத்து 6 வருவாய்க் கோட்டங்களும் மற்றும் 11 வட்டங்களும் புதிதாக அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

8. சீரமைக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் அடங்கும் வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:-

மாவட்டம் (1)	வருவாய்க் கோட்டம் (2)	வட்டம் (3)	ஊராட்சி ஒன்றியம் (4)
1. சேலம்	1. சேலம்	1. சேலம்	1. சேலம் 2. வீரபாண்டி 3. பனமரத்துப் பட்டி 4. அயோத்தியா பட்டிணம் 5. வாழப்பாடி
		2. ஏற்காடு	-
		3. ஆத்தூர்	6. ஆத்தூர் 7. பெத்தநாய்க்கன் பாளையம்
		4. கெங்கவல்லி (புதியது)	8. தலைவாசல் 9. கெங்கவல்லி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
	2. மேட்டூர்	5. மேட்டூர்	10. மேச்சேரி
			11. நங்கவல்லி
			12. கொளத்தூர்
		6. ஓமலூர்	13. ஓமலூர்
			14. தாரமங்கலம்
			15. காடையாம்பட்டி
	3. சங்ககிரி	7. சங்ககிரி	16. சங்ககிரி
			17. மகுடஞ்சாவடி
		8. எடப்பாடி (புதியது)	18. கொங்கனாபுரம்
			19. எடப்பாடி
2. இராஜாஜி	1. நாமக்கல்	1. நாமக்கல்	1. நாமக்கல்
			2. சேந்தமங்கலம்
			3. புதுச்சத்திரம்
			4. எருமைப்பட்டி
			5. மோகனூர்
			6. கொல்லிமலை (பகுதி)
		2. ராசிபுரம்	7. ராசிபுரம்
			8. வெண்ணந்தூர்
			9. நாமகிரிப்பேட்டை கொல்லிமலை (பகுதி)
	2. திருச்செங் கோடு (புதியது)	3. திருச்செங் கோடு	10. திருச்செங்கோடு
			11. மல்லசமுத்திரம்
			12. எலச்சிபாளையம்
			13. பள்ளிபாளையம்
		4. பரமத்தி வேலூர்	14. பரமத்தி
			15. கபில மலை
3. அண்ணா	1. காஞ்சிபுரம்	1. காஞ்சிபுரம்	1. காஞ்சிபுரம்
			2. வாலாசாபாத்
		2. உத்திரமேரூர்	3. உத்திரமேரூர்
		3. ஸ்ரீபெரும்புதூர்	4. ஸ்ரீபெரும்புதூர்
			5. குன்றத்தூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 6]

(1)	(2)	(3)	(4)
	2. செங்கல் பட்டு	4. செங்கல் பட்டு	6. திருப்போரூர்
			7. காட்டாங்கொளத் தூர்
		5. திருக்கழு குன்றம் (புதியது)	8. திருக்கழு குன்றம்
		6. தாம்பரம் (புதியது)	9. செயின்ட் தாமஸ் மவுண்ட்
	3. மதுராந்த கம் (புதியது)	7. மதுராந்தகம்	10. அச்சரப்பாக்கம்
			11. மதுராந்தகம்
		8. செய்யூர்	12. லத்தூர்
			13. சித்தாமூர்
4. எம்.ஜி.ஆர்.	1. பொன்னேரி (முன்னாள் சைதாப் பேட்டை கோட்டம் இங்கு மாற்றப்பட வுள்ளது.)	1. அம்பத்தூர் (முன்னாள் சைதாப் பேட்டை வட்டம் இங்கு மாற்றப்பட வுள்ளது)	1. வில்லிவாக்கம்
			2. புழல்
		2. பென்னேரி	3. மீஞ்சூர்
			4. சோழவரம்
		3. கும்மிடிப் பூண்டி	5. கும்மிடிப்பூண்டி
	2. திருத்தணி (புதியது)	4. திருத்தணி	6. திருவாலங்காடு
			7. திருத்தணி
		5. பள்ளிப் பட்டு	8. பள்ளிப்பட்டு
			9. ஆர்.கே.பேட்டை
	3. திருவள்ளூர்	6. திருவள்ளூர்	10. திருவள்ளூர்
			11. பூண்டி
			12. கடம்பத்தூர்
		7. ஊத்துக் கோட்டை	13. எல்லாபுரம்

[1996 ஆகஸ்ட் 6

(1)	(2)	(3)	(4)
		8. பூந்தமல்லி (புதியது)	14. பூந்தமல்லி
5. மதுரை	1. மதுரை	1. மதுரை (தெற்கு)	1. திருப்பரங்குன்றம் (மதுரை மாநகராட்சி)
		2. மதுரை (வடக்கு)	2. மதுரை(கிழக்கு)
			3. மதுரை (மேற்கு)
		3. மேலூர்	4. மேலூர்
			5. கொட்டாம்பட்டி
		4. வாடிப்பட்டி	6. வாடிப்பட்டி
			7. அலங்காநல்லூர்
	2. உசிலம்பட்டி	5. உசிலம்பட்டி	8. உசிலம்பட்டி
			9. செல்லம்பட்டி
		6. திருமங்கலம்	10. திருமங்கலம்
			11. கள்ளிக்குடி
		7. பேரையூர்	12. டி. கல்லுப்பட்டி
			13. சேடபட்டி
6. வீரம் அழகுமுத்து வைகை	1. பெரியகுளம்	1. பெரியகுளம்	1. பெரியகுளம்
		2. தேனி (புதியது)	2. தேனி
		3. ஆண்டிப் பட்டி	3. ஆண்டிப்பட்டி
			4. கடமலைக்குண்டு மயிலாடும்பாறை
	2. உத்தம பாளையம்	4. உத்தம பாளையம்	5. உத்தமபாளையம்
			6. சின்னமனூர்
			7. கம்பம்
		5. போடி நாயக்கனூர் (புதியது)	8. போடிநாயக்கனூர்
7. தஞ்சாவூர்	1. தஞ்சாவூர்	1. தஞ்சாவூர்	1. தஞ்சாவூர்
		2. திருவையாறு	2. பூதலூர்
			3. திருவையாறு
		3. ஒரத்தநாடு	4. ஒரத்தநாடு
			5. திருவோணம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 6]

(1)	(2)	(3)	(4)
	2. கும்ப கோணம்	4. கும்ப கோணம்	6. கும்பகோணம்
		5. திருவிடை மருதூர்	7. திருவிடைமருதூர்
		6. பாபநாசம்	8. பாபநாசம்
			9. திருப்பநந்தாள்
			10. அம்மாபேட்டை
	3. பட்டுக் கோட்டை	7. பட்டுக் கோட்டை	11. பட்டுக்கோட்டை
			12. மதுக்கூர்
		8. பேராவூரணி	13. பேராவூரணி
			14. சேதுபாவாசத்திரம்
8. நாகப்-பட்டினம் காயிதே மில்லத்	1. நாகப் பட்டினம்	1. நாகப் பட்டினம்	1. நாகப்பட்டினம்
			2. திருமருகல்
		2. வேதாரண் யம்	3. வேதாரண்யம்
			4. தலைஞாயிறு
		3. கீழ்வேளூர் (புதியது)	5. கீழ்வேளூர்
			6. கீழையூர்
	2. மயிலாடு துறை	4. மயிலாடு துறை	7. மயிலாடுதுறை
			8. குத்தாலம்
		5. தரங்கம்பாடி	9. செம்பனார்கோவில்
		6. சீர்காழி	10. சீர்காழி
			11. கொள்ளிடம்
9. திருவாரூர்-ஏ.டி. பன்னீர் செல்வம்	1. மன்னார் குடி	1. மன்னார்குடி	1. மன்னார்குடி
			2. கோட்டூர்
		2. நீடாமங்கலம்	3. நீடாமங்கலம்
		3. திருத்துறை பூண்டி	4. திருத்துறைபூண்டி
			5. முத்துப்பேட்டை
	2. திருவாரூர் (புதியது)	4. திருவாரூர்	6. திருவாரூர்
		5. நன்னிலம்	7. நன்னிலம்
		6. குடவாசல்	8. குடவாசல்
			9. கொரடாச்சேரி
		7. வலங்கை மான்	10. வலங்கைமான்

[1996 ஆகஸ்ட் 6

(1)	(2)	(3)	(4)
10. திருச்சிராப் பள்ளி பெரும் பிடுகு முத்தரையர்	1. திருச்சிராப் பள்ளி	1. திருச்சிராப் பள்ளி	1. திருவெரும்பூர்
		2. ஸ்ரீரங்கம்	2. அந்தநல்லூர்
			3. மணிகண்டம்
		3. மணப்பாறை	4. மணப்பாறை
			5. மருங்காபுரி
			6. வையம்பட்டி
	2. லால்குடி	4. லால்குடி	7. லால்குடி
			8. புள்ளம்பாடி
		5. மணச்ச நல்லூர் (புதியது)	9. மணச்சநல்லூர்
	3. முசிறி	6. முசிறி	10. முசிறி
			11. தொட்டியம்
			12. தாத்தையங்கார் பேட்டை
		7. துறையூர்	13. துறையூர்
			14. உப்பிலியாபுரம்
11. தீரன் சின்ன மலைக் கரூர்	1. கரூர்	1. கரூர்	1. கரூர்
			2. தாந்தோனி
		2. அரவக் குறிச்சி	3. கே. பரமத்தி
			4. அரவக்குறிச்சி
	2. குளித் தலை (புதியது)	3. குளித்தலை	5. குளித்தலை
			6. தோகைமலை
		4. கிருஷ்ண ராயபுரம் (புதியது)	7. கிருஷ்ணராயபுரம்
			8. கடவூர்
12. பெரம்பலூர் திருவள்ளுவர்	1. பெரம்ப லூர்	1. பெரம்பலூர்	1. பெரம்பலூர்
		2. வேப்பந் தட்டை (புதியது)	2. வேப்பந்தட்டை

1996 ஆகஸ்ட் 6]

(1)	(2)	(3)	(4)
	2. அரியலூர்	3. அரியலூர்	3. அரியலூர்
			4. திருமானூர்
		4. குன்னம்	5. வேப்பூர்
			6. ஆலத்தூர்
	3. உடையார் பாளையம்	5. உடையார் பாளையம்	7. ஜெயங்கொண்டம்
			8. தா. பழூர்
			9. ஆண்டிமடம்
		6. செந்துறை	10. செந்துறை

9. தற்போதுள்ள மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள், உள்வட்டங்கள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

(1)	மாவட்டங்கள் ..	29
(2)	கோட்டங்கள் ..	72
(3)	வட்டங்கள் ..	195*
(4)	உள்வட்டங்கள் ..	1,106
(5)	வருவாய்க் கிராமங்கள் ..	17,273

*திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூர் கூடுதல் வட்டம் இதில் அடங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 6

10. 1996-97-இல் நிதி ஒதுக்கீடு செய்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 26 புதிய வருவாய்க் கிராமங்கள் 1996-97-இல் ரூ. 6.20 இலட்சம் செலவில் உருவாக்கக் கருதப்பட்டுள்ளது.

4. வருவாய்த்துறைக் கட்டிடங்கள்

கிராம நிர்வாக அலுவலர்கள் முதல் மாவட்ட ஆட்சியர் வரையில் உள்ள வருவாய்த்துறை அலுவலகங்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள்

தற்போது இருபத்தி ஒன்பது மாவட்டங்கள் உள்ளன. இதில் பதினெட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அவைகளுக்காகக் கட்டப்பட்ட அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. சிதம்பரனார் மாவட்டம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட அலுவலகங்கள் அரசு நிறுவனங்களுக்கு உரிமையான கட்டிடத்திலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மற்றும் சென்னை மாவட்ட அலுவலகங்கள் அரசுக்கு உரிமையான கட்டிடத்திலும் செயல்படுகின்றன. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 7 மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் படிப்படியாக கட்டப்படும்.

1. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம்

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் ரூ. 900 இலட்சம் திட்ட மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது.

2. சிதம்பரனார் மாவட்ட பெருந்திட்ட வளாகம், தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் அமைப்பதற்காக ரூ. 400 இலட்சம் திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஏற்பளித்துள்ளது.

1996 ஆகஸ்ட் 6]

3. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம், திருவண்ணாமலை

அரசுக்கு உரிமையான 30.38 ஏக்கர் நிலத்தில் 7,500 சதுர அடி பரப்பளவில் தரை தளம் மற்றும் இரண்டு மாடி கட்டிடம் அமைப்பதற்காக ரூ. 300 இலட்சத்திற்கு ஏற்பளித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரையில், கட்டிடத்தில் அடித்தள மட்டம் வரை கட்டுவதற்கு ரூ. 1.04 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றம் தடை ஆணை பிறப்பித்துள்ளதால் தற்போது கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

4. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம், விழுப்புரம்

விழுப்புரத்தில் அரசு நிலத்தில் பெருந்திட்ட வளாகம் அமைக்கப்பதற்காக ரூ. 300 இலட்சத்திற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

1996-97 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்தல்

நாகப்பட்டினம், கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகங்கள் அமைப்பதற்காக மொத்தம் ரூ. 200 இலட்சம், 1996-97 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலக கட்டிடங்கள்

72 வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் 59 வருவாய்க் கோட்டங்களின் அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் செயல்படுகின்றன. கள்ளக்குறிச்சியில் வருவாய்க்கோட்ட அலுவலகம் கட்டுவதற்காக ரூ. 9.63 இலட்சம் அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது. மீதமுள்ள 12 வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் படிப்படியாகக் கட்டப்படும்.

1996-97-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்தல்

திருச்செந்தூர், லால்குடி மற்றும் உடையார்பாளையம் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் கட்டுவதற்கு ரூ. 13.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

[1996 ஆகஸ்ட் 6

வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுதல்

இம்மாநிலத்தில் தற்போது 195 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. இவற்றுள் 169 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாட்சியர் அலுவலகம் கட்ட செயற்குறிப்பு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கட்டிடப்பணிகள் நடந்து வருகின்றன.

முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக ரூ. 55 இலட்சத்திற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் செங்கோட்டை, போச்சம்பள்ளி மற்றும் சங்கராபுரம் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கு மொத்தம் ரூ. 171 இலட்சத்திற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 21 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டிடம் படிப்படியாகக் கட்டப்படும்.

1996-97 இல் நிதி ஒதுக்கீடு செய்தல்

கமுதி, பாப்பிரெட்டிப்பட்டி, பேரையூர், செந்துறை, குன்னம் மற்றும் அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கு 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 165.60 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு கருதியுள்ளது.

குடியிருப்புகள்

1. மாவட்ட ஆட்சியர் குடியிருப்புகள்

மொத்தம் 29 மாவட்டாட்சியர்களில் சென்னை மாவட்ட ஆட்சியர் தவிர 18 மாவட்டாட்சியர்களுக்கு ஏற்கனவே அரசு கட்டிடங்களில் குடியிருப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்ட ஆட்சித் தலைவரின் குடியிருப்பு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. சிதம்பரனார் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சியர்களுக்கான குடியிருப்பு கட்ட பெருந்திட்ட வளாகத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 மாவட்ட ஆட்சியர்களுக்கான குடியிருப்பு படிப்படியாகக் கட்டித் தரப்படும்.

1996 ஆகஸ்ட் 6]

1996-97 இல் நிதி ஒதுக்கீடு செய்தல்:

1996-97 ஆம் ஆண்டில் கரூர், நாகப்பட்டினம் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்டாட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்குக் குடியிருப்புகளையும் சேர்த்து கட்டுவதற்கு ரூ. *200* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு கருதியுள்ளது.

2. மாவட்ட வருவாய் அலுவலர்கள்

சென்னையைத் தவிர மற்ற *28* மாவட்டங்களிலும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் பணியிடங்கள் உள்ளன. *15* மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசு கட்டிடங்களில் குடியிருப்புகள் அளிக்கப்பட்டுள்ளது. சிதம்பரனார், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு பெருந்திட்ட வளாகங்களில் குடியிருப்புகள் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள *9* மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு குடியிருப்பு படிப்படியாகக் கட்டித் தரப்படும்.

3. வருவாய்க் கோட்ட அலுவலர்கள்

72 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் *56* வருவாய்க் கோட்ட அலுவலர்கள் அரசு குடியிருப்புகளில் உள்ளனர். கள்ளக்குறிச்சி வருவாய்க்கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. மீதமுள்ள *15* வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு குடியிருப்பு நாளடைவில் கட்டித் தரப்படும்.

4. வட்டாட்சியர்கள்

195 வட்டாட்சியர்களில் *166* வட்டாட்சியர்களுக்கு அரசு குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் சங்கராபுரம் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டிடப் பணிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. சென்னையில் *5* வட்டாட்சியர்கள் தவிர மீதமுள்ளவற்றில் வேண்டிய இடங்களில் வட்டாட்சியர்களுக்குக் குடியிருப்பு படிப்படியாகக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[1996 ஆகஸ்ட் 6

5. வருவாய் ஆய்வாளர்கள்

1,106 வருவாய் ஆய்வாளர்களில் 1,079 வருவாய் ஆய்வாளர்களுக்கு அரசு குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கரடிவள்ளி மற்றும் திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் வருவாய் ஆய்வாளர்கள் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள 20 வருவாய் ஆய்வாளர்கள் தவிர மீதமுள்ள 5 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்பு நாளடைவில் கட்டித் தரப்படும்.

1996-97 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு செய்தல்

1996-97 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பினை பழுது பார்க்க ரூ. 7.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு கருதியுள்ளது.

6. கிராம நிர்வாக அலுவலர்கள்

இந்த மாநிலத்தில் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் படிப்படியாக இருப்பிடம் அமைந்த அலுவலகம் கட்டிக் கொடுக்கப்படும். மலைப்பகுதிகளில் 60 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

5. கிராம நிர்வாகம்

கிராம நிர்வாக அலுவலர்கள்

கிராம நிர்வாகம் என்பது மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் அடிப்படை அலகு ஆகும். தமிழ்நாட்டில் தற்போது 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் மாநில அமைச்சுப்பணியில் ஒரு தனிப்பட்ட பிரிவாக அமைந்து உள்ளனர். கிராம நிர்வாக அலுவலர்கள் கிராம கணக்குகளை பராமரித்தல், அரசு நிலங்கள் மற்றும் கட்டிடங்களைப் பாதுகாத்தல், நிலவரி வசூலித்தல் போன்ற பணிகளையும் மற்ற கடமைகளையும் செய்து வருகின்றனர்.

1996 ஆகஸ்ட் 6]

கிராம உதவியாளர்கள்

தற்போது சுமார் 28,000 கிராம உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசுக்கு சேரவேண்டிய வரிகளை வசூலிப்பதில் இவர்கள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவி செய்வதோடு ஏனைய கடமைகளுக்கும் உதவுகிறார்கள். முன்னர் பகுதிநேர ஊழியர்களாக இருந்த இவர்கள் தற்போது முழுநேர அரசு ஊழியர்களாக உள்ளனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
சென்னை-600 008
23494

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
826, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.